T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XLIV No: 3

March 11 1983

V211,31 N83
N83·44·3
135998

வெளியீடு 30 9-1983] Issued 30 9 1983

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
9-9-1983
2682
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 11, 1983—தொகுதி XLIV எண் 3

Friday, 11th March 1983—Volume XLIV No. 3

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs.3-50 Paise

135992
சென்னை 600 008
D
V2,11,31 N83
N83.44.3

11—3—1983.

உள்ளடக்கம்.

1 இரங்கற் குறிப்பு —

முன்னாள் உறுப்பினர் திரு. கே. வி. எஸ். பத்மநாபராஜு மறைவு. .. .. 267—268

2 வினாக்கள்—விடைகள் —

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 268—312

3 ஒத்திவைப்புத் தீர்மானம் —

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மையத்தில் நடைபெற்ற தேர்வு ஒன்று திரும்பவும் நடத்தப் பெற்றது. 112—336

4 கவன ஈர்ப்பு —

ஜின்னிங், பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளில் பணி புரிபவர்களுக்கு குறைந்த பட்சம் ஊதியம் கொடுப்பது. .. .. .. .. 317—320

5 அரசினர் சட்டமுன் வடிவு —

நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன் வடிவு 1983. 320

6 வரவு—செலவுத் திட்டம் 1983—84 பொது விவாதம் (தொடர்ச்சி) :— 321—466

திரு. என். கிட்டப்பா .. .. .. 321—332

திரு.ச. அங்குசாமி .. .. .. 332—334

திரு. டி. மூர்த்தி .. .. .. 334—341

திரு. பி. முகமது இஸ்மாயில் .. .. 341—348

திரு. உ. சுப்பிரமணியன் .. .. .. 348—354

திரு. எம். சின்னசாமி .. .. .. 354—357

திரு. பி. துரைராஜ் .. .. .. 357—361

திரு. டி. மணி .. .. .. .. 361—367

| | | |
|---|---|---|
| | திரு. பி. ஜி. நாராயணன் .. .. .. | 368—369 |
| | திரு. செ. சிவசாமி .. .. .. | 371—376 |
| | திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் .. .. | 377—384 |
| | திரு. மு. ப. முனுசாமி .. .. .. | 384—390 |
| | திரு. பாபு கோவிந்தராஜன் .. .. | 390—394 |
| | திரு. மா. சின்னராசு .. .. .. | 394—401 |
| | திரு. எல். இளையபெருமாள் .. .. | 401—412 |
| | திரு. ஆர். ரங்கசாமி .. .. .. | 412—417 |
| | திரு. து. புருஷோத்தமன் .. .. | 417—425 |
| | திரு. எம். அண்ணாதாசன் .. .. | 425—431 |
| | டாக்டர் கே. சௌரிராஜன் .. .. | 431—439 |
| | திரு. பொ. உத்திராபதி .. .. | 439—444 |
| | திரு. இ. கணேசன் .. .. .. | 444—449 |
| | திரு. எஸ். ஆண்டித்தேவர் .. .. | 449—456 |
| | திரு. த. ராமசாமி .. .. .. | 456—461 |
| | திரு. பம்மல் நல்லதம்பி .. .. .. | 462—466 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 466—468 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1983 மார்ச் 11.

மாசி 27, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்."

தன் உள்ளம் அறிய ஒருவன் பொய் இல்லாமல் நடப்பானேயானால் அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் ஆவான்.

## 1. இரங்கற் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் திரு. கே. வி. எஸ். பத்மநாபராஜு மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. வி. எஸ். பத்மநாப ராஜு அவர்கள் 10—3—1983 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. வி. எஸ். பத்மநாப ராசு அவர்கள் 1952 ஆம் ஆண்டு ஆலமந்தா தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று, இடையில் ராஜினாமா செய்து, பின்னர் மறுபடியும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, ஆந்திர மாநிலம் அமையும் வரை பேரவையில் உறுப்பினராக இருந்தார். அவர் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்லையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1983 மார்ச் 11

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌன மாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள் :

### தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு.

*வினா எண் 365 திரு. என். பழனிவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாட்டரி சீட்டில் பரிசு கிடைத்தவர்கள் தங்கள் பரிசுத்தொகை யைப் பெற்றுச் செல்லாததால் அரசிடம் உள்ள பணம் (30—6—1981 முடிய) எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திட்டம் துவங்கப்பட்ட 1968 ஆம் ஆண்டிலிருந்து 30—6—1981—ம் தேதி முடிய]பரிசு கிடைத்தவர்கள் தங்கள் பரிசுத் தொகையை பெற்றுச் செல்லாததால் அரசிடம் உள்ள பணம் ரூ. 3,59,38,020.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த லாட்டரிச் சீட்டில் பரிசு பெற்றவர்கள் பல பேர், பணம் வாங்காதது ரூ. 3 கோடி என்று இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் அரசாங்கம் பரிசு பெற்றவர்கள் பணத்தைப் பெறவில்லையென்று ஏதாவது விளம்பரம் செய் ததா ? கிராமங்களிலே பொதுமக்கள் பல பேர், இந்தச் சீட்டுகளை வாங்குகிறவர்கள் சரிவர பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, குலுக்கல் நடந்த உடனே எல்லாப் பத்திரிகை களிலும் விளம்பரப்படுத்தி செய்திகள் வருகின்றன. பரிசுச் சீட்டு வாங்குகிறவர்கள் அது விழுமா என்று அக்கறையோடு அதைப் பார்த்து, வந்ததற்குப் பிறகு அதைப் பார்த்திருப்பார் களேயானால், இந்த நிலை ஏற்படாது. ஆகவே 90 நாட் களுக்குள், பரிசு குலுக்கல் நடந்த 90 நாட்களுக்குள் வாங்கிக் கொள்ளலாம் என்றிருக்கிறது. அதற்குப் பிறகு வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், முடிவு அறிவிக்கப்பட்ட 3 ஆண்டு களுக்குள் காரணங்கள் காட்டி எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



1983 மார்ச் 11]

அப்படியும் பெற முடியாத சூழ்நிலையில் இந்த 13 ஆண்டு களுக்குள் மீதப்பட்ட தொகை இந்த 3 கோடி என்று குறிப்பிட் டிருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த லாட்டரிச் சீட்டில் பணம் பெறாதவர்கள் மூலம் அரசுக்கு ஒரு லாட்டரி கிடைக்கிறது என்று தான் ஆகிறது. இவ்வாறு 3 கோடி ரூபாயை சமுதாயத்திலிருக்கிற தொழுநோய் உற்ற வர்களுக்கு உதவித்தொகையாக கொடுக்க அரசு முன்வருமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பரிசுச் சீட்டுக் குலுக்கல்கள் மூலமாக மீதப்படுகின்ற தொகையையெல்லாம் சமுதாயத்தினு டைய நல்வாழ்வுத் திட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றோம். உடல் ஊனமுற்றோர்கள், ஆதி திராவிடர் கள் போன்றவர்களுக்கு குடியிருப்புகள், குடிதண்ணீர் வசதிகள் ஆகிய திட்டங்களுக்குப் பயன்படுத்தி வருகிறோம். தொழு நோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களுக்குக் கொடுக் கப்படுகிறதா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதை ஒரு தனிக் கேள்வியாகப் போட்டால் தனியாக விவரம் அளிக்கப் படும்.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுத் தொகை விழுந்து பெறாமல் இருப்பவர்கள் எனக்குப் பரிசுச் சீட்டுத் தொகை கிடைக்கவில்லை என்று அர சுக்கு விண்ணப்பித்திருக்கிறார்களா ? அப்படி எத்தனை பேர் கேட்டு இருக்கிறார்கள்? இது பற்றிய விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டோடு பரிசுச் சீட்டு விழுந்தவர்கள் வருவார்களேயானால் இந்த அரசு கவனித்து அவர்களுக்கு உரிய காலத்தில் பரிசுத் தொகை வழங்கும். ஆனால் பல பேர் சீட்டுக்கள் வாங்கியதை மறந்து விடுகிறார்கள் அல்லது சீட்டுக்களைத் தொலைத்து விடுகிறார் கள். அப்படிச் சீட்டைப் பற்றிய எண்ணமே இல்லாதிருக்கும் போது தான் இப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்றன. தமிழக அரசு இந்த பரிசுச் சீட்டினை ஆரம்பித்த காலத்திலிருந்து 22,01,79,400 ரூபாய் பரிசுத் தொகை கொடுக்க வேண்டியதில் எல்லோரும் பெற்றுக் கொண்டது 18,36,31,380 ரூபாய். அது போகத்தான் நான் சொன்ன 3,59,38,020 ரூபாய் கொடுக்கப் படாமல் இருக்கின்றது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லாட்டரி சீட்டானது நம்முடைய மாநிலத்திலே ஒரு சூதாட்டம் போன்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கின்றது.

[1983 மார்ச் 11

பஸ் ஸ்டாண்ட் மற்ற இடங்களில் எல்லாம் நம்முடைய மாநிலத்தின் பரிசுச் சீட்டு மட்டும் அல்லாமல் இந்தியாவிலே உள்ள சகல மாநிலத்தின் பரிசுச் சீட்டுக்களும் அதிகமாக விற்கப்படுகின்ற காட்சியினைக் காண்கிறோம். எனவே சாதாரணமாக ஏழை எளிய மக்கள் இதிலே பணத்தை விரையம் ஆக்குகிறார்கள். எனவே இந்தச் சூதாட்ட முறையினை தவிர்க்கக் கூடிய முறையில் லாட்டரிச் சீட்டு நடத்துவதையே அடியோடு நிறுத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974—75 ஆம் ஆண்டிலே கூட இது நீக்கி வைக்கப்பட்டு இருந்தது. ஆனால் மறுபடியும் குடியரசுத் த்லைவர் ஆட்சி வந்தபோது இதனை மீண்டும் நடத்தினார்கள். மேலும் இதனை நிறுத்த வேண்டும் என்றால் (குறுக்கீடு) இந்தியாவிலே கிட்டத்தட்ட 22 மாநிலங்கள் இருக்கின்றன. அவர்கள் பரிசுச் சீட்டினை இங்கே விற்றுக்கொண்டு தான் இருப்பார்கள். (குறுக்கீடு) இங்கே விற்கக் கூடாது என்றால் சித்தூரிலே வாங்கினோம், நெல் ரரிலே வாங்கினோம் என்று சொல்வார்கள். ஆகவே எல்லா மாநிலங்களும் சேர்ந்து நிறுத்தினால்தான் இதனை நிறுத்த முடியும். ஆனால் தமிழகத்திலேதான் எல்லா மாநிலத்தின் பரிசுச் சீட்டுக்களும் அதிகமாக விற்பனை ஆகின்றன. தமிழகத்தை எதிர்பார்த்துத் தான் பல மாநிலத்தினர் லாட்டரி சீட்டினை நடத்துகிறார்கள், அந்த அளவுக்கு நிலைமை இருக்கின்றது. ஏனென்றால் தமிழகத்தில் வாரப்பலன், ராசிபலன் போன்றவற்றை அதிகமாகப் பிரசுரிக்கின்ற பத்திரிகைகள் அதிகமாக இருக்கின்றன. அந்த ராசி பலனைப் பார்த்து சிம்மம், கன்னி போன்ற ராசி பலன்களைப் பார்த்து எப்படியாவது பரிசுச் சீட்டு விழும் என்று எண்ணி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே பூட்டான் முதலிய மாநிலங்களிலிருந்துகூட இங்கே பரிசுச் சீட்டுகளை விற்கிறார்கள். ஆனால் தமிழக லாட்டரிச் சீட்டின் வருவாயிலிருந்து கிட்டத்தட்ட 40 சதவீதம் 45 சதவீதம் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு அரசு தருகின்றது. இந்தச் சீட்டு நடத்துவதை நாம் நிறுத்தி விட்டால் தனித்தனியாக பலர் சீட்டு ஆரம்பித்து விடுகின்ற நிலைமை இருக்கின்றது. இந்த அரசு பரிசுச் சீட்டு நடத்துவதன் காரணமாகத்தான் தனியார் அவ்வாறு ஏற்படுத்துவதைத் தடுத்து இருக்கிறோம். யாரும் தனியாகப் பரிசுச் சீட்டு குலுக்கக் கூடாது என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது. ஆகவே அது தடுத்து நிறுத்தப்பட்டு அரசுக்கு வருவாய் வந்தால் பயன்படும் என்ற முறையில்தான் இது நடத்தப்பட்டு வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே லாட்டரி சீட்டு நடத்துகின்றவர்கள் உப தொழிலாகத்தான் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஏஜெண்டுகளைத் தடை செய்து



1983 மார்ச் 11]

விட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பட்டதாரி இளைஞர்களுக்கு லாட்டரி சீட்டு விற்க அனுமதி கொடுக்கப்படுமா ? அவர்களை ஏஜெண்டாக நியமித்து அந்த உரிமையினை அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் யார் வேண்டுமானாலும் வாங்கி விற்பனை செய்யலாம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் 30 ஆயிரம், 40 ஆயிரம் பேர் இந்த லாட்டரிச் சீட்டு விற்பதன் மூலம் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

## ஓய்வு பெற்ற அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கும் திட்டம்.

*வினா எண். 366—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

உயர்ந்து வரும் விலைவாசியை அனுசரித்து அவ்வப்போது அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி அளிப்பது போன்று ஓய்வு பெற்ற அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி அளிக்கும் போதெல்லாம், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேறு ஏதேனும் வசதிகளைச் செய்து தர அரசு ஏதேனும் செயற் குறிப்புகளை வைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்றவர்களுக்கு முன்பு 30 ரூபாய் 40 ரூபாய் 50 ரூபாய் என்று ஓய்வூதியம் இருந்தது. அது இரண்டாண்டுகளுக்கு முன்பு 100 ரூபாயாக ஆக்கப்பட்டு இப்போது 125 ரூபாயாகக் குறைந்த அளவு ஓய்வூதியம் ஆக்கப் பட்டிருக்கின்றது. அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அகவிலைப்படி உயர்த்தப்படுகின்றபோது எவ்வளவு அகவிலைப் படி உயர்த்துகிறோமோ அதிலே 40 சதவீதம் ஓய்வு பெற்றவர்

களுக்கும் என்று வைத்திருக்கிறோம். 1—10—1982-ன் போது குறைந்த அளவு ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு அகவிலைப்படி 33 ரூபாயாகவும் அதிகப்படியாக 124 ரூபாயாகவும் இருந்தது. 1—10—1982 முதல் இந்த அகவிலைப்படி குறைந்த அளவு 51 ரூபாயாகவும், அதிக அளவு 191 ரூபாயாகவும் அமைந்திருக்கின்றது.

(முற்பகல் 9.10)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது சம்பளம் உயர்த்துகின்றபோது அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயருகிறது. அதே போன்று இந்த ஓய்வு பெற்ற அலுவலர்கள் அவர்களுடைய காலத்தில் வாங்கிய சம்பளத்தின் அடிப்படையில் இப்போது பென்ஷன் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். இப்போது உள்ள விலைவாசிக்கு தகுந்த மாதிரி அதையும் உயர்த்த மறுபரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது காரணம் பற்றித்தான் குறைந்த அளவு ஓய்வு ஊதியமாக ரூபாய் 125 என்று ஆக்கினோம். அப்போது பல பேர்கள் சம்பளமாக ரூ. 18, 20, 22 என்று வாங்கி வந்தார்கள். அதன் அடிப்படையில் கணக்கிட்டு இருந்தால் அதில் பாதியான ரூ. 9 தான் அவர்களுக்குக் கிடைக்கும். அது குறைந்த அளவில் இருக்கிறது என்பதற்காகத்தான் அதை இப்போது ரேஷனலைசேஷன் செய்து குறைந்த அளவு அவர்களுக்கு 125 ரூபாய் ஆக்கியிருக்கிறோம். மற்ற வகையில் சம்பளம் உயரும்போது ஓரளவுக்கு இதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே மாதிரியான பணியில் இருந்து அரசு ஊதியம் பெற்ற அரசு ஊழியர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு ஓய்வு பெற்று இருந்தால் அவர்களுக்கு ஓய்வு ஊதியம் குறைவாகவும், அதற்கு பிறகு ஓய்வு பெற்று இருந்தால் அவர்களுக்கு ஓய்வு ஊதியம் அதிகமாகவும் பெற்று வருகிற நிலைமை இருக்கிறது. ஆரம்பத்தில் குறைந்த அளவில் சம்பளம் பெற்று இருக்கிறவர்களாகத்தான் அவர்கள் இருந்தார்கள். ஆகவே எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஓய்வு ஊதியம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? தொடர்ந்து அவர்கள் அப்படிப்பட்ட கோரிக்கையை வைத்து வற்புறுத்தி வருகிறார்கள். அதை அரசு அனுதாபத்தோடு கவனிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியவாறு பல்வேறு வேறுபாடுகள் இருந்தன. குறைந்த அளவாகத்தான்



அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் 3-வது சம்பள குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் அவர்களுக்கு குறைந்த அளவு 100 ரூபாய் தரவேண்டும் என்று அவர்கள் சிபாரிசு செய்தார்கள். அதை நாம் செயலாக்கினோம். 100 ரூபாய் என்று இருந்ததை இப்போது 125 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். அடுத்த நிதிக் குழு அமைக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கோரிக்கையை அடிப்படையாக வைத்து எந்த அளவுக்கு அந்த ஊதிய குழு நிர்ணயித்து தருகிறதோ அதற்கான முயற்சிகளைச் செய்யலாம். இது போன்ற கோரிக்கைகளை வந்து கொண்டுதான் இருக்கின்றன.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் தங்களுடைய பெருவாரியான காலத்தை அரசு ஊழியத்திலேயே செலவு செய்துவிடுகிறார்கள். அவர்கள் வயதான காலத்தில் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பது அரசுக்கும் தெரியும். ஆகவே குறைந்த அளவு ஓய்வு ஊதியமாக ரூ. 200ஐ உயர்த்தித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற கோரிக்கையை அவர்கள் வைத்து வருகிறார்கள். ஆகவே படிப்படியாக உயர்த்தியிருக்கிறோம். அடுத்து ஆராயும்போது அது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு ஒரு ஆண்டுக்கு எவ்வளவு ஓய்வு ஊதியமாக தரப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டேன் குறைந்த அளவு சாதாரணமாக 125 ரூபாய்க்கு கீழ் இருப்பவர்களுக்கு ஒட்டு மொத்தமாக குறைந்த அளவு 125 ரூபாய் ஓய்வு ஊதியமாக பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேல் இருப்பவர்களுக்கு கணக்குப் பார்த்து அதற்கு மேல் வருகின்ற தொகையை அவர்களுக்கு ஓய்வு ஊதியமாக தரப்படுகிறது. முன்பு நான் கூறியது போல் அகவிலைப் படி குறைந்த அளவு 51 ரூபாயாகவும், அதிக அளவு 191 ரூபாயாகவும் அளிக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு—கேரளா இடையே வனத்துறையைச் சேர்ந்த எல்லை நிர்ணயம்.**

* வினா எண். 302—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கும் கேரளாவிற்கும் இடையே வனத்துறையைச் சார்ந்த எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (அ) மற்றும் (ஆ) : தமிழ் நாட்டிற்கும் கேரளாவிற்கும் இடையே வனத்துறையைச் சார்ந்த எல்லை சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் ஏற்கனவே வரையறுக்கப்பட்டுள்ளது. விட்டுப்போன இடங்களில் எல்லையை வரையறுக்கும் பணியும், வரையறுக்கப்பட்ட எல்லைப் பகுதிகளைக் கூட்டாய்வு செய்து பராமரிக்கும் பணியும் கேரள அரசுடன் இணைந்து சரி பார்க்கப்பட்டு நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

திரு. ந. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கும், கேரளாவிற்கும் இடையே எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது என்றும் சில விட்டுப்போன இடங்களில் வரையறுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் வரையறுக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் கேரள அரசு நம்முடைய தமிழகத்திற்கு சொந்தமான வனத்துறை இடங்களை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள், அது அரசுக்குத் தெரியுமா ? அதைப்போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : எங்கெங்கே ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்களோ அவைகளை அகற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. ந. வேணுகோபால் : தலைவர் அவர்களே, மீதமுள்ள எல்லை வரையறுக்கப்பட்டுள்ள இடங்களைத் தவிர மற்ற இடங்களை கூட்டாய்வு செய்து எல்லை நிர்ணயம் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தக் காலவரையறைக்குள் அந்த எல்லைகள் நிர்ணயம் செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இது இரண்டு அரசுகளும் சேர்ந்து செய்யவேண்டியிருப்பதால் கால வரையறையை நாம் முடிவு செய்யமுடியா



விட்டாலும் விரைவிலே செய்ய வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு அவர்களும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். விரைவிலே செய்யப்படும்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது வனத்துறையைச் சேர்ந்த பகுதிகளில் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதாகவும் சில இடங்களில் நிர்ணயம் செய்ய பேசி வருவதாகவும் குறிப்பிட்டார்கள். மதுரை மாவட்டம் கூடலூர் தாலுகாவிலே உள்ள மங்களதேவி கோயில் நம் எல்லைக்குள் இருக்கிறது என்று நெடுநாளாக இருந்து வருகிற செய்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக அரசிடம் இருக்கும் ஆணைகளைக் கொண்டு கவனமாகப் பரிசீலித்து முன்னாள் நிலவரித் திட்ட ஆணையும் அதற்குப் பின்னால் ஆரம்பிக்கப்படுகிற அந்தக் காலத்திலேயும் இந்த இடம் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலேயோ கேரளத்திலே உள்ள மற்ற மாநில பகுதியாகவோ இல்லை என்பதும் தொடர்ந்து தமிழகத்திலே மதுரை மாவட்டத்திலே இருந்தது என்பதும்தான் இன்றைக்கு தெரியவருகிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி ஏற்கெனவே கேரள எல்லையோடு சேர்ந்த ஒரு தொகுதி. அந்த தொகுதியிலே அணைமுகம் என்ற பகுதியிலே ஒரு எல்லைக் கோட்டை வகுத்திருக்கிறார்கள். வனப்பகுதி என்ற காரணத்தினால் சில வருடங்களுக்குள்ளாக அவர்கள் வகுத்து இருக்கின்ற இடைவெளிகள் வனமாக மாறுவதன் காரணமாக எந்தப் பகுதி வரையறுக்கப்பட்டு இருக்கிறதோ மீண்டும் அது காடாக மாறுவதன் காரணமாக மரத்தைக் திருடுகிறவர்கள் ஏற்கனவே போடப்பட்டிருக்கிற கற்களை உடைத்து அந்த எல்லையை அழித்து விடுகிறார்கள். ஆகவே அந்த எல்லைக்கோட்டை வரையறுக்கிற காலத்திலேயே ஒரு 200 அடியாகிலும் இடைவெளி வரக்கூடிய வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்யும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அந்த எல்லையில் எத்தனை மைல் அல்லது ஹெக்டேர் அளவுக்கு தமிழக அரசு எல்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று அரசு

ஆய்வு செய்திருக்கிறதா? அல்லது கேரள அரசுக்கு எத்தனை மைல் அல்லது ஹெக்டேர் நாம் வழங்குகிறோம் என்று ஏதாகிலும் குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, கேரள அரசுக்கு நாம் எதையும் தரவில்லை. கேரள அரசுக்கு முதலிலேயே கொடுக்க வேண்டாததையெல்லாம் கொடுத்துவிட்டோம். பீர்மேடு, தேவிகுளம் எல்லாம் கொடுத்தாகிவிட்டது. ஆகவே கொடுத்ததே தவறு என்று சொல்லிக் கொண்டிருக்கிறபோது எதையும் நாம் கொடுக்கத் தயாராக இல்லை. கொடுக்கப்பட்டது சரியா என்று மறு பரிசிலனை செய்வதற்குள்ள இடத்தில் நாம் இருக்கிறோம்.

திரு. கு. ரமணி: கொடுக்க வேண்டாததையெல்லாம் கொடுத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னதை இரண்டு அரசுகளுக்கும் இருக்கின்ற உறவுக்கு........

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அண்டை மாநிலத்துடன் சுமுகமாக இருப்பதற்கு தமிழக அரசு விரும்புகிறது. ஆனால் தமிழக அரசு சில இடங்களை இழந்திருக்கிறோம் என்பதைச் சொல்வதிலே தயங்க வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதால் கூறுகிறேன். திரும்பவும் அதை அமைச்சர் வற்புறுத்திச் சொல்கிறார். அதனால் இரண்டு மாநிலங்களுக்கும் இடையே இருக்கிற உறவு முறைக்கு சரியாகுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு வேண்டுமானால் தனியாக ஒரு நாள் விவாதம் வைத்துக் கொள்ளலாம். சரியாக்கிக்கொள்ளலாம். சரிசெய்யக்கூடியவர்கள் சரி செய்துகொள்வார்கள்.

(முற்பகல் 9-20)

பிறமொழி பெயர்கள் கொண்ட ஊர்களின் பெயர்களைத் தமிழில் மாற்றியமைக்கும் திட்டம்

*வினா எண். 303—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிறமொழிப் பெயர்கள் கொண்ட ஊர்களின் பெயர்களை தமிழில் மாற்றி அமைக்க மத்திய அரசின் அனுமதி பெற வேண்டியிருப்பது உண்மையா?





(ஆ) ஆம் எனில் அப்படிப்பட்ட அனுமதி இல்லாமலேயே ஊர்ப்பெயர்களை மாற்றிக் கொள்வதற்கு மாநில அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): எந்த ஒரு ஊரின் பெயரையும் அல்லது அவ்வூரின் பிறமொழிப் பெயரையும் முற்றிலும் மாற்றியமைப்பதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டுமென்று மத்திய அரசின் ஆணை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லாத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி

*வினா எண். 367—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 24—6—1980 ஆம் தேதி அமரர் சஞ்சய் காந்தியின் மறைவுக்காக விடுமுறையென தமிழக அரசு அறிவித்த அன்றைய நாளில் திருச்சி மாவட்டம், கல்லாத்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளி செயல்பட்டதா?

(ஆ) அன்று பள்ளிக்கு வராத ஒரு ஆசிரியருக்கு சம்பளம் பிடித்தம் செய்யப்பட்டதோடு அவர் வேறு பள்ளிக்கு பணி மாற்றுதல் செய்யப்பட்டாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) அமரர் சஞ்சய் காந்தியின் மறைவிற்காக விடுமுறை என்ற செய்தி, 24—6—1980 அன்று பிற்பகல் வானொலி மூலம் செய்தி கிடைத்தவுடன், இரங்கல் கூட்டம் போட்டுவிட்டு, அப்பள்ளி மூடப்பட்டது.

(ஆ) 24—6—1980 அன்று, அமரர் சஞ்சய்காந்தி, மறைவிற்காக விடுமுறையென அறிவித்த செய்தி, கிடைக்கும் வரை, பள்ளி வழக்கம் போல் நடைபெற்றதால், அன்று பள்ளிக்கு வருகை தராத ஒரு இடைநிலை ஆசிரியர் மற்றும் ஒரு நெசவு ஆசிரியர் ஆகிய இருவருக்கும், முதலில் சம்பளம் பிடித்தம் செய்யப்பட்டாலும், பின்னர் உரிய விடுப்பு வழங்கப்பட்டு பிடித்தம் செய்யப்பட்ட சம்பளம் திரும்ப வழங்கப்பட்டுவிட்டது; பணிமாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமரர் சஞ்சய் காந்தியின் மறைவுக்காக விடுமுறையென அறிவித்த நாளில் ஒரு ஆசிரியர் பள்ளிக்கு வரவில்லை என்ற காரணத்தைக் காட்டி அவர் மீது நடவடிக்கை

திரு. குமரி அனந்தன் : அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் என்று வரும்போது குழந்தைகளுக்காக நம் அரசு ஆரம்பிக்க இருக்கிற பால்வாடிகளில் நிச்சயமாக தமிழில்தான் இருக்கும் என்ற நிலை இருக்கிறது என்ற நம்பிக்கையை அமைச்சர் அவர்களின் விடை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளாக இருந்தாலும் கூட அவினாசிக் கல்லூரியில் தமிழ், ஆங்கிலம் மொழிப் பாடங்களின் நேரங்கள் ஆறு மணியிலிருந்து குறைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். பாரதி தாசன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தொடங்கவில்லை என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் தமிழ் படிக்காமலேயே தமிழ் நாட்டில் பட்டம் பெற்று விடலாம் என்ற நிலையும் இருக்கிறது. எனவே இவைகளையெல்லாம் மாற்றியமைப்பதற்கு தாய் மொழிக் கல்விக்கு முதன்மையிடம் என்று சொல்லும் நிலையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அ. அரங்கநாயகம் : நாம் தமிழைக் கட்டாயமாக்கவேண்டும் என்ற முயற்சியை மேற்கொள்கிறபோது மூன்று மொழித்திட்டத்திற்கு வழிவகுக்கும் ஒரு தவறான செயல் ஏற்பட்டு விடுமென்று அஞ்சித்தான் இப்போது அதில் கை வைக்காமலிருக்கிறோம். ஆகவே நம்மைப் பொறுத்தமட்டில் அரசாங்க அலுவலகங்களில் வேலை பார்த்து வருகிறவர்களுக்கு தமிழ் தெரிந்திருக்க வேண்டும் என்று அந்த இடத்தில் வற்புறுத்துவதின் மூலம் அனைவரும் தமிழ் படித்தாகவேண்டும் என்கிற ஒரு கட்டாயத்தை ஏற்படுத்தி வருகிறோம். வேறு வகையில் பள்ளிக்கூடங்களில் இந்த மாறுதலைச் செய்வோமானால் அது மும்மொழித் திட்டத்திற்கு வழி வகுத்துவிடும். தமிழ் படிக்கவேண்டும் என்று சொல்லும்போது, தாய் மொழியைப் படிக்கும் உரிமையைத் தந்தே தீரவேண்டும். அப்போது தாய்மொழி படித்து, தமிழ் படித்து, ஆங்கிலமும் படிக்கும்போது அது மும்மொழித் திட்டமாகிறது. மும்மொழித் திட்டம் என்று வருகிறபோது நம்மை அறியாமலேயே இந்திக்கு இடம் தரக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி விடும். அந்தத் தவறைத்தான் இப்பொழுது வேறு மாநிலங்களில் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி : படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில் என்பதுபோல் அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இவர்கள் குழந்தைகள் எல்.கே.ஜி., யு.கே.ஜி. என்று படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது நிறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இராமாயணம் படிப்பதால் பெருமாள் கோவிலை இடிக்கக்கூடாது என்று யாரும் சொல்லவில்லை. பெருமாள் கோவிலை இடிக்கவேண்டுமென்றால் இராமாயணம் படித்துத்தான், தெரிந்து அதிலிருக்கிற தவறுகளை உணர்ந்து அந்த நிலைக்கு அவர்கள் போகவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இதில் அந்தப் பிரச்னை இல்லை.





ஆனால் இந்த எல்.கே.ஜி., யு.கே.ஜி.யில் ஆங்கிலம் படிப்பது என்பது, ஆங்கிலம் தேவை, ஆங்கிலத்தைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்ற கருத்தை தமிழக அரசு வைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் ஆங்கிலம் படிப்பதை நாம் தடை செய்யமுடியாது. ஆனால் ஆங்கிலமா தமிழா என்று நாம் பேசுகிறபோது நாம் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும், மேல் நிலையில் இருக்கிறவர்களையும் பார்த்துவிட்டு பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர கீழ் நிலையிலிருக்கிற சாதாரண மக்களை வைத்து நாம் இந்த நிலை பற்றிப் பேசுவதில்லை. சாதாரண மக்கள் முன்னுக்கு வரவேண்டுமென்றால் தாய் மொழியில்தான் படிக்கவேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது நாம் 12-வது வகுப்பு வரை தமிழில் சொல்லித் தருவதன்மூலம் புரட்சிகரமான மாறுதலை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் நல்லபடியாகப் படித்துவருகிறார்கள். அவர்களுக்காகத்தான் அதைப் பேசுகிறோமே தவிர ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்காக நாம் அதை பேசவில்லை.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : நம் மாநிலத்தில் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டவர்களும் இருக்கிறார்கள். இந்தியை தாய்மொழியாகக் கொண்டவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் தமிழில்தான் படிக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் அது சிறுபான்மையினர் சுதந்திரத்தில் தலையிடுவதாகாதா?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த அடிப்படையில்தான் தமிழ்நாட்டில் தாய்மொழியில் கல்வி படிக்கவேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தி வருகிறோம். தமிழ்நாடு ஒன்றில்தான் அந்தக் கொள்கை சரியானபடி ஆதரிக்கப்பட்டு சிறுபான்மையினருக்கு நல்ல பாதுகாப்பு தந்து வருகிறோம். ஆகவே, தமிழுக்கு நாம் எந்த அளவுக்கு உரிமையை தந்திருக்கிறோமோ, அதே அளவிற்கான உரிமையை கன்னடத்திற்கும், மலையாளத்திற்கும், இந்திக்கும், குஜராத்திக்கும், பஞ்சாபிக்கும் தந்திருக்கிறோம். இந்த அளவு சமத்துவ உரிமையை நீங்கள் வேறு எங்குமே பார்க்க முடியாது. சிறுபான்மை பாதுகாப்பிற்கு நாம் இதைச் செய்கிறோம். அந்த நிலையில் சிறுபான்மை மக்கள் தங்கள் உரிமையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற மாநிலங்களில் இந்த உரிமையே கிடையாது. மற்ற மாநிலங்களில் தமிழில் சொல்லித் தருவதில்லை. இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்). நானும் சில உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டவன். உங்களுக்குத் தகவல் தெரிய வேண்டுமென்பதற்காக இதைச் சொன்னேன். மற்ற மாநிலங்களில் சிறுபான்மையோரைக் காப்பாற்றுவதாகச் சொல்லுகிறார்கள். நம் மொழியை, தமிழ் மொழியை மற்ற மாநிலங்களில் சொல்லித் தருவதில்லை. (குறுக்கீடுகள்) இந்தியாவை நான் அறிந்துள்ள அளவுக்கு இங்கே யாரும் இருக்க மாட்டார்கள்.

எடுக்கப்பட்டது என்பதாலே இந்த கேள்வி கேட்கப்பட்டது. அந்த ஆசிரியருக்கு வழங்கப்பட்ட தண்டனை எப்போது ரத்து செய்யப்பட்டது? இந்த கேள்வி கேட்டதற்கு பின்னாலா அல்லது அதற்கு முன்பே ரத்து செய்யப்பட்டுவிட்டதா? இப்போது அந்த ஆசிரியர் அங்கே பணியில் இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேதி குறித்து என்னிடத்தில் விபரங்கள் இல்லை. ஆனால் பணி மாற்றம் எதுவும் செய்யப் படவில்லை, பிடித்தம் செய்யப்பட்ட சம்பளம் திருப்பித் தரப் பட்டிருக்கிறது.

### தாய் மொழியிலேயே கல்வி புகட்டும் திட்டம்

*வினா எண். 368—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மூன்றாம் வகுப்புவரை தாய்மொழியிலேயே கல்வி புகட்டப் படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழக அரசால் அங்கீகாரம் செய்யப்பட்ட ஆரம்பப் பள்ளிகளில், எல்லா வகுப்புகளிலும், தாய்மொழியில்தான் கல்வி புகட்டப்படுகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் மூன்றாவது வகுப்பு வரையில் தாய்மொழியில் தான் கல்வி போதிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். ஆனால் எல்.கே.ஜி., யூ.கே.ஜி. என்று சொல்லிக்கொடுக்கிற ஏராளமான பள்ளிகளில் சின்னஞ்சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு ஆங்கிலத்தை போதிக்கிறார்கள். எட்டாவது வகுப்பிற்கு பிறகுதான் தாய்மொழியைத் தவிர வேறு மொழியில் பாடங்களை கற்றுக்கொடுப்பது நல்லது என்ற கல்வியாளர்களின் சிந்தனைக்கு அது மாறுபட்டிருக்கிற காரணத்தாலே, அறிவு வளர்ச்சியை தடை செய்கிறது என்ற நோக்கத்தோடு, அரசாங்கம் மூன்றாவது வகுப்பு வரையில் எல்லா பள்ளிகளிலும், தாய் மொழி மூலமாகவே கல்வி போதிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்படாத பள்ளிகளில் நடைபெற்று வருகின்ற ஒரு நிலையைதான் மாண்புமிகு





உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்கின்றார்கள். அது போன்ற பள்ளிகளை கட்டுப்படுத்துவதற்கான ஒரு முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்று கருதி ஒரு கமிட்டி அமைத்து, நாம் ஒரு அறிக்கை தயார் செய்து, அதை அமல்படுத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக எல்.கே.ஜி., யூ.கே.ஜி. பிரிவுகளை கொண்ட நர்சரி பிரிவுகளை அரசின் சார்பிலே அல்லது அரசின் கட்டுப்பாட்டிலே நடத்தமுடியுமா என்று ஆராய்ந்து வருகிறோம். அதற்கேற்பதான் அண்மையிலே துவங்கப்பட்ட பால்வாடிகளை, குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்ட மையங்களை அப்படிப்பட்ட நர்சரி பள்ளிகளாக, சிறு குழந்தைகளுக்கான பாலர் பள்ளிகளாக மாற்றியமைக்கக் கூடிய ஒரு வாய்ப்பும் இப்போது தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதையும் நாம் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். அந்த அடிப்படையிலே நாம் முயற்சிகளை மேற்கொள்கிறபோது பெருவாரியான குழந்தைகளை நாம் காப்பாற்ற முடியும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் பெட்டிக்கடை வைப்பதிலேயிருந்து பெரிய பாக்டரிகளை வைப்பது வரையில் லைசென்ஸ் பெற்றுதான் காரியங்கள் நடைபெறுகின்றன. ஆனால் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்ற இந்த நர்சரி பள்ளிகள் லைசென்ஸ் இல்லாமல், அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் நடத்தப்படுகின்றன. அவைகள் நம்முடைய பண்பாடு, கலாச்சாரம், தமிழ்மொழி இவற்றிற்கெல்லாம் முக்கியத்துவம் தராமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து இவற்றை தடை செய்ய, அரசுடைமை ஆக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கான அடிப்படையில்தான் நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதைச் சரியாகச் செய்ய வேண்டுமென்றும் நாம் விரும்புகிறோம். ஆனால் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிப்பதை, எல்லோரையுமே தடை செய்யக்கூடிய அளவிற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணரவேண்டும். நமது அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் சிறுபான்மை வகுப்பினர் என்ற பெயரால் பலருக்கு இருக்கிற அடிப்படை உரிமைகள்படி நம்மைக் கேளாமலேயே அவர்கள் ஆரம்பிக்கலாம், நடத்தலாம் என்ற நிலை இருக்கிறபோது நாம் முழுவதையும் தடை செய்யமுடியாது. வேண்டுமானால் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்களைத் தடை செய்யலாம். அதனால் சிறுபான்மை வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு இன்னும் அதிகப்படியான வாய்ப்பை அது ஏற்படுத்துமே தவிர நாம் எதிர்பார்க்கிற பலனைத் தராது.

திரு. என். எஸ். வி. சித்தன் : கர்நாடகத்திலும், கேரளத்திலும் சொல்லித் தருகிறார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லிவிடுகிறேன். சற்று எல்லோரும் உட்காருங்கள். தமிழ் நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு தரப்பட்டிருக்கின்ற உரிமையைப் பற்றிப் பேசுகின்றபோது, வேறு விதமாக பேசுவதாக தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் கருதவேண்டாம். என்னிடத்திலே வந்து, அவர்கள் பள்ளிக்கு அங்கீகாரம் கேட்கிறபோது, நான் முதலிலே கேட்கிற கேள்வி, உங்கள் மொழியிலே சொல்லித் தருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறீர்களா என்பது. பொதுவாக இதைக் கேட்கிறபோது, ஆங்கில மொழியில் சொல்லித் தருவதற்கு அவர்கள் என்னிடத்திலே அனுமதிக்காக வருகிறார்கள். கன்னடம், தெலுங்கு அல்லது வேறு மொழிகளில் சொல்லித் தருவதற்கு அவர்கள் வருவதில்லை. அவர்களிடத்திலே நான் கேட்பது, கன்னட மொழியிலே சொல்லித் தருவதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்திருக்கிறீர்களா என்பதுதான். காரணம், அந்தந்த மொழியைச் சொல்லித் தருகின்றபோது, அந்த மொழியைப் பேசுகிற மக்களிலே ஏழைமக்கள் தான் அதனால் பயனடைகிறார்கள். எதை வைத்துச் சொல்கிறேன் என்றால், கடந்த ஓராண்டு காலமாக பம்பாய் தமிழர்கள் பிரச்னைக்காக நான் பம்பாய்க்கு போய் வந்து கொண்டிருக்கிறேன். அங்கே, தாராவியிலே உள்ள தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகளை 8-வது வகுப்பிற்குமேல் படிக்க வைக்க வசதியில்லை. எடுபிடி வேலைக்குத் தான் போகிறார்கள். இதுவரையிலே அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரையிலோ அல்லது 12-வது வகுப்பு வரையிலோ தமிழில் படிக்கின்ற வாய்ப்பை அங்கே இருக்கின்ற அரசு ஏற்படுத்தித் தரவில்லை. இப்போது நாம் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, அவர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக, நீங்கள் புத்தகங்களை அச்சிட்டுக் கொடுக்கிறீர்களா என்று கேட்டு இருக்கிறார்கள் அந்த புத்தகங்களை வாங்கி அவைகளை மொழிபெயர்த்து, அச்சிடுவதில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். கர்நாடகத்திலே இதைவிட மோசமானநிலை கன்னட மொழிக்கு 150 மார்க்கு என்றும், தமிழ் மொழிக்கு 100 மார்க்கு என்றும் குறைத்து வைத்திருக்கிறார்கள். அதனால், ஒரு சமத்துவம் இல்லாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அண்மையில் கோகாக் கமிட்டியின் சிபாரிசின் பெயரால், மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டில் தமிழ் படித்தாலும் 100 மார்க்கு, கன்னடம் படித்தாலும் 100 மார்க்கு, கன்னடமும் முதல் மொழி, தமிழும் முதல் மொழி என்று மரியாதையைத் தந்து, தேசிய ஒருமைப்பாட்டிற்கு இன்று உரிய ஆதரவு, ஒழுங்கான ஆதரவு தமிழ்நாட்டில் தான் தருகிறோம் என்பதை நாங்கள் மட்டுமல்ல, எதிர்க் கட்சியிலே இருக்கின்ற அத்தனை பேர்களும் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படலாம்.



## அரசு மேல் நிலைப் பள்ளிகளில் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை நியமிக்கும் திட்டம்.

*வினா எண். 369—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கால்நடை மருத்துவ பட்டதாரிகளை நியமிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை பள்ளிகளில் முதன் முதலாக செயல்படுத்த திட்டம் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மேல்நிலைப் பள்ளிகளில் பால்பண்ணை மற்றும் கோழி வளர்ப்பு தொழிற் பாடங்களை கற்றுத் தரும் பகுதி நேர ஆசிரியர்களுக்கு பி. வி. எஸ். சி. பட்டமும் 5 ஆண்டு முன் அனுபவமும் கல்வித் தகுதிகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஏப்ரல் 82-ல் உள்ள நிலவரப்படி ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் கால்நடை மருத்துவ பட்டதாரிகள் பகுதிநேர தொழிற் கல்வி ஆசிரியர்களாக பணியாற்றுகிறார்கள்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவத்தைப் பற்றிய பாடம் இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகளில், அரசு இப்படிப்பட்ட பட்டதாரிகளை நியமிக்கின்ற உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்த, எந்தப் பள்ளியில் இத்தகைய பாடப் பிரிவுகளை ஆரம்பிக்க முடியுமோ, அவைகளை அங்கு ஆரம்பிக்க வேண்டுமென்றும், அதற்குப் பயன்படுத்திக் கொள்கின்ற வகையில், பக்கத்திலேயிருக்கிற, கிடைக்கக் கூடிய பி.வி.எஸ்.சி. பட்டதாரிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற அறிவுரையையும் நாம் தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறோம். அதனால், ஒரு பள்ளியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் நினைப்பார்களானால், அவர்களே, கொஞ்சம் முயற்சி எடுத்து தலைமை ஆசிரியரை அணுகி, தேவையை உணர்த்தி, அதை ஆரம்பிப்பதற்கான ஒரு ஏற்பாட்டிலே ஈடுபடலாம். அத்தகைய ஒத்துழைப்பை அரசு விரும்பி வரவேற்கிறது.

## நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் கொடுக்க வேண்டிய தொகை.

*வினா எண். 370—திரு. தி. கா. நல்லப்பன், திரு. ஏ. டி. கருப்பையா, திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பாக்கித் தொகை கொடுக்க வேண்டியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் கொடுக்க வேண்டிய மொத்த தொகை எவ்வளவு ?

(இ) எப்போது கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : கோ-ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நவம்பர் மாதம் முடிவு வரை கொடுக்க வேண்டிய மொத்த தொகை ரூ. 43.83 கோடி ஆகும். அதில் 31-12-1982 வரை ரூ. 31.19 கோடி கொடுக்கப்பட்டு விட்டது. பாக்கித் தொகையான ரூ. 12.64 கோடி, அண்மையில் கோ ஆப்டெக்சுக்கு அரசு அளித்த வழிவகைக் கடனாகிய ரூ. 8 கோடியிலிருந்து சங்கங்களுக்கு சேர வேண்டிய பாக்கித் தொகை கொடுக்கப்பட்டதால் மீதமுள்ள பாக்கி பெருமளவு குறைக்கப் பட்டுவிட்டது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலச் சங்கங்களுக்குக் கொடுக்கக் கூடிய துணிகளுக்கு உரிய தொகை யைக் காலா காலத்தில் கொடுக்காததன் காரணமாக அந்தச் சங்கங்கள், அவர்களிடத்திலே உள்ள உறுப்பினர்களுக்கு நூல் வாங்க தொகை கொடுக்க முடியாமலிருக்கிறது. இப்படிக் கொடுக்க முடியாததன் காரணமாக பல கூட்டுறவுச் சங்கங் களிலே நெய்யக் கூடிய நெசவாளர்கள் பட்டினிக்கு ஆளாகக் கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே, அவர்கள் அனுப்பும் அந்தத் துணிகளுக்குரிய தொகையை, துணிகளை அனுப்பிய உடனே, 3 மாதங்களுக்கு மேல் போகாமல், அரசிடமிருந்தோ, வங்கி களிடமிருந்தோ வாங்கியோ, எந்த வகையிலேனும் அந்த மாதிரி சங்கங்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக் காலா காலத்தில் கொடுப்பதற்கு இனியாவது உரிய நடவடிக்கைகளை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய அந்தப் பாக்கித் தொகையை "கோ-ஆப்டெக்ஸ்" நிறுவனம் செலுத்திக் கொண்டு வந்தால் தான் அங்கே அவர்கள் தொடர்ந்து தொழிலில் ஈடுபட முடியும் என்பதை உணர்ந்துதான் அந்தப் பாக்கி நிலுவைத் தொகைகளைக் கொடுப்பதிலே நாங்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு கணிசமான அளவுக்குக் குறைத்து வருகின்றோம். ஆனால், அதே நேரத்திலே, வாங்குவதையும் நாம் நிறுத்த முடி யாது. தொடர்ந்து வாங்கிக் கொண்டே இருக்கின்ற காரணத் தால், அந்தப் பாக்கித் தொகையும் ஒரு பக்கம் மேலும் வளர்ந்து கொண்டே இருக்கும். இன்னொரு பக்கம் நாம் தந்து கொண்டே யிருப்பதால், குறைந்து கொண்டிருப்பதற்கு வழி வகுக்கிறது. ஆனால், இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலைமை, நாட்டில் பொதுவாக ஏற்பட்டிருக்கிற வறட்சியின்காரணமாக, விற்பனை



நாம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. ஆகவே, அந்த விற் பனையில் தேக்கம் இருக்கிற காரணத்தால், மறுபடியும் துணியை யும் வாங்க முடியவில்லை; கையிலே தேங்கி இருக்கிற காரணத் தால், விற்கமுடியாத காரணத்தால், பணத்தையும் தர முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையை இப்பொழுது நாம் பரிசீலித்து, நெசவாளர்களுக்குக் குறைந்த பட்சம் தொழில் நடத்துவதற்கான வழிவகைகளை ஏற்பாடு செய்ய முடியுமா என்று பார்த்து வருகிறோம். சிறப்பான முயற் சிகளை மேற்கொண்டு துணிகளை விற்கவும் நாம் முயற்சியினை மேற்கொண்டிருக்கிறோம். பணம் பெற்றுத் தருவதற்கும் நாம் சில நடைமுறைகளை ஏற்படுத்தி வருகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் நெசவாளர்கள் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்த துணிகளுக்குக் காலாகாலத்திலே கோ-ஆப்டெக்சிலிருந்து ரூபாய் கிடைக்காத காரணத்தால் அவர்கள் கோ-ஆப்டெக்சி லிருந்தோ, கூட்டுறவு நூற்பாலையிலிருந்தோ நூல் எடுக்க முடி யாமல் சிரமப்படுகிறார்கள். இதனால் அவர்களுக்கு வேலை வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆதலால், கோ-ஆப்டெக்சினால் ரூபாய் கொடுப்பதற்குக் காலதாமதம் ஏற்பட்டால் அவர்கள் தொழில் செய்வதற்கு நூல் கொடுப்பதற்காவது அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை வர் அவர்களே, நாங்கள் பணம் தருவது, அவர்களுக்கு நூல் தேவை நூல் வாங்கித் தருவது போன்ற இந்த இரண்டு மூன்று காரியங் களையும் ஒன்றாக இணைத்து செயல்படுத்துவதற்கான ஒரு முயற்சியிலே கைத்தறித் துறை ஈடுபட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ரூ. 12.64 கோடி கொடுக்க வேண்டிய பாக்கியிருப்பதாகச் சொன் னார்கள்.

(முற்பகல் 9-40)

இன்னொன்றைச் சொல்லும் பொழுது, துணிகளை மாநில சங்கம் விற்பதில் தேக்கம் ஏற்படுகிறது என்றும் சொன்னார்கள். மாநில சங்கத்தினுடைய இலாப விகிதாச்சாரம் பிரதம சங்கங் களுக்கு 12 சதவீதம் என்றும், மாநில சங்கத்திற்கு 30 சதவீதம் என்றும் அதிக மார்ஜின் வைத்து இலாப விகிதாச்சாரம் இருப்பதால்தான் விற்பனைத் தேக்கம் ; லாப விகிதத்தைக் குறைக்க வேண்டும். அடுத்து, வறட்சி நிறைந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, இராஜபாளையம் போன்ற வட்டாரங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆறு ஏழு மாதங்களாகப் பணம் போய்ச் சேராததன் காரணமாக மிகப் பெரிய கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்களே, அவர்களுக் காவது உடனடியாக அவர்களுக்குச் சேர வேண்டிய பணத்தை அனுப்புவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 11

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கைத்தறி நெசவாளர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்தார்கள். பரமக்குடியைச் சேர்ந்தவர்களும் நேற்றைய தினம் என்னைப் பார்த்தார்கள் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட பிரச்சினைகள் உள்ள இடங்களில் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி யோசனை செய்து பணத்தைத் தருவதற்கான ஒரு முயற்சியையும், துணியை வாங்க முடியுமா என்று யோசித்து துணியை வாங்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு கைத்தறித் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இலாப சதவீதத்தைப் பொறுத்தவரையில், நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு 25 சதவீதத்தை 20 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்று கருதி, அது அமலில் இருப்பதாகக் கருதுகிறேன். அந்த இலாபம் நெசவாளர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு 9 சதவீதமாக இருந்ததை அதிகப்படுத்தச் சொல்லி, அதனால் இப்பொழுது பிரதம நெசவாளர் சங்கத்தைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி அதிகமாகக் கிடைக்கின்ற வாய்ப்பு இந்த ஓராண்டுக் காலத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால் அதுபற்றிய முழு விவரங்களும் இப்பொழுது இல்லாததால் சரியாகச் சொல்ல முடியவில்லை. ஆகவே தனிக் கேள்வி போட்டால் இதைப்பற்றிச் சொல்கிறேன். இது ஒரு முக்கியமான பிரச்சினைதான்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவாப்டெக்ஸ் நிறுவனத்திலிருந்து நெசவாளர் சங்கங்களுக்குப் பாலிஸ்டர் நூல் விநியோகம் செய்யாத காரணத்தால் நெசவாளர் சங்கங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே நெசவாளர்களுக்குப் பாலிஸ்டர் நூல் விநியோகம் செய்யும் திட்டத்தை அரசு உடனடியாகச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் துணித் தேக்கத்தில் பெருமளவு உள்ள துணி இந்தப் பாலிஸ்டர் துணிதான். இதை இப்பொழுது மக்களிடத்திலே அதிகமாக விற்க முடியவில்லை. பாலிஸ்டர் துணி அதிகமாகத் தேங்கியிருப்பதால் நாம் பாலிஸ்டர் துணிகளை வாங்க முடியாத நிலை இருக்கிறது. அதனால் பாலிஸ்டர் நூலைத் தந்து, அந்த உற்பத்தியில் ஈடுபடுத்த முடியாத நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஆனால், நெசவாளர்களுக்கு பாலிஸ்டர் துணிக்குத்தான் அதிகக் கூலி கிடைக்கிறது. ஆகவே, அவர்கள் அதை வற்புறுத்துகிறார்கள். அதை விற்க முடியாத நிலையில் அதை ஊக்கப்படுத்த முடியாது. ஆகவே, இப்பொழுது உள்ள நிலைமையில் அவர்களை வேறு வகைத் துணிகளை நெய்ய ஈடுபடுத்த முடியுமா என்பதைப் பற்றிச் சிந்தித்து வருகிறோம்.



1983 மார்ச் 11]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி இன்றைய தினம் ரூபாய் 12.64 கோடி இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதிலே சிறிய சங்கங்களும் இருக்கின்றன. அந்தச் சங்கங்களுக்குப் போதுமான சங்க மூலதனம் இல்லாத காரணத்தினால் மத்திய வங்கிகளின் நிதி ஆதாரத்தை மட்டும் வைத்துச் செயல்படும் சங்கங்கள் இருக்கின்றன. ஆகவே, ஐந்து இலட்சம் ரூபாய்க்கு குறைவாகவே தங்களுடைய உற்பத்தியைச் செய்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அம்மாதிரியான சங்கங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இம்மாதிரி நிலுவை இல்லாமல் உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா? அத்துடன், குளித்தலை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விநியோக சங்கத்திற்கு, மத்திய வங்கியில் அனுமதிக்கப்பட்டது ஒரு இலட்சத்து எட்டாயிரம் ரூபாய்; ஆனால் இன்று 92,000 ரூபாய் வரையில் நிலுவை பாக்கியாக இருக்கிறது. ஆகவே, அந்தச் சங்கத்தின் உற்பத்தி முடங்கியிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அம்மாதிரி நிலைமைகளைக் கருத்திற் கொண்டு உடனடியாக இதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப் போல அந்தப் பணத்தைத் திருப்பித் தராததால் சங்கத்தின் நடைமுறைகளே பாதிக்கப்படும் என்று இருக்கின்ற சங்கங்களுக்கு ஒரு முதல் உரிமை தந்து, தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் நாம் பணத்தைத் திருப்பித் தரும்பொழுது பரிசீலிக்கிறோம்.

## மாவட்ட நீதிபதிகளுக்கான மெய்க்காவல் பாதுகாப்பு

*வினா எண் 371—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட நீதிபதிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்த காவல் துறை மெய்க்காவல் பாதுகாப்பு தற்போது நிறுத்தப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவர்களுடைய சிறப்பு நிலை கருதி மீண்டும் அரசு மெய்க்காவல் பாதுகாப்புத் தர முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து மெய்க் காவல் நிறுத்தப்படவில்லை, தொடர்ந்து கொடுக்கப்படுகிறது என்று அறிகிறேன். அப்படிப்பட்ட மெய்க்காவல் இன்னும் சில யிடங்களில், அதிலும் குறிப்பாக கலவர நேரங்களில் மாஜிஸ்ட்ரேட்டுகள் ஆஸ்பத்திரி வரையில் தனியாகப் போய் 'டையிங் டெக்லரேஷன்' எடுக்கும்பொழுது அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, எடுக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட ரீதியில், நீதிபதிகளுக்கு, கொடுக்கப்பட்டு வரும் காவல்துறை மெய்க்காவலர்ப் பாதுகாப்பு எந்த ஆண்டு முதல் கொடுக்கப்பட்டு வருகிறது? மாவட்ட நீதிபதிகளே கேட்டு இந்தப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகிறதா அல்லது அரசே முன்வந்து இந்தப் பாதுகாப்பை வழங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, 26–7–1980 முதல் இந்தப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் மாவட்ட நீதிபதிகள் கேட்டும், உயர்நீதிமன்றம் போன்ற இடங்களுக்கு அரசு தானாகவே, கொடுத்திருக்கிறது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சில மாவட்ட நீதிபதிகளுக்கு வாகன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு மாவட்ட நீதிபதிகளுக்கு வாகன வசதி செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே மீதி இருக்கிற மாவட்ட நீதிபதிகளுக்கு வாகன வசதி செய்து கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட நீதிபதிகளுக்கு வாகன வசதி சென்ற ஆண்டு முதன் முறையாக செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.



திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை போன்ற பெருநகரிலுள்ள, பெருநகர் நீதிபதிகள் அன்றாடம் பலதரப்பட்ட கைதிகளைச் சந்திக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே தனியாக பஸ்களிலே செல்கிறார்கள். அப்படிப்பட்ட நீதிபதிகளுக்கு அவர்களுடைய பாதுகாப்புக்காக வாகனவசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே இருக்கிற பெருநகர நீதிபதிகளுக்கு—அவர்களுக்கு—இந்தப் பிரச்சினை எழக்கூடாது என்பதற்காகக் கடந்த 6 மாத காலங்களாக இத்தகைய வாகன வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

திருப்பூர் நகரத்தின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கான திட்டம்.

*வினா எண் 372.—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தின் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு மேட்டுப்பாளையத்திலிருந்து குடிநீர் கொண்டு வரும் இரண்டாவது குடிதண்ணீர்த் திட்டம் திருப்பூர் நகராட்சி மன்றத்தால் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், இது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்திற்கான வரைவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இந்தத் திட்டம் எப்பொழுது முதல் அமல் படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் மற்றும் 4 பேரூராட்சிகள், 44 கிராமங்கள் ஆகியவற்றிற்கு ரூபாய் 917 இலட்சம் அமைப்புச் செலவும், ரூபாய் 38 இலட்சம் ஆண்டு பராமரிப்புச் செலவிலே, பவானி ஆற்றிலிருந்து, குடிதண்ணீர் வழங்குவதற்கான ஒரு கூட்டுக் குடிதண்ணீர்த் திட்டம் தற்போது அமைக்கப்பட்டிருக்கிறது. திருப்பூரிலே உள்ள தண்ணீர்ப் பஞ்சத்தை மனதிலே கொண்டு, இது எவ்வளவு விரைவிலே செயல்பட வேண்டுமோ அவ்வளவு விரைவிலே செயல்படுத்துவதற்கான காரியங்கள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்ல வேண்டாம். பொதுவாகச் சொல்லுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாட்டின் காரணமாக சுமார் 10 கோடி ரூபாய்க்குக் குடிநீர்த் திட்டம் விரைவில் அமல் நடத்தப்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இன்றைக்கு அந்த மக்கள் படுகின்ற கஷ்டத்தைப் போக்குவதற்காக, அவசரக் கால, போர்க் கால நடவடிக்கையாக இதுவரை ஏதாவது போர் வெல்ஸ் போடப்பட்டனவா அல்லது போர் வெல்ஸ் போடுவதற்கு மக்களிடமிருந்து ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா ? அப்படி என்றால், இதுவரை எத்தனை போர் வெல்ஸ்கள் போடப்பட்டுள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல், உள்ளூரிலே இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் முயற்சியின் காரணமாக பல போர் வெல்ஸ்கள் போடப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால், எத்தனை போர் வெல்ஸ்கள் போடப்பட்டன, எங்கெங்கே போடப்பட்டன, என்ன செலவானது போன்ற விவரங்களைத் தருகிறேன்.

இளையான்குடிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 373—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் இளையான்குடிக்கு குடி தண்ணீர் கொடுக்கும் திட்டம் என்ன நிலையில் உள்ளது ?

(ஆ) மூன்று ஆண்டுகள் கால தாமதத்திற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிட்டுள்ளவாறு 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாளிட்ட ஆணையில் அரசு இளையான்குடி பேரூராட்சி, டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரி மற்றும் அருகில் உள்ள கிராமங்களுக்கு ரூ. 54·80 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.





திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடிக்கு குடிநீர் கொடுக்கும் திட்டத்தின் அடிப்படையில் 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் தேதியிலே நிர்வாக உத்தரவு போடப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இன்றுவரையிலும் அந்த வேலைகள் அங்கே ஆரம்பிக்கப்படாத நிலை இருந்துகொண்டு இருக்கிறது. வறட்சி நிலைமை கடுமையாக இருந்து கொண்டு இருக்கிற அந்த இளையான்குடி பகுதிக்கு மட்டும் இது பயன் தருவது அல்ல, அதை ஒட்டி இருக்கின்ற 16 கிராமங்களுக்கும் சேர்த்து இந்தத் திட்டம் பயன் தருவதாக இருப்பதால், அந்த வேலையைத் துரிதமாக செய்து முடிப்பதற்கு, போர்க்கால நடவடிக்கைகளைப் போல் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள், வறட்சி நிவாரணப் பணிகள் என்ற வகையில் செய்யப்பட வேண்டிய முயற்சிகள் வேறு. நீண்டகால அடிப்படையில் செய்யப்படுகின்ற திட்டங்கள் வேறு. இந்தத் திட்டம் நீண்ட கால அடிப்படையில் செய்யப்படுகின்ற திட்டமாகும். இனிமேல் அதற்கான டென்டர் விட்டு, லேன்ட் அக்குவிசிஷன் செய்து, மெட்டீரியல்ஸ் எல்லாம் வாங்கி, முறைப்படி அந்தத் திட்டம் ஏற்ற காலத்தில் செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகளை அந்தந்தக் கலெக்டர்கள் எங்கெங்கே எவ்வளவு குழாய்கள் போட வேண்டும் என்று முடிவு செய்கிறார்களோ அந்த அடிப்படையில், அதற்கு வேண்டிய அளவில் காரியங்கள் நடைபெறும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நீண்டகால திட்டம் என்பதாலோ என்னவோ நீண்ட காலதாமதத்திற்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை வேகமாக முடிப்பதற்கு ட்வாட் மூலமாகவோ அல்லது கலெக்டர் மூலமாகவோ செய்வதற்கு உடனடியாக உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்த ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கும், இந்த ஒரு குறிப்பிட்ட திட்டத்தை விட, முன்னுரிமை கொடுத்து செய்ய வேண்டும் என்று கலெக்டர்களுக்கு ஆணை அனுப்புவது என்பது அவ்வளவு முறையானது அல்ல. இந்தத் திட்டம் மிகவும் அவசியமானது, அவசரமாகச் செய்யுங்கள் என்று பேசும் போது சொல்லலாம். அது அவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கும். அந்த வகையில் அந்தப் பகுதிக்குச் செல்கிறபோது இந்தத் திட்டத்தை விரைவாகச் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு வருகிறேன்.

[1983 மார்ச் 11

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே,
நீண்ட நாளாக எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு திட்டம். இந்தத்
திட்டம் மிக விரைவாக அமல் படுத்தப்பட வேண்டுமென்று
அறிவித்ததற்காக மக்களுடைய சார்பிலே நான் என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் நிறை
வேற்றப்பட்டால் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு எவ்வளவு
தண்ணீர் கிடைக்குமென்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்
களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, திருப்பூரில் இப்பொழுது 1,13,302
மக்கட்தொகை—1996–ல் 2,25,000 என்று எதிர்பார்க்கப்படு
கிறது. 2001–ல் 3 இலட்சம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த
எதிர்பார்க்கப்படுகிற மக்கட்தொகையை அப்படியே வைத்துக்
கொள்வதற்கும், அதை அதிகரிக்கவிடாமல் பார்த்துக்கொள்வதும்
மாண்புமிகு உறுப்பினரவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களே
யானால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் 110 லிட்டர் ஒரு நாளைக்
குக் கொடுக்கப்படும். 110 லிட்டர் ஒரு நாளைக்கு என்பது மிக
அதிகமான தண்ணீர் சப்ளை என்பதையும் சொல்லிக்கொள்கி
றேன். நான் வேண்டிக்கொள்வதெல்லாம் என்ன எதிர்பார்க்கி
றோமோ அதற்கு மேலே போய்விடக்கூடாது. மக்கட்தொகை
அதிகமாகப் போய்விடுமேயானால், 110, 105, 100, 90 என்று
இறங்கிவிடும். இந்த முயற்சியிலே அந்தத் தொகுதியிலே நல்ல
பிரச்சாரம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்ய வேண்டு
மென்று வேண்டிக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, மக்கட் தொகையைக் கட்டுப்படுத்துவது என்ற கண்டிஷனை
ஏற்றுக்கொண்டு, குடிநீர்த் திட்டத்தைப் போடுவது—நாம்
ஏற்றுக்கொள்ள முடியாத விஷயம்—மக்களுக்கு அது பிற்காலத்
திலே கவனிக்க வேண்டியது—குடும்பத்தை ஆக்குவதும், அதை
எந்த அளவுக்குப் பெரிசாக வேண்டுமா என்ற சுதந்திரம் குடும்
பத்தைச் சார்ந்தது. தலைவரவர்களே, நான் கேட்க விரும்பு
வது—திருப்பூர் நகரில் இந்தத் தண்ணீர் கிடைக்காது, வறட்சி
மிக மிக அதிகமாக ஆகிவிட்டது. திருப்பூர் நகரத்திலே புகும்
படியான அணைப்பர்பாளையம் ஏரி முழுவதும் தங்களுடைய
பெல்ட் ஏரியா நகருக்குள்ளே இல்லாவிட்டாலும் கூட, அமைச்ச
ரவர்களே போய்ப் பார்க்கலாம். ஒரு நாளைக்கு காலையி
லிருந்து இரவு முழுவதுமே 500, 1,000 குடங்களை வைத்துக்
கொண்டு பெண்கள் தண்ணீர் கிடைக்காமல் காத்துக்கொண்
டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு சில வரு
டங்கள் ஆகலாம். அதற்குள்ளே இடைக்கால நிவாரணமாக அங்கே
தண்ணீர் கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாட்டை உடனடி
யாக அரசு செய்வதற்கு அமைச்சரவர்கள் கொண்டுவருவார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 11]

(முற்பகல் 9–50)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொன்ன கருத்துக்கு சரியான விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.
திட்டம் கொண்டுவரும்போது இந்த ஆண்டில் இவ்வளவு மக்கள்
தொகை இருக்கும், இவ்வளவு தண்ணீர் கொடுத்தால் ஒவ்வொரு
வருக்கும் இவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று முடிவு செய்
கிறோம். 1996-ல் இவ்வளவு மக்கள் தொகை இருக்கும்,
2001-ல் இவ்வளவு இருக்கும் என்றும், எவ்வளவு லிட்டர்
இதனால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் என்று நாம் முடிவு
செய்து தண்ணீர் சப்ளை செய்கிறோம். இந்தக் கணக்கு தவ
றாகிவிட்டால், எந்த அளவுக்கு மக்கள் தொகை அதிகரிக்கிறதோ
அந்த அளவுக்கு தண்ணீர் சப்ளை குறையும். இட் இஸ் எ
லாஜிகல் கன்குளுசன். எனவே, இதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது அண்மைக் காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்
களின் முயற்சி காரணமாக குடிநீர் சப்ளை முன்னேறியிருக்கிறது.
இது ஒரு நல்ல திட்டம். இதை விரைவிலே கொண்டுவருவதற்கு
ஏற்பாடு செய்கிறோம். நகராட்சி எல்லையின் ஓரமாக இருக்
கின்ற வீடுகளுக்குத் தண்ணீர் தருவதற்கு நகராட்சி மேலும் 138
இலட்ச ரூபாய்ச் செலவில் திட்டமிட்டு செலவு செய்யவேண்டு
மென்றும், அதைப் பற்றிய செயற்குறிப்பு—நகராட்சி பார்டரிலே
உள்ள வீடுகளுக்கு, ஹவுஸ் கனெக்ஷன் கொடுப்பதற்கு—இந்தச்
செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திருப்
பூர் மணிமாறன் அவர்கள் கேட்ட துணைக் கேள்விக்கு பதில் அளிக்
கின்றபோது உறுப்பினரே மக்கள் பெருக்கத்தைத் தடுப்பதற்கு
வகை செய்ய வேண்டுமென்று இங்கே சொன்னார்கள். எந்
தெந்த முறைகளிலே அந்த வகை அமையவேண்டுமென்று அறிந்து
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வரவர்களே, நானே சொன்னேன். தொகுதியிலே பிரசாரம்
செய்ய வேண்டும். பொதுக் கூட்டங்களிலே பேச வேண்டும்.
மக்கள் தொகை பெருகிக்கொண்டே போகிறது. ஒரு குழந்தை
அல்லது குழந்தையே வேண்டாம். இரண்டுக்கு மேல் போகா
தீர்கள் என்று இப்படிப் பிரசாரம் செய்தால்தான் நாடு உருப்
படும். பேமிலி பிளானிங்தான் மிக முக்கியமானது. என்னதான்
ஒரு நாடு உணவு உற்பத்தியிலே வளர்ந்தாலும், நாம் மக்கள்
தொகையைப் பெருக்கிக்கொண்டே போனால் இந்த நாடும் முன்
னேறாது. சீனாவிலே இப்போது ஒரு குழந்தைதான் என்று
சொல்லிவிட்டார்கள். இது ரமணி அவர்கள் ஆதரிக்கக்கூடிய ஒரு
கொள்கை. அதைத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல எங்காவது உடைந்து இருந்து, சரியாக இல்லை என்றால் அது பற்றி பரிசோதனை செய்து, ஏற்ற நடவடிக்கை எடுக்கும்படி சொல்கிறேன்.

**திரு. வே. இராஜசேகரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ' மான்ஹோல்' திருட்டுப்போவது உண்மை என்று சொன்னார்கள். அப்படியென்றால் காவல்துறை மூலமாக நடவடிக்கை ஏதாவது எடுக்கப் பட்டிருக்கிறதா? திருட்டுப்போன 'மான்ஹோல்' கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ? திருட்டுப்போகிற அந்தப் பொருட்களை வாங்குகின்ற வியாபாரிகள் அவர்களுக்கு உற்சாகம் அளிக்கின்ற வகையில், அவர்களுக்கு உடைந்ததையாக இருக்கிறார்கள். அத்தகைய வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதோடு 'மான்ஹோல்' காணாமல் போகிற இடத்திற்கு முன்னுரிமை கொடுத்து, 'பிரையாரிட்டி பேசிஸில் மான்ஹோல் போட ஏற்பாடு செய்யப்படுமா? மக்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணைக் கேள்வி கேட்கும் போது ஒரே நேரத்தில் இப்படி பல கேள்விகளைக் கேட்டால் சரியாகப் பதில் சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே இரும்பு மூடிகள் அடிக்கடி காணாமல் போவது பற்றியும், திருட்டைத் தடுப்பது பற்றியும் அண்மையில் சென்னை மாநகர் காவல் துறை ஆணையாளரை தொடர்பு கொண்டு, அவருடன் கலந்தாலோசித்தோம். திருட்டு பற்றி தகவல் கொடுத்தால் உடனடியாக தன் பணியாளர்கள்மூலம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி புகார் கொடுத்ததன் பேரில் ஒரு குற்றவாளி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார். கோடம்பாக்கத்தில் பழைய இரும்பு வாங்கும் ஒரு வியாபாரி இம்மூடிகள் வாங்கியது தொடர்பாக கைது செய்யப்பட்டிருக்கிறார். எனவே காவல்துறை தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. பாலன் :** தலைவரவர்களே, சென்னை போன்ற பகுதிகளில் இன்றையதினம் பாதாள சாக்கடை மூடிகள், ஏராளமான இரும்பு மூடிகள் திருடப்படுகின்றன, பல ஆண்டுகாலமாக திருடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக இன்றையதினம் மாநகராட்சியை விட்டு குடிநீர்வடிகால் வாரியத்திற்கு மாற்றப்பட்ட பின்னால் இந்தத் திருட்டுகள் ஏராளமாக இருக்கின்றன. அதுபற்றி காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கிறார்களா என்றால் இல்லை. இப்படிப் பட்ட மூடித் திருட்டுகள் பெரிய கொலை குற்றமாகக் கருதப்பட வேண்டும். அவர்களை அறியாமலே அவர்கள் பொதுமக்களை சாகடிக்கிறார்கள். இப்படிப்பட்ட மூடிகளை வாங்குகின்றவர்களை 'மிசா கைதிகள்' போல் கருதி, அவர்கள்மீது கடுமையான



நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக எல்லா இடங்களிலும் இந்த மூடிகளைப் போடுவதற்கும், திருட்டைத் தடுப்பதற்கும், திருட்டுப் பொருளை வாங்குகின்றவர்களை 'மிசா கைதிகள்' போல் நடத்துவதற்கும் தேவையான உத்தரவுகளைப் பிறப்பிப் பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது மாநகராட்சியிலிருந்து தனியாக குடிநீர் வடிகால் வாரியம் ஏற்பட்ட பின்னால் தான் திருட்டு அதிகமாகியிருக்கிறது என்று எந்த அடிப்படையிலே சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. அதை மாற்றக் கூடாது என்று கருத்து இருக்குமானால் இதிலே எப்படி அதை நுழைத்துச் சொல்ல முடியும் ? அது மாற்றப்பட்டிருந்தாலும், இன்றைக்கும் கூட அதனுடைய பராமரிப்பு—மெயின்டனன்ஸ் மாநகராட்சியில்தான் இருக்கிறது. இந்த ஆழ்துளை பைப்புகள் போடப்பட்டிருக்கும் வாயிலில் உள்ள மூடிகள், கழிவு நீரகற்றும் குழாய்களின் மேல் உள்ள மூடிகள், மழைநீரகற்றும் கால்வாய் மேல் உள்ள மூடிகள் இவையாவும் மாநகராட்சியின் பராமரிப்பு பொறுப்பிலேதான் உள்ளன. இவைகளும் காணாமல் போகின்றன என்று புகார்கள் வருவதால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மிசா சட்டத்தின் கீழ் இந்த மூடித்திருட்டுக் குற்றத்தைக் கொண்டு வருவது பற்றி, மிகத் தீவிரமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் இப்போது சொல்லியிருக்கிற காரணத்தால், சட்டத் துறை அமைச்சர் அவர்களையும் கலந்து கொண்டு. இதில் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கலாம்.

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, சாக்கடைகளின் மேல் போடப்பட்டுள்ள இரும்பு மூடிகளை அது எந்த இலாகாவிலே யாருடைய பொறுப்பிலே பராமரிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களே அதுபோன்ற திருட்டுகளை நடத்தி வியாபாரிகளிடம் விற்றுவிடுகிறார்கள் என்கிற தகவல் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? அப்படி வந்திருந்தால், அந்தப் பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி இல்லையென்றாலும், இனிமேலாவது அப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைகளை எடுக்க, இந்த திருட்டுகளை தவிர்க்க, அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிலாளர்களே இவைகளைச் செய்கிறார்கள் என்கிற தகவல் வரவில்லை. ஆனால் தற்போது மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் அந்தத் தொழிலாளர்கள் தான் திருடுகிறார்கள் என்கிற தகவலை வைத்திருப்பதால், விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

[1983 மார்ச் 11

சென்னை நகரிலுள்ள பாதாளச் சாக்கடைகளுக்கான இரும்பு மூடிகள்.

*வினா எண். 374—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் தெருக்களில் உள்ள பாதாளச் சாக்கடை இரும்பு மூடிகளெல்லாம் களவு போவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) இரும்பு மூடிகளுக்குப் பதில் சிமெண்ட் மூடிகளைப் போடுவது பாதுகாப்பாக இல்லை என்பது அரசின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் பல தெருக்களில்—பெரிய பெரிய நெடுஞ்சாலைகளில் கூட—போடப்பட்டுள்ள பாதாள சாக்கடை மூடிகள் களவு போய் விடுகின்றன என்று நீண்ட நெடுங்காலமாக பல்வேறு நேரங்களில் என்னைப் போன்ற பொது வாழ்வில் ஈடுபட்டு இருக்கின்றவர்கள் புகார்கள் செய்து இருக்கிறோம். அப்படி புகார் செய்யப்பட்ட பின்னாலே இரும்புக் குழாய் மூடிகளுக்குப் பதிலாக சிமெண்டால் செய்யப்பட்ட மூடிகளை அங்கே போட்டு இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப் பட்ட தகவல் வரவில்லை என்று அமைச்சர் சொல்லிய செய்தி சரியாக இருக்குமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த மூடிகள் இல்லாத காரணத்தால் வாகனங்கள், கார்கள் போகின்ற நேரத்தில் விபத்துக்கள் நேரிடுகின்றன. நடந்து செல்கிறவர்கள் கூட விபத்துக்குள்ளாக்கப்பட்டு விடுகின்றனர் என்பதை அரசு அறியுமா ? அதைப்பற்றி உடனடியாக உண்மை நிலையை அறிந்து, அதைப் போக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்வி. சென்னை நகரில் தெருக்களில் உள்ள பாதாளச் சாக்கடை இரும்பு மூடிகளெல்லாம் களவு போவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா என்பதாகும். ஆமாம், வந்துள்ளது என்று சொன்னேன். இரண்டாவது கேள்வி, இரும்பு மூடிகளுக்கு பதில் சிமெண்ட் மூடிகளைப் போடுவது பாதுகாப்பாக இல்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா என்பதாகும். அதற்கு இல்லை. கொண்டுவரப்படவில்லை என்று சொன்னேன். அதைச்



1983 மார்ச் 11]

சந்தேகித்து மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கிறார்கள். நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். அப்படி கொண்டு வரப்படவில்லை. இப்போது நீங்கள் கொண்டு வந்து இருக்கிறீர்கள். இதற்கு முன்னால் கொண்டு வரப்படவில்லை.

ஆழ்துளைவாய் மூடிகளை மாற்றும் சமயங்களில் அதிக வாகனங்கள் செல்லாத தெருக்களில் கான்கிரிட் மூடிகள் பொருத்தப்படுகின்றன. அதிக டிராபிக் இல்லாத இடங்களில்தான் அவைகள் பொருத்தப்படுகின்றன. அவைகள் இரும்பு மூடிகளை விட விலை குறைவானது. 18'' இரும்பு மூடியின் விலை 250 ரூபாய். அதே அளவில் உள்ள கான்கிரிட் மூடியின் விலை 40 ரூபாய். மேலும் கான்கிரீட் மூடிகள் திருடுவதற்கு உட்படுத்தப்படவில்லை. சமூக விரோதிகள் அந்த கான்கீரிட் மூடிகளில் உள்ள கம்பிகளை விற்பதற்காக முயற்சி செய்தாலும் அவைகளை உடைத்து நாசம் செய்தால்தான் முடியும் என்ற நிலை இருப்பதால் அவ்வளவு களவு போவது இல்லை. ஆகவே, அதைப் போடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அந்த மூடிகளைப் போடுவதால் எந்த அளவிற்கு ஆபத்து என்று 'டெக்னிகல்லாக' ஒரு கடிதம் எழுதி அனுப்பினால், நான் இங்கேயுள்ள டெக்னிகல் எக்ஸ்பர்டுகளுக்கு அதை அனுப்பி, அது சரிதானா என்பதைப் பார்த்து, அதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்வேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, விரிவாக டெக்னிக்கலாக எழுதுவதற்கு நான் ஒரு டெக்னிஷியனைக் கேட்டு, தெரிந்து, கடிதம் எழுதுகிறேன். ஆனால் இன்றைய தினம் போடப்பட்டிருக்கிற சிமென்ட் மூடிகள் உடைந்து, அவை மீண்டும் போடப்படாத நிலைமை இருக்கிறது. விலை குறைவாக இருந்தாலும் பாதுகாப்பாக இல்லை. அந்த மூடிகள் திருட்டுப் போன பிறகு, மீண்டும் போடப்படாமல், நடைபாதையிலே செல்கிறவர்கள் விபத்துக்குள்ளாகிறார்கள். சிமென்ட் மூடிகள் போடுகிற இடத்தில் கூட அப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுகின்றன. காரணம் அங்கே மூடிகள் இல்லை. உடைந்துபோன பிறகு சிமென்ட் மூடிகள் கூட சரியாகப் போடப்படுவதில்லை. தரமான சிமென்ட் மூடிகளாக இல்லாததால் சீக்கிரமாக உடைந்து விடுகின்றன. ஆகவே, இத்தகைய விபத்துக்களைத் தடுக்க தரமான சிமென்ட் மூடிகளைப் போட்டால் முடியும் என்று கருதுகிறேன். அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

காவேரிப்பாக்கம் ஏரியைப் பழுதுபார்க்கும் திட்டம்.

* வினா எண் 376—திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. கோபால் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்திலுள்ள காவேரிப்பாக்கம் ஏரியை பழுதுபார்த்து கரை மடைகளை உயர்த்தும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இப்பணி வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ. 4 லட்ச மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, செயல் படுத்தப்பட்டுவருகிறது.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வறட்சி நிவாரணப் பணியிலே அந்த ஏரியை பழுது பார்க்கும் வேலையை எடுத்துக்கொள்ளவிருப்பதாக, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே மிகப் பெரிய ஏரிகளில் ஒன்றாக காவிரிப்பாக்கம் ஏரி இருந்துக் கொண்டு வருகிறது.

(முற்பகல் 10.10)

ஆகவே அந்த ஏரியினுடைய கரை நீளம் 4 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கின்றது. ஆகவே ஏறக்குறைய 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்ற ஒரு தன்மையினை அந்த ஏரி பெற்றிருக்கின்றது. எனவே அதனை நம்பி இருக்கின்ற ஏழை விவசாயப் பெருமக்கள் எல்லாம் இன்று கடுமையான வறட்சிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே ஒரு அடி உயரத்திற்குக் கரையினை உயர்த்தி அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கின்ற வாய்ப்பினை அரசு உருவாக்கித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் ஏரியின் கரை யினைப் பலப்படுத்துவதே மழை நீரால் அரித்து சேதம் ஏற்படு வதைத் தவிர்ப்பதற்காகத்தான், அப்படிப்பட்ட பணி யினைத்தான் இப்போது எடுத்துச் செய்து வருகிறோம். எனவே அந்தப் பணி முடிவடைகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கின்ற நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



135992



திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே போன்று இந்த வறட்சி நிவாரணத்தில் ஏரி தூர் எடுக்கின்ற பணிக்காக மேலும் பல இலட்சக்கணக்கான ரூபாயினை ஒதுக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரியின் கரையினைப் பலப்படுத்து வதே தூர் எடுப்பதற்கு ஆகின்ற செலவை விட அதிகமாக இருக்கும். மேலும் தூர் எடுத்தாலும் அந்த மண்ணை வெளியே கொண்டுவருவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. ஏனென்றால் ஏரியினைச் சுற்றியுள்ள அனைத்து பகுதிகளிலும் விவசாயம் நடக்கின்றது. எனவே அங்கே உள்ள விவசாயிகள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கரையைப் பலப்படுத்துவதன் மூலம் ஓரளவுக்கு கொஞ்சம் உயர்த்த முடியும் என்றுதான் அரசு கருதுகின்றது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகின்ற இந்த இரண்டு பணிகளும் விரைவிலே முடிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெய்வேலி சுரங்கங்கள் மூலம் வெளிவரும் உபரி நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம்.

* வினா எண். 377—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) நெய்வேலி முதல் சுரங்கம், இரண்டாவது சுரங்கம் மூலம் வெளிவரும் உபரி தண்ணீரை பாசனத்திற்காக விருத்தா சலம் அணைக்கட்டு மூலம் ஏற்பாடு செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) நெய்வேலி முதல் சுரங்கத்திலிருந்து வெளிவரும் உபரி நீரால் விருத்தாசலம், கடலூர் வட்டங்களிலுள்ள கிராமங் களின் நிலங்கள் பயன் அடைந்து வருகின்றன. நெய்வேலி இரண்டாம் சுரங்கத்திலிருந்து வெளியாகும் குறைந்த பட்ச உபரி நிலத்தடி நீரை பாசனத்திற்காக விருத்தாசலம் வட்டத் தில் பயன்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. தலைமைப் பொறியாளர் மற்றும் பாசனத்துறை அதிகாரிகள் ஆகியோர் இதுபற்றி நெய்வேலி சுரங்க உயர் மட்ட அதிகாரி களுடன் கலந்து மேலும் விரிவான ஆய்வறிக்கை பெற உள்ளனர். இதுபற்றி ஆய்வுகள் பொதுப்பணித்துறை அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

## ஒகியான் மதகு மற்றும் புலிகேட் ஏரியிலிருந்து சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 375—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்க ஒகியான் மதகு ஏரியையும், புலிகேட் ஏரியையும் பயன்படுத்த அரசு பரிசிலனை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) புலிகேட் மற்றும் ஒகியான் மதகை சென்னை நகருக்கான ஒரு குடிநீர் நிலையாக செய்வதன் சாத்தியக் கூறுகளை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் பரிசிலித்தது. இதன்படி இவைகளை குடிநீர் தேக்கம் மற்றும் ஆதாரமாக அமைக்கும் ஆலோசனை சாத்தியமாகாதது என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த திட்டங்கள் சாத்தியமாகாது என்று நிபுணர்கள் கூறுவதாகக் கூறியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சரிடம் இது பற்றி நேரில் பேசியதற்குப் பின்னால் மீண்டும் பல நிபுணர்களைச் சந்தித்துக் கேட்டேன். திருவான்மியூருக்கு அருகிலே உள்ள ஒகியான் மதகிலேயிருந்து அதனை ஆழப்படுத்துவதன் மூலமாக தென் சென்னை முழுவதற்கும் தண்ணீர் கொடுக்க முடியும் என்றும், அதற்கு 1/2 மீட்டர் ஆழம்தான் தோண்ட வேண்டும் என்றும், அப்படி தோண்டி எடுக்கப்பட்ட அந்த மண்ணையும் 6 கோடி ரூபாய் அளவில் விற்பனை செய்ய முடியும் என்றும், சென்னையிலே இருக்கிற பல தொழிற்சாலைகள் அதை வாங்கிக் கொண்டு போக தயாராக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்கள் பழவேற்காடு ஏரியைப் பொறுத்தவரையில், நல்ல தண்ணீர் ஏரியாக அது இருந்தாலும்கூட, உப்புத் தண்ணீர் கலக்கிறபோது, அதிலிருந்து





சேக்ரிபைடு அக்குவாப் பம்பு என்ற இயந்திரத்தின் மூலம் நல்ல தண்ணீரை தனியாக விஞ்ஞான முறையில் பம்பு செய்து எடுக்கிற முன்னேற்றங்கள் வந்து விட்ட காரணத்தாலே அதுவும் சாத்தியம் தான் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதனை அரசு மறுபடியும் பரிசீலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஒகியான் மதகைப் பற்றிய இறுதியான ஒரு அறிக்கையை, அந்த மதகு நீரை பரிசீலனை செய்து, அந்த நீரின் தன்மை உவர்ப்பு உள்ளதாகவும், குடிப்பதற்கு தகுதியற்றதாகவும் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றி மேற்கொண்டு பேசி நாம் காலத்தை வினாக்க தேவையில்லை என்று தெரிவித்துவிட்டேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். புலிகேட் ஏரியைப் பற்றியும் ஒகியான் மதகு பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே பேசினார்கள். ஆகவே, அதற்காகவே சிரமம் எடுத்துக்கொண்டு, அந்த ரிப்போர்ட்டினுடைய காப்பியை கொண்டு வந்து கிட்டத்தட்ட 1 1/2 பக்கம் இருக்கிறது அந்த ரிப்போர்ட் மாண்புமிகு உறுப்பினரிடம் கொடுத்திருக்கிறேன். அவைக்குத் தெரிய வேண்டுமானால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால் படித்துக் காட்டுகிறேன் (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அறிக்கையை படிக்க வேண்டாம். அதனை தயார் செய்து அவையிலே வைத்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வதைக் போல, எல்லா உறுப்பினர்களுக்கும் அது கிடைக்கும்படியாக அது பற்றிய முழு விவரத்தையும் அறிக்கையாக தயார் செய்து இந்தப் பேரவையில் வைத்துவிடுகிறேன். ஏனெனில் ஒகியான் மதகிலிருந்து தண்ணீர் கிடைக்கும் தண்ணீர் வருகிறது, வருகிறது என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள், ஆகவே, பேரவைத் தலைவரின் ஆணைப்படி அதனை வைத்துவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அறிக்கையை வைத்த பிறகு மேற்கொண்டு கேள்வி கேட்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அப்போது இந்தக் கேள்வியை ஒத்திவைக்கிறீர்களா ?

[1983 மார்ச் 11

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி ஒன்றாவது சுரங்கத்திலே உண்டாகக்கூடிய நீர் பரவலாற்றிலே விழுந்து கடலிலே போய் கலக்கின்றது. அது விவசாயத்திற்கு உபயோகம் இல்லாமல் போய் விடுகின்ற நிலைமை இருக்கின்றது. இப்போது இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுகின்றது. இனிமேல் 3-வது சுரங்கமும், 4-வது சுரங்கமும் வெட்டப்பட இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் அதிலிருந்து வருகின்ற தண்ணீரை விவசாயத்திற்கு உபயோகப்படுத்துவதற்கான நடவடிக்கையை தமிழக அரசு இன்று வரை எடுக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அந்தத் தண்ணீரைத் தடுத்து ஜம்பேரியில் விட்டு விருத்தாசலம் அணையிலே விட்டால் அதனால் அது பல கிராமங்களை அடைய முடியும். ஆனால் இப்போது அந்தத் தண்ணீர் பரவலாற்றிலே விழுந்து கடலில் விழுகின்றது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே அந்தத் தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்துகின்ற வகையில்—எந்த கிராமத்திற்கு வேண்டுமானாலும் பயன்படட்டும்—அந்த வகையில் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி முதல் சுரங்கத்திலிருந்து வெளிவரும் நீரினை இன்று இரண்டு ஓடைகள் மூலம் விருத்தாசலம், கடலூர் போன்ற இடங்களுக்கு வெட்டி விடப்பட்டு 23 கிராமங்களில்5, 437 ஏக்கர் நிலங்கள் பயனடைகின்றன. எனவே முதல் சுரங்கத்திலிருந்து வெளிவருகின்ற உபரிநீர் பயனற்று செல்கின்றது என்ற முறையில் பேசுவது தவறு என்ற கருத்தினை இந்த அவையிலே வலியுறுத்துகிறேன். மேலும் இரண்டாவது சுரங்கத்தின் மூலம் எவ்வளவு கிடைக்கும் என்று ஆய்வு செய்வதற்கு நிபுணர் குழுவினை இந்த அரசு அமைத்து அந்த நீரையும் பயன்படுத்துகின்ற சாத்தியக்கூறு பற்றி ஆராய்ந்து சுரங்கக் குழுத் தலைவர்களோடு தொடர்பு கொண்டு அடிக்கடி அவர்களோடு கலந்துரையாடல் செய்து இப்போது நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். எனவே அதுவும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்வது ஆதாரமற்ற உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வறண்ட மாவட்டங்களில் மிக முக்கியமான மாவட்டம் தென் ஆற்காடு மாவட்டம். அந்த பகுதியில் வாழும் மக்கள் உயர்வடைய என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த நடவடிக்கைகளை மிக விரைவாக எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 மார்ச் 11]

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. அந்த தண்ணீரை திருப்பி விடுவதற்கு அரசு செலவு செய்யும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட தண்ணீரை கீழ் நோக்கிவிடாமல் மேல் நோக்கி விட்டால் கிராமப்புறங்களுக்குச் சென்று பாயும். அமைச்சர் அவர்கள் சொன்ன கணக்கை நான் மறுக்கவில்லை இருந்தாலும் நடவடிக்கை எடுக்கும்போது தண்ணீரை மேல்நோக்கி பாய அணைகள் கட்டி பாயவிட வேண்டும். ஏதோ ஓடை மூலம் ஏதோ தஞ்சாவூரில் பாய்வது போல் இருக்கிறது. பொதுப்பணித்துறை மூலமோ அல்லது அமைச்சர் அவர்களுடைய துறை மூலமோ இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய்களை அமைத்து எந்த அளவுக்கும் விரயமாகக்கூடாது என்ற அரசின் கருத்துருவை ஒப்புக்கொண்டு அந்தப் பணி இப்போது நடந்து வருகிறது. முக்கியமான பிரச்சனை இரண்டாவது சுரங்கம் வெட்டுகின்றபோது ஏற்படக்கூடிய உபரி நீரை எப்படி பயன்படுத்தினால் எந்த அளவுக்கு நாம் பயன்பெறலாம் என்ற அளவில் விரைவாக நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அந்த பகுதியில் உள்ள விவசாயிகளின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

## தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*வினா எண். 378—திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம். (ஆ) : தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பிழிந்திறனை 1,250 டன்னிலிருந்து 2,000 டன்னுக்கு ரூபாய் 4 கோடி முதலீட்டில் விரிவாக்கம் செய்ய அவ்வாலை விண்ணப்பித்துள்ளது. இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. மு. ப. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் அனுமதியைப் பெற தமிழ்நாடு அனுப்பியுள்ளதா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலையை விரிவாக்கும் திட்டம் 25–1–83-ல் தான் மாநில அரசுக்கு வந்திருக்கிறது. அரசினுடைய முடிவுக்குப் பின்னால் மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

திரு. மு. ப. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய சர்க்கரை ஆலையை நிறுவுவதை விட இப்படிப்பட்ட பழைய சர்க்கரை ஆலையை விரிவுபடுத்தினால் அரசுக்கும் லாபம், பொதுமக்களுக்கும் லாபம். ஆகவே இந்த திட்டத்தை சீக்கிரமாக இந்த நிதி ஆண்டிலேயே பூர்த்தி செய்து கொடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை மட்டும் அல்லாமல் லாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளையும், போதுமான கரும்பு பயிரிடக்கூடிய நிலம் அல்லது ஏரியா போதுமான அளவுக்கு இருக்குமானால் அந்தப் பகுதியில் இருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை விரிவாக்கம் செய்ய அரசு கொள்கை அளவில் முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்ப அந்த அந்த சர்க்கரை ஆலை கேட்டு அனுப்புகிற கடன் வசதி மற்ற ஏற்பாடுகளை செய்து பின்னால் மைய அரசுக்கு பரிந்துரை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இன்றைக்கு இருக்கிற அறவைத் திறனை கூட்டித்தருவதாக அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால் நாங்கள் கேள்விப்பட்டது அரூர் பகுதியில் ஒரு சிறிய மினி சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு அரசின் உத்தேசம் இருப்பதாக நாங்கள் அறிகிறோம். அந்தமாதிரியான நோக்கங்கள் அரசுக்கு இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கூட்டுறவு சர்க்கரை ஆலை விரிவாக்கம் பற்றி, இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை அருகில் போதுமான கரும்பு பயிரிடக்கூடிய நிலம் இருக்கிற காரணத்தினாலும் இந்த ஆலை லாபத்தில் முழு அறவைத்திறனோடு இயங்கிக்கொண்டிருக்கிற காரணத்தினாலும் இதன் விரிவாக்கம் பற்றி இப்போது அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம்





சிறிய ஆலைகளை அமைக்கத் தனியார் முன்வந்தால், எந்த மாவட்டம் எந்தப் பகுதியாக இருந்தாலும் அவர்கள் மனு வருகிற போது அந்தத் தனியார் மனுக்களை பரிசீலனைச் செய்து மைய அரசுக்கு பரிந்துரை செய்கிறோம்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலக்கோட்டில் இருக்கிற சர்க்கரை ஆலையின் திறன் 1,250 டன். ஆனால் இப்போது அங்கே 1,650 டன் உற்பத்தி ஆகிக்கொண்டுவருகிறது. அதை 2,000 டன்னுக்கு உயர்த்த 4 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது இருக்கிற வேகத்தில் அது இன்னும் இயங்க முடியாமல் ஆம்பூர் திருப்பத்தூர் போன்ற பாகங்களுக்கு கரும்பை அனுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே வெகு வேகமாக இந்த முயற்சியை எடுத்து இந்த நிதி ஆண்டிலேயே நிறைவேற்ற வழிவகைகளை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, கரும்பு பயிரிடுகிற பகுதி அதிகமாக இருக்கிற காரணத்தினாலேயும் அது லாபகரமாக இயங்கிக்கொண்டிருகின்ற காரணத்தினாலேயும் முழு அளவுத் திறனுடன் இயங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலேயும் விரிவாக்கம் பற்றி அரசு முடிவு செய்திருக்கிறது. அந்த ஆலையைப்பற்றி வெகு விரைவில் அரசு முடிவு செய்யும்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மூலம் துவக்கப்படவுள்ள காகித ஆலை.

* வினா எண். 379—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மூலம் துவக்கப்படவுள்ள காகித ஆலைக்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில் ஆலை எப்பொழுது செயலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை. (ஆ) சிறு காகித ஆலையை தனிக் கூட்டுறவு நிறுவனமாக செயல்படுத்துவதா அல்லது மதுராந்தகம் கூட்டுறவுசர்க்கரை ஆலையின் ஒரு பகுதியாக செயல்படுத்துவதா என்பது பரிசீலனையில் உள்ளது. இது சம்பந்தமாக விரைவில் முடிவு எடுக்கப்பட்டு ஆண்டுக்கு 500 டன் உற்பத்தி செய்யக்கூடிய 2 கோடி முதலீட்டுடன் கூடியசிறிய காகித ஆலையை ஏற்படுத்துவதுபற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

[1983 மார்ச் 11

(ஆ) அரசு நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்து நிலச் சொந்தக்காரர்கள் தாக்கல் செய்யும் ரிட் மனுக்களை உயர்நீதி மன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு அவைகளில் தடை விதிப்பது இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 226-ன் கீழ் உயர்நீதி மன்றத்திற்குள்ள அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும். நீதி மன்றத்தில் அளிக்கப்பட்ட தடைகளை அகற்ற அரசு அவ்வப்போது எதிர் ஆணையுறுதிப் பத்திரம் (counter affidavit) தாக்கல் செய்து துரித நடவடிக்கை எடுக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கு- வதில் 401 வழக்குகள் உயர்நீதி மன்றத்திலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பல இடங்களில் இப்படி வழக்குகள் இருப்பதால் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவது மிகவும் காலதாமதமாகிறது. அதனால் பல இடங்களில் நெருக்கடி ஏற்பட்டு பிரச்னைகள் உருவாகின்றன. ஆகவே இந்த வழக்குகளை விரைவாக பைசல் செய்யவேண்டுமென்று உயர்நீதிமன்றத்திற்கு அரசு மூலமாக கேட்டுக் கொள்வதற்கும், இதுபோன்ற தடை யாணைகளை உயர்நீதிமன்றம் விதிக்காமல் இருப்பதற்கும் அரசு ஏதாகிலும் ஏற்பாடுகளை செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தோடு தொடர்பு கொண்டு இத்தகைய தடைகளை அவர்கள் விதிக்காமல் இருப்பதற்கு அரசு முயற்ச்சிகளை மேற்கொள்ளுமா என்று உறுப்பினர் அவர்கள்கேட்டிருக்கிறார்கள். அது இயலாத ஒன்று என்று ஏற்கனவே அளித்த பதிலில் நான் தெரிவித் திருக்கிறேன். ஆதிதிராவிடமக்களை பொறுத்தவரையில் அவர் களுக்கு இலவசமாக வீட்டு மனைகளை அளிக்க வேண்டுமென்ற உணர்வோடு தான், 1978-ஆம் ஆண்டு இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது. பழைய சட்டத்தின்படி காலதாமதம் ஏற் படுவதை விரைவு படுத்தவேண்டுமென்று தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது. இருக்கிற புள்ளிவிவரங்களின்படி, பழைய சட்டத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்திலே தடை வாங்கியிருக்கிறது வழக்குகளின் எண்ணிக்கை 32. 1978 ஆம் ஆண்டு சட்டத்தை எதிர்த்து தடை வாங்கியிருக்கிற வழக்கு களின் எண்ணிக்கை 369. புதிய சட்டத்தை எதிர்த்து அதிக மான அளவிலே தடைகள் வாங்கப் பட்டிருக்கின்றன. உயர் நீதிமன்றம் இந்தச் சட்டம் செல்லாது என்று அறிவித்ததன் காரணமாக தற்போது அரசு மேல்முறையீடாக உச்சநீதி மன்றத்திற்கு அப்பீல் செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மீது முடிவு வந்துவிட்ட பிறகு தான் இதன்மீது நடவடிக்கை எடுக்க முடியும்.



[983 மார்ச் 11]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்குவதில் ஏற்பட்டிருக்கிற சிக்கலை அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். வீட்டுமனைகள் மட்டுமல்ல, ஆதி திராவிடர்கள் இறந்துவிட்டால் பிரேதத்தை எடுத்துப்போகக் கூடிய பாதையை கூட உபயோகிக்கக் கூடாது என்று உச்சநீதி மன்றத்தில் தடை வாங்கியிருக்கிறார்கள். இதனால் பல இடங்களில் ஜாதி இந்துக்களுக்கும், அரிசனங்களுக்கும் தகராறு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே சட்டத்திலே இருக்கிற ஓட்டைகளை அடைத்து, ஆதிதிராவிடர் களுக்கு வீட்டுமனைகளுக்கும், மற்ற காரியங்களுக்காகவும் சர்க்கார் எடுக்கக்கூடிய இடத்தை பொறுத்தவரையில் சிக்கல் இல்லாமல் செய்யவேண்டும். 26-வது விதியை திருத்து வதற்கு ஒரு சட்டத்தை இயற்றி மத்திய சர்க்காரை வலியுறுத்தி அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தடை வாங்கக்கூடாது என்று அறிவுறுத்து வதற்கு அரசுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தை பறிப்பதாக அது அமையும் என்று நான் கருதுகிறேன். அந்தவகையிலே அரசு அதிலே தலை யிட முடியாது. தடை வாங்குவது என்பது தனிப்பட்ட ஒரு வருடைய விருப்பமாகும். அதிலே முறையீடு செய்து உயர்- நீதி மன்றத்திற்கோ அல்லது வேறு வழக்குமன்றங்களுக்கோ இத்தகைய வழக்குகள் செல்கிறபோது அவர்கள் அதை விசாரித்து அதிலே தடை வழங்குகிறார்கள். அதிலே அரசு தலையிட முடியாது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி மன்றங்களில் இருக்கிற வழக்குகளின் எண்ணிக்கை குறித்து அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் இந்த எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு நில ஆர்ஜிதத்திலும் வழக்குமன்றங்களுக்குச் சென்று தடை வாங்குகிற பழக்கம் அதிகமாகி விட்டது. அதற்காக ஒதுக்கி வைக்கப்படுகிற நிதிகளைக்கூட பூரணமாக செலவழிக்க முடியாது, திருப்பி செலுத்தக்கூடிய நிலைமைகள் ஏற்படு கின்றன. ஆகவே வழக்குகளின் எண்ணிக்கையை கருத்திற் கொண்டு வழக்குகளை விரைவாக பைசல் செய்வதற்கு உயர் நீதிமன்றத்தில் தனியாக ஒரு நீதிபதியை நியமிக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத்தலைவர் அவர்களே, அரசால் ஒதுக்கப்படுகிற தொகை செலவழிக்கப்படா மல் தடை வாங்குவதன் மூலமாக திருப்பிச் செலுத்துகிற நிலைமைகள் ஏற்படுகின்றன என்ற கருத்தை உறுப்பினர்

[1983 மார்ச் 11

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டும் 1981 ஆம் ஆண்டும் இந்த மாமன்றத்தில் அமைச்சர் அவர்கள் பேசுகின்ற சமயத்திலே மதுராந்தகம் சர்க்கரை ஆலை மூலமாக ஒரு காகித ஆலை 1982 ஆம் ஆண்டு செயலுக்கு வரும் என்று கூறியுள்ளார்கள். ஆனால் அதற்காக இதுவரையில் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. காலதாமதத்திற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, காலதாமதத்திற்கான காரணத்தை ஏற்கனவே சொன்னேன். அரசு முப்பது லட்ச ரூபாய் உள்பட பங்கு மூலதனம் ஏற்கனவே ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த சிறு காகித ஆலை வருவது உறுதியானது. வேலைகள் விரைவிலே தொடங்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்த ஆலை வருவது உறுதி என்று கூறியதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு திட்டமதிப்பீடு எவ்வளவு? எத்தனை பேர்களுக்கு அதனால் வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, திட்டமதிப்பீடு இரண்டு கோடி ரூபாய் சுமார் 250 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும்.

## தமிழ்நாட்டில் நிலக்கரி இடைப்பது குறித்து ஆராய்வதற்கான நிபுணர் குழு.

*வினா எண் 380—திரு. சு. முத்துகிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நிலக்கரி இருக்குமா என்று ஆராய மத்திய அரசு நிபுணர் குழுவை அனுப்பி வைத்ததா ?

(ஆ) இல்லையெனில் தமிழக அரசே நிபுணர் குழுவை அமைத்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



1983 மார்ச் 11]

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு நிபுணர்குழு தமிழ்நாட்டிலே எந்த ஆண்டில் வந்து சோதனைகளை நடத்தியது? தமிழ்நாட்டிலே எந்த எந்த இடங்களிலே நிலக்கரி இருக்கிறது என்று தெரிவித்து எந்த எந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, கடந்த சுமார் 15 ஆண்டுகளாக பல்வேறு பகுதிகளிலே இந்திய புவியியல் கழகம் ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கிறது. செங்கல்பட்டிலே காஞ்சிபுரம் பகுதியிலும் திருபெரும்புதூர் பகுதியிலும் நிலக்கரி இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. முத்து கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய நிபுணர் குழு அண்மைக் காலங்களிலே நிலக்கரி இருக்கிறதா என்பதை ஆராய்வதற்கு அனுப்பப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் தமிழகத்தின் கடற் கரைகளிலே எண்ணெய் வளம் இருக்கிறதா என்பதை ஆராய் வதற்காக நிபுணர் குழுவை அவர்கள் அனுப்பியதாக பத்திரிகை யிலே செய்தி பார்த்தோம். அந்த நிபுணர் குழு தமிழ்நாட்டில் அந்த வளம் இருக்கிறதா என்பதை தெளிவு படுத்தியிருக்கிறதா? அது சம்மந்தமாக தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் இதற் கும் சம்மந்தம் இல்லை.

## ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் வீட்டு மனைகள்.

* வினா எண் 381.—திருமதி : தா. இராசாம்பாள் : மற்றும் திரு. வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்குவதில் அரசு செய்த நில ஆர்ஜிதங்களில் உயர்நீதி மன்றத்தால் தடை செய்யப்பட்ட எண்ணிக்கைகள் என்ன?

(ஆ) நீதிமன்றத்தின் தடைகள் அகற்ற அரசு மேற் கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆதி திராவிடர் களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்குவதில் அரசு செய்த நில ஆர்ஜிதங்களில் உயர்நீதி மன்றத்தினால் தடை செய்யப் பட்டவைகளின் மொத்த எண்ணிக்கை 401 ஆகும்.

சலுகையைத் தெரிவித்து இருந்தேன். ஆனால், உறுப்பினர் அவர்கள் நலத் துறையின் மூலமாக இயங்கிவருவதைப் பற்றிக் கேட்கிறார்கள். இது வேலை வாய்ப்புத் துறையிலே வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மையத்தில் நடைபெற்ற தேர்வு ஒன்று திரும்பவும் நடத்தப்பெற்றது

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, கே. ஆர். சுந்தரம், எம். செல்லமுத்து, என். வரதராஜன், ப. பொன்னுரங்கம், பாபு ஜனார்த்தனன் ஆகியோர் ''சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி 8—3—1983 அன்று மீண்டும் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் தேர்வு நடத்தியதால் எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்..

**திரு எல். இளையபெருமாள் :** பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்ட பிறகு, பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது. (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றிய பாயிண்ட் ஆப் ஆர்டரா அது ?

**திரு. எல். இளையபெருமாள் :** இதைப் பற்றி அல்ல. வேறு பிரச்னைப்பற்றி பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவடைந்தது என்று சொன்னவுடனேயே யாராவது எழுந்திருப்பீர்கள் என்று பார்த்தேன். ஆனால் ஒருவரும் எழுந் திருக்காத காரணத்தால் இன்றைக்கு நல்ல காலமாக இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு அடுத்த நிகழ்ச்சிக்கு போனேன்.





**திரு. எல். இளையபெருமாள் :** நான் கையத்தூக்கிக் கொண்டே இருந்தேன். தலைவரவர்கள்தான் அதைக் கவனிக்க வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்களுடைய பதில் சம்பந்தமாக ஏதோ விளக்கம் கேட்க விரும்புகிறார்கள் என்ற நினைத்தேன். வழக்கமாக வருவதுபோல் பாயின்ட் ஆப் ஆர்டர் வரவில்லை என்று மகிழ்ச்சி அடைந்தேன். அதோடு விட்டு விடுங்கள். இன்றைக்கு ஒரு நாள் சந்தோஷமாக இருப் போம்.

**திரு. எல் இளையபெருமாள் :** நான் கையைத் தூக்கிய தைத் தாங்கள் கவனிக்கவில்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் பார்த்தேன். ஆனால் உறுப்பினரவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டருக்காகத்தான் கையைத் தூக்கினார் என்று நான் நினைக்கவில்லை. உறுப்பினர வர்கள் கேள்வியைப் புரிந்து கொள்ளவில்லை என்ற கருத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதால் அந்தக் கேள்வி எனக்குப் புரியும் என்று உறுப்பினரவர்கள் ஆரம்பிப்பார்கள் என்று நினைத்தேன்.

**திரு. எஸ். இளையபெருமாள் :** நாங்கள் கேள்வி கேட்ப தற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் ; அதற்கு எங்களுக்கு பாது காப்பு வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினரவர்களுக்கு எல்லா நேரங்களிலும் முழுப் பாதுகாப்பு அளித்திருக்கிறேன். கேள்வி பதிலைப் பார்த்தால் அது தெரியும். எந்தெந்த நேரத் திலே உறுப்பினரவர்களின் கேள்விகளுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமோ அப்பொழுதெல்லாம் நான் வாய்ப்பு கொடுத்திருக் கிறேன். எந்தக் கேள்வியை உறுப்பினரவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பது எனக்குத் தெரியும். எனவே இதோடு இப் பொழுது விட்டு விட்டு அடுத்தாற்போல் வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் படிக்கின்ற மாணவர்களின் ஒரு பகுதியினர் தேர்வு எழுதியிருப்பதால் இதர பகுதி மாணவர்களிடையே தாங்களும் தேர்வு எழுத வேண்டு மென்ற நிலைமை ஏற்பட்டு கிளர்ச்சி ஏற்படும் ஒரு ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை இந்த அரசின் கவனத்திற் குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

அவர்கள் தெரிவித்தார்கள். புதிய சட்டம் செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு பழைய சட்டத்தின் கீழ், 1894 ஆக்டின்படி ஆதிதிராவிடர்களுக்கு தமிழகத்தில் வீட்டு மனைகள் கையகப்படுத்தப் படுகின்றன. அந்தவகையில் பார்க்கிறபோது சென்ற ஆண்டை பொறுத்தவரையில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து நிலங்களை கையப்படுத்த வேண்டுமென்று நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இறுதி யாக பார்க்கிறபோது 1.16 கோடி ரூபாய் செலவிடப்பட்டது என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன்.

(முற்பகல் 10–30.)

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு, நிலப் பட்டாக்கள், வீட்டு மனைப் பட்டாக்கள் போய்ச் சேர வேண்டுமென்கிற நல்ல நோக்கத்திலே நாம் புதிய சட்டத்தைக் கொண்டு வந்தும் அதை நடைமுறைப்படுத்த விடாமல், கோர்ட்டுக்குச் சிலபேர் தடை வாங்கச் செல்கிறார்கள். இந்த ஆதி திராவிடர் களுக்கு மாத்திரம் நிலம் ஆர்ஜிதம் செய்கிறபொழுது, அதற்காக வருகிற, தடை உத்தரவுக்காக கோர்ட்டுக்குச் செல்கிறபோது, அதற்கு மாத்திரம் தடை கொடுக்கக்கூடாது என்கிற அளவுக்கு கோர்ட்டுக்கு அந்த ரிட்பவரை எடுக்கிற ஒரு சட்டமுன்வடிவையோ அல்லது சட்டத் திருத்தத்தையோ, இந்த மன்றம் மூலமாக, இந்த அமைச்சரவை இயற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதி திராவிடர் களுடைய தேவைக்காக எடுக்கப்படுகின்ற நிலத்திற்கு மாத் திரம்தான் வழக்குமன்றங்களுக்குப் போகின்றார்கள் என்று இல்லை,, மற்றவைகளுக்கும் போகின்றார்கள். ஆகவே, அது பொதுப் பிரச்சினையாக இருக்கிறதே தவிர, இதற்கு மட்டும் தான் போகிறார்கள் என்று இல்லை. ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், அதைச் சரியாக நிறைவேற்றுவதற்கு, எந்த, எந்த வகைகளை நாம் காண வேண்டுமோ அதைப்பற்றி சிந்திப்போம் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களுக்கென மதுரையில் தனியான வேலை வாய்ப்பு நிலையம் நிறுவும் திட்டம்.

*வினா எண். 382—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களுக்கென தனியாக ஒரு வேலைவாய்ப்பு நிலையம் மதுரையில் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில் அந்த நிலையம் எப்பொழுது தொடங்கப் படும்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ): 1981–82க்கான பகுதி II திட்டத்தின் கீழ் தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களுக்கென தனியாக ஒரு வேலை-வாய்ப்பு அலுவலகத்தை மதுரையில் நிறுவ 27—5—1981ம் நாளிட்ட தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசு ஆணை எண். 1147இல் ஆணை பிறப்பிக்கப் பட்டது. இவ்வலுவலகம் 15—7—1981 முதல் மதுரையில் இயங்கி வருகிறது.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவா அவாகளே, வேலை வேண்டுமென்று பதிந்தவர்கள் எத்தனை பேர்கள்? எத்தனை பேர்களுக்கு அந்த அலுவலகத்தின் மூலமாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மொத்தமாக பதிவு செய்தவர் களுடைய எண்ணிக்கை 14,190. 1981-ஆம் ஆண்டு நபர் களையும், 1982-ஆம் ஆண்டு 1,259 பேர்களையும் பணியில் அமர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆதி திராவிட நலத்துறை மூலம் தொழிற் பள்ளிகள் உண்டாக்கப்பட்டு அதில் ஆயிரக் கணக்கான மாணவர்கள் பயிற்சி பெற்று, அவர்களுக்குப் பயிற்சி காலத்தில் உயர்வான உதவிகள் கொடுத்தும், அப்படிப்பட்ட மாணவர்களுடைய வருங்கால வாழ்க்கையைச் சீர்திருத்துவதற் காகத்தான் இது போன்ற ஒரு தனி இடம் வைத்தாவது கொடுக் கலாம் என்று கேட்கப்பட்டது. ஆனால், அப்படி முடியவில்லை யானாலும் இன்றைக்கிருக்கிற நம்முடைய தேசியமயமாக்கப் பட்ட தொழிற்சாலைகளில் இந்த மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து—அவர்களுக்கு அரசாங்கப் பணத்தையும் செலவழித்து படித்து வேலைவாய்ப்பற்றவர்களாக அவர்கள் இருப்பதால், இந்த மாதிரியான தொழிற்சாலைகளிலாவது முன்னுரிமை கொடுத்து—அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உதவி செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைத் தவ றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இது ஆதி திராவிடர்களுக்காகத் தனியாக அமைக்கப்பட்டிருக்கின்ற தொழில் நுட்ப அலுவலகம் அல்ல. பொதுவாக, மதுரையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக அளிக்கப்பட்டிருக்கிற

அதோடு மட்டுமல்லாமல், அங்கே நடைபெறுகின்ற கிளர்ச்சி இதர இடங்களுக்கும் பரவி சென்னை நகரத்திலே உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் ஒரு பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இவைகளைப் பற்றி விவாதிப்பதற்காகவும், அத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் தடுப்பதைப் பற்றி விவாதிப்பதற்காகவும் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவரவர்களே, கீழ்ப்பாக்கம் மெடிகல் காலேஜிலிருந்து தேர்வு எழுதிய மாணவர்களில் 29 பேர் கடந்த டிசம்பர் பரீட்சை எழுதி அதற்குரிய ரிசல்ட்டை ஜனவரியிலே பெற்றிருக்கிறார்கள். அந்த ரிசல்ட்கூட ஃபைனல் ஈயர் எக்சாமினேஷன் மாணவர்களைப் பற்றிய ரிசல்ட். 75 சதவீதம் பேர் பாஸாகியிருப்பதாக எனக்குத் தகவல். ஆனால், அந்தக் கல்லூரியின் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு ஒரு முன்மாதிரியை உருவாக்குகின்ற நிலைமை அங்கே உண்டாகியிருக்கிறது. ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், எந்த யூனிவர்சிட்டி எக்சாமினர்களை நியமிக்கிறதோ அதே யூனிவர்சிட்டியே அந்த எக்சாமினர்களைச் சந்தேகிக்கின்ற ஒரு நிலைமை உருவாகி இருக்கிறது. ஆகவேதான், யூனிவர்சிட்டியால் நியமிக்கப்பட்ட எக்சாமினர்கள் தூக்கிப் போடப்பட்டு, வேறு எக்சாமினர்கள் இப்பொழுது போடப்பட்டு அதற்குரிய ரீ—எக்சாமினேஷன் கடந்த ஏழு, எட்டு தேதிகளில் நடத்தப்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இது ஒரு முன் மாதிரியாக அமைகிறது. இந்த முன்மாதிரியைப்போல மற்றக் கல்லூரி மாணவர்களுக்கும் இப்பொழுது வாய்ப்பு அளிக்கப்படுமா ? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஸ்டான்லியில் ஃபைனல் ஈயரில் 50 சதவிதம் பேர் பாசாகி இருக்கிறார்கள். ஆகவே, 75 சதவீதம் பேர் பாஸ் செய்து, 25 சதவீதம் பேர் ஃபெயிலாகியிருக்கும் நிலையில் அளிக்கப்படும் அந்தச் சலுகை அவர்களுக்கும் அளிக்கப்படுமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இது ஒரு புதிய முறையாக இருக்கிறது ; ஒரு குழப்பத்தை உண்டாக்கும் முறையாக நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிறது.

அந்த ரீ—எக்சாமினேஷனை வைப்பதற்கு முன்னால் யூனிவர்சிட்டியைச் சார்ந்தவர்கள் கீழ்ப்பாக்க மெடிகல் காலேஜின் பிரின்சிபாலைக் கன்சல்ட் செய்திருக்கிறார்கள். அப்படி அவரைக் கன்சல்ட் செய்துவிட்டு, சம்பந்தப்பட்ட அந்தப் பரிட்சையிலே ஈடுபட்ட எக்சாமினரைக் கன்சல்ட் செய்யவில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

அவர்கள் தவறு செய்தார்களா, அல்லது வேண்டுமென்றே மாணவர்களைப் பழிவாங்கி விட்டார்களா என்று கண்டுபிடிக்காமல் எடுத்தவுடனேயே ரீ—எக்சாமினேஷன் என்று வைக்கும் பொழுது, எனக்குக் கிடைத்த தகவல், சென்னையிலே உள்ள





பெரிய மருத்துவ மனையிலே உள்ள ஒரு டாப் மோஸ்ட் நியுரோ சர்ஜனின் செல்வாக்கினால்தான் இந்த ரீ—எக்சாமினேஷன் வரவழைக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஒரேயொரு நபருக்காகத்தான் இந்தப் பரிட்சை கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற தகவலும் இருக்கிறது. அது ஆண் அல்ல ; பெண். பெயரைச் சொல்ல விரும்பவில்லை.

(முற்பகல் 10–40.)

இப்படிப்பட்ட நிலையை நாம் பார்க்கிறோம். அட்மிஷன் செய்வதிலும் தப்பு தவறுகள் வருகின்றன. ஆனால் நம்முடைய நிர்வாகத்திலே அந்த எக்ஸாமிஷேனனைப் பொறுத்தவரையில் வர ஆரம்பித்திருக்கிறது. எனவே இதுசம்பந்தமாக எல்லாம் விளக்கமாக தெளிவாக விவாதிக்க இந்த விவரங்களை அனைத்தும் அறிந்த மற்றைய நபர்களும் இதிலே பங்கெடுத்துக்கொள்ளுமாறு வாய்ப்பு அளிப்பதற்கு இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்குமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது சம்பந்தமாக இந்த அவையிலே பேசுவதற்கு நமக்கு ஒரு வகையில் வாய்ப்பு இல்லை என்பதற்குக் காரணம் இது சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய—மெட்ராஸ் யூனிவர்சிட்டி எல்லைக்குள்ளே வரக்கூடிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே அரசாங்கத்திற்கு நேரடியாக எந்த விதமான பாத்யதையும் இல்லை. ஆகவேதான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தினுடைய நோட்டீஸ் வந்த உடனடியாக நான் சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய ரிஜிஸ்ட்ராரை தொடர்புகொண்டு இந்த மன்றத்திலே இப்படி ஒரு பிரச்சினை எழுப்பப்படுகிறது. இதற்காக நான் என்ன விளக்கம் கொடுக்க வேண்டுமென்று அவரிடத்திலே பெற்றிருக்கக்கூடிய அந்த விளக்கத்தின் அடிப்படையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் மாணவர்களுக்கு மறு தேர்வு நடத்த உத்தரவு இடப்பட்டது சம்பந்தமாக பின் வரும் தகவல்களை தொலை பேசியின் மூலமாக சென்னைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடமிருந்து நேற்றைய தினம் பெற்றுள்ளோம். எம். பி. பி. எஸ். பட்டப்படிப்பின் இறுதித் தேர்வு இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்டது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் ' மருந்தியல் ' தேர்வு மெடிசன் தேர்வு மதிப்பெண்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர்ந்த சில நாட்களில் பல புகார்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்துள்ளன. அந்தப் புகார்களின்படி கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி தேர்வு மையத்தில்—எக்சாமினர்ஸ் ஆப் கே.எம்.சி. சென்டர்—தேர்வாளர்கள் வேண்டுமென்றே இறுதி ஆண்டு எம். பி. பி. எஸ். பட்டப் படிப்பில் தங்களுக்கு பிடிக்காத சில பேராசிரியர்களின் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களை மருந்தியல் தேர்வில், தோல்வியுறச் செய்துவிட்டார்கள் என்பது அவர்களுக்கு வந்த

குற்றச்சாட்டு. தேர்வுக்குச் சென்ற 104 மாணவர்களில் 29 மாணவர்கள் தோல்வி அடைந்துள்ளார்கள் பல்கலைக்கழக சிண்டிகேட் கூட்டத்தில் இப்புகார் பற்றி எழுப்பப்பட்டது. இதுபற்றி விசாரிப்பது என்று மெட்ராஸ் யூனிவர்சிட்டி சிண்டி கேட் தீர்மானித்தது. பல்கலைக்கழகம் தேர்வாளர்களை, மாண வர்களின் பரிசோதனை செய்த நோயாளிகளின் நீண்ட கால குறிப்புகளை கேஸ் ஷீட்ஸ் ரிலேடிங் டு லாங் கேசஸ் அனுப்புமாறு கேட்டது. எம். பி. பி. எஸ். இறுதித் தேர்வில் இரண்டு பிரிவுகள் உள்ளன ஒன்று தியரி பேப்பர்—இரண்டு க்ளினிக்கல் தேர்வு க்ளீனிக்கல் தேர்வில் ஒவ்வொரு மாணவருக்கும் குறுகிய கால பரிசோதனை நீண்ட கால பரிசோதனை ஷார்ட் கேஸ் லாங் கேஸ் கொடுக்கப்படுகிறது. இது சம்பந்தமாக தேர்வாளர் கள் கடைபிடிக்கவேண்டிய விதிமுறைகளை பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. அவற்றின்படி மாணவர்களின் நீண்ட கால பரிசீலனை குறிப்புகள்—ரிப்போர்ட் அபௌட் லாங் கேசஸ்—தேர்வாளர்கள் வைத்திருக்கவேண்டும் மாணவர்களுடைய நீண்ட கால பரிசீலனைக் குறிப்புகள் அவர்களுடைய ஆய்வின் மூலம் நோய் பற்றிய கண்டுபிடிப்புகளும், அவர்களுடைய நோய் பரிசீலனைத் திறமையையும் வெளிப்படுத்துகிறது. சில மாண வர்கள் வேண்டுமென்றே தோல்வியுறச் செய்யப்பட்டார்கள் என்ற புகார்களை சரிபார்ப்பதற்காக பல்கலைக்கழகம் இந்தக் குறிப்பைத் தேர்வாளர்களிடமிருந்து கேட்டது. தேர்வு முடிவு கள் வெளியிடுவதற்கு முன்பே,—பிஃபோர் ரிசல்ட்ஸ் வேர் பப்ளிஷ்ட்—இக்குறிப்புகள் அளிக்கப்பட்டு விட்டன என்று தேர் வாளர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவித்தார்கள். ஆகவே மறு தேர்வு நடத்துவதே தவிர, வேறு வழியில்லை என்று பல் கலைக் கழகம் முடிவு செய்தது. பல்கலைக்கழகம் தேர்வாளர் கள் அப்பதவி வகிப்பதை நிரந்தரமாக தடைசெய்ய வேண்டு மென்றும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென் றும் உத்தரவு இட்டது. கிளினிக்கல் தியரி பேப்பர் மற்றும் கிளினிக்கல் தேர்வு சம்பந்தப்பட்ட நடைமுறைகளை சீர்படுத்த பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இப்போதைய வழி முறைகள் ஒழுங்கீனத்திற்கான வாய்ப்பை நீக்கி வழி செய் யும். பல்கலைக்கழகத்தில் இந்த நேரத்தில் நடைபெற்றுள்ள நடவடிக்கைகள் முழுவதும் கல்வி சம்பந்தப்பட்டதாகும். இவை பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டவை. பல்கலைக்கழகத்தின் முடிவுகளில் அரசு தலையிடுவது முறை யாகாது.—அடானமி ஆப் தி யூனிவர்சிட்டி இந்த சூழ்நிலை யில் இந்த சபையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்துப் பேச வேண்டிய தேவையில்லை எனக் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவை யின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக் கப்பெறுகிறது.





## 4. கவன ஈர்ப்பு.

### ஜின்னிங் பிரஸ்ஸிங் தொழிற்சாலைகளில் பணி புரிபவர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் கொடுப்பது.

**திரு. ஆர். மணிமாறன்:** தலைவர் அவர்களே, ''திருப்பூர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிற் சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுடைய கூலியை உயர்த்தி தமிழக அரசு பிறப்பித்த ஆணையைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் அமல்படுத்தாததினால் தொழிலாளர்களி டையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, 17—12—82 ஆம் நாளிட்ட தமிழக அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் ஆணை எண். 2650-ல் காட்டன் ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங், காட்டன் வேஸ்ட் ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தினை அரசு திருத்தி அமைத்துள்ளது. இந்த திருத்தப்பட்ட ஊதியங்கள் 1—1—83 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் இந்த அரசு ஆணையில் ஒரேவிதமான பணியில் ஈடுபட்டுள்ள ஆண், மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் எந்தவித மாறு பாடும் இருக்கக்கூடாது என்று உள்ளது. மேற்படி அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ள திருத்தப்பட்ட ஊதியத்தினை காட்டன், ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் மற்றும் காட்டன் வேஸ்ட் ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கிடைக்கும்படிச் செய்ய தொழிற்சாலைகளின் ஆய்வாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இந்த திருத்தப்பட்ட ஊதிய விகிதங்கள் தங்களுக்கு அமுல்படுத்தப்படவில்லை என்று தொழிலாளர்களிடமிருந்தோ, அல்லது தொழிற்சங்கங்களிட மிருந்தோ இதுவரை எந்தவித புகாரும் தொழிலாளர் நலத் துறைக்கு கிடைக்கவில்லை. இருப்பினும், தொழிற்சாலைகளின் ஆய்வின்போது அந்தக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் தொழிலாளர்களுக்கு கிடைக்கின்றனவா என்பதை தொழிற் சாலைகளின் ஆய்வாளர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும், அவர்கள் பார்த்துக் கொள்கிறார்கள். எந்த நிறு வனத்தில் மேற்சொன்ன திருத்தப்பட்ட ஊதிய விகிதங்கள் கொடுக்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட தொழிற்சாலை களின் ஆய்வாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக அந்த நிறுவனத்தை, இலாக்கா ஆய்வாளர்கள் ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் குறைந்தபட்ச ஊதியத்தை வழங்கும்படி பார்த்துக்கொள்வார்கள்.

வில்லை என்ற புகார் மனுக்களை ஆய்வாளர்களிடத்தில் கொடுக்கலாம். தொழிலாளர்களும் கொடுக்கலாம். தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தலைவர்களும் அந்தத் தொழிலாளர்களின் சார்பாக அந்தப் புகார்களைத் தரலாம். அப்படித் தந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, அந்தத் தொழிலாளர்களுக்கு அந்தக் கூலியைப் பெறுவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக் கொள்ளும்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1983.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

> ''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

> ''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 25/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.



6. வரவு—செலவுத் திட்டம் 1983-84 பொது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை பற்றி நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை இங்கே கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

முதலாவதாக 'மாயூரம்' என்ற வடமொழிப் பெயரை மாற்றி, அதன் பண்டை தமிழ்ப் பெயரான 'மயிலாடுதுறை' என்று அமைத்திட முயற்சிகளை மேற்கொண்ட நமது மாநில அரசுக்கும் அதைச் செயல்படுத்த முன்வந்த மத்திய அரசுக்கும் மயிலாடுதுறை பகுதி வாழ் மக்கள் சார்பாக என் சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த இரண்டாண்டுகளாக பருவமழை பொய்த்துப் போனதன் காரணமாக ஏற்பட்டுள்ள கொடுமைகள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களே உண்ணா நோன்பு இருக்கும் அளவுக்குச் செய்த மத்திய அரசிடம் இந்த உண்ணா நோன்புக்குப் பிறகு 80,000 டன் அரிசியும், 40,000 டன் கோதுமையும் கோரப்பட்டு, 80,000 டன் அரிசிக்குப் பதிலாக 5,000 டன் அரிசியும், 40,000 டன் கோதுமைக்குப் பதிலாக 4,000 டன் கோதுமையும் பெறுகிற நிலைமை, இழிநிலைமை நமது தமிழகத்திற்கு வந்திருக்கிறது. 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாத பொன்னியாறு, ஓடுகிற நமது தமிழகத்திற்கு இந்த இழிநிலை வந்திருப்பது தமிழகத்திலே இருக்கிற நாமெல்லாம் மெத்த வருந்தத்தக்க ஒன்றாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நான் இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோளை மிகத் தாழ்மையாக விடுக்கிறேன். இந்த நிலையைப் பொறுத்த மட்டில் — இன்றையதினம் தமிழ்நாட்டிலே குறிப்பிட்ட ஒரு கட்சி ஆளுகிறது; அதனால் வறுமை வந்து விட்டது; அதனால் அரிசி விலை ஏறிவிட்டது என்று நான் சொல்ல வரவில்லை, என்னைப் பொறுத்தவரையில். யார் ஆண்டார்கள் என்றாலும் இந்த நிலை வந்திருக்குமானால் இதை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். இந்த நிலை வரும்போது நாமெல்லாம் தமிழ்நாட்டிலே உள்ளவர்கள். இங்கே உள்ள நாம் மட்டுமல்ல. நம்மை பிரதிநிதிகளாக இங்கே வீற்றிருக்க அனுப்பியிருக்கிறார்களே, அந்த 5 கோடி தமிழர்களுக்காக, நாம் எல்லாம் தமிழர்கள் என்ற அடிப்படையில், நாம் சார்ந்திருக்கிற கட்சிகளை விட்டுவிட்டு அல்ல, நாம் சார்ந்து இருக்கிற கட்சிகளை கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த ஒரு நிலைக்காக எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழகத்திற்கு அதிகமான அரிசியைப் பெறுவதற்காக, அதிகமான

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்திலே மாத்திரம் ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண், பெண் தொழிலாளர்கள், ஜின்னிங் மற்றும் பிரஸ்ஸிங் தொழிலிலே ஈடுபட்டு பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த 1–1–83-லேயிருந்து அரசு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையிலே கூலி நிர்ணயம் செய்து வழங்கப்பட வேண்டுமென்று எடுத்துக் கூறியும்கூட தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் இதுவரையில் ஆண், பெண் தொழிலாளர்களுக்கு கூலி வழங்கப்படவில்லை. கூலி வழங்குவதற்கு முன்வராத ஒரு நிலையில் அரசு உத்தரவிட்டும், அந்த உத்தரவு அலட்சியப் படுத்துகின்ற நோக்கத்தோடு, ஏறெடுத்துப் பார்க்காமல், இடைக்காலத் தடை உத்தரவை நீதிமன்றத்திலே வாங்குவதற்கு முன்வந்திருக்கிறார்கள் என்பதும், அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அப்படி இடைக்காலத் தடை உத்தரவை அவர்கள் பெற்றார்கள் என்று சொன்னால் மேற்கொண்டு அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதியம் என்பது தொழிலாளர்களுக்கு மிக முக்கியமாகக் கொடுக்கப்பட வேண்டிய ஊதியமாகும். அதைப்பற்றி உயர்நீதி மன்றங்கள் சொல்லும் போதுகூட that industry which is not in a position to give even the minimum wages has no right to exist என்றே சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைந்தபட்ச ஊதியம்கூட கொடுக்கமுடியவில்லை என்று சொன்னால் அந்த நிறுவனமே இருக்கத்தேவையில்லை என்றுகூட உயர்நீதி மன்றங்கள் பல்வேறு தீர்ப்புகளை அளித்திருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு இந்த அரசு அந்தக் குறைந்தபட்ச ஊதியத்தை அமுல் படுத்துவதில் எல்லா அக்கறையையும் எடுத்துக்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 1–1–83 முதல் அமுலுக்கு வந்திருக்கிறது. அதைப்பற்றி அவர்கள் ஸ்டே ஆர்டர் வாங்குவதற்குச் செல்வார்களானால் அந்த ஸ்டேயை வெக்கேட் செய்வதற்கும், அந்தக் குறைந்தபட்ச ஊதியம் கிடைத்துதான் ஆகவேண்டுமென்பதற்காகவும் இந்த அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ளும். ஸ்டே ஆர்டர் வாங்குவது இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அவ்வளவு சுலபம் அல்ல. அப்படி வாங்குவதற்காக இருந்த ஒரு ஓட்டை உடைசலையும் இந்த அரசு சென்ற தொடர்க் கூட்டத்திலே அடைத்து விட்டது. அதாவது தொழிலாளர்கள் பிரதிநிதிகள், முதலாளிகள் பிரதிநிதிகள், ஈக்குவல் ரெப்ரசன்டேசன் இல்லாமல் இருந்து ஒரு பரிந்துரை வந்தால் அது செல்லாது என்று இருந்தது. அதை நாம் திருத்தி எந்தவகையிலேயும் நீதிமன்றங்களுக்கு போக முடியாத அளவிலே பாதுகாப்புத் தரும் வகையிலே சட்டத்தைத்





திருத்தி இருக்கிறோம். தொழிலாளர்களிடமிருந்தோ அல்லது தொழிற்சங்கத்திடமிருந்தோ புகார் வருமானால் அந்தக் கூலியை வாங்கிக் கொடுப்பதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும்.

(முற்பகல் 10-50).

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவர் அவர்களே, அமைச்சரின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 19–3–1969-லே போட்டது முதல் சம்பள நிர்ணயம். அதற்குப் பிறகு இப்போது தான் அரசின் உத்தரவின் அடிப்படையில் இந்த ஆண், பெண் தொழிலாளர்களுக்கு அந்தக் கூலி உயர்வு கிடைத்து இருக்கிறது. நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது எல்லாம், திருப்பூர், பல்லடம், மற்றும் அவினாசி போன்ற பகுதிகளில் வாழும் தொழிலாளர்களுக்கு, அந்த நிர்ணயிக்கப்பட்ட கூலி ஏற்கனவே 5 ரூபாய் என்ற அளவிலே கொடுத்து வருகிறார்கள். ஆனால், மதுரை, தேனி ராஜபாளையம் போன்ற பகுதிகளில் அந்த அளவிற்குக் கூலி தருகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. தவிர, அந்தப் பகுதிகளில் தொழிற் சங்கங்கள் வாயிலாக நிர்வாகம், அல்லது உரிமையாளர்களிடத்தில் எடுத்துச் சொல்லி ஓரளவிற்கு சம்பள உயர்வு கிடைக்கும் சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் மற்றைய பகுதிகளில்—தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளில்—இப்படிப் பட்ட கூலி உயர்வு கிடைக்கவில்லை. எனவே, ஒரே யூனிபார்ம் அடிப்படையில், ஒட்டு மொத்தமாக தமிழ் நாட்டில் முழுவதிலும் உள்ள ஜின்னிங் அண்ட் பிரஸ்ஸிங் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் தொழிலாளர்களுக்கு, இந்தச் சட்டத்தை அமல்படுத்தும் சூழ்நிலையை உருவாக்குவதற்கு அரசு முன் வருமா? இந்த நிலையைத் தவிர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இந்த குறைந்த பட்ச ஊதியம் ஆண், பெண் இருவருக்கும் சமமாகத் தரவேண்டும் என்ற வகையில் தான் வெளியிட்டு இருக்கிறோம். அது அன்னியில் 'ஈக்குவல் ரெம்யூனரேஷன் ஆக்ட்' என்று ஒரு சட்டம் கூட இருக்கிறது. ஒரே தொழிலில், ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் இருவருக்கும், எந்த விதமான 'டிஸ்கிரிஷன்' இல்லாமல் கூலி கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கிறது. எனவே யாரும் எப்படியும் ஏமாற்ற முடியாது. தமிழகம் முழுவதிலும் இந்தக் கூலியை எல்லோரும் கொடுத்தாக வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த உணர்வுகளின் அடிப்படையில், இந்த அரசு தொழிலாளர் ஆய்வாளர்களுக்கு ஒரு அறிவிப்பு அனுப்பி, 'இன்டன்சிவ் செக்' செய்வதற்கான ஒரு உத்தரவை இடும். அப்படி 'இன்டன்சிவ் செக்' செய்கிறபோது குறைந்த பட்ச கூலி எந்தெந்த இடங்களில் கொடுக்கப்பட

கோதுமையினைப் பெறுவதற்காக, உணவுப் பண்டங்களைப் பெறுவதற்காக முன்வர வேண்டும். குறிப்பாக இந்திரா காங்கிரஸ் இயக்கத்திலே இருக்கிறவர்கள் மத்திய அரசிலே ஆண்டுக் கொண்டிருக்கக் கூடியவர்களை வற்புறுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைப்பற்றி இங்கே விவாதிக்கப்பட்டது. நான் ஒரு இயக்கத்தின் தொண்டன் என்ற முறையிலே, ஒரு சாதாரண குடிமகன் என்ற முறையிலே, அந்த முறையை நான் வரவேற்கிறேன் என்றாலும் அந்த முறையினை நிறைவேற்றுவதில் உள்ள குறைகளை என்னைப்போன்ற எதிர் கட்சித் தரப்பிலே உள்ளவர்கள் சுட்டிக்காட்டும்போது ஆளும் கட்சித் தரப்பிலே உள்ளவர்கள் ஆத்திரப்படக்கூடாது என்பதை மட்டும் நான் நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் சில இடங்களில், எல்லா இடங்களிலும் அல்ல, சில இடங்களில் ஊழல்கள் நடக்கின்றன. நான் சார்ந்துள்ள பகுதியிலேகூட சில இடங்களில் அப்படி நடப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அதை என்னால் நிரூபித்துக் காட்ட முடியும். சத்துணவுத் திட்டத்திற்காக வருகின்ற பொருட்களை அந்தச் சத்துணவைத் தயாரிக்கக்கூடியவர்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று விடுகிறார்கள் என்ற நிலைமையை இன்றைய தினம் தமிழ்நாட்டிலே நாம் காண்கிறோம்.

(முற்பகல் 11-00)

அதை அகற்ற ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் முன் வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்படுகிறேன். இப்படிக் கேட்டுக் கொள்ளும்போது, முதலிலே நான் சொன்னதைப் போல ஆத்திரவசப்படுவதைவிட்டு, அது உண்மைதானா என்பதையும் அறிய முயல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு நேரத்திலே குறிப்பிட்டார்கள். சத்துணவு திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த அரிசியில், அவர்களிடத்திலே கொடுக்கப்பட்ட அரிசியைப் பற்றி—நிருபர்களிடத்திலே அந்த அரிசியை எடுத்துக் காட்டி, இது எப்படி துள்ளுகிறது பாருங்கள் என்று எடுத்துக் காட்டியதாக நான் செய்தித் தாள்களிலே பார்த்தேன். அது உண்மையாக இருக்குமேயானால், அது மிகவும் விரும்பத் தகாத ஒன்று என்பதையும் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த நிலையை மாற்ற வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாநில சுய ஆட்சியைப்பற்றிக் கூட பேசப்பட்டது. நமது மாண்புமிகு நிதியமைச்சர், டாக்டர் நாவலர் அவர்களுக்கு, எல்லோரும் எதை எதையோ பற்றி பேசிக் கொண்டே





போகிறார்கள், நாம் நிதி நிலை அறிக்கையை இந்த அவையிலே எடுத்துரைத்திருக்கிறோமே, அதைப்பற்றி அதிகமாக யாருமே பேசவேயில்லையே என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிகமாக பேசுவதற்கு என்னைப் போன்றவர்களால்,— குறிப்பாக எனக்கு,— போதிய வலுவு இல்லாவிட்டாலும், இருக்கிற சிலவற்றைப் பற்றி நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநில சுய ஆட்சி பற்றி ஆளும் கட்சி தரப்பிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர் விஸ்வநாதன் அவர்கள் பேசும்போது, மற்ற கட்சிகளிலே உள்ளவர்கள் அதை ஆதரிக்க வேண்டும்—அதாவது மாநில சுய ஆட்சியை ஆதரிக்கவேண்டும் என்று கோரினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், நான் மிக திட்டவட்டமாகச் சொல்வேன், பேரறிஞர் அண்ணா அவர்களின் காலத்திலேயிருந்து, இன்றையதினம் டாக்டர் கலைஞர் அவர்களால் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிற காலம் வரையில்—எங்கள் கட்சிக்கும், எங்கள் இயக்கத்திற்கும், மாநில சுய ஆட்சி தமிழகத்திற்கு வரவேண்டும் என்ற எண்ணம் நிச்சயமாக—உறுதியாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏதோ திருச்செந்தூர் தேர்தலிலே தோல்வி அடைந்துவிட்டதன் விளைவாக பேசுகிறார்கள். ஏதோ சில இடங்களில் தோல்வி அடைந்து விட்டதால், அந்தத் தோல்வியை மனத்திலே எண்ணிக் கொண்டு பேசுகிறார்கள் என்று அருமை நண்பர்கள், பெரியவர்கள் எல்லாம் இங்கே குறிப்பிட்டதை நான் கேட்டு வருத்தப்படுகிறேன். தேர்தல் என்பது எல்லோரையும், எல்லாக் காலத்திலும் நிரந்தரமாக ஒரே இடத்திலே வைத்து விடாது. ஆனால் வைக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். நான் இப்போது இந்த அவையிலே உள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றியோ, மற்ற அமைச்சர்களைப் பற்றியோ கேலி பேசுவதாக தயவுசெய்து யாரும் கருதிவிடக் கூடாது. இன்னும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். நான் விரும்புகிறேன், டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டை—இந்த தமிழகத்தை ஆள்வதற்கு தலைவராக வரயிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். அதேபோல, அந்த தரப்பிலே உள்ளவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் தமிழகத்தினுடைய தலைவராகவரயிருக்கிறார்கள் என்று நம்புகிறார்கள். அது அவரவர்களுக்கு உரிய உரிமையாகும்.

எனவே, மாநில சுய ஆட்சி பற்றி பேசிய மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் திரு. விஸ்வநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, திராவிட முன்னேற்றக்கழகம் அதற்கான ஒத்துழைப்பை நிச்சயமாகத் தரும் என்பது மட்டுமல்ல, அதற்கான முதற்பலி, தனது பலியாகத்தான் அது வைத்திருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11–10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது மயிலாடுதுறை தொகுதி எதிர்க்கட்சியின் தொகுதியாக இருக்கிற காரணத்தினால் அங்கே நிச்சயமாக சர்க்கரை ஆலை, வராது, அது எனக்குத் தெரியும் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அரசு, தொழிற்சாலை மட்டும் அல்ல அதைப்போல எந்த சமூக நலப் பணியாக இருந்தாலும் அதையும், பல்வேறு திட்டங்களையும், கட்சி பாகுபாடு இல்லாமல் இந்த அரசு மாநிலம் முழுவதும் நடைமுறைபடுத்தி வருகிறது. அதற்கு ஒரு உதாரணம் தன்னிறைவு திட்டம். அந்த திட்டம் வந்தபோது, ஆளும் கட்சி உறுப்பினர்கள் இருக்கிற அந்தத்தொகுதிகளை விட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருக்கிற தொகுதிகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டு கொண்டுவரப்பட்டது. அதைப்போல் மயிலாடுதுறையில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை அமைக்க மாநில அரசு பரிந்துரை செய்து, அது மைய அரசின் ஆய்வில் இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து மைய அரசை வலியுறுத்துவார்கள் என நம்புகிறேன்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்கள் குறிப்பாக மயிலாடுதுறை பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கு எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து மைய அரசைவலியுறுத்தவேண்டும் என்றும் சொன்னார்கள். அதற்கு என் மனமார்ந்த நன்றியை மிக தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் 40 ஆயிரம் வீடுகள் நடப்பு நிதி ஆண்டிலே கட்டப்படும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் அதுபற்றி சொன்னால் மயிலாடுதுறையும் அதில் வரவிருக்கிறது என்று சொல்லக்கூடும். மயிலாடுதுறையையும் தயவு செய்து கொஞ்சம் பாருங்கள். நான் கெஞ்சுவதாக நினைத்தாலும் சரி, அந்த மாதிரியான பகுதிகளை கொஞ்சம் கண்ணைத் திறந்து பாருங்கள். ஏன் என்றால் கழக ஆட்சிக் காலத்தில் பல நல்ல காரியங்களை கலைஞர் செய்தார்கள். இப்போது கெட்ட காரியங்கள் அங்கே நடைபெறுவதாக நான் சொல்லவில்லை. இப்போது எந்த காரியமும் அங்கே புதிதாக நடைபெறவில்லை. அந்த பெயர் மாற்ற திட்டத்திற்கே நான் என் வாழ்நாள் பூராவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக நான் பலமுறை இந்த மாமன்றத்தில் எடு[illegible]



பேசியவன். கெட்ட காரியங்கள் நடைபெறுகின்றன என்று நான் சொல்லவில்லை. அந்த மாதிரியான பகுதிகளையும் பாருங்கள் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி இங்கே நாம் பேசுகிறோம். மயிலாடுதுறை வட்டத்தில் நந்தனார் அவர்கள் பிறந்ததாகக் கூறுகின்ற மேல் ஆதனூர் என்ற ஊர் இருக்கிறது. இப்போது மேலாநல்லூர் என்று கூறப்படுகிறது. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் அதைப்பற்றி சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நந்தனார் அவர்களின் நினைவாக பல இடங்களில் குறிப்பாக மயிலாடுதுறையின் அருகில் 25 கல் தூரத்தில் அமைந்துள்ள தில்லைமாநகரத்தில் கூட அதற்காக தனியாக ஒரு பள்ளிக்கூடம் நிறுவப்பட்டு இருக்கிறது. தனியாக ஒரு நிறுவனம் அந்தப் பெயரில் நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி மாணவர்கள் தங்கும் விடுதிகூட நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் அவர் பிறந்ததாகக் கூறப்படுகின்ற பகுதியில், இன்றைய தினம் நீங்கள் வந்து பார்த்தால் மிகுந்த மனவருத்தம் அடைவீர்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் தில்லையாடி வள்ளியம்மை நகர் உருவாக்கிக் காட்டினார். ஒரு போட்டிக்காக வேணும். நீ என்ன நடத்திக்காட்டுவது நானும் நடத்திக் காட்டுகிறேன் என்ற அடிப்படையில் நந்தனார் நகரை உருவாக்கிக் காட்டுங்கள். நீங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்ல மாட்டேன். ஒரு சாதாரண காரியம் ஒரு 27 வீடுகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நந்தனார் பிறந்த இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நந்தனார் அவர்கள் பிறந்ததாகக் கூறப்படுகிற அந்தத் தெருவில் 27 வீடுகள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே கட்ட துவங்கப்பட்டு—கூரை வீடுகள் எல்லாம் புதிய வீடுகளாகக் கட்டப்பட வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கட்டத் துவங்கப்பட்டு அதை வலியுறுத்தி வலியுறுத்தி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அகற்றப்பட்டு அதற்குப் பின்னாலே நீங்களும் ஒரு ஐந்தாண்டுக் காலம் ஆண்டுகொண்டிருக்கிறீர்கள். தொடர்ந்து இன்னும் சில ஆண்டுகள், நீங்கள் ஆளக்கூடுமென்ற கருத்திலே கூட நான் சொல்ல முடியும். எனவே இம்மாதிரியான காரியங்களைப் பார்க்கவேண்டும். தில்லையாடி வள்ளியம்மை நகரை உருவாக்கிய டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் போட்டியாக இன்றைய தினம் தரங்கம்பாடி, தாலுகாவாக மாற்றப்பட்டிருக்கிறது தில்லையாடி வள்ளியம்மை பகுதி அந்தப் பகுதியிலே தில்லையாடி வள்ளியம்மை நகர் உருவாக்கப்பட்டது போல் மயிலாடுதுறை நகருக்கு அருகிலே உள்ள மயிலாடுதுறை தாலுகாவைச் சேர்ந்த மேலாதனூர், அதற்குப் பக்கத்தில் நந்தனார் விலகியதாகக் கூறப்படுகின்ற திருப்புங்கூர் இருக்கிறது. அது விலகியதோ என்னவோ எனக்குத் தெரியாது, ஆனால் விலகிய காட்சியை அப்படியே வைத்து இருக்கிறார்கள். அந்த

[திரு. என். கிட்டப்பா] [1983 மார்ச் 11

கூட்டுறவு சங்கங்கள், நியாயவிலைக் கடைகள் நடத்துவதில் முறை கேடுகள் பல இடங்களில் நடைபெறுகின்றன, பாமாயில் எண்ணெயிலிருந்து மண்ணெண்ணெய் மற்ற மற்ற உணவுப் பண்டங் கள் வரை கொஞ்சம் கொஞ்சமாக மாயமாக மறைந்து தனியார் கடைகளில் விற்பதை தடுக்க அரசு முன் வர வேண்டும். இப்படி பல குறைபாடுகள் அதிலே இருப்பதை என்னாலே சுட்டிக் காட்ட முடியும். அவைகள் எப்படி நடைபெற்றிருக்கிறது என்று எடுத்துச் சொல்ல முடியுமா என்று கேட்பார்களேயானால் கேட்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள்—என்னாலே சுட்டிக் காட்ட முடியும். நான் சவாலுக்காகச் சொல்லவில்லை, எனக்கு சவால் இடும் பழக்கம் இல்லை. நான் பணிவோடு சொல்லிக் கொள் கிறேன். அதை நிரூபிக்க என்னால் முடியும். குறைந்த விலை யில் அத்தியாவசியமான நுகர் பொருள்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக, ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யும் போது, அதிலேயிருக்கிற சில புல்லுருவிகள் இடையிலே நுழைந்து, அந்த நல்லெண்ணத்தையே மாற்றும் வகையில், வெளியில் உள்ள தனியார்களுக்கு கொஞ்சம் லாபம் பண்ணுகிற அடிப்படையில், சற்று அதிகமாகப் பெற்றுக் கொண்டு, அதை அவர்கள் இன்னும் அதிக விலையில் கடைகளில் விற்கக்கூடிய நிலையை உருவாக்கி விடுகிறார்கள் என்கிற தன்மையை தவிர்ப்பதற்காக அரசு முன் வர வேண்டும் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள் கிறேன்.

தொழில் வளர்ச்சி குறித்து இங்கே பலர் குறிப்பிட்டிருக் கிறார்கள். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்றைய தினம் சென்னையிலே இருந்தாலும், அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு உரியவர்கள். அவர்கள் எல்லோருக்கும் பொது வானவர்கள். ஆனால் நமது மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் தனது மாவட்டத்திற்குத் தொழில்களை கொண்டு செல்கிறார்கள். அந்தத்துடிப்பு உணர்வோடு தன்னுடைய பகுதி யிலே அமைய வேண்டும் என்ற துடிப்பு உணர்வோடு தன்னுடைய மாவட்டத்திலே தஞ்சை மாவட்டத்திலே தொழில்களை— தொழில் மையங்களை உருவாக்குவதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மயிலாடுதுறையில் கரும்பாலை வருகின்றது என்று முன்பொரு தடவை அறிவிக்கப்பட்டது. செம்பனார்கோயில் பகுதியில் சிமென்ட் ஆலை வரப்போகின்றது என்று அறிவித்தார்கள். ஆனால் அவை எல்லாம் வந்ததா என்று கேட்டால் இரண்டில் ஒன்றுகூட வரவில்லை. மயிலாடுதுறை திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் இருக்கின்ற தொகுதி என்பதால்—அதாவது எதிர்க்கட்சி உறுப்பினரின் தொகுதியாக இருக்கின்றது என்ப தால் நீங்கள் தர மாட்டீர்கள். சரி அா வேண்டாம். ஆனால் செம்பனார்கோயில் ... பூம்புகார்



1983 மார்ச் 11] [திரு. என். கிட்டப்பா]

தொகுதியிலேயாவது ஒரு தொழிற்சாலையை நீங்கள் உருவாக்கலாம். அதனுடைய அந்தப் பக்கத்திலே பார்த்தால் சீர்காழியிலே நீங்கள்தான் வந்திருக்கிறீர்கள். அப்படி பல இடங் களில் நீங்கள் வந்திருக்கிறீர்கள். அதனை நான் ஒத்துக்கொள் கிறேன். இந்தப் பக்கத்திலே நன்னிலத்திலேயும் நீங்கள்தான் வந்திருக்கிறீர்கள். எங்களைச் சேர்ந்தவர்கள் தவறி ஒன்றி ரண்டுபேர் தஞ்சை மாவட்டத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு இங்கே வந்திருக்கிறோம். எனவே அங்கே தொழிற்சாலை அமையவேண்டும் என்பதற்காக தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நிதியமைச்சர் அவர்கள்தான் மிகவும் நெருங்கிப் பழகும் முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி அதற்கான முடிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன் னொன்றையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய இன்றைய எதிர்க்கட்சித்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது பூம்புகார் பகுதியில் புதிய தொழில்பேட்டை ஒன்று துவங்கப்பட இருக்கின்றது என்று பத்திரிகையில் மட்டுமல்ல, பல இடங்களில் கூட்டங்கள் நடை பெற்றன. மாவட்ட ஆட்சித்தலைவர் வருவார், டி.ஆர்.ஓ. வருவார், அங்கே பக்கத்திலே இருக்கின்ற ஆர். டி. ஓ. வருவார், மற்ற மற்ற அதிகாரிகள் எல்லாம் வருவார்கள், வணிகப் பெரு மக்கள் எல்லாம் கூடுவார்கள், நீங்கள் எந்தெந்த தொழிலை நடத்துகிறீர்கள் என்று கேட்டு நீங்கள் எந்தெந்தத் தொழிலை பூம்புகாரில் நடத்துகிறீர்கள் என்று கேட்டு வினாக்களை எழுப்பிய பின் நாங்கள் புதிதாக அமைய இருக்கின்ற தொழில்பேட்டை யில் இன்னின்ன தொழில்களை நடத்துவோம் என்று முந்திக் கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருந்தும், அங்கே தொழில்பேட்டை இப்போது இயங்குகின்றதா என்று கேட்டால் இல்லை. காவேரிப்பட்டிணம், கடல்கோள் பட்டது என்று சொல்வார்களே அதனை, இலக்கியத்தை நன்கு அறிந்த நாவலர் அவர்கள் நன்கு உணர்வார்கள். அதுபோன்று இன்றைய தினம் அந்தத் தொழிற்பேட்டைக்கான அடையாளமே அங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தொழில்பேட்டைக்கென்று உருவாக்கப்பட்டிருக்கின்ற இடமா வது சரியாகக் கண்காணிக்கப்படுகின்றதா என்று கேட்டால் இல்லை. யார் அமைத்தால் என்ன? பேரறிஞர் அண்ணா அவர் கள் சொன்னார்கள், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று. ஆகவே யார் அமைத்தால் என்ன? திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தால் என்ன? அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தால் என்ன? அல்லது கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்திலே உள்ளவர்கள் அமைத்தால் என்ன? இப்படிக் கருதாமல் அந்த இடம் இன்றைக்கு எப்படி ஆக்கப்பட்டு வருகின்றது என்றால் கொச்சை யான தமிழிலே சொல்வது என்றால் அசிங்கப்படுத்தப்பட்டு வரு கின்றது என்பதை அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இடத்தை ஒரு சுற்றுலா பகுதியாக ஆக்கி பல இடங்களிலிருந்து வருகின்றவர்கள் பார்க்கக்கூடிய நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களின் சாதனைகளைப்பற்றிப் பெருமைப்பட, சுவைபட நிதியமைச்சர் நாவலர் அவர்கள் தனக்கே உரித்தான முறையிலே எடுத்துச் சொன்னார்கள். ஓரளவுக்கு அது நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்று சொன்னாலும் சில மாவட்டங்களிலே மினி பஸ்கள் விடப் படுகின்றன. இதை நான் குற்றச்சாட்டாகவே சொல்கிறேன். ஆனால் தஞ்சை மாவட்டத்திலே எத்தனை இடங்களில் இந்த மினி பஸ்கள் ஓடுகின்றன என்று கேட்கிறேன். எத்தனையோ தடவை இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறேன். வேறு என்ன செய்யமுடியும், சுட்டித்தான் காட்ட முடியும். எடுத்துச்சொல்லத்தான் முடியும். மினி பஸ்கள் ஓட்டப் படுகிறதா, அதற்கான வழித்தடங்கள் இருந்தும் கூட விடப் படவில்லை. ஆனால் மினி பஸ்கள் ஓடாவிட்டாலும் பிணி பஸ்கள் அந்தப் பகுதியிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. பேருந் துகள் அனைத்தும் படிப்படியாக நாட்டுடைமையாகக்கப்பட வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்களும் டாக்டர் கலைஞர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் ஏன் டாக்டர் நாவலர் அவர்களும் ஒரு காலத்திலே வாதாடிப் போராடி அதற்கான சட்டங்களையெல்லாம் இயற்றி ஏதோ சில காரணங்களினால் தடைப்பட்டுப் போய் நின்றுகொண்டு இருக்கிறதே தவிர இறைய தினம் பார்க்கிறபோது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டியதைப் போல், ஓடிக்கொண்டிருக்கின்ற பஸ்கள் நாட்டுடைமை யாக்கப்பட்ட பேருந்துகளாக இருக்கவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோபாலபுரத்திலே ஒரு நிகழ்ச்சியின் போது குறிப்பிட்டார்கள்.

(முற்பகல் 11—20)

டெலிவிஷன் காட்டப்படும். நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்துகளில், குறிப்பாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் டெலிவிஷன் காட்டப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவ்வளவு கடுமை யான காரியத்தை எடுத்துக்கொண்டிருக்கிறீர்களே என்று நான் கூட பயந்தேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, செய்தியை அவர்கள் சரியாகப் படிக்கவில்லை என்று நான் சொல்ல மாட்டேன். ஏதோ தவறான செய்தியைப் படித்திருப்பார்கள் என்று நான் நம்பு கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்[illegible]



கொள்வது, டெலிவிஷன் காண்பிக்கப்படும் என்று நான் சொல்லவில்லை. திரைப் படங்கள் காண்பிக்கப்படும் என்று தான் சொன்னேன்.

திரு. என். கிட்டப்பா : துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும், நான் படித்த பத்திரிகை டெலிவிஷன் என்று தான் குறிப்பிட்டுள்ளது. அதை வேண்டுமானால் கொண்டுவந்து காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பேருந் துகள் அனைத்தையுமே நாட்டுடைமை ஆக்கவேண்டுமென்று கூறப் பட்டு வந்த நமது இயக்கத்தில், இயக்கத்தின் ஒரு பகுதியாக காட்சியளிக்கிற நீங்கள் ஏன் தனியார்களுக்கு அதிகமான பஸ் ரூட்டுகளைத் தரவேண்டுமென்று வினவ ஆசைப்படுகிறேன். எங்கே பார்த்தாலும் தனியார் பஸ்கள் ஓடிக் கொண்டிருக் கின்றன. எனக்கு வேண்டியவர்களே கூட பேருந்துகளை அதிக அளவில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே கூட நான் இப்படி பேசுவதைக் கேட்டால் இனி அடுத்தமுறை வருகிறபோது கூட்டத்திற்கு நன்கொடை கொடுக்கக்கூடாது என்று கருதுவார்கள். அதற்காக நான் சொல்லவில்லை. ஏன் தனியார்களுக்கு கொடுக்கவேண்டும்? இதில் இருக்கிற சட்டச் சங்கடங்கள் என்ன? எனக்கு சட்டத்தைப் பற்றி தெரியாது அதிகமாகத் தெரியாது என்று கூட சொல்லமாட்டேன். எனக்கு நடைமுறைச் சட்டங்கள்தான் தெரியும். ஏன் இப்படி அதிகமான தனியார்களுக்கு பேருந்துகளை ஓட்டு வதற்கு உரிமங்களைத் தரவேண்டுமென்பதைச் சிந்தித்துப் பார்த்து அவைகளை அடியோடு நீக்கமுடியாவிட்டாலும், ஓரளவிற்காவது குறைப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளைப் பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. நான் அதைப்பற்றியெல்லாம் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இல்லை. சாலைகள் எல்லாம் மிகவும் சீர்கேடு அடைந்துள்ளன. அவைகளை சீர்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மட்டும் உங்கள் முன் விடுக் கிறேன்.

மயிலாடுதுறையில் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி என்று இருக்கிறது. அதிலே என்ன வேடிக்கையென்றால் ஆண்கள் இரண்டு பேர்கள் ஆசிரியர்களாக இருக் கிறார்கள். இது குறித்து முறையீடு வந்தபோது பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அங்கு இருந் தார்கள். அவரிடத்திலே இது குறித்து தெரிவியுங்கள் என்று கேட்டுக்கொண்டேன். இதைக் குறிப்பிடுவதற்கு காரணம் பெண்களிலே தேர்ச்சி பெற்ற ஆசிரியைகள் இல்லையா பெண்களுக்கென்று தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளியை அரசாங்கம் நடத்திக்கொண்டிருக்கிற போது அதில் ஆண்களை ஏன் நியமிக்க வேண்டும்? பெண்களை ஆசிரியர்களாக நிய மிக்கிற நிலைமை உருவாக வேண்டும், உருவாகும் என்று நான் நம்புகிறேன்.

[திரு. என். கிட்டப்பா] [1983 மார்ச் 11

அடுத்து மயிலாடுதுறையில் வட்ட தலைநகர் மருத்து
மனை இருக்கிறது. இங்கே நம்முடைய நல்வாழ்வுத் துறை
அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அவரும் நேரிலே
வந்து அந்த மருத்துவமனையைத் பார்த்திருக்கிறார்கள்.
நானும் அந்த மருத்துவமனையில் இருந்திருக்கிறேன். எனக்கு
மருத்துவமனையில் தங்குவதே வேலை. இப்போது நிறுத்திக்
கொண்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அங்கு வந்தபோது
என்னைகூட பார்க்கவில்லை. அதைபற்றிக் கூட நான்
கவலைப்படவில்லை. அந்த மருத்துவமனையில் நான் இருந்த
போது, அமைச்சர் அவர்கள் வருகிறபோது சட்டமன்ற உறுப்
பினரை அமைச்சர் பார்க்கப் போகிறார் என்று அங்கே இருந்
தவர்கள் நினைத்தார்கள். அமைச்சர் அவர்கள் இரவு நேரத்
தில் வந்து பார்த்துவிட்டுச் சென்றதாக அறிந்தேன். அமைச்சர்
அவர்கள் வருகிறார் என்ற காரணத்திற்காகவே அன்றைய
தினம் டிஸ்சார்ஜ் ஆகவேண்டிய நான் டிஸ்சார்ஜ் ஆகாமல்,
எப்படியும் அமைச்சர் நம்மை சந்திப்பார் என்று இருந்தேன்.
காரணம், அந்த மருத்துவ மனையைப் பற்றிய சில காரியங்களை
நேரடியாக எடுத்துச் சொல்லலாம் என்று நினைத்திருந்தேன்;
என்னைப் பற்றிக்கூட அல்ல. அந்த மருத்துவ மனையில் மிக முக்
கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது, அந்த மருத்துவ
மனைக்கு, அந்த மருத்துவமனை வளாகத்திற்குள்ளேயே
மழை பெய்ய வில்லை, மழை பெய்ய வில்லை என்று இரண்டு
ஆண்டுக்காலமாக நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்;
நல்ல வேளையாக மழை பெய்யவில்லை,

மயிலாடுதுறை மருத்துவ மனையைப்பொறுத்தவரையில். மழை
பெய்துவிட்டது என்றால், முழங்கால் அளவு தண்ணீர் என்று சொல்
வார்கள்; நிச்சயமாக நான் சொல்வேன், முழங்கால் அளவுக்கு
அல்ல; அதிலே ½ அளவுக்காவது தண்ணீர் ஓடிக் கொண்
டிருக்கிறது. ஒரு வட்ட மருத்துவமனையில் இப்படி ஒரு
நிலைமை என்றால், இதை மாற்றுவதற்கு யாரிடத்திலே
போய்ச் சொல்வது? புதிதாக அதிகாரிகள் வருகின்றனர்.
இன்றையதினம் புதிய அரசினால் நியமிக்கப்படுகிறார்கள்.
அவர்களைச் சந்தித்து நான் கேட்டிருக்கிறேன், இதைப்
பாருங்கள், தயவுசெய்து நேரிலே சென்று பாருங்கள் என்று
சொல்கிறேன். 'ஆமாம், இப்படி ஒரு மனு கூட வந்திருக்கிறது.
நீங்கள் கூட எழுதி அனுப்பியிருக்கிறீர்கள். பொது மக்கள்
கூட எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அரசுக்கு அனுப்பி
யிருக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, அதைக்
கவனிக்கிறார்களா என்றால், கவனிக்கவில்லை. அது
கவனிக்கப்பட வேண்டும். குறிப்பாக, மருத்துவ மனையிலே
தண்ணீர் தேங்குவது என்பது அவ்வளவு நல்லதல்ல. அவ்வளவு
என்ன? அளவே கிடையாது, நல்லதல்ல; அதை மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க
வேண்டுமென்று நான் கோருகிறேன்.



1983 மார்ச் 11] [திரு. என். கிட்டப்பா]

அன்றோர் நாள் எழுந்தேன், வினா கேட்க. தலைவரோ
அல்லது துணைத் தலைவரோ என்னை அனுமதிக்கவில்லை,
மூலக் கேள்விக்குத் தொடர்பில்லையென்று என்னை அனு
மதிக்கவில்லை. அனுமதித்திருந்தால், அன்றைய தினமே
நான் சொல்லியிருப்பேன். இன்று நான் சொல்கிறேன்;
எவ்வளவோ கடினப்பட்டோம். அப்பொழுதெல்லாம் நாம்
ஒன்றாக இருந்தோம். நாம் என்று சொல்லும்போது, திராவிட
முன்னேற்றக் கழகமும், அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகமும் ஒன்றாக இருந்த நேரத்திலேதான்
மவுண்ட் ரோடு என்று வழங்கப்பட்டது, அண்ணா சாலை
என்று மாற்றப்பட்டது. மவுண்ட் ரோடு என்று இருந்தது
அண்ணா சாலை என்று மாற்றப்பட்டதற்குப் பின்னாலே,
அங்கேயிருந்த காவல் நிலையத்தின் பெயர் மாற்றப்படாமல்
மவுண்ட் ரோடு போலீஸ் ஸ்டேஷன்—டி. 1. அல்லது டி. 2.
போலீஸ் ஸ்டேஷன் என்று நினைக்கிறேன்—என்றே பெயர்
இருந்தது என்று நான் சட்டமன்றத்திலேயே தெரிவித்தேன்.
அதைப் போலவே, பல துறைகளைச் சேர்ந்த அரசாங்க
அலுவலகங்களின் பெயர்ப் பலகைகளிலும் அப்படி அண்ணா
சாலை என்று பெயர் மாற்றப்பட வேண்டுமென்று எழுப்பி
னேன், அவைகள் எல்லாம் மாற்றப்பட்டு விட்டன. ஆனால்
இன்றைய தினம் அண்ணா சாலையிலுள்ள, மிகக் குறிப்பாக
சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள், அதிலும் மிகமிகக்
குறிப்பாக, என்னைப் போன்ற நோயாளிகள் அடிக்கடிச்
சென்று வருகின்ற மருந்தகம் இருக்கிறதே—சட்டமன்ற உறு
பினர் விடுதி வளாகத்திற்குள்ளேயே இருக்கிற அந்த மருந்த
கத்தை, தயவுசெய்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர் அவர்கள் சென்று பார்ப்பார்களேயானால்,
நன்றாகத் தெரியும், இப்பொழுது வரையில், 'மவுண்ட் ரோடு
கவர்ன்மென்ட் டிஸ்பென்சரி' என்று பெயர் இருக்கிறது.
இது அண்ணா சாலை என்று மாற்றப்பட வேண்டுமென்ற
கோரிக்கையை விடுக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிடிக்காத அரசியல்வாதிகள்மீது குறிப்பாக தி.மு. கழகத்
தின்மீது பொய் வழக்குகள் போடப்படுகின்றது என்ற அந்த
அவப்பெயரிலிருந்து நீங்கள் நீங்கிக் கொள்ள வேண்டுமென்ற
கோரிக்கையை விடுக்கிறேன். ஏனென்றால், என்மீதுகூட,
நீங்கள் வழக்குப் போட்டிருக்கிறீர்கள். நீங்கள் என்று நான்
துணைத் தலைவரைக் குறிப்பிடவில்லை.

ஒன்றை மட்டும் சொல்வேன், அண்ணா அவர்கள் குறிப்
பிட்டார்கள். வேறொன்றிற்காக, வேறொரு நேரத்திலே
குறிப்பிட்டார்கள். அது என்னைவிட நம்முடைய நாவலர்
அவர்களுக்கும் புரட்சித் தலைவருக்கும் பேராசிரியர் அவர்
களுக்கும் நன்றாகத் தெரியும். 'பல கோடி ரூபாய்க்குத திட்டம்,
பசி, பஞ்சம், பட்டினிச் சாவு, இதுதான் மிச்சம்' என்று

அடுத்து என் தொகுதியைச் சேர்ந்த தொண்டியில் மீன்கள் கரை சேர்க்கும் தோணித்துறையை அமைக்க ரூபாய் 41 லட்சம் ஒதுக்கி இருப்பதைக் கண்டு புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப் புறத்திலே குறிப்பாக ஏழை மக்கள் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் விளக்குகளுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்களான, திரிகள், கண்ணாடிகள், சிமினி போன்ற பொருள்களுக்கு முழு விற்பனை வரி விலக்கு அளித்திருப்பது பாராட்டுதற்குரியதாகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்கள் மேம்பாடு, தமிழ்நாட்டின் முன்னேற்றம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிறப்புமிகு நிதிநிலை அறிக்கையாக இது இருக்கிற காரணத்தால் நான் இதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இயற்கையின் சோதனைக்கு மத்தியிலே, சூதும், சூழ்ச்சிகளுக்கும் வஞ்சக எண்ணங்களுக்கும் மத்தியிலே, அந்தச் சூதுக்கள் சாய்க்க முடியாத சகாப்தத்தை ஏற்படுத்த இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இந்த நிதி நிலை அறிக்கை மூலமாக நல்ல பல திட்டங்களை சமர்ப்பித்து இருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கையை கட்சி வேறுபாடு மறந்து அனைவரும் போற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி கிழக்கு முகவை மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். எனவே என் தொகுதிக்கு பல்வேறு வறட்சிப் பணிகளுக்காக அதிக நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியில் சிறிய நூற்பு ஆலை ஒன்றைத் துவக்க இருப்பதாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் என் தொகுதியில் நடந்த ஒரு விழாவில் குறிப்பிட்டார்கள். அந்த நூற்பு ஆலையை மிக விரைவிலே ஆரம்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் திருவாடானைத் தொகுதியில் உள்ள தேவகோட்டையிலே ஒரு பால் பண்ணைத் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவரிடம் சில மாதங்களுக்கு முன்பாக ஒரு கோரிக்கையைக் கொடுத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையைப் பரிவுடன் கவனித்து, தேவகோட்டையிலே ஒரு பால் பண்ணை நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சிறப்புமிகு நிதிநிலை அறிக்கையைத் தந்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ஜி. மூர்த்தி :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்





கொள்கிறேன். போடப்பட்டுள்ள இந்த ஆண்டு பட்ஜெட்டில், நாட்டிலே இருக்கின்ற பிரச்சினைகளையும், நாட்டிலே வாட்டி வதைத்துக்கொண்டு இருக்கின்ற குடிநீர், வறட்சி போன்ற பிரச்சினைகளையும் மனதிலே வைத்து, ஏழை மக்களுடைய அன்றாட நிலைகளைக் கணக்கிலே கொண்டு, ஏழைகள் முன்னேற்றத்திற்கும், அவர்களுடைய வாழ்வு நல்ல முறையில் மலர்வதற்கும், அவர்களுடைய அன்றாட பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஆன அந்த அடிப்படையிலே இந்த பட்ஜெட் அமைந்திருப்பதைக் கண்டு நான் அதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். எத்தனையோ பட்ஜெட்டுகளை இந்தச் சட்டமன்றத்திலே அறிமுகப்படுத்தினாலும், பணக்காரர்களை மையமாக வைத்து, ஏழைகளைக் கடைசியிலே கணக்கில் எடுத்துக் கொண்டு போடப்படுகிற பட்ஜெட்டாக அமைந்திருந்ததை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் ஏழைகளை மையமாக வைத்து, அவர்களுடைய நல்வாழ்வுகளை மையமாக வைத்து. ஏழைகளுடைய நிலையினை மனத்திலே வைத்து, அவர்களுக்காகப் போடப்பட்டுள்ள பட்ஜெட் இது என்பதை இன்றைக்கு நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். நல்லவர்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். பணக்காரர்களைப் பற்றியோ முதலாளிகளைப் பற்றியோ, அல்லது நிலப்பிரபுக்களை மையமாக வைத்து இந்த வரவு-செலவுத் திட்டம் தீட்டப்படவில்லை என்பதால் என்னவோ பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எரிச்சல் படுகிறார்கள். இங்கே எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்களும், அதற்கு முன்னாலே விவாதத்திலே கலந்துகொண்ட பல கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அருமை நண்பர் துரை முருகன் அவர்கள் முக்கால் மணி நேரம் பேசிவிட்டு, கடைசியாக ஒரு கருத்தைச் சொன்னார்கள், இந்தப் பட்ஜெட்டிலே பேசுவதற்கு ஒன்றும் இல்லை. எனவே பேசுவதே வேஸ்ட் என்று சொல்லி உட்கார்ந்துவிட்டார்கள். ஒன்றும் இல்லாத விவகாரத்தை முக்கால் மணி நேரமாக ஆக்கிப் பேசுகின்ற திறமை மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகனுக்கும், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்கின்ற தனிப் பெருமை என்பதை இன்றைக்கு நாடு உணர்ந்திருக்கின்றது. இல்லாத விஷயத்திற்கே நேரத்தைச் செலவழிப்பதும், ஒன்றும் இல்லாதது என்று தெரிந்து இருந்தும் கூட அதை விவாதிப்பதற்கு அவையின் நேரத்தை வீணாக்குகிற மிக திறமைசாலிகள் இந்த இயக்கத்திலே அதிகம் பேர் இருக்கிறார்கள் என்பதை அவர்களே இன்றைக்கு நிரூபித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-40)

இன்றைக்கு பணக்காரர்களை ஒதுக்கி வைத்து, பணக்காரர்களின் நலனில் அக்கறை கொள்ளாது, அவர்களைப் பற்றி கவலைப் படாமல், ஏழை எளியவர்களின் நலனை மட்டுமே மனதில் கொண்டு பாடுபட்டு வருகின்ற இந்த அரசை ஏழை, எளிய மக்கள்

வரவேற்கிறார்கள். இந்த பட்ஜெட்டிலே போடப்பட்டு இருக்கும் நல்ல திட்டங்கள் ஏழை மக்களைத் தொட்டு இருக்கிறது. அதனால் ஏழை மக்களின் சார்பிலே பேசுகின்ற அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் இதை வரவேற்றுப் பேசுகிறார்கள். சிலர் எதிர்க்கிறார்கள் என்று சொன்னால்,. அது அவர்களுடைய கருத்தாக இருக்கக்கூடும், மக்களின் கருத்தாக இருக்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தால், எந்த இடமும் வறட்சியால் பாதிக்கப்படாமல் இல்லை. இன்றைக்குத் தமிழகம் பூராவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த வறட்சி நேரத்திலே பாட்டாளிகள் படும் தொல்லைகளைக் கருத்தில்கொண்டு அதிலும் குறிப்பாக வேலையற்று அவதிப்படும் கூலிவேலை செய்து கொண்டு இருக்கும் ஏழை, எளிய மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை மூலம் அந்த வறட்சியால் வாடும் மக்களை, கூலி வேலை செய்து பிழைக்கும் மக்களைப் பாதிக்காத வகையில் திட்டங்களைத் தீட்டி, வரிச்சுமையை அந்த மக்கள் மீது சுமத்தாமல், அந்த மக்கள் அதனால் தொல்லை அடையக் கூடாது என்ற அடிப்படையில் இங்கே வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நம்முடைய நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுக்கு நான் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் இன்றைக்கு பொங்கியெழும் நிலையில் அரிசிப் பற்றாக்குறை நமது மாநிலத்தை மிகவும் வாட்டிக் கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் மாதத்திற்கு 80,000 டன் அரிசியும், 40,000 டன் கோதுமையும் நம்முடைய மாநிலத்திற்குத் தரவேண்டும் என்று மத்திய அரசிடம் நாம் கோரிக்கை வைத்தோம். மாநில அரசு கட்ட வேண்டிய கப்பங்களை முறையாக ஒழுங்காக மத்திய அரசுக்குச் செலுத்தி இருந்த போதிலும் தமிழகத்திற்குத் தேவையான அரிசி, கோதுமையை மைய அரசு இன்னும் அளிக்காத காரணத்தால், தமிழகத்திலே உள்ள ஏழை, எளிய மக்கள் இப்போது சாவை எதிர்நோக்கி நின்று கொண்டு இருக்கிறார்கள். ஒரு அரசு அல்லது ஆட்சியில் இருப்பவர்கள் எப்படிப்பட்ட பிரச்னையாக இருந்தாலும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். விவாதித்து முடித்துக்கொள்ளலாம். தண்ணீர் பிரச்னையா பேசித் தீர்த்துக் கொள்ளலாம். இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமா பேசித் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால் மக்களை நாள் தோறும் வாட்டிக் கொண்டு இருக்கும் பசிப் பிரச்னை நாம் பேசித் தீர்த்துக்கொள்கிற பிரச்னை அல்ல. இன்றைக்கு மைய அரசு தமிழகத்தில் உள்ள மக்களின் வயிற்றோடு விளையாடிக்கொண்டு இருக்கிறது. அவர்களுடைய வயிற்றெரிச்சல் அவர்களைச் சும்மா விடாது என்று தமிழக மக்களின் சார்பில் நான் சொல்லிக் கொள்கிறேன்.



அப்படியிருந்தும் அந்த மக்களின் நலனைப் பாதுகாக்க ஏழை எளிய மக்களின் நலன் கருதி—என்னை என்ன செய்தாலும் பரவாயில்லை, மத்திய சர்க்கார் என் மீது என்ன நடவடிக்கை எடுத்தாலும் பரவாயில்லை, இந்த மக்களுக்காக நான் எதையும் இழக்கத் தயார் என்ற முறையில்—தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உண்ணா விரதம் மேற்கொண்டது தமிழகத்திற்கு ஒரு மிகப் பெரிய விடிவெள்ளியாக இருக்கிறது என்பதை தமிழக மக்கள் உணர்ந்து, இன்றைக்கு அந்த ஏழை எளிய மக்கள் புரட்சித் தலைவர் அவர்களின் பாதையைப் பின்பற்றி வருகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையில் மத்திய அரசாங்கம் விரைவில் துரிதமான நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அதை அவர்கள் நிச்சயமாகச் செய்து தரவேண்டும் என்று இந்த அவையின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று மாநில மத்திய உறவுகளைப் பற்றி நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. மத்திய மாநில உறவுகள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றால் நமக்கு இருக்கும் சங்கடங்கள், நமக்கு இருக்கும் துன்பங்கள் ஆகியவற்றை பகிர்ந்து கொள்வதாக இருக்க வேண்டும். நாம் அதிக அதிகாரங்கள் கேட்பது, நமக்கு ஏற்படும் சிக்கல்களை நாமே தீர்த்துக்கொள்கிற முறையில் இருக்க வேண்டும். நாம் பல்லாண்டுக் காலமாக மாநிலங்களுக்குக் கூடுதலாக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அதற்காக தமிழகம் முன் நின்று கேட்டு வருகிறது. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆகவே, இதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்காமல், முற்போக்கு எண்ணம் கொண்ட மத்தியில் ஆட்சியில் இருப்பவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, இன்றைக்கு நல்ல உறவுகளுக்கான திட்டங்களை தீட்டிக் கொண்டு இருக்கின்ற அந்த அடிப்படையிலே மத்திய அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசியல் சட்டம் நிறைவேறிய நேரத்தில் இந்தச் சட்டத்தை இயற்றிவிட்டு, இந்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொடுத்து, இந்த நாடு ஒரு ஜனநாயக குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 1950-ல் இந்தச் சட்டத்தை இயற்றிய மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்தச் சட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, ''சட்டத்தை நானே இயற்றினேன். இதில் உள்ள சரத்துக்கள் இந்த நாட்டு மக்களுக்காகப் பயன்படுவதாக இருக்க வேண்டும் ; மக்களுக்கு நல்ல முறையில் பயன்பட வேண்டுமானால் சட்டம் நன்றாக இருந்தால் மட்டும் போதாது ; இந்த அரசியல் சட்டத்தை ஒரு மோசமான நிலைக்கு கொண்டு வந்துவிடுவது சட்டத்தைப் பொறுத்ததல்ல ; இந்தச் சட்டத்தை கையிலே எடுத்துக் கொண்டு ஆளுகிறார்களே, அவர்களைப் பொறுத்தது'' என்று குறிப்பிட்டார்கள்.

[திரு. ஜி. மூர்த்தி] [1983 மார்ச் 11

நான் அரசியல் சட்டம் என்ற கோயிலை உருவாக்கினேன். ஆனால் அந்த கோவிலிலே இன்றைக்கு கோட்டான்களும், கூகைகளும் குடியேறிவிட்டன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, ஒரு சட்டம் நல்ல சட்டமாக இருப்பதற்கு ஆளுகின்றவர்கள் அந்தச் சட்டத்தை எப்படி செயல்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு மத்திய சர்க்கார் மாநிலங்களை ஒடுக்குகின்ற முறையிலே இந்தச் சட்டத்தை, சட்டத்தில் இருக்கிற அதிகாரங்களை கையில் வைத்துக்கொண்டு, மாநிலங்களை ஓயாமல் அச்சுறுத்தி வருகிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று நாம் கேட்கிறோம். மாநிலங்களுக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டுகின்ற வகையிலே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்க மத்திய சர்க்கார் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிலையைப் பொறுத்த வரையில் இந்த பட்ஜெட்டிலே சொல்லியிருக்கிற, ஒதுக்கப்பட்டிருக்கிற பல கோடி ரூபாயைக் கொண்டு நிச்சயமாக போர்க்கால நடவடிக்கை போல் வேலைகளைச் செய்தாக வேண்டும். இப்படிப்பட்ட நிலையில் தமிழ் நாடு முழுவதும், குறிப்பாக வட ஆற்காடு மாவட்டம் மிக கடுமையாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள எல்லாத் தொகுதிகளுமே வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பேரணாம்பட்டு, மேட்டுப்பாளையம் போன்ற பகுதிகள் எல்லாம் வறட்சியால் வாடிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதிகளுக்கு வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கோரியிருக்கிற தொகையை விட அதிகமாக ஒதுக்கி, அந்த மாவட்டத்தில் இருக்கிற வறட்சியைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. வட ஆற்காடு மாவட்டம் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக அதிகமாக நெல் விளையக் கூடிய மாவட்டம். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் எந்தவிதமான நதி நீர்ப்பாசனமோ அல்லது ஆற்றுப் பாசனமோ அங்கே பயிர் விளைவிப்பதற்கு இல்லை. கிணற்று நீரை வைத்துதான் பயிர் செய்கிறார்கள். அந்தக் கிணறுகள் எல்லாம் இன்றைக்கு வற்றி, வறண்டு போய்விட்டன. அதனால் அந்தப் பகுதிகளுக்கு, அந்த வட ஆற்காடு மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கம் கொஞ்சம் அதிகமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே இன்றைக்கு ஏழை எளிய மக்களுடைய கனவுகள் நிறைவேறும் வகையில் ஒரு சிறப்பு அம்சம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்திலே 4, 5 பேர்கள்



1983 மார்ச் 11] [திரு. ஜி. மூர்த்தி]

இருந்தாலும் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் வேலைக்குச் சென்றிருக்கிறார்கள். இன்னொரு குடும்பத்தில் படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கும் எதிர் காலத்தில் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. 5 ஆண்டு, 6 ஆண்டு அல்லது 7 ஆண்டு காலம் ஆனாலும் அவர்களுக்கு வேலை கிடைத்து விடும். ஏனென்றால் அவர்கள் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறார்கள்.

ஆனால், 5-வது, 6-வது, 7-வது, 8-வது படித்துவிட்டு மேற்கொண்டு படிக்க வாய்ப்பு இல்லாமல், வாழ வழியில்லாமல், கூலி வேலை செய்கின்றவர்கள், நிலத்திலே கூலி வேலை செய்கின்றவர்கள், மாடு மேய்த்துக் கொண்டிருப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். 8-வது, 9-வது படித்துவிட்டு, விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். பி.ஏ., பி.எஸ்ஸி., படித்தவர்களுக்கு இந்தத் திட்டம் என்ற நிலை வந்துவிடக் கூடாது. 8-வது, 9-வது வரையில் படித்தவர்கள் நிலைமைதான் மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்கள் இருக்கின்ற குடும்பத்தில் உள்ளவர்களுக்கு, குறைந்த பட்சம் குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை கொடுக்க ஏற்பாடு செய்து அந்தக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

அப்படிப்பட்ட குடும்பங்கள் தான் இன்றைக்கு தமிழகத்தில் அதிகமாக இருக்கும் நிலையிருக்கிறது. பட்டம் பெற்றவர்கள், பட்ட மேற்படிப்பு படித்தவர்கள், அதாவது எம்.ஏ., எம்.எஸ்ஸி. படித்தவர்கள் எப்படியாவது கால ஓட்டத்தில் பல்வேறு பணிகளுக்கு போய் விடுகிறார்கள். ஆனால் வெறும் 8-வது, 9-வது படித்துவிட்டு, எதிர்காலமே சூனியமாக இருப்பதாக எண்ணிக்கொண்டு, ஏங்கிக் கொண்டிருக்கும் அந்த மக்களுக்கு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பளிக்கும் இத்திட்டம் போய்ச் சேர்ந்தால், அது நாட்டுக்குப் பெரிதும் நன்மையைப் பயக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்த அறிக்கையிலேயே மிக வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. ''தமிழ்நாட்டில் பருவ மழைகள் பெருமளவிற்குப் பொய்த்துப் போனதன் காரணமாக உணவுப்பற்றாக்குறை, குடிநீர் பற்றாக்குறை, மின் பற்றாக்குறை போன்றவைகள் தமிழ்நாட்டை பெரும் அல்லல்களுக்கு ஆட்படுத்தியிருக்கின்றன'' என்று இன்று நாட்டிலே ஏற்பட்டு இருக்கிற பற்றாக்குறை நிலையையும், வறட்சி நிலையையும் இந்த அறிக்கையிலே தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான நிலைமை தமிழகத்திலேயிருக்கிற காரணத்தால் எங்கே முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் நிறுத்தப்பட்டுவிடுமோ என்று ஒரு சந்தேகம், நாட்டு மக்கள் மத்தியிலே, குறிப்பாக ஏழை எளிய மக்கள் மத்தியிலே

[திரு. ஜி. மூர்த்தி] [1983 மார்ச் 11

பரவலாக பேசப்பட்டு வந்தது. பல அரசியல் கட்சிகள் கூட
மேடை போட்டு பேசி இதுபற்றி பிரச்சாரம் செய்தார்கள்.
''எத்தனை நாளைக்கு இது நிலைக்கும், நிச்சயமாக நிலைக்காது
என்று சொல்வார்கள். எத்தனை நாளைக்குத்தான் இதனை
தொடர்ந்து நடத்த முடியும் பார்க்கலாம் என்று மேடைகளிலே
மக்களை திசை திருப்பிக் கொண்டிருந்தார்கள்''. ஆகவே,
எங்கே இந்த திட்டம் பாதியிலே நிறுத்தப்பட்டு விடுமோ என்ற
அச்சம் ஏழை எளிய மக்கள் மத்தியிலே நிச்சயமாக எழுந்திருந்
தது. ஆனால் அந்த எண்ணத்திற்கு மாறாக, எவ்வளவு பஞ்சம்
வந்தாலும் சரி, எவ்வளவு அரிசி பற்றாக்குறை வந்தாலும் சரி
அறிவிக்கப்பட்ட திட்டத்தை அறிவித்தவாறு தொடர்ந்து நடத்த
........

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், இங்கேயுள்ள மின்சார கடி
காரம் ஓடவில்லை. சில மின்சார விளக்குகளும் எரியவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : தற்
போது மின்சார சப்ளையின் வோடு அளவு குறைந்ததன் கார
ணத்தால் அந்தக் கடிகாரங்கள் சரியாகத் தெரியவில்லை.
ஆனால் அவைகள் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன. (குறுக்
கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மின்சார சப்
ளையில் வோடு குறையும்போது, விளக்குகள் எரியுமே தவிர,
மின்சார கடிகாரங்கள் எலக்ட்ரானிக் கடிகாரங்கள் சற்று தடு
மாறத்தான் செய்யும். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும்
கடிகாரங்களை கையிலே கட்டிக் கொண்டு வந்திருப்பார்கள்.
அதைப் பார்த்து நேரத்தை தற்சமயம் தெரிந்து கொள்ளலாம்.
மின்சார சப்ளை சரியானவுடன் அந்த எலக்ட்ரானிக் கடிகாரங்
களும் ஒளி பொருந்தித்தெரியும். அதுவரையில் அவரவர்கள்
கடிகாரங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள் (சிரிப்பு).

திரு. பாபு ஜனார்த்தனன் : தமிழகத்திலே பெரும் வறட்சி
ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்திலே, மின்சார கடிகாரங்கள் தான்
இயங்கவில்லை என்று சொல்ல முடியாது. மிக முக்கியமாக நிதி
நிலை அறிக்கையினை இந்த அவையிலே விவாதித்துக் கொண்
டிருக்கும்போது, நிதித் துறையைச் சார்ந்த செயலாளரும் வர
வில்லை—அந்தத் துறையும் இயங்க வில்லை, மின்சார
கடிகாரங்களும் வேலை செய்யவில்லை......

திரு. என். எஸ். வி. சித்தன் : இங்கேயுள்ள ஒவ்வொரு
வரும் ஒவ்வொரு விதமான கடிகாரங்களைக் கட்டி கொண்டிருக்
கிறார்கள். அவைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான
நேரத்தைக் காட்டுகின்றன. எதை எடுத்துக் கொள்வது எதை
விடுவது......



1983 மார்ச் 11]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்
பினர் திரு. சித்தன் அவர்கள் பேசுகிறபோது, மாண்புமிகு
உறுப்பினர்கள் எல்லாம் வெவ்வேறு விதமான நேரங்களைக் காட்
டும் கைக்கடிகாரங்களைக் கட்டியிருப்பதுபற்றிச் சொன்னார்கள்.
நமது தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனம் புது
மாதிரியான எலக்ட்ரானிக் கைக்கடிகாரங்களை விற்பனைக்குக்
கொண்டு வந்திருக்கிறது. அதை எல்லா சட்ட மன்ற உறுப்பினர்
களும் வாங்கிக் கட்டிக் கொண்டால், எல்லாக் கடிகாரங்களும்
ஒரே நேரத்தைக் காட்டும். (சிரிப்பு).

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலை
வர் அவர்களே, நான் சொல்லிக் கொண்டிருந்த விஷயத்தை
முழுவதுமாக கூறிவிட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்,
தயவுசெய்து அனுமதிக்க வேண்டும். ஆக, இன்றைக்கு இந்த
சத்துணவு திட்டம் எங்கே நிறுத்தி வைக்கப்பட்டு விடுமோ
என்று அனேகமாக அனைவராலும் ஐயப்பட்டுக் கொண்டிருந்த
நேரத்தில், எவ்வளவு சங்கடங்களும் இடர்பாடுகளும் ஏற்பட்
டாலும் எங்களுடைய கொள்கையிலிருந்து பின் வாங்கமாட்
டோம், அந்த திட்டத்தை நிச்சயமாகத் தொடர்ந்து நிறைவேற்று
வோம் என்று சொல்லுகிற வகையில், அதனை தொடர்ந்து
நிறைவேற்றிக் கொண்டு வருகிற இந்த அரசுக்கும், தமிழக
முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், தமிழக மக்களின்
சார்பாக என்னுடைய உளமார்ந்த நன்றியைக் கூறி விடை பெறு
கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவையின்
மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையில்
நல்ல பல அம்சங்கள் இருந்தும், அதனை முழுமையாகப் பாராட்டி
ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதை நான் இந்த நேரத்
திலே தெரிவித்தேயாக வேண்டும். அத்தியாவசியப் பண்டங்கள்
சிலவற்றின் மீது நுழைவு வரியினை இந்த நிதிநிலை அறிக்கையின்
வாயிலாக இந்த அரசு புகுத்தியிருக்கிறது. அத்தியாவசியப் பண்
டங்கள் சிலவற்றின் பட்டியலைக் கொடுத்து, அவைகளின் மீது
இந்தப் புதிய நுழைவு வரியினை இன்று புகுத்தியிருக்கிறார்கள்.

பல மாநிலங்களில் ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கின்ற
நுழைவு வரியினை வாபஸ் பெறுவதற்கான வழிமுறைகளை
ஆராய்ந்து வருகின்ற வேளையில் தமிழக சர்க்கார் புதிதாக
இந்த மிகவும் பிற்போக்கான வரியைப் புகுத்துவதற்கு முற்பட்
டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அதிலே குறிப்
பாக இந்தப் பண்டங்களின் மீது விதிக்கப்பட்டிருக்கின்ற நுழைவு
வரியின் காரணமாக பட்டணங்களில் வாழ்கின்ற மக்களுக்கும்,
ஏனைய பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கும் இடையில் ஒரு
பாகுபாட்டை ஏற்படுத்துவதற்கு வழிகோலப்படுகிறது என்பதை
நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். பட்டணங்களில்

வாழ்பவர்கள் அதிகமான வாங்கும் சக்தி படைத்தவர்கள் என்ற கருத்துக்கு அரசு எப்போது வந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

இந்த நுழைவு வரியின் வாயிலாக அரசாங்கத்திற்கு 26 கோடி ரூபாய் அதிகமான வருமானம் வரும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த வருமானம் நிச்சயமாக அரசுக்கு வருமா என்பதில் எனக்கு சந்தேகம் உண்டு. இந்த வரியினை வசூல் செய்வதற்கான வழிமுறைகளைப் பற்றி நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். நிச்சயமாக நுழைவு இடத்திலே வரி வசூலிக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாகச் சொல்லி இருக்கிறார்கள். வணிகர்கள் தருகின்ற தகவலை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் வரி வசூலிக்கப்படும் என்று சொல்லப்படுகின்றது. அப்படியானால் நகரங்களுக்காகவே பொருளைக் கொள்முதல் செய்கின்ற போது நிச்சயமாக நகரங்களுக்காகத்தான் கொள்முதல் செய்கின்றோம் என்று சொல்கின்ற நிர்பந்தத்தை நீங்கள் ஏற்படுத்துவீர்களா என்று கேட்க விரும்புகிறேன். எனவே உண்மையிலேயே நகரங்களுக்கு என்று கொள்முதல் செய்கின்ற பொருளைக் கூட வேறு எங்கோ எடுத்துச் செல்கிறோம் என்று சொல்லி வரி ஏய்ப்பு செய்வதற்குரிய வழி வகைகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபற்றி எண்ணிப் பார்த்தீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இந்த வரி விதிப்பதன் வாயிலாக இந்த அரசாங்கம் எண்ணுகின்ற அளவுக்கு வருவாய் வராததோடு மட்டுமல்லாமல் வரி ஏய்ப்பதற்குரிய வழிகளையும் இந்தஅரசு கோடிட்டு காட்டுகிறதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகின்றது. இந்த வரி விதிப்பின் வாயிலாக நிச்சயமாகப் பண்டங்களின் விலைகள் ஏறப்போகின்றது என்று ஏனோ இந்த அரசு வீண் பழியினைச் சுமப்பதற்குத் தயாராக ஆகிக் கொண்டு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

ஆனால் மத்திய அரசு பெற்றிருக்கின்ற ஆற்றலையோ அல்லது சாமர்த்தியத்தையோ நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பெற்றிருக்கவில்லை. நிதி நிலை அறிக்கையிலே சொல்லாமலேயே எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய் வரியினை மத்திய அரசு மக்களின் தோள்களில் சுமத்தி இருக்கின்றது. நிதிநிலை அறிக்கை வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே புகையிலை போன்ற பொருட்களுக்கு விதித்த வரியின் வாயிலாக 500 கோடி ரூபாயினைப் பெற்றிருக்கின்றது. எண்ணெய் வள நாடுகள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற எண்ணெயின் விலையைக் குறைப்பதற்கு முனைந்து ஆராய்ந்து வருகின்றபோது மத்திய அரசு எண்ணெய் விலையினை உயர்த்துகின்றது. அதன் மூலம் 800 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதி வசதியினைப் பெற்றுக்





கொண்டிருக்கின்றது. நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு தந்தி, தபால் கட்டணங்களை உயர்த்தி அதன் மூலமாக 700 கோடி ரூபாய்க்கு மத்திய அரசு வருமானத்தை தேடிக்கொண்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் வெறும் 716 கோடி அளவிலே மட்டும் வரிகளை உயர்த்தி இருக்கிறோம் என்று மத்தியிலே ஆளுகின்றவர்கள் பெருமையுடன் கூறுகின்ற நிலைமை இருக்கின்றது. இந்த வகையில் மத்திய அரசு மிகத் திறமையாகச் செயல்படுகின்றது. எனவே மக்களை ஏமாற்றுவதற்குரிய வழியில் நிதிநிலை அறிக்கையில் சொல்லாமலேயே பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை அதாவது ஏறத்தாழ 1,370 கோடி ரூபாய்க்கான வரிகளை மத்திய அரசு விதித்திருக்கின்றது. அது அவர்களுடைய சாமர்த்தியம். இத்தகைய சாமர்த்தியம் நம்முடைய நிதியமைச்சருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே வீண் பழியை நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே மத்திய அரசு சுமத்தி இருக்கின்ற வரியின் மொத்த கணக்கு 2,500 கோடி ரூபாயினை எட்டி இருக்கின்றது. இதன் காரணமாக நிச்சயமாக விலைவாசி ஏற்றம் பெறும். அப்படி ஏறுகின்ற விலையேற்றத்தின் காரணமாக நீங்கள் ஏற்றி இருக்கின்ற 26 கோடி ரூபாய் வரியின் காரணத்தால் தான் விலைவாசி ஏறுகின்றது என்ற பழியினை வீணாக நீங்கள் சுமந்து கொண்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே இந்திரா காங்கிரஸ் தோழர்கள் பல இடங்களில் விலைவாசிப் போராட்டத்தை ஆரம்பித்து இருக்கிறார்கள். விலைவாசிப் போராட்டத்தை மத்திய அரசுக்கு எதிராகத் துவங்குவதற்குப் பதிலாக உங்களுக்கு எதிராகத் துவங்கி இருக்கிறார்கள். எனவே மத்திய அரசு செய்கின்ற தவறுக்கு உங்களைக் காரணமாகச் சொல்லி..........

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சாரமும், ஃபேனும் பெரும்பாலும் அவையில் தற்போது இயங்கவில்லை ; லைட்டும் சரியாக எரியவில்லை. டிம்மாக எரிகின்றது. ஆகவே புழுக்கமாக இருக்கின்றது. எனவே அவையினை சற்று நேரத்திற்கு ஒத்தி வைத்தால் நல்லது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளியே சென்றிருந்தபோது இது குறித்து கேட்கப்பட்டு உரிய பதிலும் சொல்லப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது வந்தவுடன் அதையே மீண்டும் கேட்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை. அவை தொடர்ந்து நடக்கும்.

(நண்பகல் 12—00)

திரு. பி. முகமது இஸ்மாயில் : ஆக இந்த அரசுக்கு இந்த வரி விதிப்பின் வாயிலாக வருகின்ற வருவாயை விட அதிகமான பழி சுமையினை ஏற்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறது

என்ற காரணத்தினாலும், மிக மிகப் பழமையான பிற்போக்கான
திட்டம் என்ற காரணத்தினாலும் நாங்கள் இதை எதிர்க்கிறோம்.
மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் இங்கே சொல்கின்ற கருத்து
களுக்கு பதில் அளிக்கின்றபோது நிச்சயமாக இந்த வரி விதிப்
பினை விடுவோம் என்ற நல்ல பதிலை இந்த மன்றத்திற்கு தர
வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த புதிய வரி விதிப்புக்
காக சுட்டிக்காட்டப்படுகின்ற காரணம் ஏற்கெனவே பற்றாக்
குறை 184 கோடியை எட்டிக் கொண்டிருக்கிறது. எனவே அதை
சிறிதளவுக்கு குறைய செய்வதற்காக இது துணை நிற்கும் வகை
யில் இந்த அரசு இதை அறிமுகம் செய்து இருக்கிறார்கள். நான்
சொல்ல விரும்புவது எல்லாம் இந்த வரி விதிப்பின் வாயிலாக
184 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருப்பதை 159 கோடி
ரூபாயாக மட்டும்தான் உங்களால் குறைக்க முடிந்தது. ஒரு
சிறிய அளவை குறைப்பதற்காக இந்த பழியை நீங்கள் சுமந்து
கொள்ள வேண்டியிருக்கிறது என்று நான் பணிவோடு தெரிவித்துக்
கொள்கிறேன்.

மேலும் உங்களுடைய வருவாய் இனங்களை ஒழுங்கான வகை
யிலும் வசூல்களை துரிதப்படுத்துகின்ற வகையிலும் செய்தால்
இங்கே சுட்டிக்காட்டியிருப்பதைவிட அதிகமான வருவாயை
ஈட்டிக்கொள்ள முடியும். புதிதாக ஏற்படுத்துகிற வரிகளை
நீங்கள் தவிர்க்க முடியும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்
படுகிறேன்.

இங்கே நல்ல ஒரு திட்டத்தைத் தருவதற்கு நிதி அறிக்கை
தவறவில்லை. குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தருகின்ற திட்
டத்திற்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டி
யிருக்கிறீர்கள். வரவேற்பதற்கான திட்டமானாலும் வரவேற்
பதற்கு வாய்ப்பினை நீங்கள் தரவில்லை என்ற குறைபாடு எங்
களுக்கு உண்டு. காரணம் இந்தத் திட்டம் பல ஆண்டுக் காலமாக
விளம்பரப்படுத்தப்பட்ட திட்டம். எனவே, இந்த திட்டத்தை
அமுல் நடத்துவதற்கான வழிமுறைகளை நிச்சயமாக இதற்கிடை
யில் அரசு ஆராய்ந்து நல்ல முடிவுகளை இந்த மன்றத்திற்கு
அறிவித்து இருக்கவேண்டும். 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு
காரணம க எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும்
எத்தனை குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்றும் சுட்டிக்
காட்ட இந்த அரசு தவறியிருக்கிறது. 15 கோடி ரூபாய் செல
விடுவதாகச் சொல்லிவிட்டு அந்த ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற இந்த
அரசு இந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு இன்னும் பல
மாதங்கள் மட்டும் அல்ல பல ஆண்டுகள் உருண்டோடி விடுமோ
என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது. குடும்பத்திற்கு ஒருவருக்கு
வேலை தருவது என்ற திட்டத்தை நாம் உறுதியாக மேற்கொள்வ
தாக இருந்தால் எத்தனை குடும்பத்திற்கு எத்தனை பேருக்கு வேலை
வாய்ப்பு அளிக்க முடியும் என்ற கட்டாய நிர்பந்தம் இந்த அரசுக்கு
ஏற்படும் என்பதை ஆராய்ந்து பார்த்ததாகத் தெரியவில்லை. குடும்ப
கார்டு நீங்கள் வழங்கியிருப்பதை கணக்கு வைத்துப்பார்த்தால்





ஏறத்தாழ 1 கோடியே 17 லட்சம் குடும்பங்கள் இங்கே இருப்பதாகத்
தெரிகிறது. சில குடும்பங்களில் இருக்கிற சில உறுப்பினர்கள் வேலை
வாய்ப்பு பெற்றவர்களாக இருக்கலாம். ஆனால் பெருவாரியான
குடும்பங்களில் உள்ளவர்கள் வேலை வாய்ப்பு இல்லாதவர்களாக
இருக்கிறார்கள். அந்த குடும்பங்களில் உள்ள அத்தனை பேருக்கும்
வேலைவாய்ப்பு அளிக்க எத்தனை ஆண்டுக் காலம், எத்தனை
5 ஆண்டு காலம் பிடிக்கும் என்பதை கோடிட்டுக் காட்டத் தவறி
யிருக்கிறீர்கள். எனவே இந்தத் திட்டத்தைப் பற்றிக் கூறும்போது
இது ஒரு கண் துடைப்புத் திட்டமாக இன்றைய தினம் அறி
வித்ததோடு பல காலத்திற்கு இதைத் தள்ளிப்போட்டுக்கொண்டு
போகும் ஒரு திட்டமாக இந்த அரசாங்கம் போட்டு மக்களை
ஏமாற்றிக்கொண்டு இந்த திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது
என்ற குறைபாட்டை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு நலன் தருகின்ற பல திட்டங்கள் இந்த
நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. நல்ல
சீரான இடுபொருள்களைத் தருவது, அதற்கான விலைகளை
குறைத்துத் தருவது என்று நல்ல அறிக்கைகளைத் தந்துவிட்டு உற்
பத்திப் பொருளுக்கு நியாயமான விலை தருவதற்கு அரசாங்கம்
உத்திரவாதம் தருவதற்கு தயங்கிக்கொண்டு இருப்பதாகத் தெரி
கிறது. நெல் விலையை உயர்த்த வேண்டும், கரும்பின் விலையை
உயர்த்தவேண்டும், ஏனைய உற்பத்திப் பொருள்களின் விலை
களை உயர்த்தவேண்டும் என்று விவசாயிகள் பல காலமாக
கோரிக்கைகள் தந்துகொண்டிருக்கும் வேளையில் கரும்புக்கு
ஏற்கனவே சென்ற ஆண்டு கொடுத்த விலையை கூட கொடுக்
காமல் குறைத்து 155 ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கி
றீர்கள். இதில் யாருக்கு நன்மை ஏற்படுகிறது என்று நாம்
ஆராய்ந்தால் நிச்சயமாக நம் விவசாயிகளுக்கு ஏற்படப் போவது
இல்லை. சர்க்கரை ஆலைகளுக்கு அதிகமான லாபம்
கிடைக்க வழிவகைகளை இந்த அரசு செய்து கொடுத்து இருக்
கிறது என்ற அச்சம் தான் எங்களுக்கு ஏற்படுகிறது. தொடர்ந்து
பல ஆண்டு காலமாக கோடிக்கணக்கான ரூபாய் லாபம்
ஈட்டிவருகின்ற சர்க்கரை ஆலைகளுக்கு மேலும் அதிகமான
லாபம் பெறுவதற்கு இந்த திட்டம் பயன்படும். எனவே இந்த
சந்தர்ப்பத்தில் அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்வது கரும்
புக்கு நியாயமான விலை தரவேண்டும். அண்டை மாநிலத்தில்
தரப்படுகின்ற அளவுக்காவது தரவேண்டும். குறைந்தபட்சம்
சென்ற ஆண்டு கரும்புக்கு நிர்ணயித்த விலையை இப்போது
நிர்ணயித்து தரவேண்டும். கரும்பு விவசாயிகள் பலன் பெறும்
வகையில் செயல்பட வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு நலன் தருகின்ற பல திட்டங்
களை இந்த நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்
கிறீர்கள். அதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். மாஸ்

டர் வீவர்ஸ் இவர்கள் இரும்புப் பிடியிலிருந்து கைத்தறி நெச
வாளர்களைக் காப்பாற்றுவதற்காக வழிமுறைகளை நீங்கள்
சொல்லியிருக்கிறீர்கள்.

அதற்காக எங்களுடைய பாராட்டுதலை இந்த அரசு பெறும்.
அதே நேரத்திலே பல காலமாக கைத்தறித் தொழிலிலே ஈடு
பட்டுக் கொண்டிருக்கின்ற நெசவாளர்கள் தங்களுக்கு கூலி
உயர்வு வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து தொடர்ச்சி
யாகப் போராடிக்கொண்டு வருகிறார்கள். அதிலே கவனம்
செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. பஞ்சின் விலை ஏற
வில்லை, ஆனால் அதே நேரத்திலே நூலின் விலை ஏறிக்கொண்
டிருக்கிறது. கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஊதியம் பெருகி
யதாகத் தெரியவில்லை. அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொ
ருள்கள் தேக்கம் அடைந்து இருக்கின்ற காரணத்தினாலே அவ்
வப்போது அவர்களுக்குப் பணம் வந்துசேரவில்லை என்ற
குறைபாடுகளை எல்லாம் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்
கள். ஆகவே அந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்க அரசு
ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்வாரியத் துறைக்கு அதிகமான பண ஒதுக்கீடு செய்
திருப்பதை நான் வரவேற்கிறேன். மின்வாரியத் துறைக்கு
அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அதனால் நட்டத்திலே அது
சென்றுகொண்டிருக்கிறது. எனவே கட்டாயமாக மின் சக்தி
யின் விலையை உயர்த்தவேண்டிய கட்டாய நிலைக்கு அரசு
தள்ளப்பட்டிருக்கிறது என்று ரிப்போர்ட்டிலே சொல்லியிருக்கிறார்
கள். நான் சொல்லிக் கொள்ளவிரும்புவது, மின் வாரியத்
திற்குச் சேரவேண்டிய பணவசூலில் தடைஏற்பட்டிருக்கிறது.
போதுமான வேலையாட்கள் இல்லாத காரணத்தினால் 5
மாதங்கள், 6 மாதங்கள் வரையில் மின்சக்தியைப் பயன்படுத்து
வதற்கான பணத்தை வசூலிப்பதில் முடங்கல் ஏற்பட்டு இருக்
கிறது என்று சொல்கிறார்கள். மின்சக்திக்கான பணத்தை
அந்த அந்த சமயங்களில் வசூல் செய்வதாக இருந்தால் மின்வாரி
யத்திற்கு அதிகமான வருவாய் வரும். மின்சக்தியின் விலையை
உயர்த்தவேண்டிய நிலைக்கு கட்டாயமாக அரசு தள்ளப்படாது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகச் செலவு ஏற்
படுகிறது என்ற காரணத்தைச் சொல்லிக்கொண்டு மின்வாரியத்
திலே வேலைசெய்கின்ற தொழிலாளர்களை இடமாற்றம் செய்
வதாகத் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

குறிப்பாக எண்ணூர் மின்நிலையத்திலே நூற்றுக்கணக்கான
தொழிலாளர்கள் அங்கிருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்படு
கிறார்கள். வேலைப் பளு கிடையாது. அதிகமான தொழி
லாளர்கள் இருக்கிறார்கள் எனவே மாற்றுகிறோம் என்று விளக்
கம் தரப்படுகிறது. அதே நேரத்திலே கான்ராக்ட் தொழி
லாளர்களை ஏற்படுத்தி வேலைகளைச் செய்து வருவதாகத்





தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. நான் அரசைக் கேட்
டுக் கொள்கிறேன். ஏற்கனவே வேலை செய்துவருகின்ற தொழி
லாளர்களை அங்கிருந்து டிரான்ஸ்பர் செய்வதை விட்டு, கான்ட்
ராக்ட் தொழிலாளர்களை நியமிப்பதைவிட ஆங்காங்கே வேலை
செய்கின்ற தொழிலாளர்களை அப்படியே வேலை செய்ய
அனுமதித்துவிட்டு வேறு இடங்களிலே செய்யவேண்டிய வேலை
களுக்கு கான்ட்ராக்ட் தொழிலாளர்களை ஏற்படுத்தி விட்டு
ஏற்கெனவே வேலைசெய்து கொண்டிருக்கின்ற தொழிலாளர்
களை இடமாற்றம் செய்யவேண்டாமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

துறைமுகங்கள் அபிவிருத்திபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.
சில துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் சுட்டிக்
காட்டப்பட்டிருக்கின்றது. எங்கள் மாவட்டத்திலே குளச்சல்
என்ற துறைமுகம் மிக முக்கியமான துறைமுகமாக இருக்கிறது.
பல ஆண்டுகளாக திரும்பத் திரும்ப அது அபிவிருத்தி செய்யப்
படும் என்ற வாக்குறுதி தரப்படுகிறதே தவிர அபிவிருத்திற்கு
எத்தகைய நிதியும் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த
நிதிநிலை அறிக்கையிலே ஏதோ அங்கே இருக்கிற காவலர்களுக்கு
40 ஆயிரம் ரூபாய் செலவில் தங்குமிடங்கள் ஏற்பாடு செய்யப்படும்
என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர பயனுள்ள அபிவிருத்தித்
திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்பதற்கான அறிகுறிகள்
காணப்படவில்லை. நான் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்
கொள்கிறேன். குளச்சல் துறைமுகம் மிக முக்கியமான துறை
முகம், பல காலமாக பல பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற
துறைமுகம், அதை அபிவிருத்தி செய்வதற்கான பண ஒதுக்
கீட்டை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

கடைசியாக முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் பற்றி
சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன். முதலமைச்
சரின் சத்துணவுத் திட்டம் என்று பெயர் வரக்காரணம் என்ன
என்று எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த மாநிலத்
திலே உள்ள மக்கள் தருகிற வரிப் பணத்தை வைத்துக் கொண்டு
நடைபெற்று வருகிற ஒரு திட்டம் இது. இதுபோன்று எத்தனை
யோ பல திட்டங்கள் அமலாக்கப்படுகின்றன. அத்தனை திட்
டங்களும் முதலமைச்சர் முயற்சியினால் கொண்டுவரப்பட்டன
என்று நீங்கள் பெருமையடித்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்தத்
திட்டங்களுக்கு எல்லாம் இல்லாத பெயரை இந்த சத்துணவுத்
திட்டத்திற்கும் மட்டும் ஏன் முதலமைச்சரின் சத்துணவுத் திட்
டம் என்று பெயர் வைத்திருக்கிறீர்கள் என்று புரியவில்லை.
அதனால் ஒருவேளை அரசியல் ரீதியாக உங்களுக்கு லாபம் ஏற்
படுமே தவிர இந்த மாநிலத்திற்கு ஏற்படுகிற நட்டத்தை நீங்
கள் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. சத்துணவு என்ற
பெயர் வைத்து இருக்கிற காரணத்தினால் அல்லது மதிய
உணவு என்ற பெயரை மாற்றிய காரணத்தினால் இந்த மாநிலம்

[திரு. உ. சுப்பிரமணியன்] [1983 மார்ச் 11

எந்த நிலையில் உள்ளவர்களுக்கு வேலை கொடுக்கப்படும்? எந்த வகையில் 15 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை எல்லாம் சொல்லாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. வேலையில்லாதவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் கொடுப்பதாக ஏற்கனவே உள்ள வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டது. ஆனால் அது எந்தவகையில் அமல் செய்யப்பட்டிருக்கிறது? எத்தனை ஆயிரம் பேர்கள் அதில் பயன் பெற்றிருக்கிறார்கள்? எத்தனை கோடி ரூபாய் அதற்காக செலவிடப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் எதுவும் இல்லாத நிலையில், மேலும் நாங்கள் 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வது, அரசாங்கத்தினுடைய நிதியை வரவு-செலவு செய்வதில் திட்டமிட்டு சொல்லாதது சரியல்ல என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

சிவகெங்கையில் கிராபைட் சம்பந்தமாக முதல்கட்ட வேலையாக மேனுபேக்கச்சரிங் பிளான்ட் ஒன்றை நிறுவுவதற்கு 288 லட்சம் ரூபாய் அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது நான் அதை வரவேற்கிறேன். மிக உபயோககரமான லாபகரமான அந்த தொழிலை மிக விரைவாக துவங்க முழு முயற்சியில் அரசு ஈடுபடவேண்டும். அதற்கு பொறுப்பேற்றுள்ள தமிழ்நாடு மினரல்ஸ் கார்ப்பரேஷன் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களிடம் மிக சீக்கிரத்திலே வந்து திறப்பு விழாவை நடத்தவேண்டுமென கேட்டிருக்கிறேன். திறப்பு விழாவில் தாமதம் காரணமாக உற்பத்தி தாமதமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே அதை உடனடியாக துவங்குவதற்கு காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் என்னுடைய தொகுதியில் மானாமதுரையிலே 500 ஏக்கர் பரப்பில் சிப்காட் காம்ப்ளெக்ஸ் உருவாக்கி இரண்டு அமைச்சர்கள் வந்து திறந்து வைத்தார்கள். ஆனால் இன்று வரையில் அங்கு நான்கு தொழில் முனைவர்கள் தான் வந்திருக்கிறார்கள். அந்த தொழில் முனைவர்கள் எல்லாவிதமான ஏற்பாடுகளைச் செய்தும் அங்கு வேலை ஆரம்பிப்பதில் தடங்கலாக இருப்பது மின்சாரம். ஏற்கனவே விளம்பரம் செய்யப்பட்டு, சிப்காட் காம்ப்ளெக்சிலே தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். மின்சாரத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. அதை நம்பித்தான் அவர்களும் வந்திருக்கிறார்கள். அப்போது மந்திரி அவர்கள் அங்கே வந்திருந்தபோது கேட்டதற்கு அதற்கான ஏற்பாட்டை செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் அங்கு சேர்மனை கேட்டபோது, எலக்ட்ரிசிட்டி போர்டு சேர்மனை பார்த்து கேளுங்கள் சொல்கிறார்கள். பல லட்ச ரூபாய்கள் கடன் வாங்கி மூலதனத்தை திரட்டி தொழிலை ஆரம்பிப்பவர்கள் உற்பத்தி தாமதமாகுமானால் வாங்கிய பணத்திற்கு அதிகமான வட்டி கட்டுவது போன்ற



1983 மார்ச் 11] [திரு. உ. சுப்பிரமணியன்]

பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவார்கள் என்பதை உணரவேண்டும். நீங்கள் எதிர்பார்த்தபடி, குறிப்பிட்ட வளாகத்திற்குள், அதிகமான பேர்கள் வராத காரணத்தினால், எந்தவிதத்திலாவது, அந்த நான்கே நான்கு பேர்களுக்கு மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று தொழில் அமைச்சர் அவர்களை, இப்பொழுது நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்ச நிவாரண வேலைகளைப் பொறுத்தவரையிலும், நான் எங்களுடைய மாவட்ட கலெக்டரிடம் கடந்த டிசம்பர் மாதம் முதல் வாரத்திலேயே எடுத்துச் சொல்லி, மிகக் கடுமையாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக சர்க்கார் கவனத்திற்கு கொண்டு வந்து நிவாரண வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தேன். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, சர்க்காரிலே, பல நூற்றாண்டுகளுக்கு முன்னாலே இருந்த ஒரு முறையைத் தொடர்ந்து, டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி வரை பார்க்க வேண்டும். அதற்குள்ளே, புயல், வெள்ளம், மழை எல்லாம் வரும். அதற்குப் பிறகுதான், ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். ஆகவே, அதற்குப் பிறகுதான் அனுப்புவோம் என்று சொல்லி, ரிப்போர்ட் அனுப்புவதில் தாமதம் செய்யப்பட்டது. அந்தத் தாமதத்தினால் நமக்குக் கிடைக்க வேண்டிய நிவாரண வேலை உதவிகள் கிடைப்பது தாமதம் ஆகிறது. தாமதம் ஆகிறது என்பது மட்டும் அல்ல. கடைசி நேரத்தில், தொகை வருகின்ற காரணத்தினாலே, ஒரு குறிப்பிட்ட தேதிக்குள்ளே காரியங்களை, வேலைகளை, முடிக்க வேண்டுமென்று சொல்லி, அவசர, அவசரமாகச் செய்கின்ற காரணத்தினால், அரசாங்கம் செலவு செய்கின்ற பணம் விரயம் ஆகின்றது என்று ஆண்டு தோறும் நாம் தெரிந்துகொள்கிறோம். ஆகவே, இந்த ஆண்டும் அது மாதிரி இல்லாது, கால நீடிப்புக் கொடுத்து, வேண்டிய அளவுக்கு நிவாரண வேலைகள் செய்யவேண்டும். நிவாரண வேலைகளைப் பற்றிச் சொல்லும்போது, சென்ற ஆண்டு செய்த பல்வேறு வறட்சி நிவாரண வேலைகளுக்கு பணம் இன்னும் கொடுக்கப்படவில்லையென்றுகூட நான் கேள்விப்படுகிறேன். உதாரணமாக, செங்கல்பட்டிலே ஒரு ரோடு போடப்பட்டிருக்கிறது. இன்று வரையிலே பணம் கொடுக்கப்படவில்லையென்ற நிலைமையிருக்குமானால் அது சரியா? ஒரு வேலையை ஒருவரிடம் ஒப்படைத்து, நீங்கள் செய்யுங்கள் என்று அரசாங்கம் சொன்னபிறகு, அவர் அதை எடுத்துச் செய்து முடித்தபிறகு, பணம் இல்லையென்று சொல்வது முறையாகாது. ஆகவே, எந்த வேலையாக இருந்தாலும், செய்து முடித்தவுடனே பணம் கொடுக்கவேண்டும்.

அடுத்து நுழைவு வரி. அந்தக் காலத்திலே 'ஆக்ட்ராய் டியூட்டி' என்று சொல்வார்கள். ஒரு குறிப்பிட்ட ஊரில், அந்த பஞ்சாயத்துக்கோ, அல்லது முனிசிபாலிட்டிக்கோ வருமானம் வரக்கூடிய அளவிலேதான் அந்த வரி விதிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது வேறு மாநிலங்களில், 'அவுட்-டேட்டட் டாக்ஸ்'

[திரு. பி. முகமது இஸ்மாயில்] [1983 மார்ச் 11

ஏறத்தாழ 100 கோடி ரூபாயை இழந்து இருக்கிறது என்
பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம் அண்டை
மாநிலமான ஆந்திர மாநிலம் மதிய உணவுத் திட்டத்தை நாங்
கள் அமல் நடத்துகிறோம் என்பதற்காக பணம் வேண்டும் என்று
மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு 100 கோடி ரூபாய்
வழங்குவதற்கு அவர்கள் தயாராக முன்வந்திருக்கிறார்கள். அதைப்
போல் நம்முடைய திட்டத்தையும் அறிவித்திருந்தால் இந்த
மாநிலமும் 100 கோடி ரூபாய் பெற்றிருக்கமுடியும். திட்டத்தின்
பெயரை மாற்றிய ஒரே காரணத்திற்காக இந்த மாநிலம் 100
கோடி ரூபாயை இழந்திருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தின்
பெயரை மாற்றி இந்த அரசாங்கத்தின் திட்டம் என்ற பெயரை
வைத்து ஏனைய மாநிலங்கள் இந்தத் திட்டத்தை அமல் நடத்
துவதைப்போல் அமல்நடத்துவதற்கு முன்வந்து இந்த மாநிலத்
திற்கு ஏற்படுகிற இழப்பைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது நல்ல பல
திட்டங்களை நீங்கள் இங்கே கோட்டிட்டுக் காட்டியிருந்தாலும்
முழுமையாக அதை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை, முழுமை
யாக திருப்தி தருவதற்குப் பதிலாக இந்தத் திட்டம் ஏமாற்
றத்தை அதிகமாக அளித்துக்கொண்டு இருக்கிறது என்று
சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10].

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் அதாவது 31-3-1983
முடிய பற்றாக்குறை 89.02 கோடி ரூபாய். ஆனால் 1983-84-ல்
95.5 கோடி. ஆக மொத்தம் 154.55 கோடி ரூபாய் என்று
குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு 26 கோடி ரூபாய்க்கு மட்டும்
தான் வழிவகை கண்டுபிடித்துள்ளார்கள். பாக்கி 158.55
கோடிக்கு என்ன வகை என்று குறிப்பிடப்படவில்லை என்று
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த பற்றாக்குறையை
எந்த வகையிலே ஈடுசெய்யப்போகிறார்கள் என்று நிதியமைச்சர்
அவர்கள் சொல்லவில்லை. இந்த மாநிலத்தினுடைய உண்மை
யான நிலையை அவ்வப்போது மக்களுக்கும், இந்த மாமன்றத்
திற்கும் சொல்லவேண்டிய கடமை நிதியமைச்சருக்கு உள்ளது.
கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் சொல்லப்படவில்லை என்று
பரவலாக சொல்லப்படுகிறது.

நிதியமைச்சர் அவர்களுக்கு குறளும், தமிழ் இலக்கியமும்,
தமிழும் கைவந்த கலை. அவருக்கு தெரியும், இயற்றலும், ஈட்ட
லும், காத்தலும், காத்த வகுத்தலும் வல்லது அரசு என்று
சொல்லப்படுகிறது. ஒவ்வொரு செலவினத்திற்கும் வழிவகை
கண்டுபிடிக்க வேண்டும். அதை ஈட்டவேண்டும். ஈட்டிய
பொருளை நல்லமுறையில் செலவு செய்து, மக்களுக்கு பலன்
தரத்தக்க வகையில் செய்வது தான் நல்ல அரசு என்று வகுத்
திருக்கிறார்கள். ஆகவே நல்லவகையிலே செயல்படுவதற்கு ஈட்டு
கிற முறையை நீங்கள் முறைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்



983 மார்ச் 11] [திரு. உ. சுப்பிரமணியன்]

கொள்கிறேன். பற்றாக்குறைக்கு என்ன காரணம் என்று பார்த்
தால், இந்த ஆண்டு முக்கியமாக பேசப்படுகிற முதலமைச்
சரின் சத்துணவுத் திட்டத்திற்கு ஏறக்குறைய 134 கோடி ரூபாய்
செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லி
யிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டம் நல்ல திட்டமா, இல்லையா
என்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அது வரவேற்கக்
கூடிய திட்டம் தான். அந்தத் திட்டத்திற்கு எவ்வாறு பொருள்
ஈட்டப்பட்டிருக்கிறது என்பது தான் நமக்கு பிரச்னையாக இருக்
கிறது. 1937 ஆம் ஆண்டிலே மூதறிஞர் இராஜாஜி அவர்கள்
முதலமைச்சராக பொறுப்பேற்று கொள்கிறபோது சமுதாய
புரட்சியாகிய மதுவிலக்கை கொண்டு வந்தார்கள். மதுவிலக்
கினால் ஏற்படுகிற இழப்பினை ஈடுகட்டுவதற்கு, அப்போது
இந்தியாவிலே எங்கும் இல்லாத, காமதேனு என்று சொல்லக்
கூடிய விற்பனை வரியை அமலுக்கு கொண்டு வந்து, அதன்
மூலம் இழப்பினை ஈடுகட்டுவதற்கு வழி செய்தார்கள். ஆகவே
மதுவிலக்கினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு மட்டு
மல்லாமல், இந்த நாட்டில் மிகப்பெரிய வருமானத்தை கொடுக்
கக் கூடிய அளவில் அது உருவெடுத்திருக்கிறது. ஆகவே நல்ல
திட்டம் என்று நீங்கள் கருதுகிற, மற்றவர்கள் கருதுகிற திட்
டத்தை அமல்செய்கிறபோது வேறு பல நல்ல திட்டங்கள் பாதிக்
கப்படாமல், அதற்கான வழிவகைகளை கண்டுபிடித்து நீங்கள்
செய்யவேண்டும்.

இலக்கியத்திலே நிதியமைச்சர் அவர்களுக்கு அதிகமாக நான்
சொல்லவேண்டியதில்லை. படை மடம், கொடை மடம் என்று
சொல்வார்கள். ஒருவனுடைய நோக்கம் எவ்வளவு சிறந்ததாக
இருந்தாலும் கூட செயல் எப்படி இருக்கிறது என்று பார்க்க
வேண்டும். முல்லைக்கு தேர் ஈந்தான் பாரி என்று சொல்வது
அவருடைய நோக்கம். ஒரு முல்லை கொடி வாடி
யிருக்கிறது; கொடி வாடக்கூடாது என்பதற்காக தன்னு
டைய தேரைக் கொடுத்தானாம் பாரி என்று சொல்வார்கள்.
அவனுடைய நோக்கம் நல்ல நோக்கம் தான். ஆனால் செயல்
அவ்வளவு விவேகமானதல்ல என்பதை யாரும் மறுக்கமாட்டார்
கள். அந்த கொடி வாடாமல் இருப்பதற்கு ஒரு கம்பை நட்டிருந்
தாலும் போதும். அதற்காக தன்னுடைய தேரையே அங்கு
நிறுத்தியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்காகத் தான்
கொடை மடம் என்று சொல்வார்கள். கொடையிலே விவேக
மில்லாத கொடை என்று இதை சொல்வார்கள். இந்த சத்துண
வுத் திட்டம் மக்களுக்கும், குழந்தைகளுக்கும் நல்ல திட்டமாக
இருந்தாலும், அதை அமல் செய்வதிலே இன்னும் விவேகமாக
இருக்கவேண்டும். அதற்காக பணம் ஏற்பாடு செய்வதிலே அரசு
கவனமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்பதற்காக 15
கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த திட்டத்தின்
உருவக்கை கூட சொல்லவில்லை. எப்படிப்பட்டவர்களுக்கு,

என்று சொல்லி, இந்தக் காலத்திற்கு ஒவ்வாதது என்று நீக்கி
விட்ட நிலையிலே, இப்பொழுது மாநிலம் முழுவதற்கும் அதைக்
கொண்டு வருவது என்பது அவ்வளவு விவேகம் ஆகாது. இந்த
வரி வருமானால், அரசாங்கத்திற்கு அதிக வருமானம் கிடைக்
காது, அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்து, அவர்கள் இலாபம்
அடையத்தான் அது உதவிகரமாக இருக்கும்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த நவம்பர்
மாதத்திலிருந்து அரசுக்குச் சொந்தமான ரப்பர் தோட்டங்களில்
வேலை நிறுத்தம் நடந்துவருகிறது. சுமார் 2,500 தொழி
லாளர் குடும்பங்கள் அங்கு பாதிக்கப்பட்டிருக்கின்றன. தொழி
லாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டதோடு மட்டுமல்ல, அரசாங்
கத்திற்குத் தினசரி ஏறக்குறைய ரூ. 5 இலட்சம் வருமானம்
தரக்கூடிய ரப்பர் தோட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதன்
மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே,
அவைகளையெல்லாம் உடனடியாக விசாரித்து, என்ன காரணம்
என்பதை விளக்கிட வேண்டுமென்பதற்காக, இங்கே கூட எல்லா
கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம்
கொண்டு வந்தார்கள். அவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு
பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன,
என்பதையும் அடுத்து அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய வரு
மானம் பாதிக்கப்படுகிறது என்பதையும் கருத்திலேகொண்டு
விரைவிலே அதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று நான்
பரிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் கலை, பண்பாடுகள், சுற்றுலா பற்றியெல்லாம் விரி
வாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வருஷம் சுற்றுலா பொருட்
காட்சியிலே இந்து சமய துறையினர் ரொம்ப அழகாக, அருமை
யாக, அற்புதமாகச் செய்து வைத்தார்கள். கோயில்களில்
நடைபெறும் பலவற்றிற்கு விஞ்ஞான ரீதியாக அங்கு விளக்கங்கள்
கொடுக்கப்பட்டு, அழகாக வைக்கப்பட்டிருந்தது. அதை வரவேற்
கிறேன். ஆகவே, பாராட்டுகின்ற நேரத்தில், நாங்கள் தயங்கா
மல் பாராட்டுகின்றோம்.

இன்னொன்று, இப்பொழுது நம்முடைய தேசத்திலே, கலை
மூலம் சுற்றுலா பயணிகளையெல்லாம் கவர வேண்டுமென்று
சொல்கின்ற நேரத்திலே, அதற்கு யாருமே ஆட்சேபணை தெரி
விக்கமுடியாது. ஆனால், தெருவிலே, சுவர்களிலே பார்க்கின்ற
பொழுது, உலகத்திலே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு, 'வன்ட
லிசம்,' என்று சொல்வார்கள், அதைப் போல், சுவர்கள் சிதைக்
கப்பட்டு, அலங்கோலப்படுத்தப்பட்டு, தேவையா, தேவையில்
லையா என்று சந்தேகிக்கக்கூடிய அளவுக்குக்கூட பெரிய, பெரிய
போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன. எது, எதற்கோ, உச்ச வரம்பு
வருகிறது. இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர் விடுதி எதிரிலே
இருக்கிற பல போஸ்டர்களைப் பார்த்தோமானால், உண்மை



யிலே இதற்குக் கூட உச்ச வரம்பு கொண்டு வந்தால் நல்லது
என்றுதான் தோன்றுகிறது. சர்க்கார் பணம், பொது மக்கள்
பணம் எவ்வளவு விரயம் ஆகிறது?

(பிற்பகல் 12-20)

அதுவுமல்லாது, பொது மக்கள், குறிப்பாக வெளிநாட்டு
மக்கள் பார்த்தால் இந்த நாட்டில் போஸ்டரைத் தவிர வேறொன்
றுமே செய்ய மாட்டார்களா என்று நினைக்கின்ற அளவிற்கு
அசிங்கப்படுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள கும்மிடிப்
பூண்டியைத் தாண்டிவிட்டால், போஸ்டர்கள் ஓரளவுக்கு இருக்க
லாமே தவிர இந்த அளவிற்கு இருக்காது. எனவே, இந்த அள
விற்கு அலங்கோலப்படுத்துகின்ற, அசிங்கப்படுத்துகின்ற நிலைமை
மாற வேண்டும். அதற்கு ஏதாவது தடுப்புச் சட்டம் கொண்டு
வந்தாலும்கூட நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டப் பிரிவினையைப் பற்றிச் சொல்லும்பொழுது
சென்ற கூட்டத் தொடரிலே, புதிதாகத் தொழில் துவங்குவதற்கு
மத்திய அரசினால் சில இடையூறுகள் இருக்கின்றன என்று
சொல்லி மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் சில விளக்கங்
களைச் சொன்னார்கள். அங்கே சிறு சிறு மாவட்டங்களாகப்
பிரிக்கப்பட்டிருப்பதால் அந்த வசதி கிடைக்கிறது. இங்கே
அப்படி இல்லை என்று சொன்னார்கள். எனவே, அதற்காக வேண்
டியாவது நீண்ட நாள் பிரச்சினையாக இருக்கின்ற எங்கள் மாவட்
டமான இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க
வேண்டும் அல்லது வேறு வகையில் மூன்றாகப் பிரித்தால் கூட
எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. எனவே, அதை உடனடியாகப்
பிரிக்க வேண்டும். கொள்கையளவில் அதை இரண்டாகப் பிரிக்க
வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டு பல ஆண்டுகளாகியும் இன்று
வரையில் அது அமலுக்கு வராததால் எங்கள் மாவட்டம் மிகவும்
பின் தங்கிய நிலையில் இருக்கிறது. ஒரு பகுதியாகிய இராஜ
பாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் போன்றவைகள் பல
வகைகளிலேயும் முன்னேறியிருந்தாலும் கூட நாங்கள் அன்றும்
இன்றும் நீண்ட நாட்களாகப் பின்தங்கிய நிலையில்தான் இருக்கி
ன்றோம். அதைப் பிரித்தால் எங்களுக்கு ஏதாவது சலுகைகள்
அரசாங்கத்தின் மூலம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.
நிர்வாக வசதிக்காக ஏற்கனவே ஏற்றுக் கொண்ட கொள்கையை
அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இராம
நாதபுரம் மாவட்டத்தைப் பிரிப்பதற்கு உடனடியாக ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டிலே நம்முடைய தமிழ்நாட்டிற்கு இன்னும்
பல காரியங்களை எப்படியெப்படிச் செய்யலாம் என்று திட்ட
வட்டமாகச் சொல்லியிருப்பார்களேயானால் நாங்கள் முழு மன
தோடு வரவேற்றிருக்க முடியும், சிலசில திட்டங்களைப்பற்றி விரி
வாகவும், விளக்கமாகவும், சொல்லாத காரணத்தினால் எங்க

ளால் புரிந்து கொள்ள முடியவில்லை. வருகின்ற ஆண்டுகளிலேயிருந்தாவது திட்டவட்டமான விளக்கத்துடன் இருக்கும் என்ற நம்பிக்கையோடு அமர்கிறேன், வணக்கம்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1983-84-ஆம் ஆண்டுக்காக மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக மாற்றுத்தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிக் கடந்த மூன்று நாட்களாகப் பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கோணங்களிலேயிருந்து அலசி ஆராய்ந்து பேசினார்கள். இன்றையதினம் இந்த நிதிநிலை அறிக்கையானது, தமிழ்நாட்டிலே பருவமழைபொய்த்து விட்டதால் ஏற்பட்டிருக்கின்ற குடிதண்ணீர்த் தட்டுப்பாடு, மின்சார வெட்டு அதற்கும் மேலாகக் காவேரியிலே கர்நாடக அரசு தொடர்ந்து தண்ணீர் விட மறுத்துவிட்ட காரணத்தால் தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற விளைச்சல், பாதிப்பு ஆகிய இப்படிப்பட்ட ஒரு சோதனையான கட்டத்திலே ஏழை மக்களைப் பாதிக்காத அளவிலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுடைய வாழ்விலேயும், மேம்பாட்டிலேயும் அக்கறை கொண்டு இந்த நிதிநிலை அறிக்கைய்யை மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

பருவமழை இல்லாததால் நிலத்தடி நீர் வற்றிப்போய் இன்றைக்குத் தமிழகமெங்கும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதையெல்லாம் போக்குகின்ற வகையிலே போர்க்கால அடிப்படையிலே அரசு இயந்திரங்களை முடுக்கிவிட்டு, குடிதண்ணீர் கொடுப்பதற்கான பல்வேறு திட்டங்களையும் போட்டு, குழாய்க் கிணறுகளைப் போட்டு அந்த வேலைகளை இன்றைக்குப் போர்க்கால அடிப்படையிலே நிறைவேற்றி வருகிறது.

அடுத்து, இன்றைய தினம், தமிழகத்தில் அரிசி பற்றாக்குறை இருக்கிற காரணத்தாலே, இங்கே முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் பல்வேறு கட்டங்களில் அரசை வற்புறுத்தியும் கூட-ஒரு மாதத்திற்கு 80 ஆயிரம் டன் அரிசியையும், 40 ஆயிரம் டன் கோதுமையையும் கொடுத்தால் தான், தமிழகத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்று சொல்லியும்கூட-இன்றைய தினம் மத்திய அரசு 10 ஆயிரம் டன் அரிசியை அனுப்பி இருக்கிறார்கள். அது ஒரு மாதத்திற்கா அல்லது ஒரு வாரத்திற்கா என்று குறிப்பிடாமல்—அதனை இங்கே எல்லா உறுப்பினர்களும் பேசியது போல் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நோக்குகிறது என்று சொன்னால்—அதிலே இங்கே இருக்கிற காங்கிரஸ் மெம்பர் வற்புறுத்தவில்லை. காரணம் நம் எல்லோருக்கும் சேர்த்துத்தான் கேட்கிறோம்.



ஏதோ அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுக்கு மட்டும் அரிசி வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சரவர்கள் கேட்கவில்லை. ஒட்டுமொத்தமாக தமிழக மக்களுக்கு இவ்வளவு அரிசி இருந்தால் தான், அவர்களுடைய தேவையைப் போக்க முடியும் என்று அவர்களைக் கேட்கிறோம். மத்தியில் இருக்கிற அமைச்சர்கள் மத்தியத் தொகுப்புக்கு அரிசி கிடைக்கவில்லை—அதனாலேதான் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்குத்தான் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் பேசினார்கள்—கேரளா கூட மத்திய அரசுக்கு அரிசி கொடுக்கும் என்று அங்கே சொன்னார்கள். ஆகவே இந்த நிலைமையை பார்க்கும்பொழுது மத்திய அரசு கொடுக்க வேண்டிய நிலைமைக்கு அரிசி இருப்பதை, சற்று அளவைக் குறைத்துப் போடுகின்றபோது, ஏதோ தமிழக மக்களை, இலங்கை அகதிகளாகவும், பாகிஸ்தான் அகதிகளாகவும், மத்திய அரசு நினைப்பதாகத் தான் இங்கே நினைக்கவேண்டியிருக்கிறது. காரணம்—மத்திய அரசு என்றால் நடுநிலையோடு இருக்க வேண்டும். இதைப் பார்க்கும்பொழுது மத்திய அரசு மைய அரசாக இல்லாமல் ஒரு ஓரவஞ்சனை கொண்ட அரசாக இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இங்கே இருக்கிற மத்தியிலே ஆளுங்கட்சியைச் சேர்ந்த மெம்பர்கள் அங்கே நமக்கு அரிசி கொடுக்கவேண்டுமென்று போராடுகிற முதலமைச்சரவர்களின் குரலோடு எங்களுடைய குரலையும் சேர்த்து, தமிழக மக்களுக்கு, நீங்கள் நன்றிக் கடன்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம்—இந்த நிலைமை நீடிக்குமானால், இங்கே இருக்கிற காங்கிரஸ் மெம்பர்களை தமிழக மக்கள் விரட்ட வேண்டிய கட்டத்திற்குக் கூட வந்துவிடும். அதைத்தான் திருச்செந்தூர் தேர்தலிலும், கடந்த பெரியகுளம் பாராளுமன்றத் தேர்தலிலும் உங்களுக்கு நினைவுறுத்துகிறது. உங்களுக்கு ஏற்பட்ட தோல்வி பெருமைக்குரிய தோல்வி கூட அல்ல பயங்கரமாக தோற்றிருக்கிறீர்கள். காரணம்—நீங்கள் இனிமேலாவது டில்லியிலே இருக்கிற மத்திய அமைச்சர்களிடம் தமிழகத்திற்கு வேண்டிய உரிமைகளை பெறுவதற்காக நீங்கள் பாடு படவேண்டுமே தவிர, இங்கே இருக்கிற முதலமைச்சர் அவர்களையும் இங்கே இருக்கிற அரசையும் நீங்கள் குறை சொல்லி பேசக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தொழிற்துறையை பொறுத்தவரை, இங்கே தமிழகம், அண்ணா தி.மு.க. ஆட்சியில் பின்னுக்குத் தள்ளப்பட்டது என்று மத்திய அமைச்சர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் தொழிற்துறையிலே பின்தங்கிய மாவட்டங்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது 82 மாவட்டங்களை இந்தியாவிலே தேந்தெடுத்திருக்கிறார்கள். அதிலே ஒரு மாவட்டம் கூட தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆகவே இனிமேல் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பின்தங்கிய மாவட்டம் என்று சொல்லாமல், பின்தங்கிய தாலுகா என்கிற முறையில் அணுகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே தொழிற் துறையிலே மத்திய அரசு தமிழக அரசை பின்

தங்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள் ஆனால் தமிழகத்திலே ஏன் ஒரு மாவட்டம் கூட பினதங்கிய மாவட்டமாக அறிவிக்கப் படவில்லை என்று சொன்னால், ஏதோ எல்லா மாவட்டத்திலும் ஒரு தொழில் இருக்கிறது என்று முன்னுக்குப் பின்முரணாக, மத் தியிலே இருக்கிறவர்கள் பேசுகிறார்கள். இது எப்படி இருக்கிறது? தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளி விடுகின்ற விளையாட்டாக இருக்கிறது.

நம்முடைய சத்துணவுத் திட்டத்திற்கு மாதந்தோறும் 17 ஆயிரம் டன் அரிசி தேவைப்படுகிறது. இந்தச் சத்துணவுத் திட் டத்தைப்பற்றி, இங்கே இருக்கிறவர்கள், கட்சியில் எப்படி விமர் சனம் செய்தாலும்—மத்தியிலே இந்திரா காங்கிரஸ் கட்சியில்— முதலமைச்சராக இருக்கிற—குஜராத் மாநிலத்திற்கு முதலமைச் சரவர்கள் இங்கே வந்து பார்த்து விட்டு இது ஒரு அருமையான திட்டம். இது ஏழைகளை வாழ வைக்கும் திட்டம். இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. நீங் கள் நிறைவேற்றுங்கள் என்று முதலமைச்சரவர்களைப் பாராட்டி விட்டு, அங்கேயும் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்று வதாக சொல்லிவிட்டுப் போனார்கள். அப்படிப் பாராட்டப் படுகின்ற திட்டம் இந்தச் சத்துணவுத் திட்டம். இதில் ஏதோ தமிழக அரசுக்கு மட்டும் பங்கில்லை. மத்திய அரசிற்கும் இதிலே பங்கு இருக்கிறது. காரணம்—நாம் எல்லோரும் ஒருமைப்பாட் டைப் பற்றி பேசுகிறோம். இந்த நாடு ஒன்றாக இருக்கவேண்டு மென்று எல்லோரும் விரும்புகிறோம். அப்படி இருக்கவேண்டு மென்று சொன்னால் சத்துணவுத் திட்டத்திற்கு மத்திய அரசு நிச்சயமாக பாதி நிதியைக் கொடுத்து உதவவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.30]

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை நொய் யல் ஆற்றுத் திட்டம் கால் நூற்றாண்டாக பேசப்பட்டு வந்தது, இன்றைக்கு அது உருப்பெரும் நிலையில் உள்ளது, அதை விரைவாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து என்னுடைய கரூர் தொகுதியில் மண்மங்களம், பஞ்ச மாதேவி, ஆத்தூர் என்ற 3 ஊராட்சிகள் கடுமையான குடி நீர்த் தட்டுப்பாட்டாலே பாதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த மண்மங்களம், பஞ்சமாதேவி ஊராட்சிகளுக்குப் பக்கத்திலே காவிரி ஆறு ஓடுகிறது. அந்தக் காவிரி நதியிலேயிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் போட்டு தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க திட்டம் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, திருச்சி—கரூர், நாகப்பட்டினம்—கடலூர் பாதை கள் மிகவும் குறுகலாக இருக்கிறது. அதை தேசிய நெடுஞ் சாலையாக மாற்றி அதனை அகலப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, இங்கே பக்கத்திலே இருக்கின்ற புதுவை மாநிலத் திலே மோட்டார் வாகனங்கள் விற்பதற்கும், நம்முடைய மாநிலத் திலே விற்பதற்கும் ஏறத்தாழ—ஒரு பேருந்தையோ அல்லது லாரியையோ வாங்க வேண்டும் என்று சொன்னால்—16 ஆயிரம் ரூபாய் நமக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே இங்கே இருப்பவர்கள், மோட்டார், லாரிகள், பஸ்கள் வாங்க வேண்டுமென்று சொன்னால் எல்லோரும் அங்கே போய் வாங்கு கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் அந்த விற்பனை மூலமாக பாண்டிச்சேரி அரசு 20 கோடி ரூபாய் எதிர்பார்க்கிறது. ஆகவே இதனை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி நேற்றைய தினம் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப் பினர் பழனியப்பன் அவர்கள் இது இராமாயணத்திலே வருகிற சுந்தர காண்டமாக இல்லாமல், அரிச்சந்திர புராணத்திலே வருகிற மயானக்காண்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் இருக்கும் இடத்தைத்தான் அவர்கள் சொல்லி இருப் பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

கடைசியாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நம்மு டைய புரட்சித் தலைவர் அவர்கள் நாடோடி மன்னன் என்ற படத்திலே ஒன்றைச் சொன்னார்கள். '' நீங்கள் மாளிகையிலே யிருந்து மக்களைப் பார்க்கிறீர்கள், நான் மக்களோடு ஒன்றாக இருந்து மாளிகையைப் பார்க்கிறேன் '' என்று அந்த வசனம் வருகிறது. அந்தத் திட்டங்கள்தான் இன்றைக்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, கடந்த 1979 ஆம் ஆண்டு என். ஜி. ஓக்கள் போராட்டம் நடத்திய நேரத்திலே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த நாட்டிலே ஏராளமான தாய்மார்கள், இலட்சோபஇலட்சம் தாய்மார்கள் ஒரு பக்கச் சேலைத் தலைப்பை நனைத்துவிட்டு, மறு தலைப்பைக் கட்டிக்கொண்டு, மாற்றுச் சேலைக் கூட இல்லாமல் இருக்கிறார் கள். அவர்களுக்கு முதலில் நான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று அன்றைக்குச் சொன்னார்கள். இந்தக் கருத்தை மைய மாக வைத்துத்தான் இந்த நிதி நிலை அறிக்கை பின்னப்பட் டிருக்கிறது என்பதைக் கூறி இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன்.

*திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1983—84 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை யினை வரவேற்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழை கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையானது ஏழை, எளிய மக்க

அதற்காக ஏறத்தாழ 45 கோடி ரூபாய் முன்பணம் ஒதுக்கி கிராமங்கள் தோறும் துணை கிணறுகளைப் போட்டு, அங்கேயுள்ள வறட்சியால் வாடும் மக்களுக்கு இந்த அரசு தண்ணீர் வசதி செய்து கொடுத்து இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவே, இந்த வறட்சி நிலையைப் போக்க அரசாங்கம் நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு வருகின்ற இந்த நேரத்தில் நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். சங்கரன்கோவில் நகரத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பஞ்சத்தை நிரந்தரமாகத் தீர்க்கும் வகையில், தாம்பரபரணியில் இருந்து நேரடியாகச் சங்கரன்கோவிலுக்கு குடிநீர் வசதி செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சங்கரன்கோவில் வளர்ந்துவரும் நகரமாக இருப்பதால், கடந்த பத்து ஆண்டுக்காலமாகக் கேட்கிறோம். அங்கே ஒரு தொழிற்பேட்டை நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிற்பேட்டையை சங்கரன்கோவில் நகரத்திற்குள்ளேயே நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–40)

அடுத்து, சங்கரன்கோவில் நகரில் அறநிலயத்துறையைச் சேர்ந்த கோவிலுக்கு அதிகமான பணம் இருக்கிறது. அந்தப் பணத்திலிருந்து ஒரு தொழில் பயிற்சி நிலையம், அதாவது பாலிடெக்னிக் ஏற்படுத்த அனுமதி அளிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு அறநிலையத்துறையின் மூலம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சங்கரன்கோவில் பகுதியில் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு கூட்டுறவு முறையிலே ஏற்படுத்தக்கூடிய ஒரு கூட்டுறவு நூற்பாலையை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சங்கரன்கோவில் நகரிலே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் (கே. டி. சி.) மூலம் ஒரு பணிமனையை ஏற்படுத்தி, அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் குருவிகுளம் ஒன்றியத்தில் 8 பாலங்களை ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்டவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அந்த 8 பாலங்களும் மிக முக்கியமானவை; மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுபவை. அந்தப் பாலங்களைக் கட்டுவதற்கு அனுமதி கொடுத்து, விரைவிலே கட்டி முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதோடு, அங்கே பல கிராமங்களில் மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டிருந்தாலும் கூட அங்கே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படவில்லை. அந்த நிலைமை சீர் செய்து, எங்கெல்லாம் மேல்நிலை தண்ணீர் தொட்டி இருக்கிறதோ அங்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட நல்ல குடிதண்ணீர் வழங்கப்படுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிக்கப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல கிராமங்களில் குறிப்பாக சங்கரன்கோவில் ஒன்றியத்தில் வீரசிகாமணி, கரிவலம்வந்தநல்லூர், சுப்பலாபுரம், பெரும்பத்தூர் போன்ற கிராமங்களில் குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. உடனடியாக அந்தக் கிராமங்களுக்கு நல்ல குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குருவிகுளம் ஒன்றியத்தைச் சேர்ந்த, அரிசன மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய சக்கரப்பட்டி, அழகாபுரி, மலையடிப்பட்டி, குலசேகரம்கோட்டை, பெருங்கோட்டூர் முதலிய கிராமங்களில் மேல்நிலை தண்ணீர் தொட்டி இருந்தும்கூட அங்கே தண்ணீர் வழங்கப்படவில்லை. ஆழ்குழாய் கிணறுகள் போட்டாவது, அந்த கிராமங்களுக்கு விரைவிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சங்கரன்கோவில் வட்டத்தில், மேலநீலிதநல்லூர் ஒன்றியத்தில் உள்ள வன்னிக்கோனேந்தல் என்ற கிராமத்தில் பல ஆண்டுகளாக கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் விரைவிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நெல்லை மாவட்டத்தில் சிவகிரி வட்டத்தில் ஒரு நீர்ப்பாசனத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதாவது உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம் என்ற அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் சிவகிரி, சங்கரன்கோவில், கோவில்பட்டி ஆகிய மூன்று வட்டாரங்களும் பாசன வசதி பெறும். பாசன வசதி கிடைப்பது மட்டுமல்லாமல் குடிநீர் வசதியும் கிடைக்கும். ஆகவே, இந்த உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டத்தை வெகுவிரைவில் இந்த அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. டி. மணி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1983–84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. பி. துரைராஜ்] [1983 மார்ச் 11

ளுடைய வாழ்க்கையிலே இன்பத்தை விளைவிக்கக்கூடிய ஒன்றாக
இருக்கிறது என்பதை நான் முதலிலே சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்தில் கடந்த 2 ஆண்டுக
ளாக பருவ மழை பொய்த்ததன் காரணமாக இன்றைக்கு கடுமை
யான வறட்சியால் பாதிக்கப்பட்ட நேரத்திலும்கூட ஏழை எளிய
வர்களுக்காக நல்ல பல திட்டங்களை இயற்றி இந்த நிதி நிலை
அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைக் கண்டு நான் உள்ளபடியே
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த நிதி நிலை அறிக்கையின்போதுகூட இங்கே சத்துண
வுத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி அறிமுகப்
படுத்தியபோது, கேலியும், கிண்டலும் பேசிய மாற்றுக் கட்சித்
தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு இந்தத் திட்டம் எவ்வளவு
சீரோடும், சிறப்போடும் தமிழகத்திலே நடக்கிறது என்பதை
எண்ணிப்பார்த்து வியப்பதைக் கண்டு நாம் எல்லாம் மிக்க
மகிழ்ச்சி அடைகிறோம். இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூல
மாக ஏறத்தாழ 1½ இலட்சம் பெண்களுக்கு தமிழகத்திலே வேலை
வாய்ப்பு கொடுக்கப்பட்டு இருப்பதை நாம் எண்ணிப்பார்க்க
வேண்டும். மேலும், இந்தச் சத்துணவுத் திட்டத்தை நிர்வகிப்
பதற்கு குறைந்தது 34 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு
கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே உள்ள ஏழை எளிய
வர்கள் எல்லாம் இன்றைக்கு தங்களுடைய குழந்தைகள் எவ்வளவு
சந்தோஷமாக ஒருவேளை சாப்பாட்டை உண்டுவிட்டு அங்கே
மகிழ்ச்சியாக படிக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, மிக்க
மகிழ்ச்சி அடைகிறோம். நடந்து முடிந்த திருச்செந்தூர் தேர்
தலிலே கூட அங்கே தேர்தல் பிரச்சாரத்திலே ஈடுபட்ட பலக்
கட்சித் தலைவர்கள் தொண்டர்கள் எல்லாம்—அங்கே பேசிய
வைகளை நான் கேட்டவன் என்ற முறையிலே—இந்தச் சத்
துணவுத் திட்டத்தை எவ்வளவு கேவலமாகப் பேச வேண்டுமோ
அந்த அளவிற்கு பெரிய கட்சித் தலைவர்கள் கூட அங்கே பேசி
யதை நான் நேரிலேயே கண்டேன். அதனுடைய முடிவுதான்
திருச்செந்தூர் வாக்காளர்கள் இன்றைக்குப் புரட்சித் தலைவரின்
நல்ல திட்டத்தை நிறைவேற்ற வாக்களித்து வெற்றியைத் தேடித்
தந்திருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வறட்சி நிலை காரணமாக இன்றைக்கு நாம் மத்திய அரசிட
மிருந்து மாதம் ஒன்றுக்கு 80,000 டன் அரிசியும், 40,000 டன்
கோதுமையும் தமிழகத்திற்குக் கேட்டோம். நாம் இந்திய ஒரு
மைப்பாடு பேசுகிறோம். மைய அரசானது தமிழகத்தின் தேவை
யைப் புறக்கணித்துவிட்டது. இன்றைக்கு ஏதோ 5,000 டன்
அரிசியும், 5,000 டன் கோதுமையும் கொடுத்து இருக்கிறார்கள்.
அதை நாம் வேதனையோடு ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.
மத்திய அரசாங்கம் பிற மாநிலங்களில் பற்றாக்குறை
கிறபோது, அந்தப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு உதவி செய்
வதற்காகத்தான் மத்திய கிடங்கில் சேர்த்து வைக்கிறார்கள்.
ஆகவே, கடந்த காலத்தில் நம்முடைய தமிழக அரசில் இருந்த



1983 மார்ச் 11] [திரு. பி. துரைராஜ்]

உபரியாக இருந்த நேரத்தில் மத்திய அரசுக்கு கொடுத்து இருக்
கிறோம். அப்படிப்பட்ட நிலையில் கூட தமிழகத்திற்கு அவர்
கள் உணவு கொடுக்கப் புறக்கணிப்பது உள்ளபடியே வேதனை
தரத்தக்கதாகும்.

இந்த அரசின் சாதனைகளைப் பாராட்டி எவ்வளவு நேரம்
பேசினாலும் தகும் என்று கூறிக்கொள்கிறேன். அடுத்தபடியாக
இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ஒரு திட்டத்தை இந்த
அரசு அறிவித்து இருக்கிறது. ஏழை, எளிய மக்களின் வாழ்வில்
மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்ற முறையில் வீட்டுக்கு
ஒருவருக்கு வேலை கொடுக்க ஒரு திட்டத்தை அறிவித்து, அதற்
காக 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்
திலும் ஒருவருக்கு வேலை கொடுத்தால், நிச்சயமாக அது ஏழை
கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும். அவர்கள் வாழ்வில்
ஒளியேற்படும் என்று கூறிக்கொண்டு, இந்தத் திட்டத்தை வர
வேற்கிறேன்.

நில நீர் பிரச்சினையைப் பொறுத்த வரையில், காவிரி நீர்
பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு காலம் கடத்தி வருகிறது.
இது நியாயந்தானா என்று கேட்க ஆசைப்படுகிறேன். நதிகளை
தேசிய மயமாக்க வேண்டும் என்று பல காலமாகக் கேட்டு வரு
கிறோம். அந்தத் திட்டத்தை மைய அரசு காலதாமதப்படுத்திக்
கொண்டு வருகிறது. அதை உடனடியாக செய்துதர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய ஜனதா கட்சித் தலைவர் அவர்கள்
ஆந்திர மாநிலத்திற்கு சத்துணவுத் திட்டத்திற்காக மத்திய அரசு
100 கோடி ரூபாய் கொடுக்கின்றபோது, தமிழக அரசுக்கு மட்டும்
கொடுக்காமல், இப்படி மாற்றாந்தாய் மனப்பான்மையோடு இருப்
பதற்கான காரணம் என்ன? உலக வங்கியிடமிருந்து வட்டி
யில்லாமல் கடன் பெற்று மாநிலங்களுக்குக் கொடுக்கின்ற நிதி
யிலும் மத்திய அரசாங்கம் 30 சதவீத அளவிற்கு வட்டியிலாக்
கடனும், 70 சதவீதத்திற்கு 6½ சதவீதம் வட்டி விகிதத்திலும்
கொடுக்கிறார்கள். இது எந்த அளவிற்கு நியாயம்? உலக
வங்கியிடமிருந்து மாநிலங்களுக்கு என்று வாங்கும் கடனை
மொத்தமாக வட்டியில்லாமல் கொடுக்க மைய அரசு முன்வர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல
விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில்
மிகவும் பிற்படுத்தப்பட்ட வட்டாரம். அங்கே எந்தவிதமான
நீர்ப்பாசன வசதியும் கிடையாது. இப்போது வறட்சி நிலை
இருப்பதால் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் மக்கள் பாதிக்
கப்படுகிறார்கள். தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்
கின்ற இந்த நேரத்திலும், வறட்சிப் பகுதி எது என்று தெரியாத
அளவிற்கு தமிழகம் முழுவதும் வறட்சி நிலை இருந்தபோதிலும்,

கடுமையான வறட்சி நிலவுகிற இந்த நேரத்தில் மக்களுக்கு பயன்படும் பல காரியங்களைச் செய்வதில் கூட, நம்முடைய நிதிநிலை அறிக்கையில் அவைகளைச் சேர்க்க முடியாத அளவுக்கு இந்த அறிக்கையிலும் வறட்சி ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

குறிப்பாக உணவுப்பொருள் பற்றாக்குறை கிராமப்புறங்களிலும் நகரப்புறங்களிலும் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நாம் தினந்தோறும் கண்கூடாக கண்டுகொண்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய அரசுத் தோட்டத்தில் அமைந்திருக்கிற ஒரு நியாய விலைக் கடையில் காலை 7-00 மணி முதல் மாலை 7-00 மணி வரையில் பெண்கள் மணிக்கணக்காக காத்துக் கிடக்கின்ற அவல நிலையை அன்றாடம் பார்க்கிறோம். இதைப்போன்ற நிலைமைதான் இன்றைக்கு தமிழ்நாடு பூராவும் இருக்கிறது என்பதைக் காண்கிறோம்.

உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தில் மத்திய சர்க்கார் வகுத்துக் கொடுத்த கொள்முதல் கொள்கை அடிப்படையில்தான் மாநில அரசு சொல்கிறது. நம்முடைய விவசாயிகள் கையிலே உணவுதானியங்கள் இருக்கும்போது விவசாயிகளின் தேவை போக மீதியை கொள்முதல் செய்கிற நிலைமை இல்லாத காரணத்தால் எங்கள் பகுதியாகிய கன்னியாகுமரி மாவட்டத்தின் கடைசியில் கேரளா எல்லையோரமாக இருக்கிற படந்தாள்மூடு, கோளிவளை வழியாக கேரளாவுக்கு நூற்றுக்கணக்கான லாரிகளில் அரிசியை கடத்திச் செல்கின்ற காரணத்தால் அந்தப்பகுதி மக்கள் மிகவும் கவலைப்படுகிறார்கள்.

கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில், மழை இல்லை என்று அறிந்த வர்த்தக சூதாடிகள் நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்தும் அரிசி, நெல்லை கொள்முதல் செய்து வைத்து, இப்போது தினந்தோறும் சுமார் 5 முதல் 30 வரை லாரிகளில் அந்த எல்லையோர கிராமங்கள் வழியாக கள்ளத்தனமாக கடத்திச் செல்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். என்னைப் போன்றவர்கள் அதை தினமும் பார்க்கக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. அந்த கிராம மக்களுக்கு மாதம் 20 கிலோ அரிசி என்று சொல்லி, 10 கிலோ கொடுத்து வந்து, இப்போது அதை 4 கிலோவாக குறைத்திருக்கிற நேரத்தில் அந்த வழியாக இப்படி கடத்தல் நடக்கிறது. அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் எங்களைக் கேட்கிறார்கள். வறட்சி, பற்றாக்குறை என்று சொல்கிறீர்களே, எங்களுக்கு அரிசி கிடைக்கவில்லை; ஆனால் நூற்றுக்கணகான லாரிகளில் இப்படி எங்கள் கண் முன்னாலேயே கடத்திச் செல்கிறார்களே என்று சொல்லி வருத்தப்படுகிறார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலைஅங்கே இருக்கிறது. அந்த





மக்களோடு நாங்களும், கவலைப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்த உணவு வினியோக முறையிலே தற்போது 3 விதமான நிலைகள் இருக்கின்றன. முதலாவதாக இரட்டை விலை—இரண்டுவிதமான விலை நிர்ணயிக்கிற நிலைமை—அனேகமாக எல்லா அத்தியாவசிய உணவுப் பண்டங்களுக்கும் இருக்கிறது. அரிசியிலே இரட்டை விலை நிர்ணயம், அதேபோல மண்ணெண்ணெய் வினியோகத்திலே இரட்டைவிலை, சர்க்கரை வினியோகத்திலே இரட்டைவிலை என்று அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்திலும் இரட்டைவிலை இருக்கின்றது. உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன்.

சமீபத்திலே அரசு ஆணை ஒன்று வெளியிடப்பட்டது. அந்த ஆணையிலே மாத வருமானம் ஆயிரத்துக்கு மேலே உள்ள குடும்பத்திற்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை அரிசி, மண்ணெண்ணெய், மற்றும் சர்க்கரை வினியோகிப்பது இல்லை—அவர்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் அவை வழங்கப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் 5 ஏக்கரிலிருந்து 10 ஏக்கர் வரை விவசாயம் செய்யும் விவசாயிகளை எடுத்துக்கொண்டால், அவர்களுடைய மாத வருமானம் ஆயிரம் ரூபாய் என்று இருக்கும். அவர்களுக்குக் கூட உணவுப் பொருள்கள்—அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதில்லை என்று சொன்னால், அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அது எப்படி நியாயமாகவும் இருக்க முடியும் என்பதை அரசு எண்ணிப் பார்க்கவேண்டும்.

இப்போது இன்னொன்றைக்கூடச் சொல்லுகிறார்கள். மாத வருமானம் 500 ரூபாய் வரும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் கூட கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிருப்பதாகச் சொல்கிறார்கள். நாளைய தினம் அவர்களுக்கும் கூட அரிசியும், மண்ணெண்ணெயும், சமையல் எண்ணெயும் வழங்கப்படுவது நிறுத்தப்படுமோ என்று என்னைப் போன்றவர்களுக்கு ஐயப்பாடு ஏற்படும் நிலையிருக்கிறது. ஆகவே, அந்த ஆணையினை இந்த அரசாங்கம் திரும்பப் பெற்றுக் கொண்டு, மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் வருமானம் என்ற அந்த வரம்பை எடுத்துவிட்டு, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் தேவையான அனைத்து அத்தியாவசியப் பொருள்களும், நியாயவிலைக் கடைகள் மூலம் கிடைப்பதற்கான வாய்ப்பைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே, ஒரு குடும்பத்திற்கு ஒரு நபருக்கு வேலை தருகிற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். 15 கோடி ரூபாயை அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலே நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்

லாம்— வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பைக் கொடுங்கள்
ஆட்சேபணையில்லை, வரவேற்கிறோம். ஆனால் இருக்கிற
தொழில்களை பாதுகாக்க இந்த அரசு என்ன நிலையை கை
யாண்டு வந்திருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

குறிப்பாக லட்சக்கணக்கான கைத்தறி தொழிலாளர்கள்
இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று பார்த்தால்,
அவர்கள் நெய்யும் துணிகளுக்கு நியாயமான விலை கிடைக்கா
மல்—உற்பத்தியாகிற அந்த துணிகளுக்கு மார்க்கெட் இல்லாத
காரணத்தால், வாங்குவதற்கு போதுமான ஆட்கள் இல்லாத
காரணத்தால், அவைகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்ற நிலை
இருக்கிறது.

அதுமட்டும் அல்லாமல், தமிழகத்திலே உள்ள முந்திரி
தொழிற்சாலைகளை குறிப்பாக எடுத்துக் கொள்ளும்போது,
60 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் அந்த ஆலை
களில் வேலை செய்து வந்தார்கள். அந்த தொழில் தற்போது
நசுக்கப்பட்ட நிலையில், கடந்த 7 மாதங்களாக அந்த ஆலைகள்
எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டிலே
ஆயிரக்கணக்கான டன் முந்திரி உற்பத்தி செய்யப்பட்ட நேரத்
திலேயே, நம்முடைய தமிழக அரசின் வனத்துறையினர்,
கையிருப்பிலே இருந்த முந்திரியை அந்த ஆலைகளுக்கு நியாய
மான விலைக்கு விற்க வேண்டும் என்று நாங்கள் கேட்டிருந்
தோம், அதை ஏற்றுக் கொள்ளவில்லை' நூற்றுக்கணக்கான டன்
முந்திரி விற்கப்படாமல் இருந்தது. ஆனால் இன்று என்ன
நிலை ?

மத்திய அரசாங்கத்தின் தவறான இறக்குமதிக் கொள்கை
யின் காரணமாக, அந்த ஆலைகளை நடத்துகிற ஏகபோக
முதலாளிகளின் பக்கம் மத்திய அரசு நிற்பதன் காரணமாக,
நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகிற முந்திரி கூட, 4½
ரூபாய்க்குமேல் விற்பனைக்குபோக முடியாத சூழ்நிலையிருக்கிறது.
இதன் விளைவாக, தமிழகத்தின் மூலமாக மத்திய அரசுக்கு
கோடிக்கணக்கான ரூபாய் அன்னியச் செலாவணியாக ஈட்டித்
தருகிற அந்த தொழில் இன்று பூராவும் முடமாகியிருக்கிற
நிலையில் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து கயிறு தொழில், தஞ்சை மாவட்டத்திலிருந்து, குமரி
மாவட்ட கடைசி வரையில் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற
தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். அந்த
கயிறு தொழிலைப் பொறுத்தவரைக்கும் நம்முடைய மத்திய
அரசாங்கம் நடப்பு 5 ஆண்டு திட்டத்திலே அந்த தொழிலை மேம்
படுத்துவதற்காக, 3 மாநிலங்களுக்கு, தமிழகத்திற்கும், கர்நாட
கத்திற்கும், கேரளாவிற்குமான ஏறத்தாழ 25 கோடி ரூபாயை
ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த 25 கோடியிலே நாம் பெற்றுக்
கொண்டது ஏற்கெனவே ...வேறு காரணங்களினால்—





சர்க்கரை ஆலை சிமெண்ட் ஆலை போன்றவைகளுக்கு அனுமதி
தருவதிலே மத்திய சர்க்கார் மாற்றந்தாய் மனப்பான்மையைக்
கையாண்டு வருகிறது என்று இங்கேயே சொல்லி வருகிறோம்
அதே நேரத்தில் அரசு ஒதுக்கின அந்த 25 கோடி ரூபாயிலே
நடப்பு 5 ஆண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையில் நாம்
எவ்வளவு பெற்றிருக்கிறோம் என்று பார்த்தால் வெறும் 75
லட்சம் ரூபாய்தான்.

கயிறு தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய
சர்க்கார் அனுமதித்திருக்கிற தொகையே மிகவும் குறைவானது.
அதுவும் தேங்காய் நாரிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற இந்த
கயிறு தொழிற்சாலை மூலமாக அதுவும் நம்முடைய மாநிலத்தின்
மூலமாக மத்திய சர்க்காருக்கு பெரும் அளவில் அந்நியச் செலா
வணியை பெற்றுத் தருகிற அந்த ' தொழிலுக்காக ஒதுக்கிய
தொகையை முழுமையாக காலா காலத்தில் கேட்டு வாங்குவதில்
இந்த அரசு கவனக் குறைவாக இருந்திருக்கிறது. அதிக காலம்
கடத்தியிருக்கிறது. ஆகவே அதையும் அரசாங்கத்தின் கவனத்
திற்குக் கொண்டு வந்து, அதை உடனடியாக இந்த அரசு கேட்டு
வாங்க முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—50)

அடுத்தபடியாக ரப்பரைப்பற்றி சொல்ல விரும்புகிறேன்.
அதுபற்றி எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்
குறிப்பிட்டார்கள். கடந்த நவம்பர் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து
கிட்டத்தட்ட 130 நாட்கள் 2,500-க்கும் மேற்பட்ட தொழி
லாளர்கள் நியாயமான கோரிக்கைக்காகப் போராட்டம் நடத்தி
வருகிறார்கள் அந்தப்போராட்டத்தின் இடையில் பல்வேறு சமயங்
களில் பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் மூலமாக ஒரு ரப்ப
வாரியம் அமைக்கவேண்டும் என்ற நல்ல காரியத்தை இந்த அரசு
செய்ய முன்வந்திருக்கின்றது அதை நான் பாராட்டுகிறேன்.
ஆனால் ஒரு உடன்பாடு ஏற்பட்டாலும் உடன்பாடு ஏற்பட்டு
10, 15 தினங்களுக்குப் பிறகும் கூட அந்தப் பிரச்சினை முடிவு
பெறாமல் இருப்பதற்கு ரெட் டேப்பிச முறைதான் காரணமா
என்று நான் கேட்க விரும்புகிறேன். எனவே தொழி
லாளிக்கு ஒருபுறத்தில் இழப்பு, இந்த அரசுக்கும் பலகோடி
ரூபாய் இழப்பு இதனால் ஏற்படுகின்றது. எனவே இந்தப்
பிரச்னையை உடனடியாக முடிக்கவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரப்பர்
உற்பத்தி செய்கின்ற பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இருக்
கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற ரப்பருக்கு நியாயமான
விலை கிடைக்கவில்லை. ரப்பரைப் பொறுத்தவரையில் மத்திய
அரசின் ஏகபோக முதலாளிகளுக்கு ஆதரவான கொள்கை காரண
மாக வெளிநாடுகளிலிருந்து ரப்பரை இறக்குமதி செய்கிறார்கள்.
எனவே இங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற ரப்பரின் விலை

[திரு. டி. மணி] [1983 மார்ச் 11

குறைகின்றது. எனவே நியாயமான விலை குறைந்தபட்சம் ஒரு கிலோவிற்கு 15 ரூபாயாவது கொடுக்கவேண்டும் என்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ரப்பர் தொழிலைப் பொறுத்தவரையிலே ரப்பரே மூலப்பொருள் என்ற காரணத்தால் கன்னியாகுமரியில் ஒரு தொழிற்சாலை அமைக்கவேண்டும் என்று ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பல முறை பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் கூறியிருக்கிறார்கள் நானும் கூறியிருக்கிறேன். தேவையான ரப்பர் நம்மிடத்திலே இருக்கின்றது. அரசாங்கத்திற்குச் சொந்தமான பேருந்துகள் லாரிகள் ஜீப்புகள் ஆகியவற்றுக்குத் தேவையான டையர்கள் மற்றும் இருக்கைகளை நாம் உற்பத்தி செய்தால் கூட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலும் நமக்குச் சொந்தமான தொழிலை நிறுவுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது. அதனால் அன்னியச் செலாவணியும் நமக்குக் கிடைக்கும்.

அடுத்து தமிழ்நாட்டில் 1974ஆம் ஆண்டு மணவாளக்குறிச்சியில் உள்ள இண்டியன் ஓர்ஸிலே இருந்து ஒரு குறிப்பினைக் கொடுத்திருந்தார்கள் என்ன தொழிலை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று. ஆனால் அன்று ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்களின் கவனக் குறைவு காரணமாக அவர்கள் அதுபற்றி கவலைப்படாததன் காரணமாக அந்தத் தொழில் நமக்கு கிடைக்காமல் போய் விட்டது. ஆகவே எந்தத் தொழிலை அங்கே ஆரம்பிக்கலாம் என்ற ஒரு குறிப்பு இருக்கின்றது. அந்தக் குறிப்பினை எடுத்து கொண்டு அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தினால் பல நூறு பேர்களுக்கு வேலைவாய்ப்பினைத் தர முடியும். ஆகவே அதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது சத்துணவு. சத்துணவு வழங்குவதில் நாங்கள் ஆட்சேபனை செய்யவில்லை. இதிலே இன்று எந்தப் பகுதியினை எடுத்துக்கொண்டாலும் அதிலே ஊழல்களும் முறைகேடுகளும் இருக்கின்றன. குறிப்பாக 100 பேர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று ஒரு நிலை இருந்தது. என்றால் அது நான்கைந்து, மாதங்களுக்குள்ளாக என்ன ஆகி இருக்கின்றது என்றால் 100,60 ஆக ஆகி, 60, 50 ஆக ஆகி, 50, 25-க்கு வந்து நிற்கின்றது. ஆகவே அந்த 100 என்ற வரம்பினைக் குறைத்து 30 என்று இருந்தால் கூட பரவாயில்லை அந்த மையங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியில் அம்பேட்டிங் ஆலை என்ற இடம் இருக்கின்றது. அங்கே 60 பேர் இருந்தாலும் 100 பேர் என்று கணக்குக்காட்டப்படுகிறது. அங்கே சில சமூக விரோத சக்திகள், அதாவது இராஜேந்திரபிரசாத் என்பவர் வாரந்தோறும் அங்கே வந்து அந்தப் பெண்களைப் பயமுறுத்தி பணத்தை வாங்கிக்கொண்டு செல்கின்ற சூழ்நிலை இருப்பதாக சொல்லப்படுகிறது. அதைத் தடுக்கவேண்டும்.



1983 மார்ச் 11] [திரு. டி. மணி]

அடுத்து மருத்துவத்துறையினைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். 147 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கி இருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்திலே உள்ள எந்த மருத்துவமனையை எடுத்துக் கொண்டாலும் மருந்துகள் இல்லை, மருந்துகள் இருந்தால் டாக்டர்கள் இல்லை, டாக்டர்கள் இருந்தால் ஆபரேஷன் தியேட்டர்கள் இல்லை. ஆபரேஷன் தியேட்டர்கள் இருந்தால் அதற்குரிய கருவிகள் இல்லை என்ற நிலைமைதான் இருக்கின்றது. இதற்கு உதாரணமாக தஞ்சாவூரிலே உள்ள திருவாரூர் மருத்துவமனையைச் சென்று பார்த்தால் தெரியும். நாகர்கோவிலைப் பொறுத்தமட்டில் நெல்லை, குமரி, மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரு காச நோய் மருத்துவமனை இருக்கின்றது. ஆனால் அங்கே தேவையான டாக்டர்கள் இல்லை. தேவையான மருந்துகள் இல்லை. குடிக்க குடிதண்ணீர் இல்லாத ஒரு குறையும் இருக்கின்றது. காச நோயாளிகளைப் பொறுத்தவரையில் எப்படி அவர்களுக்கு மருந்து கொடுக்கின்றோமோ அதேபோன்று அவர்களுக்குத் தேவையான சத்துணவும் கொடுக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு சத்துணவு வழங்கப்படாத சூழ்நிலை இருக்கின்றது. அந்த நிலைமையைப் போக்கவேண்டும்.

அடுத்து குழித்துறையிலே இருக்கின்ற மருத்துவனைக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டிக்கொடுத்து கூடுதலாக படுக்கை வசதியையும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப்பணி பற்றி ஒரு வார்த்தை. வறட்சி நிவாரணப்பணிக்காக என்னுடைய மாவட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிற பணம் போதுமானது அல்ல. 20 ஆண்டு காலமாக இல்லாத அளவுக்கு ஒரு வறட்சி நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. குடிக்க தண்ணீர் இல்லை. கிணறுகளில் தண்ணீர் இல்லை. 60அடி ஆழத்திற்கு கீழே தோண்டினாலும் தண்ணீர் வரவில்லை. எனவே தந்து இருக்கிற நிதி போதுமானது அல்ல. தண்ணீர் இருக்கிற சிற்றாறிலிருந்து நாகர்கோவிலுக்கு குடிநீர் எடுத்துச்செல்கிறார்கள். அதை வழியில் இடைமறித்து சிலர் குளங்களில் நிரப்புகிறார்கள். இதனால் கல்குளம் தாலுகாவிற்கும் விளவங்கோடு தாலுகாவிற்கும் தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படும். அங்கே தண்ணீர் பஞ்சம். தண்ணீர் கிடைக்காத கடுமையான சூழ்நிலை அங்கேயிருக்கிறது. இதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குழித்துறை ஆற்றிலிருந்து தண்ணீரை விளாத்துறை லிப்ட் இர்ரிகேஷன் மூலம் வினியோகம் செய்தால் தண்ணீர் இல்லாத ஒரு பகுதிக்கு தண்ணீர் கொடுக்க முடியும். அந்த லிப்ட் இர்ரிகேஷனை புனரமைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பி. ஜி. நாராயணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை கூற வாய்ப்பு தந்தமைக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். பருவ மழை தவறியதால் மிகக் கடுமையான வறட்சியால் தமிழகம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. உணவுப் பற்றாக்குறை, மின்சாரத் தட்டுப்பாடு இவைகளை எல்லாம் போக்க இந்த அரசு பெரும் முயற்சி எடுத்துக்கொள்கிறது. இந்த நிலையில் மைய அரசு நமது கோரிக்கைகளை ஏற்று ஓரளவுக்காவது உதவ முன்வந்தால் வறட்சி நிலை இவ்வளவு கடுமையாக இருக்க நியாயம் இல்லை. மின்சாரத் தட்டுப்பாட்டைப் போக்க நிலக்கரி தேவைப்படுகிறது. அந்த நிலக்கரியை அனுப்ப காலதாமதம் செய்வது மட்டும் அல்லாமல் அந்த நிலக்கரியை நாமே தருவித்துக்கொள்ள, இறக்குமதி செய்து கொள்ள அனுமதிகேட்டால் அதுவும் மறுக்கப்படுகிறது. அதைப் போல் தான் உணவுப் பொருளான அரிசியை அனுப்புவதிலும் இந்த மைய அரசு காலதாமதத்தை வீணாக செய்து வருகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை சமாளித்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் செலுத்துவதற்கு மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவைப்படுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் மத்திய மாநில அரசுகளின் உறவுமுறை மிக்க நிலையான அடிப்படையில் சீரமைக்கப்படவேண்டும் என்பதைப் பற்றியும், தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு நேராவண்ணம் போதிய அதிகாரங்களோடுகூடிய தன்னாட்சி உரிமையை மாநிலங்கள் பெறவேண்டு வேண்டும் என்பதை சுட்டிக்காட்டி இந்த அரசு உரிமையை வலியுறுத்த எப்போதும் தயங்காது என்பதை இந்த அறிக்கையின் மூலம் காணமுடியும்.

இந்த வரவுச் செலவுத் திட்டத்தில் பல முற்போக்கான திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் தன்னிறைவு திட்டம், குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கிடைக்கும் திட்டம், சத்துணவுத் திட்டம் இப்படி நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்துவதாக இந்த நிதிநிலை திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டிலே வரி போடுவதை ஒரு தவறாக எடுத்துச் சொல்லுகிறார்கள். அபிவிருத்தி திட்டங்களுக்கும், சமூக நலத் திட்டங்களுக்கும் அதை நிறைவேற்ற தேவையான நிதிக்காகத்தான் இந்த வரிகளை போட்டிருக்கிறார்கள். அது அவசியம் தான். ஆனால் யாருக்கு வரி போடுவது என்பது தான் முக்கியம். அந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையில் புதிதாக 26 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். அந்த வரி ஏழைகளை பாதிக்கவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே இருந்த வரியால் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தினால் அவைகளை எல்லாம் ரத்து செய்து இருக்கிறார்கள். அன்றாடம் ஏழைகள் பயன்படுத்தும் எல்லா வகைப்பட்ட மண்ணெண்ணெய் விளக்குகள், அதன் உதிரி பாகங்களான திரிகள் கண்ணாடி சிம்னி ஆகிய அனைத்திற்கும் முழு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.





விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் கால்நடையின் தரத்தை உயர்த்துவதற்காக புதிதாக உறைவிந்து வங்கி ஒன்றை உருவாக்கும் திட்டமும், கால்நடைகளுக்கு சுகாதாரத்தைக் கொடுக்கும் முறையில் 25 மருந்தகங்களை புதிதாக ஏற்படுத்தும் திட்டமும் பாசன வசதியை பெருக்குவதற்காக 6 புதிய நடுத்தர திட்டங்களையும் 30 சிறு பாசன திட்டங்களுக்கு 105 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும், மாட்டுத்தீவனமான பருத்திக்கொட்டை, பொட்டு, மரவள்ளி கிழங்கு ஆகியவைகளுக்கு முழுமையாக விற்பனை வரி ரத்து செய்து இருப்பதும் விவசாய பெருங்குடி மக்களுக்கு ஆறுதல் தரக்கூடியதாக இருக்கிறது.

நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையானது கல்வியும் மின்சாரமும் என்பதை கருத்தில் கொண்டு இந்த அரசு கல்விக்காக 359.79 கோடி ரூபாயும் மின்சாரத்திற்காக 272.42 கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பது ஒரு நல்ல அறிகுறியாக இருக்கிறது.

ஆசிரியர்கள் மத்தியில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு பல்வேறு நிலையிலே பெருமளவில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு செய்திருப்பது ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும் தருகிறது.

(பிற்பகல் 1—00)

ஆதிதிராவிடர் துறைக்கு 119.56 கோடி ஒதுக்கி ஆதி திராவிட பெருமக்கள் சமூக, கல்வி, பொருளாதாரத் துறைகளிலே உயர்வதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. அனைவருக்கும் சமூக நீதி கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையில் பின்தங்கிய வகுப்பினரிலே சில பிரிவினருக்கு முறைப்படி கிடைக்க வேண்டிய சலுகைகள், நீதி கிடைக்கவேண்டுமென்பதைக் கருத்திலே கொண்டு இந்த அரசு பின்தங்கிய வகுப்பினரைக் கணக்கிட்டு வகைப்படுத்த பின்தங்கிய வகுப்பினர் கமிஷன் அமைத்து இருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்காக 134 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இளம் வயதில் இரண்டு நாட்கள் தொடர்ந்து பசிக் கொடுமையை அனுபவித்த நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் பசிக்கொடுமையை மற்ற ஏழைக்குழந்தைகள் அனுபவிக்கக் கூடாது என்ற நல்ல உணர்வில் இந்த நல்ல திட்டம் செயல்படுத்தப்படுகிறது தமிழ்நாடு பூராவும். ஏழைக் குழந்தைகளை வாழவைக்க வேண்டும் என்ற முறையிலே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த திட்டம் வெற்றிகரமாக செயல்பட வேண்டுமென்ற முறையிலே ஆக்கபூர்வமான யோசனைகளைக் கூறாமல் மாற்றுக் கட்சியினர் இந்த நல்ல திட்டத்தையும் குறை கூறுகிறார்கள் என்றால் மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்டே கூறுகிறார்கள் என்று கருதுகிறேன்.

சேலத்திலே ஒரு நதியே பூமிக்கு அடியில் ஓடிக்கொண்டிருப்பதாக பி.டபிள்யூ.டி.யில் சர்வே மூலமாக நமக்கு எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். 150 அடியிலிருந்து 200 அடிக்குள் நல்ல தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நல்ல முறையில் திட்டங்களை தீட்டியிருந்தால் தமிழகத்தில் நிச்சயமாக தண்ணீர் பிரச்னையை தீர்த்திருக்க முடியும். திருவாடானை தாலுகாவிலே பல இடங்களில் தண்ணீர் தானே பீறிட்டு கொண்டு கிளம்பும் அளவிற்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆர்டிசான் வெல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஒழுங்குபடுத்தி திட்டங்களை உபயோகப்படுத்தியிருந்தால் எல்லா தாலுகாகளிலும் நல்ல குடி தண்ணீரை பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே சப்ளை செய்திருக்கலாம்.

எனது தொகுதியான இளையாங்குடியில் குடிதண்ணீர் திட்டம் ஐந்து ஆண்டுகளுக்கு பின்னும் கூட ஆரம்பிக்கப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. கச்சாத்தூர் குடிதண்ணீர் திட்டம் இன்றைக்கு 'த்வார்டு'-ல் ஆரம்பிக்கப்படாத நிலையில் இருக்கிறது. முட்டக்குறிச்சி திட்டம் பேப்பரில் வந்தது, அந்தத் திட்டம் வாட்டர் போர்டிலே தூங்கிகொண்டிருக்கிறது. இவைகளையெல் லாம் சீக்கிரமாக நிறைவேற்றியிருந்தால் இந்த வறட்சி நேரத்தில் தண்ணீருக்காக பெண்கள் 2 மைல், 3 மைல் என்று குடத்தை எடுத்துக் கொண்டு பங்குனி, சித்திரை வெய்யிலில் அலைய வேண்டியதில்லை. இப்போதாவது இந்த அரசாங்கம் விவஸ்தை யோடு நடந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிதண்ணீருக்காகவும், ரோடு வசதிக்காகவும், வறட்சி நிவாரண வேலைகளை துவங்குவதற்காகவும், வரி வஜா செய்ய வேண்டும் என்பதற்காகவும் தொழிலற்ற பின்தங்கிய கிழக்கு முகவை மாவட்டத்தை தொழில் மையமாக்க வேண்டும் என்பதற்காகவும் 5-3-1983ஆம் தேதி 10 ஆயிரம் பேர்கள் பல சங்கங்களின் சார்பில் மூன்று நாட்கள் நடந்து மதுரையிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். இப்படி மாவட்டம் பூராவும் கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இத்துடன் இப்படிப் பட்ட கிளர்ச்சிகள் நிற்காது. மேலும், மேலும் வலுப்பெறும். அஸ்ஸாமைப் போலவோ, பஞ்சாபைப் போலவோ தமிழகமக்கள் கிளர்ந்தெழ மாட்டார்கள் என்று தப்புக்கணக்குப் போட்டு சும்மா இருந்துவிட வேண்டாம். முகவை மாவட்டம் மட்டுமல்ல, இன் றைக்கு தமிழகம் முழுவதும் பஞ்சத்தை எதிர் நோக்கிக் கொண் டிருக்கிறது. முகவை மாவட்டத்தின் தலைநகரம் மதுரையில் பல ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறது. தலைநகரை முகவை மாவட்டத்திற்கு மாற்றவேண்டுமென்று 30 ஆண்டுகளாக வற்புறுத்தி வருகிறோம். இந்த அரசாங்கம் வந்தபிறகு 1977-ல் கூட முதல் கூட்டத்திலேயே இதுகுறித்து வற்புறுத்தி இருக் கிறோம். அரசும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்றுக் கொண்டும் கூட இன்றுவரையில் தலைநகரை மாற்றவில்லை. அதேபோல மாவட்டத்தை பிரிக்கவேண்டுமென்ற கோரிக்கையை யும் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இன்றுவரையில் மதுரையில்



தான் தலைநகரம் இருந்து கொண்டிருக்கிறது. ஏன் இந்தப் பிரச்னையை அரசாங்கம் தீர்க்காமல் வைத்திருக்கிறது என்பது புரியாத புதிராகவே இருந்து வருகிறது.

[பிற்பகல் 1-10]

சத்துணவுத் திட்டம்—இதற்கு 134 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. 67 இலட்சம் குழந்தைகளுக்கு உணவு கிடைக் கிறது. பெரும்பகுதி கிராமப் பகுதியிலுள்ள குழந்தைகள் பள்ளி நோக்கி வருகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அந்தக் குழந்தைகளுக்குப் புத்தகம் வாங்கிக் கொடுக்கிறோம் என்று அபாண்டமான புளுகை சொல்லக் கூடாது. நாங்கள் மாநிலத்தின் மூலை மூடுக்குகளில் எல்லாம் உள்ள பள்ளிகளை சுற்றிக்கொண்டு வருகிறோம். எங்கும் சத்துணவுத் திட்ட மாணவர்களிடத்தில் புத்தகத்தைப் பார்க்கவில்லை. 134 கோடி ரூபாய் என்பது சரியாக இருக்காது. இதற்கு மேலும் திரை மறைவிலே பல நூற்றுக்கணக்கான வேலைகள் நடைபெறு கின்றன, செலவிடப்படுகிறது. 'சைல்ட் வெல்பேர்', சமூக நலத் திட்டம் போன்றவைகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகூட இங்கு வந்து குழந்தைகளுடைய உணவோடு சேர்ந்து சாப்பிடுகிறது என்று சொல்ல விரும்புகிறேன். கொட்டகை கட்டுவதற்கு ஒதுக்கப்படும் ரூ. 10 கோடி காப்பிட்டல் எக்ஸ்- பென்டிச்சர் கூட இதில் கலந்து செலவாகிறது. இப்படியாக, ஒட்டுமொத்தமாகப் பார்த்தோமானால், 134 கோடி அல்ல, 150 கோடிக்குமேல் அந்தச் சத்துணவுத் திட்டம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட பெரிய தொகையைச் சாப்பிடும் சத்துணவு திட்டத்தில் பல ஊழல்கள் இன்றைக்குத் தலைகாட்ட ஆரம்பித் திருக்கின்றன. பருப்பைத் திருடுவது, அரிசியைக் கொண்டு போவது, காய்கறியைக் குறைத்து வாங்குவது, பொய்க் கணக்கு எழுதுவது, இல்லாத பிள்ளைகளை வந்ததாக எழுதுவது, இப்படிப் பட்ட மோசடிகள் நடந்து கொண்டிருக்கின்றன, கண்காணிப்பு மிகவும் தேவை என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கிழக்குக் கடற்கரை ரோடு பந்தோபஸ்துக்கும் பாது காப்புக்கும் போக்குவரத்துக்கும், மீனவர்களுக்கும் மிக முக்கிய மான ரோடு என்று அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசு கூட ஒத்துக் கொண்டிருக்கிறது. 1756 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிற மத்திய அரசு, ரூ. 3 கோடிதான் ஒதுக்கியிருக்கிறது. எவ்வளவு பெரிய சாபக்- கேடாக நடந்து கொள்கிறது மத்திய அரசு என்பதை நினைக் கும்போது மிக வருத்தமாக இருக்கிறது. பாலங்களைக் கட்டிவிட்டு, ரோடுகளைப் பூர்த்தி செய்யாமல் இருக்கிறது. மத்திய அரசு தட்டிப் பறிக்கும் வழிப்பறிக்காரனைப்போல் நடந்துகொள்கிறது. பாம்பன் பால வேலைகள் பல வருஷங்களாக நடைபெறாமல் இருக்கின்றன. அந்தப் பாலத்

[திரு. பி. ஜி. நாராயணன்] [1983 மார்ச் 11

காவல் துறைப் பணியாளர்களுக்கு சொந்தத்தில் ஒரு வீடு என்ற முறையிலே வீட்டுவசதிகள் அளித்து இருப்பதும், 32 புதிய காவல் நிலையங்களை நிறுவி பல்வேறு ஸ்தலங்களிலே 1,200 பதவிகளை அனுமதித்து இருப்பதும் சட்டம் ஒழுங்கைப் பாது காக்கும் இந்தத் துறைக்குத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது இந்த அரசு என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

கைத்தறித் துறையிலே நெசவாளர்களுக்குத் தேவையான நூல் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையிலே 5 கூட்டுறவு நூற்பாலைகளைத் தொடங்கியிருப்பதும், நெசவாளர்க ளுக்கு உதவித் தொகை, வீட்டுவசதித் திட்டம் போன்ற திட்டங் கள் நெசவாளர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் அமைந்திருக் கின்றன.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க இந்தஅரசு முனைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில் மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக 1,200-க்கு மேற்பட்ட சிறு தொழில் பிரிவுகளை ஏற்படுத்தி அதன் மூலமாக 43 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு, கிராமப்புற வேலைவாய்ப் புத் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகள், அரக்கோணம் உருக்காலை, காட்பாடி வெடி மருந்து ஆலை, திருத்தணியிலே கூட்டுறவு சர்க்கரை ஆலை, தனியார் துறையிலே பொன்னி சர்க்கரை ரசாயன ஆலை போன்ற பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதன் மூல மாக பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு இந்த அரசு முனைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அறிக்கை அறிவிக்கிறது.

குடிசைகளுக்கெல்லாம் மின்விளக்குகள் என்ற திட்டத்தின் கீழ் 5 லட்சம் குடிசைகளுக்கு இதுவரையில் மின்விளக்கு கொடுக் கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குடிசை களுக்கு மின்விளக்கு கொடுக்கும் திட்டம் புரட்சித் தலைவரின் ஆட்சியிலேதான் அமல் நடத்தப்பட்டது. மாதம் இரண்டரை ரூபாய் கட்டினால் போதும் மின் இணைப்புக் கொடுக்கமுடியும் என்ற முறையிலே மின்விளக்குகளை புரட்சித்தலைவர் ஆட்சி குடிசைகளிலே ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே ஏழை எளிய மக்களின் பேரில் எவ்வளவு பற்றும் பாசமும் வைத்துக்கொண்டு இருக்கிறது என்பதை நன்கு தெரிந்துகொள்ளமுடியும். அனைத்து அன்பு மக்களின் நலன்களைப் பாதுகாக்கின்ற வகையில் பல நல்ல முற்போக்கான அம்சங்கள், முற்போக்கான திட்டங்கள் இவைகளைக் கொண்ட இந்த நிதிநிலை அறிக்கையை பாராட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



*திரு. செ. சிவசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, 1977ஆம் ஆண்டிலே 700 கோடி ரூபாயாக இருந்த வருமானம் 2,308.66 கோடி ரூபாயாக வந்து இருக்கிறது. அதே நேரத்திலே செலவு 2,468.21 கோடியாக இருக்கிறது, கிட்டத்தட்ட 159.55 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்கிறது. புதிய வரிகள் 26 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டிருக்கிறது. 185.55 கோடி ரூபாய் மக்களின் மேல் வரியாகப் புகுத்தப்படுகிறது. அப்படிப் புகுத்தப் படுகிற நேரத்திலே வணிகர்களுக்கு யாதொரு தொல்லையும் ஏற் படாமல் அவர்கள் அனுப்புகிற அறிக்கையின் மீது இருக்கும் என்று ஆரம்பத்திலேயே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்லி வியாபாரிகளை தாஜா செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் யாருக்கு அந்த வரி போடுவது என்றால் சாதாரண மக்க ளுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் தான் நான் வரி போடுகிறேன், முதலாளிகளுக்கு அல்ல என்ற நிலையிலே அவர்கள் முதலிலேயே சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமை சரியானது அல்ல. சர்க்கரைக்கு வரி, துணிகளுக்கு வரி, புகையிலைக்கு வரி, சிமெண் டிற்கு வரி, பெட்ரோலியப் பொருள்களுக்கு வரி, வனஸ்பதிக்கு வரி, மருந்து பொருள்கள், காகிதம், காகித அட்டைகள், இரும்பு, நிலக்கரி, மின்சாரப் பொருள்களுக்கு, மோட்டார் வாகனங் களுக்கு, வெட்டியெடுத்த கனிப் பொருள்களுக்கு வரி, அதுமட்டு மல்ல சினிமா சிலைடுகளுக்கு வரி, மோட்டார் கார்களுக்கு வரி, டீசல் கார்களுக்கு வரி, பஸ்களுக்கு வரி, ஒப்பந்த ஊர்திகள், ஜீப்புகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் நகரப் பேருந்து களின் இருக்கைக்கு வரி என்று எல்லாவற்றிற்கும் வரிகள். கடந்த நவம்பர் மாதத்திலிருந்து இன்று வரையில் மழை இல்லை. இனிமேல் மழை பெய்தவதற்கு இன்னும் சாதாரணமாக ஆறு மாதங்கள் ஆகலாம். மழை இல்லாததால் தமிழகத்தில் வறட்சி நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் நிதியமைச்சர் அவர் களின் நிதிநிலை அறிக்கையில் சட்டசபையில் வரிகள் மழை யாகவே பெய்துகொண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் வரி, குடி தண்ணீர் தமிழகத்தில் எங்கும் இல்லை. எங்கும் பஞ்சமும் பட்டினியும் இருக்கிறது. கிலோ அரிசி 5 ரூபாய்க்கு மேலே போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் வரி மழைக்கு மட்டும் பஞ்சம் இல்லை என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. தமிழகம் நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு மூன்றாவது தடவையாக வறட்சியை சந்திக்கிறது. கடந்த ஆண்டு வறட்சி காரணமாக 49 கோடிக்கு மேலே செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குக் முந்தைய ஆண்டில் 18 கோடிக்கு மேலே செலவு செய்யப்பட்டிரு கிறது. இந்த ஆண்டு இது வரை 43 கோடிக்கு மேலே வறட்சிக்கு செலவு செய்யப்பட்டுள்ளது. 190 கோடி ரூபாய் வறட்சிக்காக மத்திய அரசை கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படி கடுமை யான வறட்சி தமிழகத்தில் இருக்கிற நேரத்தில் நிரந்தரமாக வறட்சியைத் தீர்ப்பதற்கு வேலைகள் எதுவும் நடந்திருக்கிறதா என்றால் இல்லை. வறட்சி என்றவுடன் குடிதண்ணீருக்கு லாட்டரி அடிக்கிற நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. பூமிக்கு அடியிலே நல்ல தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது,

[திரு. செ. சிவசாமி] [1983 மார்ச் 11

தைப் பற்றி பல நேரங்களிலே கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அந்தப் பால வேலைகள் உடனடியாகப் பூர்த்திச் செய்யப்பட வேண்டுமென்று சட்ட மன்றத்திலே நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். இன்றைக்கு வரைக்கும் அந்தப் பால வேலைகள் 6, 7 கண்களோடு நின்று கொண்டிருக்கின்றன. எந்த வேலையும் நடைபெறாத ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பாலத்தைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேது சமுத்திரம் திட்டம் 100 ஆண்டுகளுக்கு முன்பே ஆய்வில் இருந்து வந்ததாக, ஏற்கனவே, அதற்கென்று 1/2 மணி நேரம் ஒதுக்கி இங்கே விவாதித்து இருக்கிறோம். ஆனால், இந்தச் சட்டசபையிலே, இந்த வரவு—செலவு திட்டத்திலே அதைப்பற்றியே குறிப்பு இல்லை. அது முக்கியமான திட்டம் என்று கருதவில்லையோ, என்னவோ தெரியவில்லை, நிதியமைச்சர் எதுவும் குறிப்பிடவில்லை. அவர்கள் அந்தத் திட்டத்தை வற்புறுத்தும் முறையிலே, மத்திய சர்க்காருக்கு உணர்த்தும் முறையிலே, ஒவ்வொரு ஆண்டும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதைப்பற்றி வற்புறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடல் செல்வங்கள். மீனவர்களுக்கு லோன் கொடுப்பதோடு நின்றுவிட்டது அரசு, 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடல் வளத்தின் மூலம் மிகப் பெரிய தொழில்கள் நடைபெற வாய்ப்புள்ளது. கடல் பாசியிலிருந்து, பலவிதமான உணவு பண்டங்களும், மருந்துகளும், சாயப் பொருள்களும் செய்யபடுகின்றன. அதைப்பற்றி எந்தத் தகவலும் இல்லாத ஒரு வரவு—செலவுத் திட்டமாக இது இருக்கிறது. சங்கு எடுக்கும் தொழிலைப் பற்றி பேச்சே இல்லை. கடலில் சங்கு எடுப்பதைத் தடுக்கிறார்கள் என தேவி பட்டினத்திலிருந்து இன்று காலையிலே எனக்கு தந்தி வந்துள்ளது. சங்குத் தொழிலை அலட்சியப் படுத்தக் கூடிய அளவுக்கு சங்கைப் பற்றி ஒரு வரி கூட வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிடப்படவில்லை. இந்த நிலையிலே, தொழில் வளம் அற்ற முகவை மாவட்டத்தில் பல தொழில்கள் கொண்டு வர நல்ல வாய்ப்பு இருந்தும் அரசுக்கு எதிர்கால கண்ணோட்டம் இல்லாததால், வரவு செலவுத் திட்டத்தில் ஏதும் இல்லாத ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. கடல் வளத்தின் மூலமாகக் கோடானு கோடி ரூபாயைத் தமிழகம் பெற முடியும் என்பதோடு மட்டுமல்ல, அமெரிக்காவுக்குக்கூட ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு இன்றைக்குக் கடல் வளத்தைப் பயன்படுத்தமுடியும்.

அது மட்டுமல்ல, நீர்ப்பாசனத்தை எடுத்துக் கொண்டால், கண்மாய், குளங்கள் ஆழப்படுத்தப்படவில்லை. தண்ணீர் வீணாகி கடலில் போய் விழுகிறது. சரியான நடவடிக்கை இல்லை,



1983 மார்ச் 11] [திரு. செ. சிவசாமி]

கடந்த 1979—80-ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட உடைப்புகள்கூட இன்றையவரையிலும் அடைக்கப்படவில்லை. இன்றைக்கு மதுரை மாவட்டத்திலிருந்து வருகிற வைகை தண்ணீர் அத்தனையும் வீணாகி கடலில்போய் சேருகின்ற நிலைமையிருக்கிறது. இதை பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தச் சபையிலே கிட்டத்தட்ட 8 தடவையாவது எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அப்படியிருந்தும் இன்றைக்கு வைகை பாசனத்தைப் பொறுத்தவரையிலும் எந்த வேலையும் நடக்காத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. 3,000, 4,000 ஏக்கர் கொள்ளளவுள்ள கண்மாய்கள் கூட ஆழப்படுத்தப்படவில்லை. இன்ஜீனியர்களைக் கேட்டால் ஆழப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த மண்ணை எங்கே கொண்டு போய் கொட்டுவது என்று தெரியாமல் நாங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதுதான் ஆழப்படுத்துவதா? இதுதான் கண்மாய்ப் பராமரிப்பு செய்வதா என்று கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இராமநாதபுரம் மாவட்டத்திலே கிட்டதட்ட 7,356 கண்மாய்கள் இருக்கின்றன. அந்த கண்மாய்களை ஆழப்படுத்துகின்ற திட்டம் ஒன்றுமே இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக அந்தக் கண்மாய்களில் எஃப். டி. எல்—மட்டத்தை தாண்டாத முறையில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதன் மூலமாக எந்தக் காரணத்தை முன்னிட்டும் அந்தக் கண்மாய்களின் கொள்ளளவை அதிகப்படுத்த முடியாது. கண்மாய்களை ஆழப்படுத்தினால்தான் அவைகளின் கொள்ளளவை அதிகப்படுத்த முடியும். ஒவ்வொரு கண்மாயிலும் எஃப். டி. எல். லெவலில் கலுங்குகள் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, அதற்குமேல் தண்ணீரைத் தேக்கி வைக்கமுடியாது. எனவே, கண்மாய்களின் கொள் அளவை அதிகமாக்கிக்கொண்டு வருகிறோம் என்று சொல்வது சரியான வாதம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆழப்படுத்துகின்ற ஒரே முறையினால்தான் கண்மாய்களின் கொள்ளளவை அதிகப்படுத்த முடியும். ஆகவே, அதிகமாக வெட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுப்பன் கால்வாய்த் திட்டமாக இருந்தாலும், வைகைத் திட்டமாக இருந்தாலும், ஆர். எஸ். மங்களம் கண்மாய் வடிகால் திட்டமாக இருந்தாலும், நிலத்தடி நீர்த் திட்டமாக இருந்தாலும், ஆழ் குழாய்க் கிணறு போடும் திட்டமாக இருந்தாலும், கால்வாய் மாராமத்துத் திட்டமாக இருந்தாலும் இந்தத் திட்டங்களெல்லாம் சரிவர நடைபெறவில்லை. இந்தத் திட்டங்கள் நல்லமுறையில் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் காலையிலே நான் பத்திரிக்கையிலே பார்த்தேன். இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் கார்டு லைன் வழியாக விடப்படும் என்று சொன்ன செய்தியை ரேடியோவிலேயும் கேட்டேன். இவ்வாறு விடவேண்டுமென்ற கோரிக்கையைப் பற்றி

கடந்த 17—3—1983 ஆம் தேதி நானும், நண்பர் சேலம் ஆறுமுகம் எம். எல். ஏ., அவர்களும் நேரடியாக சீஃப் ஆப்பரேட்டிங் சூப்பிரின்டென்டென்ட், சதர்ன் இரயில்வே அவர்களைப் பார்த்து வற்புறுத்தி மகஜரையும் கொடுத்தோம். அந்த அடிப்படையிலே இந்த அறிவிப்பு வந்துள்ளது என்பது நல்ல அம்சம். ஆனால் இதையும் சிலர் அரசியல்படுத்துகின்ற முறையிலே, இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உண்ணாவிரதம் இருந்து, கார்டு லைன் வழியாக இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் போகக் கூடாது என்ற முறையிலே உண்ணாவிரதம் இருப்பதாகத் தெரிகிறது. இது சரியான போக்கு அல்ல. இந்த எதிர்ப்பது இராமநாதபுரம் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய மாவட்ட மக்களுக்கு மிகப்பெரிய தொல்லையைக் கொடுக்கக் கூடியது. ஆக்வே, அந்த உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். முப்பது வருடங்களாக இருந்த கோரிக்கை இரயில்வேத் துறையினரால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதையும் தடுக்கின்ற முறையிலே ஒருசிலர் தஞ்சை மாவட்டத்திலே உண்ணாவிரதம் இருக்கப் போவதாகப் பத்திரிகையிலே பார்க்கிறேன். அது சரியான வாதம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொண்டு அந்த வழியிலே இரயில் போவதற்கு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று உங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறியைப் பற்றி ஒரு முக்கியமான பிரச்னையைச் சொல்ல விரும்புகிறேன். கோவாப்டெக்ஸின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் கைத்தறியைப் பர்சேஸ் செய்கிறார்கள். அந்தப் பர்சேஸ் எப்படி நடைபெறுகிறது என்றால், ரூபாய்க்கு ஒரு பைசா என்று கமிஷன் கொடுத்தால் நாங்கள் உங்கள் கடையிலே பர்சேஸ் செய்வோம் என்ற கண்டிஷனை மறைமுகமாகப் போட்டு பர்சேஸ் செய்கிறார்கள். இதைப்பற்றி ஏற்கனவே கைத்தறி அமைச்சரவர்களிடத்திலே நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் இன்றுவரைக்கும்கூட கமிஷன் பேசும் முறையிலே ரூபாய்க்கு ஒரு பைசா என்று வைத்துக்கொண்டு பர்சேஸ் செய்யப்படுகிறது. அதைக் கொடுக்க முடியாத சங்கங்களிலிருந்து பர்சேஸ் செய்வதில்லை. இதன்காரணமாகச் சிறிய சங்கங்கள் அவஸ்தைப்படுகின்றன. பெரிய சங்கங்களாக இருப்பவைகள் ஒரு ரூபாய்க்கு ஒரு பைசா என்பதைக் கணக்கில் ஏற்றாமல் தனிப்பட்ட முறையிலே அட்ஜெஸ்ட் என்று ஏற்பாட்டைச் செய்துகொண்டு கொடுப்பதன் காரணமாக, பெரிய சங்கங்களில்தான் கோவாப்டெக்ஸ் மூலம் பர்சேஸ் நடக்கிறது. சின்ன சங்கங்களிலேயிருந்து பர்சேஸ் செய்வதில்லை. இதன்காரணமாகச் சிறு சங்கங்கள் வளர்வதற்கு முடியாத ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை நேரடியாக நானே பல சமயங்களில் பார்த்திருக்கிறேன். ஆகவே, இந்தத் தரகு முறையிலே நடைபெறாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)



திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய பணிவான கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் வழக்கம்போல ஏழை எளிய மக்களின்மீது வரிச் சுமையைப் போடுகின்ற மைய அரசு இந்த ஆண்டும் பல கோடி ரூபாய்களுக்கான பல வரிகளை ஏழை மக்களின்மீது சுமத்தி இருக்கிறது. அப்படிப்பட்ட இந்த நேரத்தில் நம்முடைய டாக்டர் நாவலர் அவர்கள் சில வரிகளை அறிமுகப்படுத்தினாலும்கூட, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டில் பாலைவனத்து நீரூற்றாக அமைந்திருக்கிறது என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ளத்தான் செய்வோம்.

[பிற்பகல் 1.20]

பேரவையின் நிதிநிலை அறிக்கையின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள்கூட ஒவ்வொரு தடவையும் ஆவேசமாகவும், ஆத்திரமாகவும், நெருப்புப்பொறி பறக்கின்ற அளவிலே வாதாடிக்கொண்டு வருவார்கள். ஆனால் இந்தமுறை பார்க்கும்போது அவர் ஆவேசத்தைக் காட்டவில்லை. மாறாக எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற முறையிலே சிலவற்றைப் பேசவேண்டும் என்பதற்கும் அப்படிப்பட்ட சந்தர்ப்பம் நிதிநிலை அறிக்கை மூலம் கிடைக்காத காரணத்தால் நகைச்சுவையாகவே எல்லோரும் ரசிக்கின்ற அளவிலே பேசி முடித்திருக்கிறார்கள் என்பதை நாம் அத்தனை பேரும் உணர்வோம். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இந்த ஆண்டு வறட்சி மிகக் கடுமையாக இருக்கிறது என்பதை இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் ஒருபோகச் சாகுபடிதான் நமக்கு செய்ய முடிந்தது. சில மாவட்டங்களில் அந்த ஒரு போகம் சாகுபடிகூட செய்ய முடியாமல் போய்விட்டது. ஆனால் இந்த ஆண்டில் எல்லா மாவட்டங்களிலேயும், தமிழகம் பூராவும், பருவ மழை நமக்குக் கிட்டாத காரணத்தால் அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி இன்றைக்குத் தலை விரித்து ஆடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். தென்மேற்குப் பருவக் காற்றும், வட கிழக்குப் பருவ காற்றும், ஏமாற்றியிருந்தாலும்கூட, நம்முடைய அரசைப் பொறுத்த மட்டில் இந்தக் கடுமையான வறட்சியை மிக லாபகரமாக சமாளித்து வருகிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை மூலம் நாம் கண்கூடாகக் காண முடிகிறது. செங்கற்பட்டு மாவட்டம் பூராவும் வறட்சியால் தவித்துக் கொண்டிருப்பதை இங்கு இருக்கிற அத்தனை பேரும் நன்கு உணர்வார்கள். மக்களுக்கு தண்ணீர் வழங்குவதற்குப் போதுமான ஏற்பாடுகளை குடிநீர் வடிகால் வாரியம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. அதைத் தொய்வில்லாமல் விரைவுபடுத்திச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். எப்படிக் குடிநீரை மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்யப் பட்டதோ அதைப் போல ஆடு, மாடுகள் குடிப்பதற்குத் தண்ணீர் வழங்குவதற்குப் பின் வாங்கி விடக்கூடாது

1—12—82 முதல் இயக்கி வருகிறார்கள். இப்படி இரண்டு பெரிய மாவட்டங்களை ஒன்றாக சேர்த்ததன் காரணமாக நிர்வாகம் எப்படி சீராக இருக்க முடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதேபோல் சின்னஞ்சிறு மாவட்டங் களை எல்லாம் எப்படி தனியாகப் பிரித்து ஒரு மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் என்று ஏற்படுத்தி இருக்கிறோமோ அதைப்போல் வட ஆர்க்காடு மாவட்டத்திற்குத் தனியாகவும், தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குத் தனியாகவும், செங்கற்பட்டு மாவட்டத்திற்குத் தனியாகவும், ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒவ் வொரு போக்குவரத்துக் கழகம் என்ற அடிப்படையில்—போக்கு வரத்துக் கழகங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டம். இதைப்பற்றி இங்கே பல பேர்கள் குறை கூறினார்கள். இங்கே பேசிய ஜனதா கட்சித் தலைவர் 100 கோடி ரூபாய் இதனால் இழப்பு என்று குறிப்பிட் டார்கள். இந்தப் போய் இழப்பு என்று சொன்னால் வேறு எதை இவர்கள் பாராட்டுவார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்றைக்குப் பசி, பஞ்சம் தலை விரித் தாடுகின்ற இந்த நேரத்தில் கிராமங்களிலே உள்ளவர்கள் பகலிலே சமைப்பதே கிடையாது. கிராமங்களிலே உள்ள மக்கள் நூற் றுக்கு 90 சதவிகிதத்தினர், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் கள் இரவோடு இரவாகத்தான் சமைப்பார்கள். 6 மணிக்கு கூலி வாங்கிச் செல்கின்றவர்கள், 6 மணிக்கு மேல் சமைத்து உண்டு விட்டு, மீதியை தண்ணீரிலே போட்டு, அந்தப் பழைய சாத மாகத்தான் மறுநாள் காலையிலே சாப்பிடுவார்கள். மத்தியான நேரத்திலே வேலை செய்கின்ற இடத்திலே சாப்பாடு கிடைத்தால் சாப்பிடுவார்கள்; இல்லாவிட்டால் பட்டினிதான். எனவே எந்தக் காலத்திலேயும் கிராமப் புறத்திலே மக்கள் பகலிலே சமைப்பது கிடையாது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அப்படிப் பட்ட நிலையில் அதிலும் குறிப்பாக வறட்சி நிலவுகின்ற இந்த நேரத்திலே குழந்தைகளுக்கு இந்தச் சத்துணவுத் திட்டம் ஒரு பெரிய வரப் பிரசாதமாக அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. இன்றைக்கு அந்தக் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தால் எப்படிப் பூரித்துப் போய் இருக்கிறார்கள், எந்த அளவுக்கு மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதை கிராமப்புறங்களுக்குச் சென்று பார்ப்பவர்களுக்குத் தான் நன்கு தெரியும். அப்படிப்பட்ட திட்டத்தை, எந்தக் காரணத்தைக் கொண்டும், இந்த அரசு கைவிடாது என்ற உத்தர வாதத்தை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத் திருக்கிறார்கள். சில பேர்கள் சொல்கிறார்கள், இன்றைக்குப் போடுவார்கள், நாளைக்கு முடியவில்லை என்று சொன்னால், பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கவில்லை என்று சொன்னால், இந்தத் திட்டத்தை தூக்கி எறிந்து விடுவார்கள் என்று புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையில் எந்தக் கார ணத்தைக் கொண்டும் சத்துணவுத் திட்டத்தை, மத்திய அரசு



அரிசி அனுப்பாவிட்டாலும் கூட, நான் கைவிட மாட்டேன், என்னுடைய உயிரைக் கொடுத்தாவது குழந்தைகளை பட்டினி போடாமல் தொடர்ந்து சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்று வேன் என்று சூளுரைத்திருக்கிறார்கள். அதேபோல் அவர்கள் தொடர்ந்து அந்தப் பணியைச் செயல்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். அந்தப் பணிக்காக செலவிடப்படுகின்ற பணம், அது 100 கோடியாக இருந்தாலும் சரி அல்லது 137 கோடியாக இருந்தாலும் கூட, ஏழை எளியவர்கள் பாராட்டுகின்ற அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு யாரும் குறுக் கிடக் கூடாது என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : துணைத் தலைவர் அவர் களே, தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இன்றைக்கு ஒன்றியங் களில் உள்ள சாதாரண தொடக்கப்பள்ளிகளுக்கு எல்லாம் கூட புதுக்கட்டிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. எந்த ஊரிலாவது ஓலைக் கொட்டகைகளில் பள்ளிகள் இருக்கின்றனவா என்றால் இல்லை. ஆனால், உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரை யில் பல இடங்களில் பல உயர்நிலைப் பள்ளிகள் பழைய ஓலைக் கொட்டகைகளிலேயே இன்னும் நடந்துகொண்டு இருக் கின்றன.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், திருக்கழுக் குன்றத்திலே, ஒரு காலத்திலே ஊராட்சி ஒன்றியப் பள்ளியாக இருந்து நடந்து வந்த அந்தக் கொட்டகைகளிலேயேதான் இன் றும் அங்கேயுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளி நடந்துகொண்டு இருக்கிறது. அதேபோல், மகாபலிபுரம், சதுரங்கப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளும் ஓலைக் கொட்டகைகளில் நடந்துகொண்டு இருக்கின்றன. உள்ளாட்சித் துறை பொறுப் பேற்றுள்ள தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக தொடக்கப்பள்ளி கள் அனைத்தும் புதிய கட்டிடங்களைப் பெற்றுள்ளபோது, உயர் நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் இன்றும் கொட்டகைகளில் இருந்து வருகிறது என்ற குறை நீண்ட நெடுங்காலமாக இருந்து வரு கிறது. அதைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு நிச்சயமாக உயர்நிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டும் என்ற என்னுடைய எண்ணத்தை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கற்பட்டைப் பொறுத்த வரையில், செங்கற்பட்டு நகரத் தில் மாவட்ட நீதிமன்றக் கட்டிடம் மிகப் பழையதாக இருந்தது. அந்தக் கட்டிடத்தை இடித்துவிட வேண்டும். அந்தக் கட்டிடத் திற்குப் பதிலாக புதிதாகக் கட்டிடம் கட்ட வேண்டும் என்று

[திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்] [1983 மார்ச் 11

ஒரு மாடு இரண்டு மாடுகள் வைத்திருக்கக் கூடிய உழவர்கள் வேண்டுமானால் பக்கெட்டிலே தண்ணீர் கொண்டு வந்து அதற்குக் கொடுக்க முடியும். ஆனால் மந்தை மாடுகளுக்கு அப்படித்தர முடியாது. ஏனென்று சொன்னால் அவைகளுக்குக் குட்டை குளங்களிலேதான் தண்ணீர் கிடைக்கும். இப்போது அந்த நிலைமை இல்லாத காரணத்தால் குடிநீர் வடிகால் வாரியம் எங்கெங்கு ஆழ் துளை கிணறுகளை போட்டு கைப் பம்புகள் மூலமாகத் தண்ணீர் கொடுக்கின்றார்களோ, அந்த இடங்களிலெல்லாம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி இருக்கிற இடங்களிலெல்லாம் மிகப் பெரிய சிமெண்ட் தொட்டிகளைக் கட்டி, பல மாடுகள் ஒரே நேரத்தில் தண்ணீர் குடிப்பதற்குத் தேவையான தண்ணீரை அங்கு இருக்கின்ற அந்த ஊரைச் சேர்ந்த நபர்களைக் கொண்டு தண்ணீரை நிரப்பி போதுமான தண்ணீரை ஆடு மாடுகளுக்குத் தருவதற்கு நம்முடைய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதே போல ஆடு மாடுகளுக்குத் தீவனம் கிடைப்பது மிக அரியதாக இருக்கிறது. ஆகவே சென்ற ஆண்டு செய்தது போல நமக்குப் பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலேயிருந்து அதற்குத் தேவைப்படுகின்ற வைக்கோல்களைக் கொண்டு வந்து தீவனத்திற்கு வகை செய்ய வேண்டுமென்றும், அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். எப்படி நம்முடைய நியாய விலைக் கடைகளில் மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை நியாய விலையில் வழங்குகிறோமோ அதுபோல ஆடு மாடுகளுக்குத் தேவையான தீவனங்களை—பொட்டு, புண்ணாக்கு, தவிடு போன்றவற்றை நியாய விலைக் கடைகள் மூலம் பெறுவதற்கு மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே மிகப் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களில் பல பேர் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி ஏளனமாகப் பேசினார்கள். ஆனால் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் காலத்திலே கொண்டு வரப்பட்ட குலக் கல்வி திட்டத்தை தடுத்து நிறுத்தியதற்குப் பிறகு காமராஜ் அவர்களால் அந்த காலத்தில் எல்லா ஊர்களிலும் பள்ளிக்கூடம் வரவேண்டுமென்ற நல்லுணர்வோடு அவர்களுடைய காலத்தில் சின்னஞ்சிறு கிராமங்களிலே தொடக்கப்பள்ளிகளை ஏற்படுத்தினார்கள். ஆனால் 20 ஆண்டு காலமாக காமராஜர் ஆட்சியிலும் சரி, அதற்குப் பின்னாலே வந்தவர்கள் ஆட்சியிலும் சரி, அந்த ஓலைக் கொட்டகைகளிலேயே ஆரம்பப் பள்ளிக் கூடங்களை நடத்தி வந்தார்கள். அந்த அளவிலே பஞ்சாயத்து யூனியன்களுக்குப் போதுமான நிதி வசதி இல்லை. ஊராட்சிகளிலே நிதிவசதி இல்லை என்ற காரணத்தைக் காட்டி அத்தியாவசியமான பள்ளிக் கூடங்களை நிரந்தரக் கட்டிடங்களாகக் கட்டுவதற்கு நிதிவசதி இல்லாமல் போய்விட்டது. ஒரு யூனியனுக்கு ஒரு ஆண்டுக்கு 2 அல்லது 3 பள்ளிகளுக்கு மேல் நிதி உதவி ஒதுக்கீடு செய்வது கிடையாது. ஏனென்று சொன்னால் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தர வேண்டிய அந்தப் பங்குத் தொகையை-கால் பங்குத் தொகையை 25 விழுக்காடு கட்ட



1983 மார்ச் 11] [திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்]

முடியாத பஞ்சாயத்துக்களுக்கு, அந்தப் பள்ளிக் கூட வசதியே இல்லாமல் போய் விட்டது என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. அப்படிப்பட்ட நிலையிலிருந்து மாற்ற வேண்டும் என்ற நல்லுணர்வோடு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தன்னிறைவுத் திட்டம் மூன்று கட்டமாகப் பிரிக்கப்பட்டு, 2 கட்ட வேலைகள் முடிந்திருக்கின்றன. 3 ஆவது கட்ட வேலை நடைபெற்று வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட நிரந்தரமான சொத்துக்களை இந்த நாட்டுக்கு சேர்க்கக்கூடிய, நிரந்தரமான வசதிகளைத் தரக்கூடிய முறையில், ஓலைக் கொட்டகைகளிலே படித்துக் கொண்டிருந்த அந்தக் குழந்தைகளுக்கு எல்லாம் நல்ல கட்டிட வசதிகளைச் செய்துக் கொடுத்திருக்கிற ஒரு நல்ல திட்டத்தை, தன்னிறைவுத் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு 3 ஆவது கட்டமாக இருக்கிற அந்தத் திட்டம் இன்னும் முடியாத நிலையில் இருக்கிறது. மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் அந்தப் பணிகள் முடிந்தாக வேண்டும். ஆனால் இருக்கின்ற வறட்சியின் காரணமாக, சிமெண்டு தட்டுப்பாட்டின் காரணமாக தன்னிறைவு வேலைகளில் தாமதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படி தாமதம் ஏற்பட்டிருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள் மட்டுமின்றி, 3 ஆவது கட்டத்தில் இருக்கின்ற அத்தனை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு மாத காலம் அவகாசம் கொடுத்து இந்தக் கட்டிடப் பணியை முழுமையாக நிறைவேற்ற அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலையான சொத்துக்களை, ஆஸ்திகளை இன்றைக்கு நாட்டுக்கு தந்து கொண்டிருக்கிற, நியாயமான அதிகாரிகள் அத்தனை பேர்களையும், உள்ளாட்சி துறையிலே உள்ள அலுவலர்கள் அனைவரையும் நான் இந்த மன்றத்தின் சார்பாக வாழ்த்தி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒரு மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பாகச் செயல்பட முடியும், மக்களுக்குப் பயன்பட முடியும் என்ற நல்ல உணர்வோடு, குமரி மாவட்டத்திற்கும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், பெரியார் மாவட்டத்திற்கும் தனித்தனியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு போக்குவரத்து கழகம் என்ற திட்டத்தின் அடிப்படையிலே 1—4—1983 முதல் நேசமணி, மருது பாண்டியன், ஜீவா போன்ற போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் சென்னைக்குப் பக்கத்திலே செங்கற்பட்டு மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம். அதைப்போல வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்கள் மிகப் பெரிய மாவட்டங்கள். ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, வட ஆர்க்காடு மாவட்டத்தையும் செங்கற்பட்டு மாவட்டத்தையும் இணைத்து, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்ற ஒரு போக்குவரத்துக் கழகத்தை

சொல்லி, ஏறக்குறைய 20 ஆண்டுக்காலமாக அங்கேயுள்ள பொது மக்களும், வழக்கறிஞர்களும் கேட்டு வந்தார்கள். 104 ஆண்டுக் காலமாக இருக்கின்ற அந்தப் பழைய கட்டிடம் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது என்று சொல்லியும் அதை யாரும் சட்டை செய்யவில்லை. ஆனால், புரட்சித் தலைவர் அரசு 74 இலட்ச ரூபாய் செலவில் ஒரு புதிய கட்டிடத்தைச் செங்கற்பட்டு மாவட்ட நீதிமன்றத்திற்காக கட்டித்தர அனுமதி கொடுத்து, இன்றைக்கு அதை நடைமுறைப்படுத்த அனுமதி கொடுத்த புரட்சித் தலைவர் அரசுக்கு வாயார என் தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், கழிப்பறைகள் கட்டும் திட்டம் கொண்டு வரப்பட்டு, ஏறக்குறைய 22½ இலட்சம் ரூபாய் அதற்காக செலவிடப்பட்டுள்ளது. இது எதைக் காட்டுகிறது என்றால், இந்த அரசு மனிதாபிமானமுள்ள அரசு, மானம் உள்ள அரசு, பெண்களிடத்தில் அதிலும் குறிப்பாகத் தாய்மார்களிடத்தில் பற்றுகொண்ட அரசு, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொண்ட அரசு என்பதை இந்த நாட்டு மக்கள் உணர்கிறார்கள். வேலி ஓரம், செடி புதர் மறைவில் ஒதுங்கும் நிலைமையை மாற்றி, நகர்ப்புறங்களில் எப்படி கழிப்பறைகளைப் பயன்படுத்துகிறார்களோ அதைப்போலவே கிராமப்புறங்களில் உள்ள மக்களும் பயன்படுத்தக்கூடிய முறையில் இந்தக் கழிப்பறைகள் அவசியமானது என்ற உணர்வோடு இந்த அரசு அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நான் பாராட்டுகிறேன்.

ஆனால், இந்தத் திட்டம் வெற்றி பெற ஒரு வசதியைச் செய்துதரவேண்டும். அவர்களுக்கு முக்கியமான தண்ணீர் வசதி தேவை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், மாதிரி கிராமங்கள் என்று 100 கிராமத்திற்கு ஒரு கிராமம் எடுத்து, அதிலே 2—3 இடங்களில் இந்தக் கழிப்பறைகளைக் கட்டினார்கள். அது எதிர்பார்த்த அளவிற்குப் பயன் அளிக்கவில்லை. காரணம், ஒரு வாரத்திற்கு மேல் அவைகளைப் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது. முதலில் சென்றவர்கள் பயன்படுத்தியதற்குப் பிறகு பின்னாலே சென்றவர் அதைப் பயன்படுத்த முடியாது. தண்ணீர் இல்லாத நிலைமை இதைத் தோற்றுவித்தது. ஆகவே, அந்த நிலைமையைப் போக்க வேண்டும் என்ற முறையில் நல்ல நீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்து, அதற்காக தனியாக ஒரு ஆளைப்போட்டு, அந்தக் கழிப்பறைகளைச் சுத்தமாக, நன்றாகப் பராமரிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப்பணித்துறையைப் பொறுத்தவரையில், ஏரிகள், சிறு பாசன ஏரிகள் ஆகியவற்றில் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் கருவேலம் மரங்களை நட்டுக்கொண்டு வருகிறார்கள். இது அவசியமானதும், அத்தியாவசியமானதும் ஆகும். காரணம்,





இன்றைக்கு பல நீர்ப்பாசன ஏரிகளில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு, தண்ணீர் நிற்க வேண்டிய இடங்களில் கூட ஏராளமான விவசாயிகள் அந்த நிலத்தைப் பயன்படுத்திக்கொண்டு, எந்த இடத்திற்குத் தண்ணீர் போய் சேர வேண்டுமோ, அந்த இடத்திற்குத் தண்ணீர் போய் சேர முடியாத அளவிற்கு, நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஏரிகளை இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளில் இருந்து காப்பாற்ற வேண்டுமானால், இத்தகைய கருவேல மரங்கள் நிச்சயம் வளர்த்தாக வேண்டும். அப்படிச் செய்வது அங்குள்ள நிலத்திற்கும் நல்ல வண்டல் உரம் கிடைக்கும். ஆகவே, எல்லா பொதுப்பணித்துறை ஏரிகளிலும், சிறு பாசன ஏரிகளிலும் இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே, எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் அந்த ஆக்கிரமிப்புக்களை தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதன்மூலம் வருகின்ற வருமானத்தில் 50 சதவீதம் அந்தப் பஞ்சாயத்துகளுக்கு சேரும் என்ற ஒரு உத்திரவாதத்தையும் இந்த அரசு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு நகரத்தைப் பொறுத்தவரையில், நகர ஈட்டுப்படி தரவேண்டும் என்று நீண்ட காலமாகக் கேட்டுவரும் முக்கியமான பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையில் அரசாங்கம், தனிக் கவனம் செலுத்த வேண்டும். அதை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரே ஒரு காரணத்தை மட்டும் இதற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், சில அரசு ஊழியர்கள் மாவட்டம் பூராவிலும் உள்ளவர்களுக்கு எச்.ஆர்.ஏ. அண்ட் சி.சி.ஏ. தர வேண்டும் என்று சொல்கிறார்கள். நாட்டிலே பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில் பெரும் தொகை செலவாகும் என்பதால் ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். எங்கள் மாவட்டத்தில் உள்ள சில தாலுக்காக்களில் இருக்கும் ஊர்களில் பாதி ஊர்களுக்கு எச். ஆர். ஏ. அண்ட் சி. சி. ஏ. கிடைக்கிறது. பாதி ஊர்களில் உள்ளவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதிலும், ஒரே ஒன்றியத்தைச் சேர்ந்த 10 கிராமங்களுக்கு கிடைக்கிறது ; 10 கிராமங்களுக்குக் கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினையினால் அங்கே வேலை செய்கிறவர்கள் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு மாற்றப்படும்போது, பணிமாற்றம் செய்யப்படும்போது, அந்த ஊழியர்களுக்கு மன அமைதி இல்லை ; அதிகாரிகளுக்கும் சிக்கல் ஏற்படுகிறது. ஊழியர்களுக்கு பெருத்த ஏமாற்றம் ஏற்படுகிறது. ஒரு ஊரிலிருந்து பக்கத்து ஊருக்கு மாற்றப்படுவதினால் கிட்டத்தட்ட 100 ரூபாய் வரையிலே ஒருவருக்கு துண்டு விழுகிறது, இழப்பு ஏற்படுகிறது, அதனால் பல குடும்ப சிக்கல்கள் ஏற்படுகின்றன. என்னைப் போன்ற அரசியல்வாதிகளுக்குக்கூட அது தலைவலியாக இருக்கிறது. ஆகவே, இதை கருத்திற் கொண்டு, தாலுகா அளவிலே அதை முழுமைப்படுத்தி, செங்கற்பட்டு மற்றும் காஞ்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கெல்லாம் சென்னை மாநகர

எச். ஆர். ஏ., சி. சி. ஏ. வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. வரவு செலவுத் திட்டம் 1983—84 பொது விவாதம்— தொடர்ச்சி.

*திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983—84-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது நான் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது நிதி நிலை அறிக்கையில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டும் இதே மாதிரிதான் கடுமையான வறட்சி ஏற்பட்டது. அப்போது வேளாண்மையை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தோடு குடிநீர் வடிகால் வாரியம், வேளாண்மைப் பொறியியல் துறை, நிலத்தடி நீர் ஆகியவைகளை வைத்துக்கொண்டு கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தும்கூட விவசாயப் பெருக்கத்தை எந்த அளவிற்கு முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்த்ததோ அந்த அளவிற்கு உணவுப் பொருள் உற்பத்தி ஏற்படவில்லை. இந்த ஆண்டும் அதேபோல், வறட்சி நிலை ஏற்படும் என்று அரசுக்குத் தெரிந்தும் தக்க தருணத்தில் முன்பிருந்த அதே சலுகைகளை மீண்டும் செய்திருந்தால் மழை இல்லாதிருந்தாலும் கூட நிலத்தடி நீரைக் கொண்டு ஓரளவு விவசாய உற்பத்தியில் முன்னேற்றம் கண்டிருக்க முடியும். அதைச் செய்ய அரசு தவறி விட்டதால் இன்றைக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த உணவுப் பற்றாக்குறை என்பதோடு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தினால், 65 இலட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு அளிப்பதால் அதிகச் செலவு அரசுக்கு ஏற்





படுகிறது என்று சொல்லியுள்ளார்கள். சென்ற ஆண்டுகளில் இந்தக் குழந்தைகளைப் பெற்றெடுத்த பெரியோர்கள் அவர்கள் குழந்தைகளுக்கு உணவு கொடுத்துக்கொண்டுதான் வந்தார்கள். அரசாங்கம் சத்துணவுத் திட்டம் என்று இம்மாதிரி எடுத்துச் செய்வதால் அதிகப்படியாக செலவாகிறது என்று சொல்கிறார்களே தவிர, தமிழ்நாட்டைப்பொறுத்த வரையில், உணவுப் பற்றாக்குறை என்று சொல்லுவது சரியாகயிருக்காது. இந்த ஆண்டும் வறட்சி ஏற்பட்டுள்ளது. தற்போதுள்ள உணவுப் பற்றாக்குறையைக் போக்குவதற்கு முன்பே மத்திய அரசை அணுகி கேட்டிருந்தால் அவர்கள் நல்லவிதமாக ஆதரவு தந்திருப்பார்கள். அந்த ஆதரவு இப்போது கிடைக்கவில்லையென்றால் அது நமது பிற்போக்குத்தன்மையைத் தான் எடுத்துக்காட்டுகிறது.

இந்த பிற்போக்குத் தன்மையே ஏதோ நாங்கள், எதிர் கட்சிக்காரர்கள் சொல்வதாக அமைச்சர் எடுத்துக்கொள்ளக் கூடாது. எவ்வளவுதான் நாம் பொருளாதாரத்தை, பணத்தை செலவழித்தாலும், விவசாயத்தை முன்னுக்கு கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் நமக்கு இருந்தாலும் கூட, சென்ற ஆண்டு நிலத்தடி நீரை எந்த அளவுக்கு தோண்டினோமோ, அதற்குப் பிறகு இந்த ஆண்டு நமக்குத் தேவை ஏற்பட்டபோது, அதிகமான அளவிற்கு ஆழம் தோண்ட வேண்டும். ஆனால், புதியதாக ஆழ்துளை குழாய்க் கிணறுகளைப் போட்டு, குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் என்று சொல்லுகிறபோது, சென்ற ஆண்டு ஆழ்துளை குழாய்க் கிணறுகளில் எத்தனை அடிக்கு கீழே தண்ணீர் கிடைத்ததோ, இந்த ஆண்டு அந்த ஆழ்துளைக் குழாய்க்கிணறுகளில் அந்த ஆழத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. இதற்கு முன்னால் 100 அடி, 200 அடி என்று வெட்டினோமோ, அதே அளவுக்குத்தான் இப்போதும் இருக்கிறது. நாம் இப்போது பணத்தை செலவழித்து, புதியதாக கிணறுகளைத் தோண்டுகிறோமே தவிர, பழைய கிணறுகளை ஆழப்படுத்தியதாகத் தெரியவில்லை. அதைப் பார்க்கும்போது, பொதுமக்களுடைய குடிதண்ணீர் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. எனவே மேலும் மேலும் குடிதண்ணீர் பிரச்சினையில் அரசு கவனம் செலுத்தவில்லை என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது.

அதேபோல்தான், சென்ற ஆண்டு தென்னை மரங்களை அதிகமாக வைத்து, தென்னையை வளர்த்து, 103 கோடி தேங்காயை உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லி, அதே நேரத்தில் இன்னும் 20 கோடி தேங்காய் கிடைக்கும். மழை இல்லை என்று தெரிந்த பிறகும், இதற்காக செலவழித்தும், அதிலேயிருந்து வருவாய் இல்லை. ஏதோ வரவு-செலவு திட்டத்தில், இந்த வருவாயைக் காட்டுகிறோமே தவிர, நேரடியாக, சரியான வருவாய் நமக்கு கிடைக்கவில்லை. அந்த அடிப்படையிலே வரவு-செலவு திட்டத்திலே நாம் இதைக் காட்டுகிறோமே

[திரு. மு. ப. முனுசாமி] [1983 மார்ச் 11

தவிர, நாட்டு மக்களுக்கு நல்ல முறையிலே முன்னுக்கு கொண்டு வரக்கூடிய நிலையை நாம் எடுக்கவில்லை என்பதைத்தான் இந்த நிதிநிலை அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

அதேபோலவே, மீண்டும் இப்போது பல ஏரிகளை தூர் எடுத்திருக்கிறோம் என்று சொல்கிறோம். ஆனால், ஏரிக்கு தண்ணீர் வரக்கூடிய ஓடைக்கு, கால்வாய்க்கு தூர் எடுக்கவில்லை. இதற்குக் காரணம், இதை செய்யக்கூடாது என்று அரசு தடுத்திருப்பதாக கீழ் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இதேபோல் மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்திலும் சொல்லப்படுகிறது. ஏரிக் கரைகளின் மண்ணை மட்டும் உயர்த்தினால் அதனால் நமக்கு தண்ணீர் கிடைக்காது. ஏரிக்கு தண்ணீர் போதாது. வரக்கூடிய ஓடைகளை சரி செய்தால்தான், தண்ணீர் கிடைக்கும். ஆனால் ஏரிகளுக்கு மட்டும் பணம் செலவழிக்கப்பட்டு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும் போது, ஏதோ ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தை வைத்துக்கொண்டு, அந்த ஒப்பந்தக்காரர்கள் லாபம் அடைய வேண்டுமென்பதற்காக அரசு அவர்களுக்கு சலுகை காட்டிக் கொண்டு வருகிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

[மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை]

அதுமட்டுமல்லாமல், எங்கள் மாவட்டம் அகில இந்திய ரீதியிலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டம். வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டம். அப்படி வறட்சி இருக்கும் போது, எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 192 வருவாய் கிராமங்கள் வறட்சிக்கு உட்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலே இரண்டு நீர்த் தேக்கங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு நீர்த்தேக்கங்களிலே ஏறத்தாழ 15 ரெவின்யூ கிராமங்களுக்கு தண்ணீர் பாயும். தேக்கத்தில் தண்ணீர் நிரம்பியிருந்தால்தான் இந்த 15 ரெவின்யூ கிராமங்களுக்கும் தண்ணீர் பாயும். தர்மபுரி மாவட்டத்தில் 2,111 ஏரிகள் இருக்கின்றன. இந்த ஏரிகளில் தூர் எடுக்கவில்லை. விவசாய மக்களை முன்னுக்கு கொண்டு வர வேண்டுமென்றால், நஞ்சை நிலங்களில் நல்ல விளைச்சல் கிடைக்க வேண்டுமென்றால், இந்த ஏரிகளில் தூர் எடுக்கும் வேலைகளைச் செய்திருக்கலாம். புதியதாக கால்வாய்களை வெட்டுவதும், புதியதாக கிணறுகளை தோண்டுவதும், இப்படிப்பட்ட செலவினங்களைச் செய்கிறோமே தவிர, பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கோ அல்லது விவசாயிகளுக்குப் புதுக் கிணறுகளை வெட்டுவதற்கோ இன்னும் அரசாங்கம் பணம் கொடுக்கவில்லை. நிலவள வங்கி கேட்டாலும் கூட, அவர்களும் எங்களுக்கு அது மாதிரி கொடுப்பதற்கும் அரசு உத்தரவு இல்லை என்று அதை ஏற்றுக்கொள்வதில்லை. அந்த அடிப்படையில் பார்க்கும்போது விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய தேவைகளை நாம் நல்ல முறையில் செய்திருந்தால் உணவு உற்பத்தியைப் பெருக்கிக் காட்டியிருக்க முடியும். ஆனால், அந்த அடிப்படையிலே நாம் செய்ய



1983 மார்ச் 11] [திரு. மு. ப. முனுசாமி]

[மாலை 4.10]

வில்லை. இப்படிப்பட்ட கடுமையான வறட்சிகள் ஏற்படும் போது, நீர்த்தேக்கங்களில் இருக்கக்கூடிய கால்வாய்களை நன்றாக தூர் எடுத்தால் நல்ல முறையில் வறட்சி இல்லாத காலத்திலும் அது விவசாயிகளுக்கு பயன் தரும். ஆனால், அப்படி வறட்சி இருக்கும்போதே, உபரி தண்ணீர் வந்தால்— பொது பணித்துறை அலுவலர்களால் கொடுக்கப்பட்டிருக்கிறதே கணக்கு அந்த அடிப்படையில் உபரி தண்ணீர் வரும்போது அதை சில ஏரிகளுக்கு கொண்டு போய்விடக்கூடிய அளவுக்கு, சில புதிய கால்வாய்களையும், கண்மாய்களையும் வெட்டி இருப்போமேயானால், அதனாலும் கூட பொது மக்களுக்கு பயன் ஏற்பட்டிருக்க முடியும். ஆனால் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை நாம் செய்யத் தவறிவிட்டோம்.

ஆனால் அந்த நிலைகளைப் பார்க்கிற போது, சின்னாறு நீர்த்தேக்கத்திலே இருந்து கீழ்ப்புறமாக ஒரு கால்வாயை வெட்டினால் பல பகுதிகளை முன்னுக்குக் கொண்டு வரலாம். குறிப்பாக வெலகல அள்ளி ஏரி, தண்டுகாரண அள்ளி ஏரி, அங்காண்ட அள்ளி ஏரி, அண்ணாமலை அள்ளி ஏரி பல்வேனெ அள்ளி ஏரி, எலுமிச்சன அள்ளி ஏரி, முதலிப்பட்டி ஏரி, கேத்தன அள்ளி ஏரி, முக்குளம் ஏரி, பொம்ம அள்ளி ஏரி, காரிமங்கலம் பெரிய ஏரி, திண்டல் ஏரி, கரகப்பட் ஏரி, இன்னும் பல ஏரிகளுக்கு அந்த நடுக் கால்வாயிலிருந்துவரக்கூடிய உபரித் தண்ணீரை திருப்பியிருந்தால், அந்த ஏரிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாயிகளெல்லாம் முன்னுக்குக் கொண்டு வந்திருக்கலாம்.

அந்தமாதிரியாக இப்போது புதியதாக ஏற்படுத்துவதற்கு உத்தரவு இடப்பட்டிருக்கும் சம்பார மேடு பள்ளம் இருக்கக்கூடிய அணைக்கட்டிலேயும், அதற்கு முன்னாலே இருக்கக்கூடிய திருடம்பள்ளம் என்கிற இடத்தில் அணைக்கட்டினாலும் சிறிய அணைக்கட்டு கட்டினால் அதன் மூலம் 10 ஏரிகள் நிரம்பக் கூடிய அளவுக்கு தண்ணீர் நமக்கு கிடைக்கும். அதே மாதிரி சாஸ்திமொட்லு என்கிற ஒரு நீர்தேக்கம் புதியதாக தர்மபுரி மாவட்டத்திலே வரவிருக்கிறது. பல ஆண்டு காலமாக, அதைக் கொண்டு வராமல், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையிலேயே வைத்திருக்கிறது. அதற்கென்று 5 ஆண்டுகளுக்கு முன்னாலே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அதைக் கட்டி முடிக்கலாம் என்று அரசு முடிவு எடுத்தது. தற்போது அது நிலுவையில் இருக்கிற காரணத்தால், இப்போது அதற்கு 7 கோடி ரூபாய் மதிப்பீடு போட்டு செலவு செய்யவேண்டிய நிலைமை இருந்து வருகிறது.

இப்படிப்பட்ட நிலைமைகளைப் பார்க்கும்போது, அது இன்னும் பல ஆண்டுக் காலம் அரசினுடைய நிலுவையிலேயே இருந்தால், இப்போது இருக்கிற விலைவாசியின் ஏற்றத்தில் செலவினங்கள் அதிகமாகிக்கொண்டே வரும். அதனால் பொது மக்களுடைய முன்னேற்றமும் தடைபடும் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. மு. ப. முனுசாமி] [1983 மார்ச் 11

தும்பலஹல்லி நீர்த்தேக்கத் திட்டம் என்ற புதிய திட்டம்
ஒன்று கட்டப்படுகிற காரணத்தால் அந்த திட்டத்திலே,
தர்மபுரி மாவட்டம் வரையில் ஒரு கால்வாயை வெட்டும் புதிய
திட்டத்தையும் இணைத்தால் உபரி தண்ணீர் வரும்போது,
அதிலே பாயும்படி ஏற்பாடு செய்தால், அந்த தண்ணீர் அதன்
வழியாக செல்லக் கூடிய அளவுக்கு ஒரு கால்வாயை ஏற்படுத்
தினால், அதன் மூலமாக பல பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்க
வாய்ப்பு இருக்கிறது. பெரியாம்பட்டி ஏரி, முத்தம்பட்டி ஏரி,
குப்பாங்கரை ஏரி, மாட்லாம்பட்டி ஏரி, மல்லிக்குட்டை ஏரி
சிண்டமங்கலம், மோதூர் என்று பல ஏரிகளுக்கு அதன் மூலமாக
பாசனம் உள்ள நிலங்களுக்கு நஞ்சை தீர்வு கட்டி வருகிறார்களே
தவிர, அங்கே தண்ணீரே வருவது கிடையாது என்பதை
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதை நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு கூட்டத்திலே
கூடத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட
பொதுப்பணித்துறையின் செயற் பொறியாளரை அணுகிக் கேட்
டால், அவர் அதற்கு என்ன சொல்கிறார் என்றால், இன்னும் 5
ஆண்டு காலத்தில் அந்த நீர்த்தேக்கம் நிரம்பிவிட்டால், பொது
மக்களுக்கு வறட்சி இல்லை என்ற நிலை ஏற்படும்போது அந்த
கவனிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அந்த
நேரத்திலே செய்வதை விட, வறட்சி திட்டத்திலேயே இதையும்
சேர்த்து, இந்த கால்வாயை வெட்டி விட்டீர்களேயானால், சர்க்
காருக்கும் மத்திய அரசிடமிருந்து சலுகை கிடைக்கும், பொது
மக்களுக்கு நன்மை கிடைக்க வாய்ப்பு இருக்கும்.

அதே போல பாலக்கோடு வட்டம் தனியாக பிரிக்கப்பட்டு
தனி வட்டமாக பல ஆண்டுகாலமாக இருந்துக் கொண்டேயிருக்
கிறது. ஆனால் அங்கே நிலவள வங்கிக்கூட கிடையாது. கூட்
டுறவு விற்பனை சங்கங்களும் கிடையாது. அரசு மருத்துவ
மனையை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற செயலாக்கம்
பல ஆண்டுக்காலமாக நிலுவையில் இருக்கிறது. அதேமாதிரி
காரிமங்களம் நகராட்சிக்கு, சார்பு பதிவாளர் அலுவலகம் ஒன்று
வேண்டும் என்று பல நாட்களாக சொல்லப்பட்டு வருகிறது.
தீ அணைக்கும் அலுவலகம், மகளிர் உயர்நிலைப்பள்ளி அதுவும்
கொடுக்கப்படவில்லை. அதே மாதிரி கால்நடை மருத்துவ
மனையை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று பல ஆண்டுக்கால
மாக கேட்கப்பட்டு வருகிறது. அதுவும் கட்டிக் கொடுக்கப்பெற
வில்லை. மாரண்ட அள்ளியில் மகளிர் உயர்நிலைப் பள்ளி
ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, அதற்குத்
தேவையான முன் பணம் 25 ஆயிரம் ரூபாயை செலுத்தியும்
கூட, அந்த இடத்திற்கும் கொடுக்கப்படவில்லை. அவைகள்
எல்லாம் பொது மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள்.
ஆனால், அவைகள் காலாகாலத்தில் செய்யப்படவில்லை
என்பதை எடுத்துக்காட்டத்தான் சொன்னேன்.



1983 மார்ச் 11] [திரு. மு. ப. முனுசாமி]

ஆகவே, அந்தப் பகுதி மக்களை முன்னுக்கு கொண்டு வர இந்த நிதிநிலை அறிக்கையிலே அதற்கென்று தற்போது எதுவும் செய்யாவிட்டாலும்கூட, சிறப்பு கவனம் இவைகளில் செலுத்தி, புதியதாக போடவிருக்கும் திட்டங்களில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் சர்க்கரை ஆலை தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல மருத்துவ மனையில் வைத்தியர் மட்டும்தான் உட்கார்ந்திருக்கிறார் மருந்துகள் இல்லை. ஆகவே அவர்கள் நகர்ப் பகுதிகளுக்குச் சென்று சொந்தச் செலவு செய்து மருத்துவம் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே அந்த தொழிலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் தகுந்த முறையிலே மருத்துவ வசதியைக் கொடுக்க, அந்த மருத்துவ மனைக்கு ஒதுக்க வேண்டிய தொகையை ஒதுக்க உடனடியாக உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்னைகளையெல்லாம் சொல்லும்போது ஏதோ நிதிநிலை அறிக்கையிலே பேசும்போது, அவர்களுடைய மாவட்டத்திற்கு மாத்திரம் கேட்கிறார்களே, பொதுவான முறையிலே தமிழகத்திற்கு என்று ஏதுவும் கேட்கவில்லையே என சொல்லலாம்.

கூட்டுறவுத் துறையினை எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது மற்ற பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டாலும் சரி ஏழை எளிய மக்களுக்கு நன்மை அளிக்கின்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கை இல்லை. நிதிநிலையினைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டை விட பலன் அதிகமாகக் கிடைத்திருக்கின்றதா என்று பார்த்தால் இந்த ஆண்டு 105 கோடி ரூபாய் வருமானம் அதிகமாக வரும் என்று சொல்லப்படுகின்றது. அதை ஒத்துக் கொள்கிறோம். ஆனால் கூட்டுறவுக் கடனை வாங்கிய பொதுமக்களால் இன்றைக்கு அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமை இருக்கின்றது. அரசுக்கு அதிகமான வருமானம் வருகின்றபோது பற்றாக்குறை பட்ஜெட்டைப் போட்டிருக்கிறீர்கள். ஆனால் மக்களே வறட்சியிலே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அந்த மக்களுக்கு அதிகமான வரியினைப் போட்டிருக்கிறீர்கள். எனவே அந்த வரிகளை நீக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கடன்களைப் பொறுத்தவரையில் மக்களால் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமை இருக்கின்றபோது மேலும் வரி, வரி என்று சொன்னால் அதை ஒத்துக் கொள்ளமாட்டார்கள். எனவே புதிய வரிகளைப் போடாமல் இருக்க வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள வரிகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுக் கடனைப் பொறுத்தவரையில் அதனை ஒத்திவைக்க வேண்டும் என்றில்லாமல் ரத்து செய்துவிட வேண்டும். ஏனென்றால் இந்த ஆண்டு அவர்கள் மகசூல் இல்லாமல் வருவாய்

இல்லாமல் இருக்கிறார்கள். செலவழித்த பணம்கூட கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் அவர்களால் எப்படிக் கடனைத் திருப்பிக் கட்ட முடியும். பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் கடனை நீட்டிக்கொண்டே போவதால் அவர்களால் அதனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கடன் சுமை அதிகமாகிக்கொண்டே போய்விடுகின்றது. எனவே அதிக வருமானம் வந்தாலும்கூட கடனைச் சரிகட்ட முடியாத நிலைமைதான் ஏற்படுகின்றது. எனவே அந்தக் கடனை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. பாபு கோவிந்தராஜன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டு வருஷத்திற்குப் பிறகு இப்போதுதான் வாயைத் திறக்கிறேன் என்று நினைக்கிறேன். இரண்டு வருஷமாகச் சும்மாதான் பேசாமல்தான் இருந்தேன். சரி இப்போது எல்லோரும் பேசுகிறார்களே நாமும் பேசலாம் என்று பேசுகிறேன். பொதுவாக பட்ஜெட்டிலே எல்லோரும் பேசுகிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரித்துப் பேசுவார்கள். எதிர்கட்சியினைச் சேர்ந்தவர்கள் எதிர்த்துப் பேசுவார்கள். எப்படிப்பட்ட நல்ல பட்ஜெட்டாக இருந்தாலும் ஆளும் கட்சித் தரப்பிலே போற்றுவார்கள். எதிர்க்கட்சி தரப்பிலே புகழ்ந்து பேச மாட்டார்கள். அது இயற்கை. ஆனால் நான் அதை எல்லாம் பேச வரவில்லை. என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேசலாம் என்று கருதுகிறேன். கடலூர் என்பது என்னுடைய தொகுதி. கடலூர் என்பது தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகரம். தலைநகரம் என்று சொல்லவே அசிங்கமாக இருக்கின்றது. பொதுவாக கடலூர் என்பது பற்றி ஜனங்களுக்கே தெரியாது. ரொம்ப பேருக்குத் தெரியாது. இப்போது கடலூர் துறைமுகம் என்று பெயர் வந்திருக்கிறதே, அதற்காக ரொம்ப சந்தோஷம். கடலூரைப்பற்றி நான்தான் இப்போது விளம்பரப்படுத்திக்கொண்டு வருகிறேன். முன்பு அதைப்பற்றி யாருக்குமே தெரியாது. எப்படி ரேடியோ, டி.வி.யிலே விளம்பரம் செய்கிறார்களோ அதேபோன்று இரயிலிலே நான் விளம்பரம் செய்கிறேன். அவ்வளவு உயர்ந்த கடலூர். இரயிலிலே போகும்போது கடலூர் என்று சொன்னால் அது எங்கே இருக்கின்றது என்று கேட்பார்கள். பாண்டிச்சேரிக்குப் பக்கத்திலே இருக்கிறது. விழுப்புரத்திற்கு பக்கத்திலே இருக்கின்றது. நெய்வேலிக்குப் பக்கத்திலே இருக்கின்றது என்று சொல்ல வேண்டும். இந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில் எப்போதுமே ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்கள்தான் எம்.எல்.ஏ.-வாக வருகிறார்கள். நான் ஒருவன் எதிர்க்கட்சியிலே இருந்தேன். இப்போது நானும் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டேன். அந்தத் தொகுதியின் நிலைமை அப்படி. ஆனால் அங்கே இருக்கின்ற மக்கள் 30 வருஷத்திற்கு முன்பு எப்படி இருந்தார்களோ அப்படியேதான் இப்போதும் இருக்கின்றது. அது உண்மை. ஆகவே சாதாரண



மாக ஏதாவது இருக்கிறதா என்று கேட்டால் ஒன்றும் காணோம். அங்கே கலைஞர் காலத்திலே ஆயிரம் கோடி ரூபாய் செலவிலே ஒரு உரத்தொழிற்சாலை ஆரம்பிப்பதாக பேப்பரிலே வந்தது. அதோடு சரி, அதன் பிறகு எம்.பி. எலக்ஷனில் நின்ற பாலா பழனூர் அவர்கள் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஒரு பெட்ரோலியம் தொழிற்சாலை வரும் என்று சொன்னார்கள். அது எங்கே போனது என்று தெரியவில்லை. வானவில் என்று போன தடவை சொன்னர்கள். அது வானவில் என்பது வானத்தில் தோன்றும் மறையும், தோன்றியதா மறைந்ததா அதுவும் தெரியவில்லை. இப்போது 600 ஏக்கர் நிலத்தை இன்டஸ்டிரியல் எஸ்டேட்டுக்காக எடுத்து இருக்கிறார்கள். அதை என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இதுபற்றி பட்ஜெட்டில் எதுவும் காணவில்லை. நிதியமைச்சர் நாவலர் அவர்களுக்கு ரொம்பத் தெரியும் கடலூரைப்பற்றி எல்லாம். கடலூரை கொஞ்சம் பாருங்கள். அதற்கு ஏதாவது பண்ணுங்கள்.

(மாலை 4.20)

முனிசிபாலிட்டியை எடுத்துக்கொண்டால் அந்த காலத்தில் என் மாமனார் இருந்த காலத்தில் போட்ட ரோடுதான். அதன் பிறகு ரோடு போடவில்லை. ரோடு போடவில்லை என்றால் கூட மண்ணை எடுக்கக்கூட பணம் இல்லை என்று சொல்கிறார்கள். தார் ரோட்டில் மண்ணை அடிப்பதற்கு பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அது ஹை இன்கம் வரும் முனிசிபாலிட்டி. அங்குபோய் என்ன இவ்வளவு வருமானம் வருகிறது செண்ட் பர்செண்டு வாடகை எல்லாம் வாங்குகிறீர்கள் ஏன் ரோடு போடவில்லை என்று கேட்டால் சம்பளம் கொடுப்பதற்கே பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அங்கு வரியை ஏற்றியிருக்கிறார்கள். சம்பளம் கொடுப்பதற்காக நாங்கள் எல்லா வரியும் கொடுக்க வேண்டுமா என்று எங்கள் தொகுதி மக்கள் கேட்கிறார்கள். நான் கேட்கவில்லை. எல்லா ஊர் முனிசிபாலிட்டியிலும் வீட்டு வரி 3 மாத வாடகை என்றால் எங்கள் ஊர் முனிசிபாலிட்டியில் 4 மாத வாடகையை வரியாக வாங்குகிறார்கள். ஆனால் ரோடு போடவில்லை. ரோட்டில் இருக்கும் மண்ணை எடுக்கவில்லை.

தண்ணீர் பஞ்சம் பஞ்சம் என்று சொல்கிறார்கள். எங்கள் ஊரில் 2 வருடம் போனாலும் தண்ணீர் பஞ்சம் வராது. மழை இல்லாமல் போனாலும் தண்ணீர் பஞ்சம் எங்கள் ஊரில் வராது. அது பூமியின் அடியில் நிறைய ஊற்று கிடைக்கிறது. அது நாங்கள் செய்த புண்ணியம் எங்கள் ஊரில் வறட்சி இல்லை. வறட்சியைப்பற்றி நான் பேசத் தயாராக இல்லை. மின்சாரம் இல்லாததால் வேறு இடங்களில் தண்ணீர் வராமல் இருக்கலாம். இங்கே பூமியை தோண்டினால் தண்ணீர் வருகிறது.

பொதுமக்கள் இதைப்பற்றி நோட்டீஸ் அடித்து விசாரணை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த சூப்பர் மார்க்கெட்டிலே உள்ள அந்த தனி அதிகாரியின் பேரில் விசாரணை செய்யவேண்டுமென்று கேட்டும் ஒன்றும் நடக்கவில்லை. அங்கே உள்ள தனி அதிகாரியின் அட்டகாசம் கொஞ்சநஞ்சம் அல்ல. எவன் கமிஷன் கொடுக்கிறானோ அவனுக்கு வேலை, உதாரணத்திற்குச் சொல்கிறேன். திண்டிவனம் மேலாளர் 5 இலட்ச ரூபாய் இருப்புக் குறைவு, விருத்தாசலம் மேலாளர் 50 ஆயிரம் ரூபாய் இருப்புக் குறைவு, உளுந்தூர்பேட்டை மேலாளர் 42 ஆயிரம் ரூபாய் இருப்புக் குறைவு. இவர்கள் எல்லாம் வேலையிலே இருக்கிறார்கள். டிஸ்மிஸ் பண்ணப்படவில்லை, அப்படியே இருக்கிறார்கள். ஆனால் விழுப்புரத்திலே ஆயிரம் ரூபாய் குறைவு, இன்னொரு ஊரிலே 1,400 ரூபாய் குறைவு, இவர்கள் எல்லாம் டிஸ்மிஸ், வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அந்த அதிகாரியைக் கவனித்தால்தான் அங்கே வேலை. இல்லையென்றால் வேலை இல்லை என்ற அளவுக்கு இருக்கிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பட்ஜெட்டிலே தான் பேசவேண்டும், இது எல்லாம் அந்தந்த மானியங்கள் வரும் போது பேசலாம். (குறுக்கீடுகள்) அவரைப் பேசச் சொல்ல இவ்வளவு ஆர்வமாக சப்போர்ட் கொடுக்கிறீர்கள், அதைப் போல பரஸ்பரம் ஒருவருக்கொருவர் சப்போர்ட் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

திரு. பாபு கோவிந்தராஜன் : இதோ இருக்கிறது அந்த போட்டோஸ்டட் காப்பி, இதை நான் நாவலர் அவர்களிடம் கொடுக்கிறேன். இதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. மா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிதியமைச்சர் நாவலர் மூலமாக இந்த நாட்டிற்கு அளித்த 1983-84 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்ததற்காக முதலில் நன்றியைத்

(மாலை 4-30)

தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இந்தியாவிலே தொடர்ந்து ஏழு நிதிநிலை அறிக்கைகளை நாட்டிற்கு அளித்து, நிர்வாகத்தில் சீர்கேடு எதுவுமில்லாமல், மத்திய அரசாங்கமும், அதனுடைய நிதித்துறையும், ரிசர்வ் வங்கியும் பாராட்டுகிற அளவிற்கு இந்த ஆட்சியின் நிர்வாகத்தை நடத்துகிற புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து, இன்று இந்தியாவில் மட்டுமல்லாமல் மற்றைய நாடுகள் கூட பாராட்டுகிற அந்த தன்மையை எடுத்துக் கூறுவதில் பெருமைப்படுகிறேன். அளித்திருக்கின்ற பட்ஜெட்டிலே ஒன்றுமில்லை என்று எதிர் கட்சியிலே இருப்பவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பார்க்கிறபோது, அவர் களிடத்திலே தான் எதுவும் இல்லை என்று மக்கள் தொடர்ந்து





திண்டுக்கல்லிலிருந்து, திருச்செந்துரர் வரைக்கு தீர்ப்பு வழங்கி வந்திருக்கிறார்கள். அவர்கள் மக்களுக்காக எதையும் விட்டு வைக்கவில்லை என்பது அவர்களுடைய பேச்சுக்களிலிருந்து தெரிகிறது. நமது நிதிநிலை அறிக்கையைப் பார்த்து அவர்கள் திருப்திபடவில்லை என்றால், நாட்டு மக்களுக்கு தந்திருக்கிற திட்டங்களை பார்த்தும் பார்க்காமல் இருப்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இந்த ஆண்டு மிகவும் உயர்ந்த அளவில் 845 கோடி நிதி ஒதுக்கீட்டை நமது நாவலர் அவர்கள் செய்திருப்பதையும், தொடர்ந்து 80-81லிருந்து ஒவ்வொரு ஆண்டும் 100 கோடி அல்லது 200 கோடிக்கு மேலே ஆண்டுத் திட்டங்களை உயர்த்தி காட்டியிருப்பதையும், அந்தத் திட்டங்கள் குறியீட்டு அளவிற்கு மேலே செலவு ஏற்பட்ட நிலையிலும் கூட அதை செம்மையாக செய்து முடித்திருப்பதையும் பார்க்க முடிகிறது. இது புரட்சித் தலைவர் அவர்களின் நிர்வாகச் செம்மைக்கும், ஆட்சியினுடைய சிறப்புக்கும் எடுத்துக்காட்டு என்பதை முதலில் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு மின்சார தட்டுப்பாடு காரணமாகவும், வறட்சியின் காரணமாக உணவு பங்கீடு போதிய அளவிற்கு இல்லை என்பதாலும், ஏதோ தமிழக அரசின் திறமையின்மை காரணமாக இவையெல்லாம் ஏற்பட்டு விட்டது அதனால் திராவிட முன்னேற்றக் கழகம் ' போராடுவோம் ' என்று கூறுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ' போராடுகிறோம்' என்று கூறுகிறது. இதை நாட்டு மக்களும், நல்லெண்ணம் படைத்த நடுவர்களும் எந்த கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் என்பதை உற்று நோக்க வேண்டும். மின்சாரத் திட்டத்திற்காக தி. மு. க. ஆட்சியில் ஆகட்டும், மற்ற ஆட்சியில் ஆகட்டும் ஒதுக்கப்பட்ட திட்டக் குறியீடு எவ்வளவு? அவர்கள் இந்த நாட்டின் முன் வைத்த திட்டங்கள் எவ்வளவு? என்பதை நாம் எல்லோரும் பார்த்து தான் வருகிறோம். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மட்டும் 272 கோடியை மின்சார உற்பத்திக்கென்று நாம் ஒதுக்கியிருக்கிறோம். ஒரு நாட்டினுடைய திட்டத்திற்கு, அதனுடைய வளர்ச்சிக்கு எது அவசியம் என்பதைப் பார்த்து அதைக் கருத்தில்கொண்டு அதற்கான திட்டங்களைத் தீட்டுகின்ற ஒரு ஆட்சி தான் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிற அரசாக இருக்கும் என்பதை உணர்ந்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இன்றைக்கு மின்சாரத் திட்டங்களுக்கு முன்னுரிமை தந்திருக்கிறது. அதைப்போலதான் கல்விக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கல்விக்காக நமது அரசு 360 கோடி ஒதுக்கியிருக்கிறது. கிராமங்களில் உயர்நிலைப் பள்ளிகளை எல்லாம் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றி, கிராமங்களில் கூட ஒரு கல்லூரியைக் காண்கிற அளவிற்கு, கிராம மக்கள் ஏழை எளியவர்கள் தரமான கல்வியை உயர்கல்வியை பெற்று, வேலைவாய்ப்பு பெறத்தக்க வகையில் வசதிகளைச் செய்திருக்கிறது. தொடர்ந்து கல்விக்காக முன்னுரிமை அளித்து திட்டத்

[திரு. பாபு கோவிந்தராஜன்] [1983 மார்ச் 11

ஸ்பிக் தொழிற்சாலையை தூத்துக்குடியில் உருவாக்கும்போதே சொன்னோம் தண்ணீர் அங்கே இல்லை என்றும் கடலூரில் அதை வையுங்கள் என்று சொன்னோம். அதை வைக்கவில்லை.

இங்கே பஸ் மந்திரிகூட உட்கார்ந்து இருக்கிறார். தென் ஆற்காடு மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கிற கடலூரி லிருந்து ஒரு பஸ் கூட கிடையாது. திருவள்ளுவர் சூப்பர் பஸ், ஏ.சி. பஸ் எதுவும் இல்லை. அந்த சூப்பர் பஸ் வேண்டாம்., அந்த ஏ.சி. பஸ் வேண்டாம் ஒரு சாதாரண பஸ் கூட விடவில்லை. சிதம்பரம், பாண்டிச்சேரியிலிருந்து பஸ்களை விடுகிறார்கள். எங்கள் ஊரிலிருந்து பஸ்களை விடவில்லை. எங்கள் ஊரிலிருந்து பெரியார் பஸ்தான் ஏறிவரவேண்டும். எங்கள் ஊரிலிருந்து பஸ் விட்டால் என்ன லாபம் வரும். அங்கிருந்து மந்திரியா வருகிறார். எங்கள் ஊருக்கு இந்த பக்கமாக இருக்கிற பாண்டிச் சேரியிலிருந்து கூட பஸ்களை விடுகிறார்கள். எங்கள் ஊரி லிருந்து ஒரு சூப்பர் பஸ் விட்டுபாருங்கள். அதில் எவ்வளவு வருமானம் வருகிறது என்ன நிலைமை என்று பாருங்கள். கடலூர் என்றால் யாருக்கும் தெரிவது இல்லை. நிதியமைச்சர் அவர்கள் பல முறை கடலூருக்கு வந்திருக்கிறார்கள். அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள் 2 வருடத்திற்கு முன்பு சித்ரா பௌர்ணமி விழாவின்போது வந்திருந்தபோது எங்கள் ஊர் கடற்கரையைப் பார்த்துவிட்டு ஆகா இவ்வளவு பெரிய கடற் கரை இருக்கிறதே, இங்கே சுற்றுலா மாளிகை அமைக்கலாம் என்று சொன்னார்கள். அதையாவது இங்கே சேர்த்து இருக் கிறார்களா என்று பார்த்தால் அதையும் சேர்க்கவில்லை. நாங்கள் சுற்றுலா மாளிகையை கேட்கவில்லை. கடலூருக்கு வேறு ஏதாவது நல்லதாக செய்யுங்கள். பெரியார் போக்குவரத்து கழகத்தின் தலைமை அலுவலகத்தை தென்னாற்காடு மாவட்டத் தின் தலைநகரமான கடலூரில் வைக்காமல் விழுப்புரத்தில் வைத்திருக்கிறார்கள். எலக்ட்ரிசிட்டியின் மெயின் டிப்போவை எங்கே வைத்திருக்கிறார்கள் என்று கேட்டால் அதையும் விழுப் புரத்திலே வைத்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் எடுத்து விட்டார்கள். இன்னும் ஒன்றே ஒன்றை தூக்கவில்லை. கலெக்டர் பங்களாவையும், கலெக்டர் ஆபிஸையும் தூக்க வில்லை. தூக்க முடிந்தால் அதையும் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள். அதை தூக்கமுடியாது காரணம் அங்கே ராபர்ட் கிளைவ் வாழ்ந்த நினைவுச் சின்னம் இருக்கிறது பெரிய சுவர்களும், தூண்களும் அங்கேயிருக்கின்றன. சரித்திர முக்கியத் துவம் வாய்ந்ததாக அவைகள் இருக்கின்றன. எல்லோரும் சொல்கிறார்கள் தென் ஆற்காடு மாவட்டத்தின் தலைநகரம் கடலூர் என்று. தென் ஆற்காடு மாவட்டத்தை கடலூர் மாவட்டமாக ஆக்கவேண்டும் என்று காலஞ்சென்ற இளம்வழுதி 1967-லிருந்து கத்திக்கொண்டிருந்தார்கள். கடலூர் மாவட்டம் என்று பெயர் வைத்தாலாவது அதற்கு பெயர் வரும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.



1983 மார்ச் 11] [திரு. பாபு கோவிந்தராஜன்]

எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் காலையில் பேசினார்கள். அவர்கள் ஒரு நோயாளி என்று சொன்னார்கள். நானும் ஒரு நோயாளி தான் அவர்களுக்கு என்ன நோய் என்று எனக்குத் தெரியாது. ராவணன் 8 திசையும் சுற்றிவந்தான் என்று சொல்வார்கள். நானும் 8 நோய்களை தாங்கிக்கொண்டிருக்கிறேன். நான் திசைகளை எண்ணவில்லை என்றாலும் நோய்களை எண்ணி வைத்திருக்கிறேன். என்ன என்ன நோயோ வருகிறது. பயங்கர மான நோயோடு வந்து நிற்கிறேன். அவர் சொன்னார் போலீஸ்காரர்கள் கேஸ் போடுகிறார்கள் என்று. ஆளுங்கட்சி யிலே இருக்கிற என் மேலேயே கேஸ் போடுகிறார்கள். போலீஸ் காரன் கேஸ் போட்டால் என்ன பண்ணமுடியும்? என் பேரிலே போட்டான், விட்டானா மூன்று 307 போட்டார்கள். ஒரு 307 இல் கன்விக்ஷன். பாக்கி நடந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு பற்றியெல்லாம் சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டம் பற்றிச் சொன்னால் அருமையான திட்டம், நியாய மான திட்டந்தான். ஆனால் அதிகாரிகளை எடுத்துக்கொண்டால் தன்னிறைவு அங்கே போகிறது. ஒரு பி.டி.ஓ.வுக்கு 10 ஆயிரம் ஒரு கமிஷனருக்கு 10 ஆயிரம் ரூபாய். தன்னிறைவு அவர் பிழைக்கிறார். சத்துணவுத் திட்டம் ஒரு ஒன்றியத்திற்கு 10 ஆயிரம் ரூபாய். அது அதிலே கமிஷன். கூட்டுறவுப்பற்றிச் சொல்லுகிறபோது ஊழல் ஊழல் என்று பேசினார்கள். இந்தியா விலே தமிழ்நாட்டிலேதான் கூட்டுறவு சிறப்பாக விளங்கியது. 1976 ஆம் ஆண்டு இந்திரா அம்மையார் அவர்கள் காருண்யத்தோடு இந்தியாவிலே சிறப்பாக இருந்த கூட்டுறவைக் கலைத்தார்கள். அதைப்போல இந்தியா விலேயே சிறப்பான சூப்பர் மார்க்கெட் சிந்தாமணி, அதேமாதிரி கூட்டுறவுத் துறையிலே சிறந்த பேங்க் கும்பகோணம் கோவாப்ரேடிவ் பாங்க், பிரைஸ் வாங்கிய இடம். கடலூர் சூப்பர் மார்க்கட்டிலே நான் தலைவராக இருந்தேன். 1975-76 இல், வருஷத்திற்கு 3 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது. இப்போது 5 லட்சம் நட்டம் ஏற்படுகிறது. ஆங்காங்கே இருக்கின்ற அதிகாரிகள் எவ்வளவோ செய்கிறார்கள் போன மாதம்கூட நான் கூட்டுறவு அமைச்சர் திரு. பொன் னையன் அவர்களுக்கும் ரிஜிஸ்திராருக்கும் அனுப்பியிருக்கிறேன். உணவுப் பஞ்சம் இருக்கிறது. நாவலர் அவர்கள் கொஞ்சம் கவனிக்கவேண்டும். , நெருக்கடியான நிலை இருக்கிறபோது 10 லாரிகளில் ஆயிரம் மூடை மைதா, ரவை மெட்ராஸ் லிருந்து தென் ஆற்காடு மாவட்டத்திற்கு சப்ளை பண்ணுவதற்கு வரவேண்டியது. அந்த 10 லாரி ரவை மைதாவை மெட்ராசிலேயே விற்றுவிட்டார்கள். கட லூருக்குப் போகவில்லை. நான் மந்திரிக்கு எழுதியிருக்கிறேன். ரிஜிஸ்திராருக்கு விசாரணை செய்யவேண்டுமென்று எழுதினேன். இங்கேயே விற்றுவிட்டு 10 லாரிகளும் அங்கே வந்த மாதிரி லாரி வாடகையும் வாங்கிவிட்டார்கள். பில்லை வாங்கிவிட்டார்கள்.

சட்டமன்றமே வாழ்த்து தெரிவித்து இருக்கிறது. ஆனால் கூட்டு சேர்ந்திருக்கிற மாநிலத்தின் நிலைமையைத் தயவுசெய்து அந்த மாநாட்டை முடித்துக் கொண்டாவது நமது பிரதம அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும். நாம் கூட்டு சோந்து, இந்தியாவை வளப்படுத்தி, இந்தியாவிலே இருக்கிற அனைத்து மாநிலங்களுக்கும் சுபிட்சம் ஏற்படுத்த வேண்டுமென்னும் முறையில் தான் இந்தியக் குடியரசைக் கண்டோம். ஆனால், இருக்கிற நிலைமை என்ன ? வறட்சியால் ஒரு பகுதி மக்கள் தொடர்ந்து வாடுவது, வெள்ளத்தால் ஒரு பகுதி மக்கள் துயர் அடைகின்ற அந்த நிலைதான் தொடர்ந்து 35 ஆண்டுகளாக இந்த நாட்டிலே இருந்து வருகிறது என்பதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை]

கங்கை-காவேரி இணைப்பு என்பது டாக்டர் கே. எல். ராவ் அவர்களால் கொடுக்கப்பட்ட அறிக்கையில், பூர்வாங்கமாக அது சாத்தியக் கூறான திட்டம்தான், அதை நிறைவேற்றலாம் என்று சொல்லியிருந்தாலும்கூட பல ஆண்டுகள் அது பேசப்பட்டிருந்தாலும்கூட, அதுபற்றி மைய அரசு கவனிக்க வில்லை. அதுபோன்ற ஒரு திட்டத்தை நிறைவேற்றியிருந்தால் ஒரே திட்டத்தின் வாயிலாக, இன்று தமிழகத்தில் மட்டும் அல்லாமல், தென்னிந்தியாவிலேயே வறட்சி என்ற நிலை, எத்தனை ஆண்டுகள் மழை இல்லாமலிருந்தாலுங்கூட, இல்லாமல் இருந்திருக்க முடியும்.

[மாலை 4—40]

அதுகூட இல்லை. குறைந்தது இரு நூறு (200) கோடி ரூபாய்க்கு உட்பட்ட செலவில், பெனின்சுலார்ரிவர் என்று சொல்லப்படக்கூடிய மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி ஆகிய நதிகளை இணைப்பதன் மூலம் தென்மாநிலங்களில் ஏற்படுகின்ற வறட்சியை நிரந்தரமாகப் போக்க முடியும் என்று மத்திய அரசு அமைத்த (Flood Prevention Committee) குழு கொடுத்த அறிக்கையில் கூறியிருக்கின்ற கருத்துக்களை ஆய்ந்து பார்த்து, அதை நிறைவேற்ற ஒரு விரைவானத் திட்டம் உண்டா ? ஏன், அதை நிறைவேற்ற முடியாதா ? ஆஷியாட் விளையாட்டுகளுக்காக 1000 கோடி ரூபாயைச் செலவழிக்கின்ற மத்திய அரசாங்கம் இதைப்பற்றிய சிந்தனையைச் செய்தால் நிறைவேற்ற முடியாதா ? நிறைவேற்ற முடியும்.

முப்பத்தைந்து ஆண்டுகளில் பேசப்பட்ட திட்டங்கள் எதுவும் நிறைவேறாத காரணத்தினால்தான் தொடர்ந்து வறட்சியைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாநிலத்திற்குக் கூடுதல் அதிகாரம் வேண்டுமென்று கேட்டால் அதிகாரத்தைக் கொடுக்கின்ற நிலையில் இருப்பவர்கள் கொடுக்க மாட்டார்கள். என்கின்ற நிலைமை இருக்கிறது. மாநிலத்தில் வறட்சி என் றால் அதைக் கேட்கின்றவர்கள் அக்கறை கொள்பவர்களாக





இல்லை. காரணம் என்னவாக இருக்கும் என்றால், பாதிக்கப்பட்டிருப்பவர்கள் ஒருசமயம் அவர்கள் இருக்கின்ற இடத்திலேயிருந்து தொலைவில் இருக்கின்ற காரணத்தாலோ அல்லது கலாச்சாரத்திலும் மொழியிலும் அவர்களைவிட வேறுபட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தாலோ நாம் அறிய முடியவில்லை, அவர்கள் அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள். இனியாவது அவர்கள் இதுபோன்ற விஷயங்களில் நாட்டத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கருத்தைச் சொல்லும்பொழுது காங்கிரஸ் தலைவராக இருந்த ரோச் விக்டோரியா என்பவர், அமைச்சராக இருந்தவர் ஒரு உரிமத்துக்காக விண்ணப்பம் செய்தபொழுது அவருடைய விண்ணப்பம் மறுக்கப்பட்ட நேரத்தில் அவர் கூறிய கருத்தை நினைவு படுத்த விரும்புகிறேன். பெரும் தேசபக்தர் ஒருவர் அன்றைக்குக் கூறிய கருத்து இன்றைக்கும் உண்மையாக இருக்கிறது, அந்தக் கருத்து இன்றைய நிலைமைகளுக்கும் ஒத்து வருகிறது என்பதால் இதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அந்த உரிமை மறுக்கப்பட்ட நேரத்தில், அவர் அந்த அறிக்கையில் கீழ்க்கண்டவாறு கூறினார் :

It is time, therefore, that all those who are interested in the industrial development of the South should join hands and see to it that the economic freedom of the State in particular and the South as a whole is not taken away from us.

என்று 1956 ஆம் ஆண்டிலேயே தென் மாநிலங்களினுடைய பொருளாதார உரிமைக்காக, பொருளாதார விடுதலைக்காக தங்களுடைய ஒற்றுமை உணர்வுகளுக்காக, ஒருமித்த உரிமைக் குரல் எழுப்பப்பட வேண்டுமென்று சொல்லியிருப்பதைப் பார்த்தால், மானசீகமாகவே இன்றைய தினம் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்குமென்பதை எண்ணிப் பார்த்துச் சொல்லியிருப்பார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

ஆகவே, அந்த நிலையை இந்த நாட்டு மக்கள் நலத்திலே அக்கறையுடைய அத்தனைபேர்களும் எடுத்துச் சொல்லிய கருத்துக்களை நாம் இன்றைக்கு உணர்ந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்திய அரசாங்கத்தை எதிர்த்துத்தான் இந்த ஆட்சியில் நாம் வளர வேண்டுமென்பது அல்ல ; நாம் இந்தியாவின் அங்கமாக இருப்பவர்கள் என்பதால்தான் கேட்கிறோம். ஆனால் நம்முடைய கோரிக்கைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன. மாநில உரிமைகள் மட்டுமல்லாமல், மாநிலத்திற்கு வேண்டிய நிதி ஆதாரங்கள ஆகியவைகளையும் பற்றி மீண்டும் பரிசீலித்து வழங்க வேண்டுமென்கிற உணர்வை மத்தியில் இருப்பவர்களுக்கு ஏற்படுத்த வேண்டியது நம்முடைய கடமை.

திலே இடமளித்து இருக்கிறது. இதையெல்லாம் ஒன்றுமில்லை என்று எப்படி சொல்கிறார்கள் என்பதை மனசாட்சி உள்ளவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

சத்துணவுத் திட்டம் கொண்டுவரப்பட்ட நேரத்தில், இது ஏதோ மக்களை ஏமாற்றுகிற திட்டம், அல்லது தேர்தல் காலத்திற்காக கொண்டு வரப்பட்ட திட்டம் என்றெல்லாம், மனதிலே தோன்றியதை எல்லாம் சொல்லி வந்தவர்கள் இன்று அங்குமிங்கும் இருக்கிற ஒரு சில குறைபாடுகளைத்தான் சுட்டிக் காட்ட முடிகிறது. சத்துணவுத் திட்டத்தின் பெருமையையும், நாட்டுமக்கள் சத்துணவுத் திட்டத்தை அளித்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களை பாராட்டுவதையும் மறுக்க முடியவில்லை என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறபோது அவர்கள் எதிரான கட்சியில் இருக்கிறார்கள் என்பதற்காகவே குறை கூறுகிற தன்மையைத்தான் இன்று நாம் எதிர் வரிசையிலிருந்து கேட்டு வருகிறோம். ஆனால் ஒரு கருத்திலே வெளிப்படையாக இல்லையென்றாலும், மறைமுகமாகவாவது ஒன்றுபட்டிருக்கிறோம், என்று கருதுகிறேன். மாநில அரசாங்கத்திற்கு உண்டான நிதியாதாரத்தை மத்திய அரசிடமிருந்து பெறுகிற அந்த ஒரு கொள்கையில் ஒத்திருக்கிறோம். ஆக, இந்த நிலையிலாவது, இந்த நாட்டிற்காக, இந்த தமிழ் மக்களுக்காக, இன்று எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், பாராளுமன்றத்திலே நிறைந்த அளவு உறுப்பினர்களைத் தமிழகத்தின் பிரதிநிதிகளாகக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் வாதிடுமா என்றுதான் இங்கே மாநில சுயாட்சியைப் பேசுகிறவர்களைப் பார்த்து மக்கள் கேட்கிறார்கள். ஆனால், நமக்குக் கிடைத்து இருப்பதெல்லாம் அவர்களுடைய போக்கிலே ஏமாற்றம் தான். நேர்மையாக, நீதியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு ஆட்சியை, அரசியல் சட்டத்திலே எந்த ஒரு விதியை நாம் எல்லாம் தேவையற்றது என்று பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்து சொல்லி வந்தோமோ, அந்த விதியைப் பயன்படுத்தி, ஆட்சியைக் கலைத்த நேரத்தில், இதைக் கலைப்பதற்குக் காரணமாக இருந்ததோடு மட்டுமல்லாமல், வரவேற்ற தன்மையை நாம் மறக்க முடியாது. ஆகவே, எங்கு தமது கட்சிக்கு எதிரான ஒரு கட்சி என்ற காரணத்தினாலேயே அது மாநில சுயாட்சிக் கொள்கைக்கு, அல்லது மாநில அதிகாரத்திற்கு அப்பாற்பட்டிருந்தாலுங்கூட, அதை வரவேற்று வருகிற தன்மையைத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து கடைபிடித்து வந்திருக்கிறது என்பதையும் இன்று நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆக, இதுபோன்ற பல நிலைகளில், நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்றதான எந்த ஒரு திட்டம் கொண்டு வந்தாலும், ஒத்துழைப்பைத் தராததோடு மட்டுமல்லாமல், உண்மைக்குப் புறம்பானவற்றை, நாட்டு மக்களிடையே சொல்வதையே, தன்னுடைய கொள்கையாகக் கொண்டிருப்பவர்கள் மத்தியில் புரட்சித் தலைவருடைய ஆட்சி நடத்தி வருகிற இந்தச் சாதனைகளை நாம் இன்று மனதாரப் பாராட்டுகிறோம்.





அடுத்து, இன்றைய வறட்சி நிலையில் கொடுத்திருக்கிற பட்ஜெட் என்ற காரணத்தினால், வறட்சியால் நாடு அடைந்திருக்கின்ற பல துயரங்களுக்கிடையே இந்த நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது என்பதை அருள்கூர்ந்து, மாற்றுக் கருத்துக்கள் உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். வறட்சி என்பது நாம் ஏற்படுத்தியது அல்ல, இயற்கையின் விளைவால், இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட வறட்சி இது. இன்று நீரில்லை, அதனால் உணவுப் பற்றாக்குறை. நீர் வளம் இல்லை, மின் பற்றாக்குறை, ஆகவே, உற்பத்தி முடக்கம், சேல்ஸ் டாக்ஸ் போன்ற வரிகள் மூலம் வரவேண்டிய வருவாய்க் குறைவு. ஆகவே, இவ்வளவு இடர்பாடுகளுக்கிடையே இதைவிட சிறப்பான நிதிநிலை அறிக்கையை தந்துவிட முடியுமா என்பதை மனசாட்சி உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக, இந்த நிலையில்கூட நாமே சமாளித்துக் கொள்கிற அளவுக்கு முடியாததற்குக் காரணம், நம்மிடம் நிதி ஆதாரம் இல்லையென்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். நாம் கேட்கிறோம் என்ற காரணத்தினாலேயே—இதுபோன்று காஷ்மீர் அரசாங்கமும் மேற்கு வங்காள அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறவர்களும் பலமுறை மாநில அரசாங்கத்தினுடைய உரிமைகளைக் கேட்டு வலியுறுத்தி வந்திருந்தாலுங்கூட, கேட்பவர்கள் காங்கிரஸ்காரர்கள் அல்லாதவர்கள் என்ற காரணத்தினாலேயே மத்தியில் ஆளுகிற சர்க்கார், ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் நல்ல சிந்தனை இல்லாமல், மாறுபட்ட கண்ணோட்டத்தோடு பார்க்கிற காரணத்தினால்தான் அதிலே இருக்கிற காரண காரியங்களை, உண்மை நோக்கங்களை அறியாத காரணத்தால்தான் இன்று இந்த நிலைக்கு ஆட்பட்டிருக்கிறோம்.

வறட்சி போன்று திடீர் என்று ஏற்படுகிற நிலைமையைச் சமாளிப்பதற்கு மாநில அரசாங்கத்திற்கு வேண்டிய நிதி ஆதாரங்களை—நமக்குத் துயர் ஏற்படுகிற நேரத்தில்—மத்திய அரசாங்கத்தை அணுகி, நாடி, பெறவேண்டிய ஒரு கால கட்டாயத்தில் நமது அரசியல் சட்ட அமைப்பு இருக்கிறது என்பதைத்தான் இன்றைய நிலை உணர்த்துகிறது. ஆகவே, பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்த அந்த பைனான்சிங் கமிஷன், தன்னுடைய பதவியை நிரந்தரமாக வைத்துக்கொள்வது தேவை என்கிற நேரத்தில், மாநில முதல்வர்களைக் கூட்டி, மாநிலங்களுக்குத் தேவைப்படுகிற நிதி ஆதாரங்களைப் பெறுகிற வகையில், நமது அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கான இதைவிட ஒரு சிறந்த நேரம் இருக்காது என்று கருதுகிறேன்.

நாம் இன்று கூட்டுசேரா நாடுகளுடைய பெரும் கூட்டத்தைக் கூட்டி, உலகத்தின் ஒரு பலம் வாய்ந்த இடமாக டெல்லியை ஆக்கி இருக்கிறோம். நாம் பாராட்டுகிறோம். பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய அந்த வெற்றிக்காக நம்முடைய

இந்த உணர்வோடு அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்தவர்களும் இன்றைக்கு ஏற்பட்டுள்ள இயற்கையின் சவாலை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு மாற்றுக் கட்சியினர் அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டுமே தவிர, சவால் விடுகின்ற போராட்டங்களை நாடுகின்ற உணர்வைக் கொண்டிருக்கின்ற காரணத்தால்தான் மக்களும் அவர்களை மறந்து விடுகிறார்கள்.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைப் பற்றியும், காவிரிக்கு வருகின்ற தண்ணீரைப் பற்றியும் சொல்லுகின்ற பொழுது அவைகளில் தேசியத்தை ஏற்படுத்துவதற்கு அவர்கள் மறந்து விட்டால் தேசியம் வற்றி விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவிரிலேயும், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளிலேயும் இந்தத் தேசியத்தைக் கலந்தால்தான் நீங்கள் இங்கே மக்களின் மதிப்பை பெற முடியும். தங்களை மக்கள் புறக்கணிக்கிறார்களே என்று காங்கிரஸ்காரர்கள் வருத்தப்பட்டுக்கொண்டால், நீங்கள் மக்களின் நன்மைக்காகக் கூறப்படுகின்ற காரியங்களைப் புறக்கணிக்கின்ற காரணத்தினால்தான் உங்களையும் மக்கள் புறக்கணிக்கிறார்களே தவிர வேறெதுமில்லை என்பதை இன்றைக்காவது உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த நாட்டுமக்களின் நன்மைக்காகப் பாடுபடுகின்ற புரட்சித் தலைவரவர்களின் அரசுக்கு நீங்கள் எல்லா விதங்களிலேயும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசியை 5,000 டன்கள் அல்ல, 50,000 டன்கள் கொடுத்தாலும்கூட அவ்வளவு டன் அரிசியையும் சாப்பிட்டு வாழ்பவர்கள் இந்த நாட்டின் மக்கள்தான் என்பதை அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமே தவிர இதிலே ஏதோ சாக்குபோக்குச் சொல்லிக்கொண்டு இருந்தால் மக்கள் பிரச்சினையில் நீங்கள் ஒதுங்கியிருப்பதாகத்தான் மக்கள் எண்ணுவார்கள். எனவே நீங்கள் அவ்வாறு இருப்பது நாட்டுக்கும் நல்லது அல்ல ; ஒருமைப்பாட்டிற்கும் நல்லது அல்ல என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அசாமிலே செய்யப்பட்ட புரட்சியைப் போன்று நடத்தி உரிமைகளைக் கேட்கவில்லை அல்லது பஞ்சாபிலே அசாலி தளத்தினர் நடத்துகின்ற பேராட்டத்தைப்போல, வேண்டாத ஒன்றை நடத்தி தேசிய நலனுக்கு ஒத்துக்கொள்ள முடியாத ஒன்றைக் கேட்கவில்லை. நாம் கேட்பதெல்லாம், இயற்கைச் சூழலில் ஏற்பட்டிருக்கின்ற விளைவுகளின் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகளைச் சமாளிப்பதற்காக, கூடுதல் உணவு தான் கேட்கிறோம். ஆகவே, அந்த உரிமைகளை மத்திய அரசாங்கம் நமக்குத் தர வேண்டிய கடப்பாட்டைப் பற்றி இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



வறட்சியால் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருப்பது கோவை மாவட்டம் ஆகும். கோவை மாவட்டம் சென்ற ஆண்டு வறட்சிப் பகுதி இல்லை என்று அறிவிக்கப்பெற்றது. இந்த ஆண்டும் அந்த நிலைமையை அது அடைந்து விடக்கூடாது என்ற என்னுடைய ஆழமான எண்ணத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வறட்சி பற்றிய ஆய்வு அறிக்கை அனுப்பப்பட்டு 15 நாட்களில் தொடர்ந்து ஏற்பட்டிருக்கின்ற விளைவுகளை பார்ப்பதற்கு மீண்டும் ஆய்வுப் பணிகளைச் செய்வதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதில் பல வறட்சிக் குட்பட்ட கிராமங்களில் விடப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, கோவை மாவட்டத்தில் இருக்கிற என்னுடைய தொகுதியான தொண்டாமுத்தூர் தொகுதியில் பல ஊர்களுக்கு பயன்தரத்தக்க நெல்லித்துறை குடிதண்ணீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கான திட்டம் (குறுக்கீடு)....உலக வங்கியின் உதவியோடு, அதை விரைவுபடுத்தி நிறுவித்தர வேண்டுமென்று கோரி என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இன்று இந்த ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்திலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில், நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நிதிநிலை வரவு-செலவுத் திட்டம் 1980-81-ல் மத்திய திட்டக் குழு ஒப்புதல் கொடுத்தது ரூ. 408.25 கோடி ஆனால் அந்த ஆண்டில் செலவிட்டது ரூ. 456.46. 1981-82-ல் மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் கொடுத்தது ரூ. 514 கோடி. ஆனால் நாம் செலவிட்டது ரூ. 619.54 கோடி. 1982-83-லே மத்திய திட்டக் குழு ஒப்புதல் கொடுத்தது ரூ. 711 கோடி. நாம் செலவிட்டது ரூ. 795.93 கோடி. அதுபோலவே 1983-84க்கு மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் கொடுத்திருக்கிறது நம்முடைய அரசுக்கு ரூ. 845 கோடி. ஆனால் நாம் செலவிட குறிப்பிட்டிருப்பது ரூ. 893.46 கோடி. இப்படி திட்டக் குழுவிற்கு அதிகமாக நாம் மக்களுக்காக செலவு செய்வது. நன்மையென்று சொன்னாலும், இதனால் தான் பற்றாக்குறை பட்ஜெட் என்ற முறையிலே — பற்றாக்குறை பட்ஜெட் 194.83 கோடி என்ற பெயரை எடுக்கவேண்டியிருக்கிறது. மக்களுக்காகச் செலவு செய்ய வேண்டிய நல்ல காரியங்களுக்குச் செலவு செய்வதிலே நாம் ஒன்றும் குறை கூறவில்லை. அந்த செலவுகளுக்காக நாம் ஒதுக்கும் திட்டத்திலே கண்ட செலவுகளை—நாம் ஆட்சிக் காரணத்தால் அல்லது அரசியல் நோக்கு காரணத்தால் அல்லது நமக்கு—மக்களுக்கு அது யதார்த்தமாக பயன் அளிக்காது

என்று தெரிந்தும் கூட—பிடிவாத எண்ணத்தோடு, அரசியல் எண்ணத்தோடு நாம் செலவு செய்கின்ற அவல நிலைமையை நாம் காண்கிறோம். குறிப்பாக உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்—குழந்தைகளுக்குப் பல் பொடித் திட்டம் நான் உண்மையிலேயே குறை கூறுவதாகச் சொல்லவில்லை. சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளாக—இந்தக் குழந்தைகள் பள்ளிக்கூடத்திலே, பல் விளக்கினார்களா—இல்லையா—அல்லது பெற்றோர்கள் விளக்கினார்களா—இல்லையா? அல்லது பல் விளக்குவதற்கு முடியாத நிலைமை இருந்தாலும், இயற்கையாக பல் குச்சிகள்—அதாவது ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்று கூறிய தமிழ் முன்னோர்கள் சொன்னதைச் செய்கின்ற நிலைமை இருக்கும்பொழுது இந்த நிலைமையைத் தவிர்த்திருக்கலாம். கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக அல்ல, ஏழை குழந்தைகளுக்குக் கொடுப்பதிலே எனக்குப் பங்கு அதிகம் உண்டு. நான் பங்காகச் சொல்லவில்லை. நடைமுறையிலே அதை சிக்கனப்படுத்தி நிறுத்தி வைக்கலாம். இது மிக மிக அவசியம்தானா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுபோல கழிவறைகள் பற்றி கூட சொல்கிறோம். கழிவறைகள் வேண்டாம் என்று சொல்லவில்லை. 1958-ஆம் ஆண்டிலிருந்தே மத்திய அரசின் மூலம் பாதி தொகையை அவர்கள் கொடுத்தும், பாதித் தொகையை அரசாங்கம் கொடுத்தும் கூடச் செய்தார்கள். இன்றைய நிலைமையில் கிராமாந்திர மக்களுக்குத் தண்ணீரே இல்லாத ஒரு அவல நிலைமை இருக்கிறது. — அதுவும் இந்த நேரத்திலே நிலவுகின்றது. இப்படிப்பட்ட இடங்களிலே நாம் இப்பொழுது கோடிக்கணக்கான தொகையைக் கொடுப்பது என்றால் அங்கு இருக்கிற பஞ்சாயத்து போர்டுகள் இல்லை—தலைவர்கள் இல்லை—பஞ் பஞ்சாயத்து மெம்பர்கள் இல்லை—முனிசிபாலிட்டி இல்லை—பஞ்சாயத்து யூனியன் இல்லை—கேட்பாரற்ற நிலைமை இருக்கிறது. அங்குள்ள கிராம சேவிகா தான் எல்லாம் தயார் பண்ணுகிறார்கள். அரசுக்கு சர்வ் பண்ண வேண்டிய அதிகாரிகள் அங்கு இருக்கிறவர்களா—அங்கு இருக்கிற செலவுகளை சரி என்று சொல்லக் கூடிய—பஞ்சாயத்து அக்கௌண்ட்ஸ்களை எழுதக் கூடியவர் பஞ்சாயத்து எக்ஸ்டென்ஷன் ஆபிசர் அதை வெரிபை பண்ணக்கூடியவர். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அதை செலவு சாங்கிஷன் செய்கின்றவர். பில் போட்டு சரி பண்ணக் கூடியவரோ கிராம சேவகர்—அவர் 8-ஆவது, 9-ஆவது—10-வது படித்த ஒரு சகோதரர்—செலவு செய்கிறவர்களும் அவர்களே, திட்டமிடுவதும் அவர்களே—வௌச்சர் வாங்குவதும் அவர்களே—இந்த நிலைமையில் இந்த 22 கோடி ரூபாயை யார் கையில் ஒப்படைக்கப் போகிறீர்கள்?

(மாலை 4-50)

அதை யார் செய்கிறார்கள்? எந்தக் கட்சிக்காரர்களைச் சேர்ந்த, கான்ட்ராக்டர்களாக இருந்தாலும் சரி, அதனால் எந்தக் கட்சி மக்கள் இதிலே நன்மை அடைகிறார்களா இல்லையா என்பதற்



காக நான் சொல்லவில்லை. இப்போது கடுமையான வறட்சிக் காலத்திலே, தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற நேரத்திலே, அந்தக் கக்கூசுகளைக் கட்டுவதாலே, தண்ணீர் கிடைக்காத இந்த நேரத்திலே எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. ஏதோ குறிப்பிட்டு விட்டோமே ஆகவே, அதைச் செய்வோம் என்ற நிலைமையிலே இல்லாமல் அதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த சேது சமுத்திர திட்டம். இதைப்பற்றி ஏதாவது இந்த அறிக்கையிலே வரும் என்று எதிர்பார்த்தேன். அதற்கு யார் காரணம் என்று சொல்லலாமே? ஏன் சொல்லவில்லை. அதைப்பற்றி இங்கே, அறிவிக்கவேண்டும். இத்திட்டம் தமிழ் மக்களுக்காக, தமிழ் நாட்டுக்காக, வரவேண்டிய நல்ல கோரிக்கைகளுக்காக நாங்கள் ஒத்துழைப்போமே தவிர ஒருநாளும் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பாக இருக்கமாட்டார்கள், இருந்ததில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும். இப்போதுகூட வறட்சிக்காக நீங்கள் அரிசி மத்திய அரசிடம் இருந்து கேட்கவில்லையா. அது தமிழ்நாட்டு மக்களுக்கு அல்லவா என்று கூட சில நண்பர்கள் சொன்னார்கள். நீங்கள் அரசியல் காரணத்திற்காக எரியும் கட்சி எரியாத கட்சி மன்மதன் கட்சி என்று மாசி மாதத்திலே கிராமத்திலே சொல்வார்களே, அந்த மாதிரி நிலைமையை நான் சொல்லவில்லை. ஏன் இந்த வறட்சிக்காக முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை? நம்முடைய நாட்டிலே வறட்சி என்று 1982 அக்டோபரிலே நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பிறகு கேட்கின்றபோது, இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ஆம் தேதி கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏன் வந்தது? என்பதற்காகத் சொல்கிறேனே தவிர, தமிழகத்து மக்கள் பட்டினி கிடந்து சாகவேண்டுமென்பதற்காக காங்கிரஸ் கட்சியோ அல்லது எதிர்க்கட்சிக்காரர்களோ, யாரும் அதற்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டார்கள், விட்டுக் கொடுக்கமாட்டார்கள். மக்களைப் பட்டினியால் சாவதற்கு யாரும் உடந்தையாக இருக்கமாட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசியல் காரணத்திற்காக எரியும் கட்சி, எரியாத கட்சி என்ற நிலைமையை விட்டுவிட்டு, யதார்த்தமாக ஏன் முன்கூட்டியே சொல்லவில்லை என்றுதான் கேட்கிறோம். முதலிலே அனுப்பிவிட்டோம் என்று சொன்னார்கள். பிறகு அனுப்பவில்லை என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு பிப்ரவரி மாதம் 24-ஆம் தேதி அனுப்பப்பட்டதாகச் சொன்னார்கள். நீங்கள் முன்னாலேயே அறிக்கை கொடுத்து விட்டீர்களா இல்லையா என்ற சந்தேகம் வந்ததால் இந்த நிலைமை வருகிறதே தவிர இந்த, அரசாங்கத்திற்கு உதவி செய்யக்கூடாது என்ற அந்த எண்ணம் யாருக்கும் இல்லை. அப்படிச் சந்தேகப்படுவது நியாயம் அல்ல. வேண்டுமானால் அரசியல் காரணத்திற்காக ஏதாவது சொல்லவேண்டுமே என்ற ஒரு அவல நிலைமையை உருவாக்க வேண்டாம் என்று

அதே போல் சேது சமுத்திர திட்டம். இன்றைக்கு அதனுடைய நிலைமை என்ன ? மத்திய அரசு என்ன சொல்லியிருக்கிறது ? அதற்காக நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று அதைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டு இருந்தால் நாம் நிச்சயமாக மத்திய அரசோடு பேசி கேட்க முடியும், எழுதிக் கேட்க முடியும். இந்த நல்ல திட்டத்தினால் இலங்கையைச் சுற்றிக் கொண்டு வர வேண்டிய வியாபாரிகள், கப்பல்கள் எல்லாவற்றிற்கும் நன்மை ஏற்படும். பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு இதனால் வேலை கிடைக்கும். அந்நியச் செலாவணியினால் தமிழகத்திற்கும், இந்திய நாட்டுக்கும் நல்ல பலன் கிடைக்கும். நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடிய ஒரு அருமையான திட்டம். இப்போது அந்தத் திட்டத்தின் நிலைமை என்ன ? அதைப் பற்றி மத்திய அரசோடு பேசி ஏதாவது செய்திருக்கிறீர்களா ? என்ற இந்தக் குறிப்பிலே காட்டியிருந்தால் நிச்சயமாக நாமும் அதற்காகப் போராடலாம். அதற்கு வேண்டியதைக் கேட்பதற்கு உங்களுக்கு உறுதுணையாக இருக்கலாம். இப்போதும் காலம் கடந்து விடவில்லை. நிச்சயமாக இந்தச் சேது சமுத்திரத் திட்டத்திற்கு உடனடிப் பரிகாரம் காண்பதற்கு மத்திய அரசோடு தொடர்பு நீங்கள் கொள்ள வேண்டும். என்ன நிலைமை என்பதை நீங்கள் விளக்கிச் சொல்ல வேண்டும். அதற்கு நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே பதில் சொல்வார் என்று நம்புகிறேன்.

அதே போல் நுழைவு வரித் திட்டம். இந்தத் திட்டத்தினால் எல்லோருக்கும் தொல்லை. ஆளும் கட்சிக்காரர்களுக்கும் தொல்லை. எதிர்க் கட்சிக்காரர்களுக்கும் தொல்லை. நகரத்து மக்களுக்கும் தொல்லை, வியாபாரிகளுக்கும் தொல்லை. அதிகாரிகள் யோக்கியமானவர்களாக இருந்தால் அவர்களுக்கும் தொல்லை. அதிகாரிகள் இதன்னால் பிழைப்பு நடத்த வேண்டுமென்று யாராவது இருப்பார்களானால், இருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை, அப்படி எண்ணுகின்ற ஒரு சிலருக்கு லாபம் இருக்கலாமே தவிர, உண்மையானவர்களுக்கு இது ஒரு அவல நிலையை உண்டாக்கும். பழைய காலத்திலே டோல் கேட் என்று டெல்லிக்குப் பக்கத்திலே எல்லாம், டேராடூன், முசவுரி போன்ற இடங்களிலே எல்லாம் ஒரு கார் 3 தடவை போனால், 3 தடவையும் வாங்குவார்கள். அந்த மாதிரி நிலைமை இங்கு வேண்டாம். அந்த நிலைமைக்கு இடம் கொடுக்க வேண்டாம். இது தவிர, மக்களுக்கு அன்றாடம் தேவைப்படுகிற, பால், காய்கறி, துணி, சர்க்கரை இன்னும் இது போன்ற விளைபொருள்கள் இவைகளுக்கு எல்லாம் மும்முனை வரி போடுகின்ற ஒரு நிலைமையை நீங்கள் எண்ணவில்லை என்றாலும் வியாபாரிகள், அதை நடைமுறைச் செய்கின்றபோது, அதிகாரிகள் அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டிவரும். ஆகவே இந்த நுழைவு வரியைக் கட்டாயமாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்





அதே போல்தான் வீராணம் திட்டம். கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் கிடைப்பதாக இருக்கட்டும். இந்தியப் பிரதமர் சொன்னார்கள். இங்கே ஆளும்கட்சி அமைச்சரவையிலே சொன்னது, நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்த முதலமைச்சர் அவர்கள் கூப்பிட்ட நேரத்திலே போகவில்லை. நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. ஆனால் கிருஷ்ணா நதித் திட்டம் இன்னும் 5 முதல் 10 ஆண்டுகாலம் வரை செல்லும் அந்தத் தண்ணீரைப் பெறுவதற்கு, 2 மாநிலங்களும் ஒத்துக் கொண்டாலும் கூட, இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது, இந்த வீராணம் திட்டத்திற்கு கிட்டத்தட்ட 22 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு விட்ட நிலைமையில் எக்ஸ்பர்ட் கமிட்டி எல்லாம் கூட வந்தது என்று சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், எக்ஸ்பர்ட் கமிட்டி என்ன சொல்லியிருந்தாலும் கூட அதை நம்முடைய தமிழக மக்களுக்காக தண்ணீர் தொல்லையை, கஷ்டத்தைப் போக்குவதற்காக நாம் என்ன செய்தாவது அந்தத் தண்ணீரைக் கொண்டுவர வேண்டும்.

நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் எனக்கு அந்தப் பகுதியை நன்றாகத் தெரியும். நான் அந்த வீராணம் ஏரிப் பகுதியைச் சேர்ந்தவன். வெள்ளக்காலங்களில் அங்கே பல உடைப்புகள் ஏற்பட்டு, நிலங்கள் எல்லாம் தண்ணீரில் மூழ்கி மணல் மேடிட்டுப்போய் இருக்கின்றன. இந்தத் தொல்லையைத் தவிர்க்க திருச்சி மாவட்டத்திலுள்ள பொன்னேரி என்ற ஏரியை சீர்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் இராஜா முகமது அவர்களிடத்தில் கூட நான் சொல்லியிருக்கிறேன். அப்படிச் செய்தால், வருஷா வருஷம் மழைக்காலங்களில் வருகின்ற தண்ணீர் வீணாகச் சென்று வங்கக்கடலில் கலப்பதைத் தவிர்க்க முடியும். அந்தப் பகுதியில் உள்ள நிலங்களையும் நாம் பாதுகாக்க முடியும். ஆகவே அந்தப் பொன்னேரியை செப்பனிட்டு, கருப்பூர் பாதை வழியாக வீராணத்திற்கு விட்டால் வருஷம் பூராவும் நமக்கு நிறைய தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம் திருச்சி ஜில்லாவில் உள்ள உடையார் பாளையமும், தென்னாற்காடு மாவட்டத்திற்கு சிதம்பரம், கடலூர் போன்ற இடங்களும் பயன் அடையும். ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீராணம் திட்டம் அப்படியே நின்றுபோய்விட்டது. அந்த கான்ட்ராக்ட்டின் நிலைமை என்ன ? அரசாங்கப் பணம் 22 கோடி ரூபாய் அதிலே போய் இருக்கிறது. அங்கேயுள்ள பொருள்களை ஏலம் போட்டாவது கிடைக்கின்ற பணத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம் அல்லவா, தற்போது நாம் சத்துணவுத் திட்டத்திற்காக பிச்சை எடுக்கிறோம். கெஞ்சிக் கேட்கிறோம்,

பெரிய பணக்கார ஓட்டல் அதிபர்களிடத்தில் பணம் கேட்கிறோம்; அவர்களும் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கிறவர்களிடத்தில் போய் நீ இட்டிலி விலையைக் குறை, தோசை விலையைக் குறை என்று எப்படிச் சொல்வது சாத்தியமாகும், நான் இருந்தாலும்கூட சொல்ல முடியாது. நீங்களும் சொல்ல முடியாது. அவர்களிடத்தில் கையேந்தி நிற்பதால் அவர்களுக்கு அந்த விலையை ஏற்ற தைரியம் வருகிறது. அந்த தைரியத்தை மறைமுகமாகக் கொடுக்கும் பாவமான காரியத்தைச் செய்ய இடம் கொடுக்கக்கூடாது என்று சொல்லி, வீராணம் திட்டம் வெற்றி பெற நாம் என்ன நஷ்டம் வந்தாலும் கஷ்டம் வந்தாலும் முயற்சி செய்யவேண்டும். அந்த எக்ஸ்பர்ட் கமிட்டி சொன்ன கருத்து என்ன ? அதையும் இங்கே அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லி 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இதை நான் எதிர்க்கவில்லை. வரவேற்கிறேன். இதைப் பற்றி படித்த வல்லுநர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் இந்தப் பணத்தைக் கொண்டு 15,000 அல்லது 20,000 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கமுடியும். அதற்கு மேல் கொடுக்க முடியாது, என்று சொல்கிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் வேலை அற்று இருக்கிறார்கள். அதனால் பட்டினிச்சாவு இருக்கிறது. ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் நகரங்களில் கூட இன்றைக்கு ஒரு வேளை சாப்பாட்டிற்குத்தான் கூலி கிடைக்கிறது. இரண்டு வேளை சாப்பாடு கிடையாது. இரண்டாவது வேளைக்கு டிபன் தான் சாப்பிடுகிறார்கள். இந்த அவல நிலையைப் போக்குவதற்கு குறைந்தபட்சம் 50 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டும். அப்போதுதான் ஓரளவிற்கு—4-லில் ஒரு பங்கு நபர்களுக்காவது —வேலை கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981—82 ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் மதுவிலக்கு பிரச்சாரத்திற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பணத்தில் என்ன பிரச்சாரம் செய்யப்பட்டது ? எந்த இடத்தில் செய்யப்பட்டது ? அதற்கு கமிட்டி உண்டா ? அந்தக் கமிட்டிக்கு யார் தலைவர் ? ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கிறாரா ? யாருக்காக எங்கே திட்டங்களைச் செய்தீர்கள் ? ஏதாவது இது குறித்து பேம்ப்லட் போடப்பட்டதா ? ஒன்றும் கொடுக்கவில்லை. அதைப் பற்றி விளக்கவேண்டும்.

1983—84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரொம்பப் பெருமையோடு சொல்லியிருக்கிறார்கள். 2,63,000 குழந்தைகள்—6 முதல் 14 வரை பள்ளியில் படிக்க வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்கள் 50 மாணவர்களுக்கு ஒருவர் வீதம் வைத்தாலும், நீங்கள் கூடுதலாகக் கொடுத்து இருக்கும்



ஆசிரியர்கள் எண்ணிக்கை போதுமா ? நீங்கள் கொடுத்து இருப்பது உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர் பதவிகள் 1,250. தமிழ்ப் பண்டிதர் பதவிகள் 150, நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 100. மேல்நிலைப் பள்ளிகளில் பி.எட். ஆசிரியர் பதவிகள் 200, உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 50 என்றும், நடுநிலைப் பள்ளிகளில் பகுதி நேர கைத்திறப் பணி பயிற்சி ஆசிரியர் பதவிகள் 100- என்றும் 1,850 ஆசிரியர் பதவிகள்தான் கொடுக்கப்பட்டுள்ளன. 2.63 லட்சம் மாணவர்கள் பள்ளிகளில் படிக்கின்றனர் என்று பெருமையோடு சொல்லிவிட்டு, அதற்குத் தேவைப்படுகின்ற 5,260 ஆசிரியர்கள் பதவிகளை அளிக்காமல், 1,850 ஆசிரியர்கள் பதவிகளைத் தந்தால் அது எப்படி சரியாக இருக்கும். ஆகவே, மீதமுள்ள 3,410 ஆசிரியர் பதவிகளையும் ஏற்படுத்தி, 50 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5—00)

அதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நிச்சயமாக கவனித்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று இந்த நிதிநிலை அறிக்கையில் 30-வது பக்கத்தில் கிராமப்புற வீட்டுவசதி என்று சொல்லியிருக்கிறார்கள். அது மத்திய அரசு பணம்; மாநில அரசு மூலமாகச் செய்யும் திட்டம். நாம் இந்தத் திட்டத்தின்கீழ் முதலில் வீடு ஒன்றுக்கு 5,000 ரூபாய் என்று கொடுத்தோம். அதை பின்னால் 3,000 ரூபாயாகக் குறைத்தீர்கள். ஏன் என்று கேட்டோம். அதிகமான பேர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கலாம் என்று சொன்னீர்கள்.

தொழிலாளர் நல அமைச்சர் ஒரு கேள்விக்கு பதில் சொன்னார். அவர் கடைசியாகச் சொல்லும்போது, அவர் வயதானவர். அவருடைய வயதுக்காவது மரியாதை கொடுக்க வேண்டுமென்று சொன்னார். வயதுக்கு என்ன மரியாதை வேண்டியிருக்கிறது ? கேட்பது நியாயமாக இருந்தால் அதற்கு உரிய பதிலைச் சொல்லுங்கள். உண்டு என்றால், உண்டு என்று சொல்லுங்கள், இல்லை என்றால் இல்லை என்று சொல்லுங்கள். எனக்காக ஒன்றும் சொல்ல வேண்டாம். நீங்கள் நாட்டை ஆளக்கூடியவர்கள்.

இன்று காலையில் கூட ஒரு கேள்வி கேட்டேன். அப்போது திருட்டுப் போகிறது என்றால் மாநகராட்சியில் உள்ள சில பணியாளர்களும் அந்தத் திருட்டைச் செய்கிறார்கள்; அவர்களிலே கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவுபேர், எத்தனை பேர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டால் இளையபெருமாள் இப்படி பணியாளர்கள் எல்லாம் திருடுகிறார்கள் என்று சொல்கிறாரே, இது பாவகரமானது என்று சொன்னார்கள்.

நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கொள்கிறேன். இப்படிப்பட்ட பாவகரமான கேட்டுக் வேண்டாம் ; 'காபினெட் மீட்டிங்' கிலே பதிலைச் சொல்ல வையுங்கள். அமைச்சராக இருக்கிறவர் அவருக்குச் சொல்லி சொன்னால் போதும். அதைவிட்டுவிட்டு, கேள்விக்கு பதில் பெரியவர், பணியாளர்களை வயதானவர், வயதில் சொல்லி திசைதிருப்பக்கூடாது. குற்றஞ்சாட்டுவது பாவம் என்று சரிடம் கூட இத்திட்டம் பற்றி நான் மாண்புமிகு முதலமைச் சொன்னேன்.

இன்றைக்கு ஒருங்கிணைந்த திட்டம் என்று சொல்லி, திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதில் 60 ஒரு ஆதி திராவிடர்களுக்கு கொடுக்கிறோம் என்று சதவீதம் ஆனால் எங்கே கொடுக்கப்பட்டது. சொல்கிறார்கள். என்று கேட்டால் ஒன்றும் இல்லை. எப்படி கொடுக்கப்பட்டது நிறைவேற்றப்படவில்லை. அந்தத் திட்டம் இன்னும்

அதைப்போலத்தான் இந்த கிராமப்புற திட்டத்தில் வீடு ஒன்றுக்கு 5,000 வீட்டுவசதித் பின்னால் அது 3,000 ரூபாய் என்று சொல்லி எல்லாம் பலமுறை ரூபாயாகக் குறைக்கப்பட்டு, நாங்கள் உயர்த்தப்படும் என்று கேட்டபின்னால் 4,000 ரூபாயாக வில்லை. இதுவரையில் சொல்லி, அது இன்னும் கொடுக்கப்பட வருகிறது. இந்தத் 3,200 ரூபாய்தான் அனுமதிக்கப்பட்டு வர்கள் 60 அல்லது திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்கிற தான். 70 சதவீதம் பேர் ஆதி திராவிடர்கள் 4,000-க்கும், 3,000-க்கும் வீடுகட்ட வேறு யாரும் வர மாட்டார்கள் ; இப்போது இருக்கின்ற நிலைமையில் இந்தத் தொகையில் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, இந்தத் தொகையை உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக இருப்பது முதியோர் உதவித் தொகைத் திட்டம். முதியோர் உதவித் தொகைத் திட்டம் தலைவர் காமராஜ் அவர் களால் கொண்டுவரப்பட்டது. அந்தத் திட்டத்தைத் இந்த அரசு தொடர்ந்து செய்து வருகிறது, பாராட்டுகிறேன். ஆனால் நிலைமை என்ன ? நீங்கள் இதற்காக ஒதுக்கியிருக்கிற ரூபாய் எவ்வளவு ? நிரபராதிகள், முதியோர்கள், ஏழைகள் இந்த நாட்டிலே இலட்சக்கணக்கிலே இருக்கிறார்கள். அவர் களுக்கு எல்லாம் இந்த உதவித் தொகை கிடைக்கிறதா என் றால் இல்லை. யாராவது ஒருவர் செத்துவிட்டால்தான் அந்த இடத்தில் இன்னொரு ஏழையை சேர்த்துக் கொண்டு, உதவி செய்கிறார்கள். யாரும் சாகவில்லை என்றால் அடுத்த வருக்கு உதவி கிடையாது. அரசாங்கம் இந்த நிலைமையை உணர்ந்துபார்த்து, இதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும். உதவித் தொகை பெறுவதற்கு தகுதிபெற்றவர்கள் இந்த நாட்டிலே எத்தனைபேர் இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுத்து, அத்தனை பேர்களுக்கும் குறைந்தபட்ச உதவி கிடைக்கின்ற





வகையிலே இந்தத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும். எவ்வளவு பேர் இருக்கிறார்கள், 50,000 பேர் களா அல்லது ஒரு இலட்சம் பேர்களா என்பதை தெளிவாக அறிவித்து, அத்தனை பேர்களுக்கும் உதவித் தொகை கொடுக் கிறோம் என்று நீங்கள் அறிவிக்க வேண்டும்.

அதைப்போன்று விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று நல்லபல திட்டங்களைப் போட்டார்கள். பல திட்டங்களைச் செயல்படுத்துகிறார்கள். ஆனால் அந்தத் திட்டங்கள் எப்படி செயல்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். திட்டங்களை அல்லது சட்டங்களைச் செயல்படுத்துகிறவர்கள் யார் என்று பார்த்தால் வட்டத்திலே இருக்கிற தாசில்தாரும் மாவட்டத் திலே இருக்கிற கலெக்டரும்தான். அவர்களுக்கு இருக்கிற வேலைகளையே செய்ய முடியவில்லை. அதோடு இந்த வேலை களையும் கொடுத்தால் எப்படிச் செய்வார்கள் ?

திருப்பத்தூரிலும், தர்மபுரியிலும் அரசு எடுத்த நடவடிக்கை களினால் இறந்துபட்டவர்கள் பின் தங்கிய மக்கள், ஆதிதிராவிட மக்கள்தான். உயிரிழந்த மக்கள் கூலி கேட்கச் சென்றவர்கள். சென்ற இடத்திலே அவர்கள் மரணமடைய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சில இடங்களிலே தவறு நடந்திருக்கலாம் ; தவறு நடந்திருக்கிறது. தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டி யதுதான், நான் அவர்களுக்காக வக்காலத்து வாங்கவில்லை. ஆனால் எந்த குற்றமும் செய்யாதவர்களை, ஏழை எளிய மக்களை, சட்டத்தைக் காட்டி சாகடிப்பது பாவகரமானச் செயல். தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருக்கிறது. ஆனால் அதைச் செயல்படுத்தும் முறை சரியாக இல்லை. இதை எல்லாம் கவனிக்க வேண்டும்.

தண்ணீர் நிலைமையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மாநகரின் நிலைமையே மோசமாக இருக்கிறது. இன்று காலை யிலே கூட ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களே வரிந்துக்கட்டிக் கொள்கிற நிலைமையைப் பார்த்தேன். 66-வது, 67-வது வட்டங்களில் இரண்டு அ.தி.மு.க. வினரே அந்த நிலைமைக்குப் போய்விட்டார்கள். தண்ணீர் விஷயத்தில் ரொம்ப ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தெருவுக்கும் ஹான்ட் பம்பு இருக்கிறது, ஆழ்குழாய் கிணறு இருக்கிறது, தண்ணீர் லாரி போகிறது. இருந்தாலும் போதாது, இன்னும் அதிகப் படுத்த வேண்டும். இதிலே சரியான ஒரு நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் நிலைமை மிகவும் மோசமாகப் போய்விடும். நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமூக காடு வளர்ப்புத் திட்டம், பற்றி சொல்லி யிருக்கிறீர்கள். அதற்காக அரசாங்கத்திற்குச் சொந்தமான ஏரி, குளங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் 50 ஆண்டு, 60

ஆண்டு பின்தங்கிய மக்கள், ஆதிதிராவிட மக்கள் பயிர் செய்து வந்த இடங்களை சமூக காடு என்ற பெயரால் எடுப்பது பாவகரமானது, மோசமானது.

தென் ஆற்காடு மாவட்டத்திலே, விழுப்புரம் தாலுக்காவிலே முட்ராம்பாக்கம் கிராமத்திலே, 2 ஏரிகள் இருக்கின்றன. ஒரு ஏரியிலே உயர்ந்த வகுப்பு சகோதரர்களும், மற்றொரு ஏரியிலே தாழ்ந்த சகோதரர்களும் இருக்கிறார்கள். உயர்ந்த சகோதரர்களிடமிருந்து ஒரு ஏக்கர் நிலம் கூட எடுக்கப்படவில்லை. ஆனால், ஒரே கிராமத்தில், ஒரே தாலுக்காவில், ஒரே ஜில்லாவில், ஒரே கலெக்டர் உயர்ந்த ஜாதிக்காரர்களின் நிலத்தை எடுக்காமல், தாழ்த்தப்பட்ட சகோதரருடைய நிலத்தை காட்டு நிலமாக அறிவித்தது ஏழை எளிய மக்களுக்கு, பாடுபடுவதாக நன்மை செய்வதாக இல்லை. இதை ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட அவல நிலை பல இடங்களிலே இருக்கின்றது. இதைப் பற்றி அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். இரண்டு கிராமங்களிலே உதவி செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், இன்று ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அவல நிலைமை இருக்கிறது.

பொன்னேரி, வீராணம், கொள்ளிடம் ஆகிய இடங்களிலே ஏரிகள் இருக்கின்றன. இராஜராஜச் சோழன் காலத்திலே கட்டப்பட்ட வீராணம் ஏரி மண் மேடிட்டு இருக்கிறது. அதை சில்ட் கிளியரன்ஸ் ஸ்கீம் என்ற அடிப்படையிலே எடுத்திருந்தால், அது ஒரு வறட்சிப் பணியாகவும் இருக்கும் ; வேலைவாய்ப்புத் திட்டத்திற்கும் உதவும். அதே சமயத்தில் ஏரியையும் ஆழப்படுத்தியதாக அமையும். கிட்டத்தட்ட 100 ஆண்டுகளாக அந்த ஏரிகள் இதுவரையில், அதாவது பொன்னேரி, வீராணம் ஏரி போன்றவைகள் மண் எடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவே, கல்வியிலே நாம் சத்துணவுத் திட்டம் என்பதைக் கொண்டுவந்தோம். கல்வி இலாக்காவிலே இருக்கின்ற பள்ளிகளில், இப்போது பணியாளர்கள் அதாவது சமையல்காரர்கள், ஹெல்பர்கள் போன்றவர்களை போட்டுவிட்டோம். ஆனால், ஆதித் திராவிடப் பள்ளிகளில், அதன் கீழுள்ள ஆயிரக்கணக்கான பாடசாலைகளில் இன்னும் தலைமை ஆசிரியரே சமையல்காரராகவும், கணக்கு எழுதுபவராகவும், பில் போடுபவராகவும், எல்லா வேலைகளையும் செய்யக்கூடியவராக இருக்கிறார். இது போன்ற நிலையில் 100, 200 பள்ளிகள் இருக்கின்றன. ஒரே ஒரு ஆசிரியர், அதாவது 1 முதல் 5 ஆம் வகுப்புவரை நடத்தக் கூடிய பள்ளிகளில் அவரே அரிசி பருப்பு முதல்வைகளை வாங்கி வர வேண்டும் ; பில் போடவேண்டும் ; சமையல் செய்யவேண்டும்; பாடமும் சொல்லித்தர வேண்டும், ஏற்கெனவே காண்ட்ராக்ட்



முறை இருந்தது. இவைகளையெல்லாம் கான்ட்ராக்ட் முறையிலே செய்ய வேண்டும். அல்லது கல்வி இலாக்காவிலே நடத்தப்படுவதுபோல், சமையல்காரர், உதவியாளர் போன்றவர்களைப் போட வேண்டும். அப்படிப் போட்டால் தான், அந்த ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு சந்தோஷமாக பாடத்தைச் சொல்லிக் கொடுப்பார்கள். ஆகவே, அந்த நிலைமையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

மேலும், கடைநிலை ஊழியர்களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் இந்த சட்டசபையில் சொன்னார்கள்............

திரு. கு. முத்துக்கிருஷ்ணன் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஆதி திராவிடர் நலப் பள்ளிகளிலே இந்த சத்துணவுத் திட்டத்தைக் கவனிப்பதற்காக, அரசின் மூலமாக ஆட்களைப் போடவில்லை என்ற தவறான தகவலைத் தந்து, பேசிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், எல்லாப் பகுதிகளிலும், சத்துணவுத் திட்டத்தைக் கவனிப்பதற்காக, அதற்கான பணியாட்கள் போடப்பட்டிருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலே வித்தியாசமான கருத்தைநான் சொல்லவில்லை. ஆதித் திராவிட நலத் துறை மூலமாக நடத்தப்படுகின்ற பாடசாலைகளில் செய்யவில்லை என்பதைத் தான் சொன்னேன். டைரக்டர் ஆப் ஆதிதிராவிடர் வெல்பேர், ஆதித் திராவிட நலத்துறை டைரக்டரால் கவனிக்கப்படவில்லை. தமிழ்நாட்டிலே இன்றைக்குகூட அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. முதலமைச்சர் அவர்களுக்கும், நலத்துறை துறை அமைச்சருக்கும், டைரக்டருக்கும் அனுப்பியிருக்கிற நகல் இருக்கிறது. இந்தப் பாகுபாடு, சத்துணவுத் திட்டத்திற்கு கொடுக்கப்பட்டு, மிட் டே மீல்ஸ் திட்டத்திற்கு கொடுக்கவில்லை என்ற கருத்தை உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக் கொள்கிறேன்.

பிறகு, சித்த மருத்துவத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த முறை ஏழை எளிய மக்களுக்கு நல்லது. அரசாங்கம் இதற்காக 35 இலட்சம் ரூபாய் தொகை ஒதுக்கியிருக்கிறது. இது போதாது. இந்த முறைக்கு குறைந்த பட்சம் ஒரு கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். உதாரணமாக, மஞ்சக் காமாலை நோயை பெரிய பெரிய டாக்டர்களால் கூட கட்டுப்படுத்த முடியவில்லை. சாதாரண, சித்த மருத்துவத்தில் இதைத் தீர்க்க முடிகிறது. எனவே, இதற்கு ஒரு கோடி ரூபாய் நிச்சயமாக கொடுக்க வேண்டும்.

ஆதி திராவிட நலக் குழு என்ற ஒரு குழு போடப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக இந்த ஹை பவர் கமிட்டி இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் கமிட்டி இதுவரை என்ன செய்தது என்பது இந்தக் குறிப்பிலே இல்லை. இந்த நலக் குழு பிரிட்டிஷ் பீரியடிலே வந்தது. காங்கிரஸ் பீரியடிலும் இருந்தது. தி. மு. க. ஆட்சியிலேயும் இருந்தது. உங்கள் ஆட்சியிலும், முதல் பீரியடிலே இருந்தது. ஆனால், கடந்த 3 ஆண்டுகளாக இல்லை. இது சம்பந்தப்பட்ட பைலைப் பற்றி ஆதி திராவிட நலத் துறை அமைச்சரைக் கேட்டால், முதலமைச்சரைக் காட்டுகிறார். முதலமைச்சரைக் கேட்டால், என்ன செய்கிறார் ஆதி திராவிட நலத் துறை அமைச்சர், அவரிடம் போய்ச் சொல்லுங்கள் என்று அவர் சொல்லுகிறார். இப்படி இரண்டு பக்கங்களிலும் சொல்லப்படுகிறது. மூன்று ஆண்டுகளாக அந்தப் பைல் எங்கே இருக்கின்றது என்று தெரியாத மிக வருந்தத்தக்க அவல நிலை இருக்கிறது. இதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

(மாலை 5—10)

திரு ஆர் [illegible] : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1983—84 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று ஆதரித்து என் கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பினை தந்தமைக்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே துவக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், அந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிற நல்ல கருத்து களையெல்லாம் எடுத்து இங்கே விவாதிப்பார்கள் என்று நாம அனைவரும் எதிர் பார்த்தோம். ஆனால் அவர் தம் உரையை ஒரு நல்ல நகைச்சுவை கதா காலட்சேபம் போல் நடத்தி, எல்லோரையும் சிரிப்பில் ஆழ்த்தி அமர்ந்து விட்டார்கள். அவருக்கு ஒரு நல்ல நகைச்சுவை நடிகர் என்ற பட்டத்தைக் கூட வழங்கலாம் என்று தெரியப்படுத்த விரும்புகிறேன்.

ஒன்றுமே இல்லை என்று அவர் பேசுகிற விதம், என்றுமே அவர் இங்கே எடுத்து வைக்கிற வாதம் தான், ஆகவே அதிலே ஒன்றுமேயில்லை. கீறல் விழுந்த ரெக்கார்டு என்று சொல்வார்களே—அது போல அவர் எப்போதுமே, ஒன்றுமே இல்லை. ஒன்றுமே இல்லை என்றுதான் திருப்பி திருப்பி சொல்வார். அவர் சொன்ன கருத்தின் மூலமாகவே—அவருடைய வார்த்தையையே நான் திருப்பிச் சொல்கிறேன்—அவர் பேசும்போது, 'போலித் தனமாக செய்திகளைக் கொண்ட ஒரு புராணக் கட்டு தமிழின் பெயரால் தகிடுதித்தம் செய்கின்ற வெறும் தாளக்கட்டு என்றும் இன்னும் பழைய கேலண்டர் போல இந்த பட்ஜெட் இருக்கிறது' என்றும் கூறினார். அதே வார்த்தைகளையே அவருடைய உரைக்கும் பதிலாக நான் திருப்பிச் சொல்லிக் கொள்கிறேன்.



மத்திய திட்டக் குழு இந்த 1982—83-ஆம் ஆண்டுக்கு 711 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்தது. இந்த அரசின் சிறப்பான திட்டங்களால் செலவு 795.93 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இந்த அரசினுடைய சிறப்பான செயல் திறனின் விளைவு என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1983—84ஆம் ஆண்டுக்கு அதாவது அடுத்த நிதியாண்டுக்கு மத்திய திட்டக் குழு 845 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்திருந்தாலும், நம்முடைய அரசு 895.93 கோடி தேவையென எதிர்பார்த்து அவர்களை கேட்டிருப்பது, இந்த வறட்சியான நேரத்திலே, பல திட்டங்களை பசுமையாகப் போடுவதற்காகத்தான் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம் அடிக்கடி இங்கே ஒரு கருத்தைச் சொல்வார்கள். உங்களுடைய சின்னம் இரட்டை இலை, உங்களுடைய கொள்கையும் இரட்டை நிலை என்று சொல்வார்கள். ஆனால் அது கூட அவர்கள் சொந்தமாக சொல்கிற கருத்து அல்ல. மத்திய அரசிடமிருந்து இறக்குமதி செய்து பயன்படுத்துகிற ஒரு கருத்துத்தான் என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. காரணம், மத்திய அரசாங்கம் கொஞ்ச நாட்களாக இரட்டை விலை கொள்கையை கடைபிடித்து வருகிறது. எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அதற்கு இரட்டை விலை கொள்கையை கையாண்டு வருகிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், ஏழை எளிய பாமர மக்கள், கிராமப்புறங்களில் பயன்படுத்துகிற சீமை எண்ணெய்க்குக் கூட இரட்டை விலையை விதித்திருக்கிறார்கள்.

சாதாரணமாக நியாயவிலைக் கடையிலே குடும்பக் கார்ட்டுக்கு வழங்குகிற சீமை எண்ணெயின் விலை ஒரு லிட்டர் 1.78 காசு என்று சொன்னால், வெளிச் சந்தையில் அதனுடைய விலை 3 ரூபாய் 15 காசு என்று இரட்டை விலையை அனுமதித்திருப்பதன் மூலம், ரேஷன் கடைகளில் விற்பனை செய்யப்படும் சீமை எண்ணெய் தவறாகப் பயன்படுத்தும் வாய்ப்பு இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது—அதை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

அது மட்டும் அல்ல, சர்க்கரையை எடுத்துக் கொண்டாலும் இரட்டை விலை தான். சீமை எண்ணெயை எடுத்துக் கொண்டாலும் இரட்டை விலைதான், சிமெண்ட் விற்பனையை எடுத்துக் கொண்டாலும் இரட்டை விலைதான். அதன் விளைவாகத்தான் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள், இரட்டையைப் பற்றி அதிகமாக பேசிவருகிறார்கள் என்று கருதுகிறேன்.

ஊழல் ஊழல் என்று பேசுகிற காங்கிரஸ்காரர்கள், இப்படி இந்த இரட்டை விலை கொள்கையின் மூலம், இந்தியா முழுவதும் ஊழலை விதைத்து பரவச் செய்கிற வாய்ப்பை ஏற்படுத்துகிறார்களே, அது ஏன் என்றுதான் கேட்க விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, ஏழைகள பயணம் செய்யும் இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணத்தையும், சரக்கு கட்டணத்தையும் உயர்த்தி, 480 கோடி ரூபாய்க்கு மேல் புதிய வரிகளைப் போட்டிருக்கும் மத்திய அரசை கண்டித்து ஒரு வார்த்தை பேசினார்களா மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களும், அதில் தமிழ்நாட்டில் உள்ளவர்கள் பயணம் செய்யவில்லையா ? ஏன் பேசவில்லை என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, தபால் இலாகா மூலம் 70 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள். இது வரையில் இலவசமாகக் கொடுத்து வந்த மணியாடர் பாரத்தை, முதலிலே இரண்டு பைசாவிற்கு என்று ஆரம்பித்து, அதை 5 பைசா வாக்கி இப்போது 10 காசாக உயர்த்தியிருக்கிறார்களே, இது நியாயம்தானா ?

இப்படிப்பட்ட ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக்கூடிய அந்த வரிகளை ஏறத்தாழ 2,500 கோடி ரூபாய் அளவில் புதிதாகப் போட்டு இருக்கிறார்கள். அதனால் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும், தமிழக மக்களும் சேர்ந்துதான் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் ஏனோ அதைப்பற்றிக் கண்டித்துப் பேசவில்லை.

தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இந்த நிதிநிலையை அறிக்கையில், இருப்பதை வைத்து மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். 65 லட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு வேளை சத்துணவு கொடுக்கவேண்டும் என்பது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவரின் திட்டமாகும். அதுமட்டுமல்ல, ஒன்றரை இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே இது பாராட்டப்படுகின்றது. ஆனால் இங்கே இருப்பவர்கள் இதைப் பாராட்ட மனம் இல்லாமல் ஏசுகிறார்கள். ஆனால் பொதுமக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள். மற்றவர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. இந்தத் திட்டத்தைப்பற்றி நான் ஒன்று சொல்லவேண்டும் என்றால் என்னுடைய தொகுதியில் தாளவாடி, காடம்பாறை போன்ற மலைப்பகுதியில் வசிக்கின்ற ஆதி திராவிட மக்கள், ஆதிவாசிகள் ஆகியோர் 4,000 பேர் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அந்த ஆதி திராவிட மக்கள் இந்த நாடு சுதந்திரம் அடைந்து 34 ஆண்டுகளுக்கு மேகலர்கியும் ஒருவேளை





அரிசி உணவைக் கூட பார்க்காதவர்களாக இருக்கிறார்கள். அந்த 4,000 குழந்தைகளும் ஒருவேளை அரிசி உணவைச் சத்துணவை உண்ணுகிறார்கள் என்று சொன்னால் புரட்சித்தலைவரின் ஆட்சியிலே அந்தக் குழந்தைகள் பிறந்ததிலிருந்து அரிசி உணவைப் பார்க்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதற்காக மக்கள் பாராட்டுகிறார்கள். அதுமட்டுமல்ல. இந்தப் புனிதமான பணியை ஆசிரியர்கள் மனநிறைவோடு செய்து வந்தார்கள். ஒருசிலர் போராட்டம் என்று சொல்லி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது என்று சொன்னார்கள். போராட்டம் என்று சொல்லி சத்துணவைப் போட மாட்டோம் என்று சொன்னார்கள். பார்த்தார் புரட்சித்தலைவர். உங்களை நான் வற்புறுத்த மாட்டேன் என்று சொல்லி சத்துணவு மையங்களுக்குக் காப்பாளர்களை நியமிக்கிறேன் என்று அறிவித்தார்கள். அதற்கப்புறமும் போராட்டம் என்று சொன்னார்கள். ஆனால் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நாளுக்கொரு போராட்டத்தைச் சந்தித்துப் பழக்கப்பட்டுவிட்டது. ஆகவே அதைப்பற்றிக் கவலை இல்லை. 33,500 பேர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு, ஆண்கள், பெண்களுக்கு இந்த பொறுப்பு கொடுக்கப்பட்டது. அந்தப் பொறுப்புக்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எனவே ஆசிரியர்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் இப்போது இந்த வேலையை சரிவர நடக்க விடாமல் ஒரு சில ஆசிரியர்கள் ஆங்காங்கே தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கே போடப்பட்டிருக்கின்ற காப்பாளர்கள் சரியாகத் தன்னுடைய பணியினைச் செய்ய முடியாமல் அந்தப் பள்ளியிலே அரிசி மற்றப் பொருட்களை வைத்துக்கொள்வதற்கு கூட முடியாமல் தொந்தரவு செய்யப்படுகிறார்கள். மேலும் அந்தக் குழந்தைகள் சத்துணவினைச் சாப்பிடுவதற்குக் கூட ஒத்துக்கொள்ளாமல் பலவிதங்களில் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கின்ற திட்டத்திற்காக 134 கோடி ரூபாயை அரசு ஒதுக்கி இருக்கின்றது. அதனை மக்கள் மனதார வரவேற்கிறார்கள். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் நாட்டுமக்கள் அனைவருக்கும் பயன்படுகின்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே தான் கொண்டுவரப்பட்டது. அதே அடிப்படையிலே கொண்டுவரப்பட்ட புரட்சிக்கரமான திட்டம்தான் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற திட்டம். அதற்காக 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்துவது என்ற ஆலோசனையைச் சொல்வதை விட்டுவிட்டு இதை எப்படிச் செயல்படுத்தப் போகிறீர்கள், இது வெறும் விளம்பரம்தான், மக்களை

[திரு ஆர். ரங்கசாமி] [1983 மார்ச் 11

ஏமாற்றுகின்ற வித்தை இது எங்களுக்கு ஒன்றுமே புரிய வில்லை என்ற அடிப்படையிலே சில உறுப்பினர்கள் பேசுகிறார் கள். எப்படிப்பட்ட நல்ல திட்டங்களைப் புரட்சித் தலைவர் கொண்டுவந்தாலும் இங்கே இருக்கின்ற ஒருசிலருக்குப் புரிய வில்லை. அப்படிப் புரியவில்லை என்றாலும் அதைப் புரிந் கொள்கின்ற அளவுக்கு அவர்களுக்கு அறிவு இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். தூங்குகின்றவர்களை எழுப்பிவிட லாம். ஆனால் தூங்குவதுபோன்று நடிப்பவர்களை எழுப்ப முடியாது. அந்த அடிப்படையிலேதான் புரட்சித் தலைவரின் திட்டங்களைப் புரியவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் மக்கள் நன்றாகப் புரிந்துக்கொண்டிருக்கிறார்கள். அதனுடைய எடுத்துக்காட்டுத்தான் திருச்செந்தூர் தேர்தலில் தீர்ப்பு வழங்கிய நீதியாகும்.

(மாலை 5-20)

நமது நாட்டிலுள்ள 80 சதவீத மக்கள் விவசாயத்தை நம் பிக் கொண்டிருக்கிறார்கள். நீர்ப்பாசனத் துறை மிக முக்கிய மானது ஆகும். அதை மனதில் கொண்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு 105.16 கோடி ரூபாயை ஒதுக்கி 5 நடுத்தர திட்டங்களையும் 30 சிறு நீர்ப்பாசன திட் டங்களையும் அமைக்கப்பட்டு இதன் மூலம் 15 ஆயிரம் ஏக் கர் நிலம் பாசன வசதி பெறவும் 35 மெட்டிரிக் டன் உணவு உற்பத்தியை பெருக்கவும் திட்டங்களை தீட்டியிருக்கிறார்கள். இருக்கின்ற பாசன திட்டங்களை சீரமைத்து இன்னும் சிறப்பாக செயல்படுத்த வழிவகைகள் செய்யப்படுகிறது. எனவே எனது தொகுதியில் 10 சதவீதம் நிலப்பரப்பு மட்டுமே பாசன வசதி பெறுகிறது. 15 சதவீதம் கிணற்றுப் பாசன வசதி பெறுகிறது. மற்ற பகுதிகள் அனைத்தும் மானாவாரியான மலைப்பகுதிகள் ஆகும். மலைத் தொடர் நிறைந்து இருக்கும். எனவே எனது தொகுதியில் மழை காலங்களிலே பள்ளத்தாக்குகளில் வெள் ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அத்தனை தண்ணீரும் கடலில் சென்று கலக்கிறது. பல ஆண்டுகளாக 10-க்கும் மேற்பட்ட பாசன திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் அனுமதிக்கப் பட்டது. அதற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள் கிறேன். குறிப்பாக கெம்பநாயக்கன் பாளையம் பெரும்பள் ளம் திட்டம் ஆய்வு முடிந்து அரசுக்கு வந்துள்ளது. சுமார் 2,800 ஏக்கர் பாசனம் பெறும் அந்த திட்டம் அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நெடு நாளைய உணர்வாகும். அதை நிறைவேற்றிக்கொடுக்கவேண்டும் என்று மிக பணிவோடு கேட் டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி, 5.56 லட்சம் கைத்தறிகள் நமது நாட் டில் இருக்கிறது. இந்த அரசு இதுவரை 3.24 லட்சம் கைத்தறி களை கூட்டுறவுத் துறை மூலம் கொண்டு வந்துள்ளது. 1,416



1983 மார்ச் 11] [திரு. ஆர். ரங்கசாமி]

தொடக்க கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் மூலம் தொழில் பாதுகாப்பு கொடுக்கப்படுவதோடு தேசிய வங்கியிலிருந்து 40·91 கோடி ரூபாயை குறைந்த வட்டிக்கு வாங்கி மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நெசவாளர்களுக்கு கொடுத்து உதவி வருகிறது. கோ-ஆப்டெக்ஸ் மாநில சங்கத்தின் மூலம் 1981-82 ல் 70 கோடி ரூபாய் விற்பனை செய்திருக்கிறது 1982-83ல் 100 கோடிக்கு அந்த விற்பனை உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. எந்த அரசும் செய்யாத ஒரு பெரிய பாதுகாப்பை இந்த அரசு நெசவாளர்களுக்கு செய்து இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக இதை சொல்கிறேன்.

கடுமையான மின் வெட்டின் காரணமாக முதலாளிகள் நூல் விலையை உயர்த்த முயற்சித்தபோது கூட்டுறவு ஆலை களில் உற்பத்தி செய்யும் நூல்களை வெளி மார்க்கெட்டில் விற் பனை செய்யக்கூடாது என்று இந்த அரசு உத்திரவை விதித் திருக்கிறது ஜெனரேட்டர் வைத்து உற்பத்திச் செய்தால் ஒவ் வொரு மில்லும் மாதத்திற்கு 3½ லட்சம் ரூபாய் அதிகமாக செலவானாலும் விலையை உயர்த்தக் கூடாது என்ற உத்திரவை இந்த அரசு விதித்திருக்கிறது ஆனால் இதற்கு முன்னால் இருந்த அரசுகள் எல்லாம் நேரத்திற்கு ஏற்றபடி வெளிமார்க் கெட்டில் இருக்கின்ற அளவுக்கு விலையை உயர்த்தி இது போன்ற காலக்கட்டங்களில் அந்த நூலை விற்றது ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிதான் இதை கூட் டுறவு நெசவாளர் சங்கத்திற்குதான் கொடுக்கவேண்டும் என்ற உத்திரவை விதித்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு மேலும் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியினுடைய திட்டங்களை குறை கூறுகின்றவர்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த நல்ல திட்டங்களை இந்த அரசு செயல்படுத்துவதோடு இந்த நிதிநிலை அறிக்கையில் என்னுடைய தொகுதியிலுள்ள சத்தியமங்கலத்தில் ஒரு வட்ட மருத்துவனை 40 லட்ச ரூபாய் செலவில் ஏற்படுத்த இந்த ஆண்டு அனுமதித்திருப்பதற்கு ஏறத் தாழ 30 ஆண்டு காலமாக எனது பகுதி மக்கள் எதிர்பார்த்து கொண்டிருந்த அந்த மக்களுக்கு இந்த பெரிய திட்டத்தை புரட் சித் தலைவர் அவர்கள் அரசு அனுமதித்ததற்கு எனது தொகுதி மக்கள் சார்பாகவும் எனது சார்பாகவும் என் நன்றியை மனமாற தெரிவித்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன் நன்றி வணக்கம்.

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய சில கருத் துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன இந்த நிதிநிலை வரு வதற்கு முன்னால் வறட்சியான இந்த நேரத்தில் புரட்சிகரமான பல்வேறு திட்டங்கள் நாட்டு மக்களுடைய வாழ்வை உயர்த்து

[திரு. து. புருஷோத்தமன்] [1983 மார்ச் 11

கின்ற திட்டங்கள் வரும் என்று என்னைப் போன்றவர்கள் எண்ணி
னார்கள். ஆனால் இங்கே எதிர் வரிசையில் இருந்து பேசிய மாண்பு
மிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தவரவு செலவுத் திட்டத்தை
உப்பு சப்பு இல்லாத திட்டம் என்று எல்லாம் இங்கே எடுத்துச்
சொன்னார்கள். பொதுவாக வரவு-செலவுத் திட்டம் எப்படி
தயாரிக்கப்படுகிறது என்று சொன்னால் இங்கே வரவு-செலவு
திட்ட விளக்க நூல் ஒன்று தரப்பட்டிருக்கிறது அதிலே குறிப்
பிட்டிருக்கிறார்கள் 'ஸ்டேண்டிங் பைனான்ஸ் கமிட்டி' தான்
இறுதியாக திட்டங்களை இறுதி வடிவாக்கி நிதிநிலை அறிக்
கையை இங்கே வைக்கிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள்.
ஆனால் அந்த ஸ்டேண்டிங் பைனான்ஸ் கமிட்டி கூட்டுகின்ற பல்
வேறு கூட்டங்களுக்கு அந்த ஸ்டேண்டிங் பைனான்ஸ் கமிட்டியின்
தலைவராக இருக்கக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்கள் வர
வில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே தெரிவிக்க விரும்பு
கிறேன். இப்படி ஆண்டுக்கு ஒரு முறை நாட்டு மக்களுடைய நல்ல
திட்டங்களை அறிவிக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையினுடைய திட்
டத்தை இறுதியாக்குகின்ற ஒரு கூட்டத்திற்கு முதல்வர் அவர்கள்
வருவது இல்லை என்றால் அவருக்கு நாட்டு மக்களுடைய பிரச்
சினையிலே அக்கறை இல்லை என்பதை தான் எடுத்துக்காட்டு
கிறது. அதைப்போலவே காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து மத்திய
நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் தலைமையிலே கூட்டப்பட்ட
கூட்டத்திலே அவர் கலந்துகொள்ளவில்லை, அதனாலே அந்தக்
கூட்டம் ரத்துசெய்யப் பட்டது. அதைப்போலவே பாண்டிச்
சேரியிலே, மத்திய அமைச்சராக இருக்கிற திரு. ஆர். வெங்கட்ட
ராமன் அவர்கள் தலைமையிலே தென் மாநிலங்களுடைய
மு லமைச்சர்களுடைய கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக்
கூட்டத்திற்குக் கூட நம்முடைய முதலமைச்சர் செல்லவில்லை.
அங்கே சென்றிருந்தால் கர்நாடக முதலமைச்சரிடம் காவிரி நீர்ப்
பிரச்சினை பற்றிப் பேசியிருக்கலாம். கேரள முதல் அமைச்சரிடத்
திலே மின்சாரப் பற்றாக்குறையை எடுத்துச் சொல்லி மின்சாரம்
பெறுவதற்கு வழி தேடியிருக்க முடியும். ஆந்திர மாநில முதலமைச்
சரோடு பேசி அரிசித் தட்டுப்பாடு இருக்கின்ற நேரத்திலே தட்டுப்
பாட்டை நீக்குகிற அளவுக்கு கலந்து பேசி இருக்க முடியும். இவ்
வளவு நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியமான முக்கியமான
கூட்டங்களுக்கு முதலமைச்சர் செல்லத் தவறிவிட்டார்கள் என்ற
குற்றச்சாட்டை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இங்கே, பஞ்சம், வறட்சி ஏற்பட்டதற்குக் பின்னாலே முத
லமைச்சர் அவர்கள் கோட்டையிலே நிருபர்களைக் கூட்டி ஒன்
றைச் சொல்லியிருக்கிறார். நாட்டிலே தண்ணீர் தட்டுப்பாடு, அரி
சித் தட்டுப்பாடு, மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது, ஆகவே
இந்த முனைகளில் நிலைமைகள் சீராகிற வரையில் அரசாங்க
சார்பில் ஆடம்பர படாடோப விழாக்கள் எதுவும் நடத்தக்கூடாது



1983 மார்ச் 11] [திரு. து. புருஷோத்தமன்]

என்று சொல்லியிருக்கிறோம். அரசாங்கச் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் ஒவ்வொரு காசையும் கணக்கிட்டுத்தான் செலவழிக்கவேண்டுமென்று நிருபர்கள் கூட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நடப்பது என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த மாநிலத்திலே மூதறிஞர் ராஜாஜி அவர்கள் ஆண்டிருக்கிறார்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆண்டிருக்கிறார்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆண்டிருக்கிறார்கள் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் ஆண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு— தேவைப்படாத பல லட்சம் ரூபாய் செலவு செய்து ஒரு லிப்ட் ஒரே ஒரு மாடி ஏறுவதற்காக நாம் செலவு செய்கிறோம் ஒவ்வொரு காசையும் கணக்கிட்டு செலவு செய்யவேண்டுமென்று நிருபர்கள் கூட்டத்திலே சொன்ன முதலமைச்சர் லட்சக்கணக்கான ரூபாய் செலவில் லிப்ட் போடக்கூடிய அவசியம் ஏற்படுகிறது அதைப்போல் அவர்கள் நுழைகின்ற நுழைவாயில் இந்த சரித்திரப் புகழ் வாய்ந்த கட்டத்தின் வடிவத்தையே மாற்றக்கூடிய அளவுக்கு ஏறக்குறைய 2½லட்சம் ரூபாய் செலவிலே அமைக்கிறார்கள். ஆகவே நிருபர்களிடத்திலே சொல்வது ஒன்று, ஆனால் நடைமுறையிலே நடப்பது வேறு ஒன்று என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு முன்னாலே எந்த முதலமைச்சருக்கும்..

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நிருபர்கள் கூட்டத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது இந்த அரிசிப்பிரச்சினை, குடிநீர்ப் தட்டுப்பாடு தீரும்வரை எந்த விழாவும் கூடாது என்று வைத்திருக்கிறோம், ஒவ்வொரு காசையும் இதற்காக செலவு செய்யவேண்டுமென்று வைத்திருக்கிறோம். அவசியமானாலொழிய பெரும் விழா இல்லாமல் எவ்வளவு சிக்கனமாக முடியுமோ அவ்வளவு சிக்கனமாக செலவு செய்வோம் என்று விழாக்களைக் குறித்து பேசியிருக்கிறார்களே தவிர அவசியம் ஏற்படுகிற இதர செலவுகளைப்பற்றியல்ல. எனவே, உறுப்பினர் அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக முடிச்சுப் போட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிருபர்கள் கூட்டத்திலே பேசிய பேச்சைத் திரித்துக் கூறவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் எப்படிப்பட்ட கருத்தை வேண்டுமானாலும் கொண்டிருக்கலாம், ஆனால் நிலைமையை நான் விளக்கிட விரும்புகிறேன். தலைமைச் செயலகத்திலே பல்வேறு பகுதிகளிலே லிப்ட் இருக்கின்றது. ஆனால் இந்தப் பகுதியிலே லிப்ட் வைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் ஏறி இறங்குவதற்கு என்ற நிலையிலே அல்ல, இது நீண்ட பெருங்காலமாகவே தேவைப்பட்ட ஒன்று, விரும்பப்பட்ட ஒன்று, ஏனென்றால் வெளிநாடுகளிலிருந்து வருகிறபோது பல பேர்கள் முதலமைச்சர் அவர்களையோ மற்றவர்களையோ

பார்க்க வருகிறபோது வயது ஆனவர்களும் மற்றவர்களும் பார்க்கிறபோது முடியாத காரணத்தினால் மேலே ஏற முடியாமல் கீழேயே கூட நடத்தவேண்டியிருக்கிறது.

(மாலை 5.30)

உதாரணத்திற்குச் சொல்கிறேன். 1967-ஆம் ஆண்டு கேரளத்திலுடைய முதலமைச்சராக இருந்த நம்பூத்ரிபாத் அவர்கள் வந்தபோது, மேலே வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தபோதிலும் அவரால் வர முடியாத காரணத்தால் அந்தக் கூட்டத்தைக் கூட கீழே வைத்து நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உதாரணத்திற்காகத்தான் தான் இதைச் சொன்னேன். ஆகவே, அந்தக் காரணத்திற்காகத்தான் அந்த லிப்ட்வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதே தவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவதற்காக அல்ல. இப்போது சொல்வதானால் கூட முதலமைச்சர் அவர்கள் அதைப் பயன்படுத்துவது இல்லை. வருகிறவர்களின் சௌகரியத்திற்காகவும், மற்றவர்களின் சௌகரியத்திற்காகவும் தான் அது வைக்கப் பட்டுள்ளது, என்ற நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஐயப்பாட்டை எழுப்பியதால் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த குறுக்கீட்டிற்கான நேரத்தையும் தாங்கள் குறித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் அது மக்களுடைய வரிப்பணம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அடுத்து சத்துணவுத் திட்டத்தை உள்ளபடியே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் வரவேற்கிறோம். அதற்குத் திட்டமிடப்பட்ட தெளிவான நடைமுறை இருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும், யாரிடத்திலே சொன்னாலும், அதிகாரிகளிடத்திலே சொன்னாலும் கூட அவர்கள் மறுப்பார்கள் என்று சொல்லிவிட்டு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். பெரிய தொகை, ஏறத்தாழ 134 கோடி ரூபாய் செலவு ஆகக்கூடிய திட்டத்தை வரவு செலவுத் திட்டத்திலே எந்த நிதியும் ஒதுக்காமல் நிறைவேற்ற வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். அதற்கு நன்கொடை வசூல் செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நன்கொடை எப்படி வசூல் செய்தார்கள்? அரசிலே பணிபுரிகிற அத்தனை பேர்களிடத்திலும் கட்டாயப்படுத்தி, பயமுறுத்தி வசூல் செய்தார்கள். பெரிய முதலாளிகள் எப்படி நன்கொடை கொடுக்கிறார்கள்? தகாதவகையில் சம்பாதிக்கிறவர்கள் நன்கொடை கொடுக்கிறார்கள். உதாரணமாக எங்களுடைய பகுதியில் கிண்டி ரேஸ் கோர்ஸ் இருக்கிறது. அவர்கள் சத்துணவுத் திட்டத்திற்குப் பல லட்சக் கணக்கான ரூபாயை நன்கொடையாக தந்தார்கள். அங்கே நடப்பது எவ்வளவு பெரிய ஊழல், எவ்வளவு ஏமாற்று வேலை என்பதை நாட்டு மக்கள் அறிந்துதான் இருக்கிறார்கள். ஏழைகளை வாட்டி வதைக்கிற ஒரு சூதாட்டம், அது ஒழிக்கப்பட வேண்டியது என்று அன்றைய தினம் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது





அதை ஒழித்தார்கள். அரசாங்கத்திற்கு எதிராக வழக்காடி, சுப்ரீம் கோர்ட்டிலே ஸ்டே வாங்கி இன்றையதினம் நடந்து கொண்டிருக்கிறது. அதைத் தட்டிக் கேட்க முடியாமல் பணக்காரர்களடத்திலே பணத்தை நன்கொடையாக வசூல் செய்கிறார்கள். அண்ணா அவர்கள் மற்றொன்றையும் கூறினார்கள். பணக்காரர்களிடத்திலே பணம் பெறுவது என்பது குஷ்டரோகியின் கையிலே இருந்து வெண்ணெய் வாங்குவதற்குச் சமம் என்றும் சொன்னார்கள். வாங்கிய பணத்தை கஜானாவிலே போட்டுக்கொள்கிற ஒரு நிலையைத்தான் இன்றைய ஆட்சியாளர்களிடத்திலே பார்க்க முடிகிறது. அதே நேரத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்று பணிக்கர், ஐ.ஏ.எஸ்., தலைமையில் ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை 1977-ல் தந்தது. இதுவரையில் அது ரகசியம் என்று சொல்லி வெளியிடப்படவில்லை. அதைப்போல குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய விசாரணை நடத்த அர்பன்சிங், ஐ.ஏ.எஸ். தலைமையில் ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். அந்த அறிக்கையையும் இங்கே வைக்கவில்லை. அந்த அறிக்கை ரகசியம் என்று சொல்லப்படுகிறது. அந்த அறிக்கைப் பற்றி அமைச்சரவையிலேகூட கலந்து பேசவில்லை. ஆனால் கோத்தார் என்ற பத்திரிகையாளர் அறிக்கையைப் பெற்று வெளியிட்டிருக்கிறார்கள். இன்டியா-டு-டே, மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளிலே அவைகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. பால் கமிஷன் அறிக்கை வெளியானதற்குப் பின்னாலே எவ்வளவு பரபரப்பு; எவ்வளவு பேர்களுடைய வாழ்க்கையை அந்த நேரத்தில் கெடுத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால் மற்ற அறிக்கைகள் வெளியானதற்குப் பின்னாலே அவர்கள் மவுனம் சாதித்தது ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பொது வாழ்விலே உள்ளோர் குற்றத் தடுப்புச் சட்டம் ஒன்று ஏற்கெனவே நம்முடைய மாநிலத்தில் இருந்தது. கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது. சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம் என்ற வகையிலே அரசியல்வாதிகள், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர் உள்ளிட்டு, தன் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டை இல்லையென்று நிரூபிப்பதற்காக வழக்கு மன்றம் செல்லக்கூடிய ஒரு நிலை இருந்தது. இன்றைக்கு காஷ்மீர் அரசாங்கமும், ஆந்திரா அரசாங்கமும், கர்நாடகா அரசாங்கமும், பீகார் அரசாங்கம் கூட இந்த சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. ஆனால் இன்றைய தினம் பார்க்கிறபோது அரசியல்வாதிகள்மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள். அதைத்தான் பல்வேறு நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. இன்றையதினம் சினிமாப்படங்களிலே பார்க்கிறோம். ஈ நாடு என்ற படம், மற்றும் இது எங்கள் நாடு என்ற படம், இவைகளைப் பார்க்கிறபோது, அரசியல்வாதிகள், குறிப்பாக ஆளும் கட்சியில் இருக்கிற அரசியல்

வாதிகள் எந்த அளவிற்குத் தவறு செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற படங்களுக்கு மக்கள் மத்தியிலே அமோகமான வரவேற்பு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப் போல இந்திப் படம் ஒன்று வந்தது. வந்தபின்னால், நாடாளுமன்றத்திலே ஒரு புயலே வந்து அந்தப் படத்தை நிறுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே தண்ணீர், தண்ணீர் என்ற ஒரு படம் கூட வந்தது. நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் அந்தப் படத்தைப் பார்த்துப் பதில் சொல்லும்போது, இங்கே தமிழகத்தில் தண்ணீர் பஞ்சம் வரவில்லை, இனிமேல் எப்பொழுதும் வராது என்று சொன்னார்கள். இப்பொழுது அது கேலிக் கூத்தாகி, தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது என்பதை உங்கள் மூலமாக அவருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே சமரசம் : ''ஈ நாடு'', 'இது எங்க நாடு' என்ற படத்தைப் பற்றிச் சொல்லி, அது ஆளுங்கட்சிக்கு அறிவுரை தரத்தக்கது என்று சொன்னார்கள். ஆனால், அந்தப் படத்தை நானும் பார்த்தேன். ஆளுங்கட்சிக்கு அறிவுரை சொல்வதாக இல்லை. எப்பொழுதோ ஆண்ட கட்சி இப்படி இருந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதாக இருப்பதாகத்தான் நான் அறிகிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : அந்தப் படத்திலே சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், இடைத் தேர்தல் எல்லாம் வருகிறது. நானே, கேள்விப்பட்டேன், திருச்செந்தூரில், பல பொதுமக்கள் படத்தைப் பார்த்துவிட்டு, இது எங்கள் எம்.எல்.ஏ. சொல்வதைப் போல இருக்கிறதே என்று மக்கள் சொல்வதை நானே பார்த்தேன் ஆக, நிலைமை அப்படி இருக்கிறது.

அடுத்து, நான் என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்கிறபொழுது ஒரு வேதனையான சம்பவத்தை இந்த நேரத்திலே நான் உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே வேளச்சேரி என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கே ஒரு ஏரி இருக்கிறது. பல நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவுள்ள ஏரி அது. இன்றைய தினம் தண்ணீர் இல்லாத காரணத்தாலே, அதனை, ஏறக்குறைய வீட்டு நிலமாக ஆக்கி, லே-அவுட் போட்டு, வீதிகள் அமைத்து, அண்ணா நகர் என்ற பெயர் போட்டு, வீதிகளுக்கும் பெயர்களை வைத்து, ஒரு கிரவுண்ட் ரூ. 3,000 என்ற அளவிலே விற்கிறார்கள். ஏரி, ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்குச் சொந்தம். அந்த ஏரியாலே ஏறக்குறைய ரூ. 4½ இலட்சம் வருமானம் பெற்றிருக்கிறார்கள். அதைக் கேட்கின்ற பொழுது, அதில் பெரிய, பெரிய புள்ளிகளுக்கெல்லாம் பங்கு இருக்கிறது என்று என்னிடத்திலே சொல்லப்பட்டது. யார்



யார் பங்கு வாங்குகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னும் பல இலட்சம் ரூபாய் விற்பனை ஆகிக் கொண்டிருக்கிறது. அரசாங்க நிலத்தை விற்று பணம் சம்பாதிக்கக் கூடிய காரியத்தை ஆளுங் கட்சியிலே செய்து வருகிறார்கள். அதற்கு அத்தாட்சியாக, பல புகைப்படங்களை இங்கே காட்ட விரும்புகிறேன். பல புகைப்படங்களை நான் அமைச்சரிடத்திலே கொடுக்க விரும்புகிறேன்.

அதைப் போல எங்களுடைய சைதாப்பேட்டையிலே பிராமணர்கள் தெரு என்று ஒன்றிருக்கிறது. பக்கத்திலே ஒரு ஈஸ்வரன் கோயில் இருக்கிறது. அதை மறைக்கின்ற வகையில் இரண்டு கடைகளை அமைத்திருக்கிறார்கள். அங்கே ஒரு அ.இ.அ.தி.மு.க. அன்பர் ஒரு கடைக்கு ரூ. 4,000 வீதம் பெற்றுக் கொண்டு அந்தக் கடையைக் கட்டச் சொன்னார்கள். இடையிலே அதை நிறுத்தச் சொன்னார்கள் மாநகராட்சி அதிகாரிகள். ஆனால், அதை நிறுத்தாமல் ஆளுங் கட்சிக்குப் பயந்து தொடர்ந்து கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அண்ணா காய்கறி மண்டி என்று பெயர் வைத்திருக்கிறார்கள். கலெக்டர் வந்து பார்த்திருக்கிறார்கள். தண்டோரா போட்டு காலி செய்ய வேண்டுமென்று ஏரிப் பகுதி மக்களுக்குச் சொன்னார்கள். காலி செய்யவில்லை. சொன்ன கலெக்டரை காலி செய்திருக்கிறார்கள், மாற்றியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு புறம்போக்கு நிலத்தை, அரசாங்கத்தினுடைய நிலத்தை, லே-அவுட் போட்டு விற்கப்படுகிற நிலை ஆளுங்கட்சிக்காரர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அதைத் தடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இந்தப் புகைப்படங்களை எல்லாம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களிடம் தர இருக்கிறேன். ஆக, அப்படிப்பட்ட நிலை இருக்கிறது.

கடைசியாக, எம்.ஜி.ஆர். நகர் இருக்கிறது. கோடம்பாக்கத்திலே, கலைஞர் கருணாநிதி பல்லவன் போக்குவரத்துப் பணிமனை இருக்கிறது. அதற்கு ஒட்டினாற் போல், பிளாட்பாரத்திலே ஏறக்குறைய ஒரு பர்லாங் தூரத்திற்கு 70 கடைகளை அந்த வட்டார ஆளுங்கட்சி அமைப்பாளர் கட்டியிருக்கிறார்—நீண்ட பெரிய சுவர் ; மேலே சிமெண்ட் ஓட்டை மேயவிட்டிருக்கிறார்கள். அதைக் கூட மாநகராட்சி அதிகாரி பார்த்தார். மேலேயிருந்து உத்தரவு வந்தது. பின்னாலே, என்னால் தடுக்க முடியவில்லை என்று சொல்கிறார். அப்படிப்பட்ட அநியாயங்கள் நடந்திருக்கின்றன. இப்படி காலியிடங்களைப் பார்த்தால் போதும், அதை அபகரிக்கிற நிலை இருக்கிறது. ஆதலாலே மக்கள் கேலி செய்கிற நிலைமைகள் இருக்கின்றன என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். கிண்டி தொழிற்பேட்டை இருக்கிறது. அங்கே ஒரு லேபர் காலனி இருக்கிறது. அங்கே பல்லாண்டுக் காலமாக,

இந்தக் குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்காருக்குக் கூட அப்படிப்பட்ட இடங்களை, வீடுகளுக்காக, நீண்ட கால தொழிலாளர்களுக்குக் கொடுக்கலாம் என்ற கருத்து இருக்கிறது.

[மாலை 5-40.]

இருந்தாலும் கொடுக்கவில்லை. அதே நேரத்திலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற அந்தத் தொழிற்பேட்டையிலே உள்ள தொழிற்சாலைக் கட்டிடங்கள் முதலாளிகளுக்குத் தவணை முறையிலே செலுத்த வேண்டுமென்ற முறையிலே உரிமை கொடுத்து இருக்கிறார்கள். முதலாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட அந்தச் சலுகை, தவணை முறையில் செலுத்தலாம் என்ற நிலைமையை இந்த ஏழைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக் கூடாதா என்று தான் கேட்க ஆசைப்படுகின்றேன்.

நாட்டிலே உள்ள நியாய விலைக் கடைகளில் எவ்வளவு அநியாயங்கள் நடைபெறுகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். டி.யூ.சி.எஸ். கடைகளாக இருந்தாலும் சரி, அமுதம் கடைகளாக இருந்தாலும் சரி, ஏராளமான க்யூ நிற்கிறது. பெண்களெல்லாம் பகல் நேரங்களிலே அந்தக் கடைகளின் முன்னால் நின்றுவிட்டு, இரவு நேரங்களில் தண்ணீருக்காக குடங்களை ஏந்திக் கொண்டு செல்லுகின்ற நிலைமை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதைப் போல எங்கள் பகுதியிலே உள்ள தண்ணீர்ப் பஞ்சத்தைப் போன்று சென்னையிலே வேறு எங்கேயும் அப்படிப்பட்ட நிலைமை இருக்காது என்று சொல்லுகின்ற அளவிற்கு தண்ணீர்ப் பஞ்சம் ஏராளமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சைதாப்பேட்டை, அண்ணாமலைச் செட்டி நகர், எத்திராஜ் நகர், ஜீவா நகர், ஈக்காட்டு தாங்கல் போன்ற இப்படிப்பட்ட ஆற்று நகர்ப் பகுதி, சுக்கன் புறம் போன்ற இடங்களில் உள்ள குடிசைப் பகுதிகள் நிறைந்த இடங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏராளமாக இருக்கிறது. நாள் தோறும் நாங்கள் அம்மாதிரி இடங்களுக்குச் சென்று எப்படியாவது அங்கே குழாய்களைப் போட வேண்டுமென்ற நிலையில் எடுத்துச் சொல்லி வருகிறோம். இப்படிப்பட்ட நிலைமை சென்னையைப் பொறுத்த வரையிலே இருக்கின்றது.

எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய ஆளுங்கட்சி உறுப்பினர் கூடப் பேசினார்கள். எந்தத் திட்டமும் இல்லாத நிலைமையிலே நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை, நாட்டிலே அரிசி இல்லை, சத்துணவுத் திட்டம் எப்படி ஆகுமோ என்ற நிலைமை. இன்னும் ஓரிரு மாதங்களுக்குத்தான் கையிருப்பு இருக்கிறது என்ற நிலைமை, அதற்கும் மேலாக மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக வேலைவாய்ப்பு அற்ற நிலைமை.



விலைவாசி ஏறிக்கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் பார்த்தும் கூட ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எப்படித்தான் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறார்களோ எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை அவர்கள் தங்களுடைய தொகுதி மக்களைச் சந்திக்கவே இல்லையோ என்னவோ தெரியவில்லை. நாங்கள் நாள் தோறும் தொகுதி மக்களைச் சந்திக்கின்ற காரணத்தினால் இப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் எங்களுக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் நாடு சீர்படாது. உருப்படாது என்ற நிலையைத்தான் மெள்ள நம்முடைய நிதியமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

*திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, இந்த அவையிலே கடந்த மூன்று தினங்களாக விவாதம் நடந்து கொண்டிருக்கின்ற 1983—84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களையும் எடுத்துச்சொல்வதற்கும், என்னுடைய தொகுதிவாழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய சில திட்டங்களைப் பற்றிக் கேட்பதற்கும் ஒரு நல்ல வாய்ப்பைத் தந்திருக்கின்ற உங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய அரசின் நிதியமைச்சராக இருக்கின்ற டாக்டர் நாவலர் அவர்கள் இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையின்மீது கடந்த இரண்டு மூன்று தினங்களாக, பலதரப்பட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் அவரவர்களுக் கேற்ப, அவரவர்களின் பாணியிலே சில கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற, எங்களுக்குக் கடந்த கால வரலாற்றுச் சொந்தமாக எடுத்துக்கொண்டால் பங்காளிக் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திலே இன் றைக்குப் பணியாற்றிக்கொண்டு இருக்கின்ற, வழக்கறிஞராகவும் இருந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள்......

திரு. எல். இளையபெருமாள் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பங்காளிக் கட்சி என்பதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : அவ்வாறு சொல்வதில் தவறில்லை.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் முதல் நாளன்று இங்கே ஒரு பெரிய நாடகத்தையே

[திரு. எம். அண்ணாதாசன்] [1983 மார்ச் 11

நடத்தி முடித்ததைப் போன்று பேசி அமர்ந்தார்கள். அந்த
நேரத்திலே இந்த அவையிலே இருந்தவர்களும் அமைதியாக உட்
கார்ந்து கேட்டதோடுமட்டுமல்லாது, சில நேரங்களில் சிரிக்க
வேண்டிய சூழ்நிலையையும் ஏற்படுத்தி இங்கே எங்களுக்கு ஒரு
வாய்ப்பையும் தேடித் தந்தார்கள்.

நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 'மாண்பு
மிகு உறுப்பினரவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்
கொள்கிறேன்.

கடந்த காலத்திலே நான் இளமையான வயதிலே இருந்த
போது தெருக்கூத்துக்களையும், நாடகங்களையும் பார்த்திருக்
கிறேன். அப்படி நாடகம் நடக்கும்போது அந்த நாடகத்துக்கு
முன்னாலே திரளாக மக்கள் கூடியிருப்பார்கள். அப்படி கூடி
யிருக்கின்றபொழுது முதன் முதலில் திடீரென்று ஆர்மோனியம்
வாசிக்கப்படும்—மேளங்கள் தட்டப்பட்டு திரையை வீழ்த்திவிட்டு,
திடீரென்று வெளியே அந்த மேடையிலே ** வந்துவிட்டார்
என்றால் அங்கு இருக்கிற மக்கள் எல்லாம் ஆரவாரம் செய்து
சிரிப்பார்கள். ஆகவே, நாடகம் ஒருவருக்கு மிகச் சிறப்பாக
இருக்கும். நடிகராக இருக்கக்கூடியவர் சிறந்த நடிகராக இருந்
தாலும், அவர்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட ஒரு நல்ல கைத்
தட்டலும், சிரிப்பும், ** வேஷம் போட்ட ஒரு **—நிச்சய
மாக அந்த நிலையைப் போலத்தான் இந்த மாமன்றத்திலும்
துவக்க நாள் அன்று மரியாதைக்குரிய துரைமுருகன் இங்கே
நாடகத்தில் நடித்துவிட்டுப் போனார்கள் என்பதை வருத்தத்
தோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. துரைமுருகன் : ஒரு அங்கத்தினர் என்றால் யாருக்கும்
பேசுவதற்கு உரிமையுண்டு. ஒருவர் பேசுகின்றதை மறுத்துப்
பேசலாம். ஆனால், ஒரு அங்கத்தினருடைய பேச்சுக்கோ அல்
லது செயலுக்கோ ஒரு உருவகம் கற்பிக்கக்கூடாது என்பது இந்த
மன்றத்தினுடைய மரபு. அண்ணாதாசனுடைய பேச்சு அவ்வாறு
அமையவில்லை. என்னைப் பற்றிக் குறிப்பிடும்போது—நாடகத்
தில் ** போல் என்று பேசினார்கள். இதை நாவலரவர்கள்
அவைக்குறிப்பிலே இருக்கவேண்டுமென்று கருதுகிறாரா அல்லது
இதை அப்படியே விடுவது என்றால் எனக்கும் பேச முடியும்
என்பதை ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
துரைமுருகன் பல சமயங்களில் இப்படி இழித்துப் பழித்துப்
பேசியிருக்கிறார்கள். அதனால் இது இருக்கவேண்டுமென்று
சொல்லவில்லை. ஆகவே, இதை எடுத்துவிடலாம்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.



1983 மார்ச் 11]

திரு துரைமுருகன் : தனிப்பட்ட முறையிலே யாரையும்
குறைசொல்லிப் பேசமாட்டேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் தண்ணீர்க்
குடிப்பதை எல்லாம் இழித்துப் பேசிய நிலை இருந்தது.
பத்திரிகையிலே நாவலர் அவர்கள் இத்தனை முறை தண்ணீர்
குடித்தார், இவ்வளவு நேரம் குடித்தார் என்றெல்லாம் வந்திருந்
தது.

திரு. துரைமுருகன் : நாவலருக்கு ஒரு வார்த்தை சொல்
கிறேன். அவர்களுக்கே தெரியும். நான் பேசினால் யாரையாவது
பேசுவேனே தவிர நாவலரை மறந்தும் பேசமாட்டேன் என்று

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** என்று
சொல்லப்படும் வார்த்தை நீக்கப்படுகிறது.

திரு. எம். அண்ணாதாசன் : புரட்சித் தலைவர் ஆட்சிப்
பொறுப்பிற்கு வந்த பிறகு—1977-க்குப் பிறகு—இயற்கையின்
சூழ்நிலையில் தமிழ்நாட்டிலே ஏற்பட்ட பல்வேறு சூழ்நிலைகள்
ஏற்பட்டதை—இந்த நாட்டிலே வாழ்கின்ற மக்கள் வாழ்வு மிகப்
பெரிய பாதிப்புக்குள்ளாகி அமைந்திருந்தது என்பதை இந்த மா
மன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும்
நன்றாகத் தெரியும். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவ
சாயப் பெருங்குடி மக்கள் முதல்—தாழ்த்தப்பட்ட மக்கள் முதல்
—தொழிலாளர் மக்கள்—மிகப் பெரிய பாதிப்புக்குட்பட்டார்கள்
—அந்த சூழ்நிலையிலும் கூட புரட்சித் தலைவர் மாண்புமிகு
முதல்வரவர்கள் அரும்பெரும் திட்டத்தை உருவாக்கி, அவர்க
ளுடைய நல்வாழ்வு மலரவேண்டுமென்ற காரணத்தோடு
துயர் துடைக்கும் பணி மேற்கொண்டு, அதற்காகப் பல கோடிக்
கணக்கான ரூபாயை செலவழித்து, அவர்களுடைய வாழ்க்கையை
மேம்படச் செய்தார்கள். இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்
பினர்களும், நாட்டிலே உள்ள நல்லவர்களும், நன்றாக அறி
வார்கள். அதைத் தொடர்ந்து—விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்
கின்ற தொல்லைகளை முன் வைத்து, இந்த மாமன்றத்திலே
விவசாயப் பெருங்குடி மகன் அல்லல் படுகிறானென்றும், அவ
னுடைய துயர் நீக்கப்படவேண்டுமென்ற வகையில் அவன் பட்
டிருக்கின்ற கடன்களையெல்லாம் நீக்கவேண்டுமென்றும், எதிர்க்
கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் எல்லோரும் இங்கே குரல்
கொடுத்தார்கள். இந்த நேரத்திலே கூட மாண்புமிகு புரட்சித்
தலைவரவர்கள் அதை ஏற்று, விவசாயிகளுக்குப் போட்டிருக்கிற
கடன்களை—கூட்டுறவுக் கடன்களையும் சரி, தற்காலிகக் கடன்
களையும் சரி, இன்னும் ஏனைய கடன்களிலே ஒரு பகுதியை
இந்த அரசு நீக்கியது என்ற வரலாற்றை யாரும் மறந்துவிட

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எம். அண்ணாதாசன்] [1983 மார்ச் 11

முடியாது. மாண்புமிகு திராவிட முன்னேற்றக்கழகத் தோழர்கள்—உறுப்பினர்கள் இவ்வளவும் தெரிந்துதான் இங்கே பட்ஜெட்டிலே ஒன்றுமே இல்லை—ஒன்றுமே இல்லை— புரட்டிவிட்ட காலண்டர் என்று துட்சமாகப் பேசிவிட்டார்கள்.

(மாலை 5-50)

ஒன்று மட்டும் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எவ்வளவு பெரிய அறிவு மேதையாக இருந்தாலும், ஆற்றல் மிக்கவர்களாக இருந்தாலும் சரி, செயல் திறன் காட்டக்கூடிய வர்களாக இருந்தாலும் சரி, எந்தக் காலக்கட்டத்திலேயும் செய்ததற்கு ஒரு குறிப்பு இருக்க வேண்டும் என்றால், அதைப் புரட்டித்தான் வைப்பார்களே தவிர, தேவைப்படுகிற நேரத்திலே அதைப் புரட்டிப் பார்த்துக் கொள்வதுதான் வரலாற்றிலே இருக்கிற உண்மையாகும். காலண்டர் என்று இங்கே குறிப்பிட்டார்கள். இந்த பட்ஜெட்டிலே வேளாண்மைத் துறைக்கு 1949-க்குப் பின்னாலே இன்னமும் சொல்கிறேன், 1957-க்குப் பின்னால், இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி, 1967-க்கு இடையிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆண்டவர்கள் செய்திருக்கிற நன்மை, அதற்குப்பிறகு மாண்புமிகு கலைஞர் அவர்கள் இங்கே முதல்வராக இருந்தபோது 1967-லே இருந்து, 2 ஆண்டுகளுக்கு அப்பால்—1970-லேயிருந்து 1976 முடிவிற்குள்ளாக அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு செய்திருக்கின்ற நன்மைகளை மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் சட்டசபையிலே புள்ளிவிவரத்தோடு எடுத்து வையுங்கள், எங்களைப் போன்றவர்கள், கடந்த 5 ஆண்டு காலத்திலே புரட்சித் தலைவர் அரசு தமிழகத்தினுடைய வேளாண்மை மக்களுக்கு செய்திருக்கின்ற நன்மைகளை நாங்கள் தருகிறோம். அதில் உங்களைவிட இந்த அரசு பிந்தி இருக்குமானால் நீங்கள் என்ன சவாலை விடுகிறீர்களோ அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சூழ்நிலைகளில் வறட்சி தாண்டவமாடுகின்றது. தொன்றுதொட்டு, அது 1977-க்குப் பின்னால், அதாவது வெள்ளம், புயல் அதைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு ஓரளவு இந்த வறட்சியை சமாளிக்கக்கூடிய அளவிற்கு இருந்தது. இந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சி, இவ்வளவு பெரிய சோதனைக்கும் இடையிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு திட்டங்கள் தீட்டுகின்ற வகையிலே புரட்சித் தலைவருடைய அரசு இன்றைக்கு 88.87 கோடி ரூபாய் இந்த நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களுக்காக ஒதுக்கியிருக்கிறது என்றால், அதைப் பாராட்டுவதற்கு உங்களுக்கு மனம் இல்லை என்றாலும், திட்டம் தீட்டியிருக்கிறார்களே என்றாவது சொல்லியிருக்கலாம். ஆனால்



1983 மார்ச் 11] [திரு. எம். அண்ணாதாசன்]

ஒன்றுமே இல்லை என்று நீங்கள் சொல்லியிருப்பது உள்ளபடியே மனிதாபிமானத் தன்மைக்கு உகந்தது அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் விவசாயிகளுக்கு, அவர்களுடைய விளை பொருள்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் வேளாண்மை துறைக்கு மிகப் பெரிய பங்கு உண்டு என்ற சூழ்நிலைக்கு ஏற்ப, அதாவது ஓரளவிற்கு தரமான விதைகளை உற்பத்தி செய்யவும், பகிர்ந்து அளிக்கவும், அந்த விதைகளை பதப்படுத்தி வைக்கவும், அடுத்த ஆண்டுக்கு ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில், அதாவது 212 பெரிய புன்செய் பயிர் சாகுபடி தொழில் நுட்ப உத்திகளை மேம்படுத்தி அதை விவசாயிகளுக்கு தெரியச் செய்வதற்கும் வேளாண்மைப் பொறியியல் துறையிலே தீவிரப்படுத்தப்பட இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இவ்வளவு பெரிய சூழ்நிலைகளுக்கு நடுவில் விவசாயிகள் சிற்றூரிலே இருந்தாலும் சரி, இன்னும் அதைவிட பெரிய நகரங்களிலே இருந்தாலும் சரி, அந்த விவசாயிகள் இந்த ஆண்டு மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, தமிழக முதல்வர் என்ன செய்வார் என்று முதல் அமைச்சர் மேல் அனுதாபப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்கின்ற நல்ல திட்டங்களுக்கு இயற்கை சதி செய்துவிட்டது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அந்த விவசாயிகள் இந்த அரசால் பெற்ற நன்மைகளை மறந்துவிட்டு மக்கள் குறை பேசவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, இங்கே நீர்ப்பாசனத்துறையைப் பொறுத்த வரைக்கும் தமிழ்நாட்டிலே இன்றைக்கு காவிரிப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் கர்நாடகத்தினுடைய தண்ணீர் நமக்கு கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த பல முதல் அமைச்சர்கள் திறமையானவர்களும் ஆண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டை ஆரம்பக் கட்டத்திலே, சுதந்திரத்திற்குப் பிறகு ஆண்டவர்கள், இன்றையதினம் மத்திய சர்க்காரிலே ஆண்டுக்கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சிக்காரர்கள்தான், தேசிய வாதிகள்தான், தேசிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள்தான். இவ்வளவு பெரிய ஆட்சிப் பீடத்திலே இருந்தவர்கள் இந்த தமிழ்நாட்டின் மேலே அக்கறை காட்டி இருந்து இருப்பார்களேயானால், வடபுலத்திலே பெரிய நதிகளை எல்லாம் ஓடவிட்டு, பக்ராநங்கல் போன்ற பெரிய அணைக்கட்டுகளை அங்கே உருவாக்கி கிட்டத்தட்ட 3, 4 மாநிலங்களைச் செழிப்புற வளர்வதற்கு ஏற்பாடு செய்த காலகட்டத்திலே அவர்கள் இந்த தமிழகத்தைப் பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பார்த்திருப்பார்களேயானால் இன்றைக்குத் தண்ணீர், தண்ணீர் என்று கர்நாடக அரசை நம்பியேந்தி நிற்க வேண்டிய அவலநிலை வந்திருக்காது என்பதை மட்டும் நான்கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதையெல்லாம் விட்டுவிட்டு எதிர்க்கட்சியிலே இருக்கின்ற தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள், அந்தக் கட்சிக்குச் சொந்தக்காரர்கள், எதையெதையோ பேசிக்கொண்டு இருக்கிறார்கள். எங்கே கேட்க வேண்டுமோ, அங்கே போய் எதைச் சொல்ல வேண்டுமோ யாரிடத்தில் போய் பேசவேண்டுமோ அங்கேபோய் சொல்வதற்கு அவர்களுக்கு அச்சமோ என்னவோ தெரியவில்லை, இங்கே வந்து அவற்றைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்த பிறகு ஏறத்தாழ ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மாவட்ட ரீதியாகப் பார்த்து, பல இடங்களில் சிறு நீர்த்தேக்கங்களை உருவாக்கி, மழைக்காலங்களில் வரும் நீரை அதில் தேக்கம் செய்து, அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு பயன்படுத்தத் தக்கவகையில் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். அதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்ல விரும்புகிறேன். நடப்பு ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் 1 1/2 மாதத்திற்கு முன்பு ஜெயங்கொண்டம் தாலுக்காவில் சித்தமல்லி என்ற இடத்தில் ஒரு நீர்த்தேக்கதைக் கட்டுவதற்கு மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கால்கோள் நாட்டியிருக்கிறார்கள். அதைப்போலவே ஆயக்குடி என்ற இடத்தில் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் கால்கோள் விழா நடத்தப்பட்டுள்ளது. இப்படி இன்னும் பல்வேறு இடங்களில் திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன. அதற்காக இந்த அரசுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில கோரிக்கைகளை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். என்னுடைய திருவெரம்பூர் தொகுதி, திருச்சி மாநகரத்தைச் சுற்றியுள்ள பகுதி. திருச்சி மாவட்டம் தமிழ்நாட்டின் இதயம் என்று சொல்லலாம். நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியில் உள்ள மாண்புமிகு நம்முடைய செய்தி சுற்றுலா அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தைக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது, அதை ' இதயம் ' என்று சொன்னார்கள்,

அப்படி இதயம் போல் இருக்கிற அந்த திருச்சியில்தான், பாய்லர் தொழிற்சாலை, ரயில்வே தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, ஏராளமான சிறு தொழிற்கூடங்கள், ஆர்.இ.சி. சேஷசாயி தொழிற்கல்வி மற்றும் பல்வேறு பள்ளிகளும்,கல்லூரிகளும், பாலிடெக்னிக்குகளும் ஏராளமாக இருக்கின்றன. அதை நம்பி பலர் அங்கே குடியேறுகிறார்கள். அப்படி குடியேறுகிறவர்களைக் கணக்கில் கொண்டால் ஒரு மாதத்திற்கு 100 குடும்பங்கள் வெளி மாவட்டங்களில் இருந்து வருகிறார்கள். இந்த அரசாங்கம் அந்த இடத்தில் உள்ள மக்களுக்கு நல்ல வகையில் குடிநீர் திட்டங்களைத் தீட்டியிருந்த போதிலும், தற்போது ஏற்பட்டுள்ள மக்கள் தொகை பெருக்கத்தால் பற்றாக்குறை





ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, நான் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வேன், என்னுடைய தொகுதியில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையை குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தனி ஆய்வு செய்து, அதற்காக தனியாக ஒரு திட்டம் ஏற்படுத்தி, அந்தப் பற்றாக்குறையைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கும் ஏரிகள், குளங்கள் எல்லாம் தூர்ந்து போய் இருக்கின்றன. அவற்றை ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[இரவு 6-00]

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழக அரசின் 1983—84 ஆம் ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறும் விவாதத்தில் பங்குகொள்வதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது கடுமையான வறட்சி. எங்கு பார்த்தாலும் தண்ணீர் பற்றாக்குறை, அரிசி பற்றாக்குறை, மின்சாரம் பற்றாக்குறை. இப்படிப்பட்ட நேரத்தில் ஒரு நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் அளிக்கிற நேரத்தில், ஒரு இக்கட்டான நிலைமையில் அரசாங்கம் இருக்கிற இந்த நேரத்தில் அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல் கேலி பேசுவதற்கும் இண்டல் செய்வதற்கும் இது நேரமல்ல என்று கூற கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் குறைகளைச் சொல்லும்போது ஆளும் கட்சியில் இருப்பவர்கள் உணர்ச்சிவசப்பட தேவையில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்ல உருப்படியான யோசனைகளை எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் தெரிவித்தால் அதை நீங்கள் பெருமையோடு கேட்க கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது எல்லாம் பற்றாக்குறை. அதே நேரத்தில் இந்த அறிக்கையில் நிதிப் பற்றாக்குறை என்றும் நமக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைத் தயாரித்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, என்னைப் பொறுத்தவரையில், அவர்கள் திறமை பற்றாக்குறை உடையவர்கள், அறிவு பற்றாக்குறை உடையவர்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. வரப்போகிற காலத்தில் இருக்கிற நிலைமைகளை எதிர்நோக்கி, உருவாக்க வேண்டிய திட்டங்களைத் தீட்ட தவறிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். (Anticipation of the catastrophy which are likely to come) வருங்காலத்திற்கு இப்போது இருப்பது ஒரு நுழைவாயில்தான். இன்னும் வரப்போகிற மாதங்கள் கடுமையாக

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1983 மார்ச் 11

இருக்கும். அதை எதிர்நோக்கி நாம் முன் எச்சரிக்கையாக இருந்து, இந்தநிதிநிலை அறிக்கையை தயாரித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாததற்கு தயாரித்தவர்களுடைய திறமைப் பற்றாக் குறைதான் காரணம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ 185 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தலைக்குமேல் வெள்ளம் போனால் சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன? 185 கோடியை சரிக்கட்ட வரி போட்டு, 25 கோடிக்கு வரி போட்டு-26 கோடி வரி போட்டுவிட்டு அதிலே ஒரு கோடி வரிச் சலுகை அளித்து பற்றாக்குறையை 165 கோடியாக குறைத் திருக்கிறார்கள். எப்படியும் பற்றாக்குறைதான். அதுவும் 1 (5 கோடி பற்றாக்குறை. அப்படி இருக்கும்போது "எங்கள் ஆத்துக்காரரும் கச்சேரிக்குப் போகிறார்" என்று சொல்வார்களே அதைப்போல பட்ஜெட் என்றால் வரி போட்டாக வேண்டும் என்ற முறையிலே இந்த 25 கோடிக்கு ஏன் வரி போடவேண்டும்? 165 கோடியாக இருந்தால் என்ன, 185 கோடியாக இருந்தால் என்ன?

You could h've atl ast g ven a tax-hol dav.

கடுமையான வறட்சி. இங்கே வரி போடவேண்டிய தேவை யில்லை என்று சொல்லியிருக்கலாம். 25 கோடி வரி போட்டதி னால் பெரிய வருமானம் கிடைத்துவிடப்போவதில்லை.

It is ill-conceived, illogical, illegit mate and illegal.

1937 ஆம் ஆண்டில் இராஜாஜி அவகள்தான் முதன் முதலாக புதிதாக ஒரு வரியைப் போட்டார்கள். அதுவரை உலகத்தில் இல்லாத ஒன்று, இன்கம் டாக்ஸ். ஆனால், இன்றைக்கு ஆப்காரி டாக்ஸ் என்பதை நுழைவு வரி என்ற முறையில் அரசு போட்டிருக்கிறது. ஒரு முனிசிபாலிட்டிக்கு உள்ள அதிகாரத்தை இன்று அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது. It s illegitimate and it is not within the competence of the State. Octro means— Duty on Entry of goods into town.—It was sa'd in Oxford dictionary.

தமிழ்நாட்டிலே குக்கிராமமாக இருந்தாலும் சரி, டவுனாக இருந்தாலும் சரி, எல்லாமே இந்த அரசாங்கத்திற்குச் சொந்தம். கிராமத்திலே பொருளை உருவாக்குகிறார்கள்; நகரத்திலே அவற்றை விற்க வருகிறார்கள். அப்படி விற்க வருகின்ற பொருட் களுக்கு வரி, 'என்ட்ரி டாக்ஸ்' என்று போடுகிறார்கள்.



1983 மார்ச் 11] [டாக்டர் கே. சௌரிராஜன்]

Does it not amount to discrimination among the producers. நகரத்தில் விற்றால் வரி ஜாஸ்தி, கிராமத்தில் விற்றால் விலை குறைவு. Does it not amount to d scrim nat on. நான் உங்களைக் கேட்கிறேன். குஜராத்தில் விளை கிற துவரம்பருப்பை தமிழ்நாட்டில் கொண்டு விற்றால் எக்சைஸ் டியூட்டி. அகமதாபாத்திலுள்ள மில் துணியை தமிழ்நாட்டில் விற்றால் நுழைவு வரி என்பதைப் போன்ற ஒரு நிலைமை ஏற்பட்டால் எவ்வளவு கேவலமானது, அறிவுக்கு ஒவ்வாதது என்று சொல்லி, இது முனிசிபாலிட்டிக்கு உள்ள அதிகாரம், அரசுக்கு அல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமத்தில் உற்பத்தியாகிற பொருட்களை மொத்தமாகக் கொண்டு வந்து நகரத்தில் விற்பனை செய்ய வசதியாக இருக்கும். அதற்கு சலுகை கிடைப்பதாக இருக்க வேண்டும். ஆனால் நகரத்திற்கு வரும் பொருட்களுக்கு ஆப்காரி வரி என்ற முறையிலே அல்லது நுழைவு வரி என்ற முறையிலே விதித் திருக்கிறார்கள். அது தேவையில்லை. இந்த வரியை நீக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைகளுக்கு எல்லாம் மின் இணைப்பு கொடுத்துவிட்டோம். ஆனால் இங்கே நாம் என்ன சொல்கிறோம் என்றால் சிம்னி விளக்கினுடைய வரியைக் குறைக்கப்போகிறோம் என்று. இது என்ன சாமர்த்தியம், இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குப் புரியவில்லை.

அங்கே சர்க்கரைக்கு விலை அதிகமாகிவிட்டது. இங்கே ஜுரத்தாலே அவதிப்படுகிற நோயாளிக்கு ஜவ்வரிசிக் கஞ்சி கூட வைத்துக் குடிக்க முடியாமல் அதற்கு வரி போடுகிறீர்கள். இட் ஈஸ் எ ஃப்யூட்டைல் எக்ஸைஸ், என்று முதலிலேயே சொன்னேன். ரூ. 185 கோடி பற்றாக்குறை வந்துவிட்டது என்றாலும் பரவாயில்லை.

திரு. சு. பாலன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே அங்கே ஆளும் கட்சிப் பக்கத்தில் ஏதோ சத்தம் வந்து, அங்கத் தினர்கள் எல்லாம் எதுவும் சொல்லாமல் எழுந்து போகிறார்களே அது என்ன என்று விசாரித்து அவைக்கு அறிவித்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஃபேனில் ஏதாவது எலக்ட்ரிக் சாமான் உடைந்து இருக்கும். அவ்வளவு தான்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பட்ஜெட்டை சிந்தித்துப் பார்ப்போமானால் நகர்ப்புறத்திற்கு விவசாயத் தொழி லாளர்கள் வருவதைத் தவிர்ப்பதற்கு அங்கே வேலையில்லாத்

திண்டாட்டத்தைப் போக்க இன்டக்ரல் ரூரல் டெவலெப் மென்ட் ப்ரோகிராம் என்ற திட்டத்தை உருவாக்கியிருக்கி றார்கள். கிட்டத்தட்ட ரூ. 450 கோடி ரூபாய் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு தருவதற்காக உருவாக்கியிருக்கி றார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

இன்றைக்கு சென்னை நகரத்திலே உள்ள எங்கள் வீடுகளுக்கு தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டத்திலே இருக்கிற வர்கள், விவசாயிகள், தினமும் 2 பேராவது வந்துவிடுகிறார்கள். ' அக்ரிகல்சுரல் ஆப்பரேஷன் ஈஸ் ஸ்டான்ட் ஸ்டில்'. ஆகை யால் அந்த விவசாயிகள் சென்னைக்கு வருகிறார்கள். நாளுக்கு நாள் வந்துகொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தண்ணீர் கொடுக்க முடியுமா ? ரேஷன் அரிசி கொடுக்க முடியுமா ? சத்துணவு கொடுக்க முடியுமா ? அவர்களுக்கு எந்த வேலையும் கொடுக்க முடிவதில்லை. ' தே ஆர் ஆல் அன்ஸ்கில்ட் லேபரர்ஸ் '. அவர்களெல்லாம் கிராமங்களிலே தங்குவதற்கு, அங்கேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பை உரு வாக்கிக் கொடுப்பதற்கு தவறினால் எதிர்காலத்தில் இன்னும் கொடூரமான பஞ்சகாலத்தில் கிராமத்திலே இருக்கிறவர்கள் அனைவரும் நகரத்தை நோக்கி வந்துகொண்டே இருக்கக்கூடிய பயங்கர நிலை ஏற்படும். ' தி ப்ளோ ஆப் தி பாபுலேஷன் ப்ரம் தி ரூரல் ஏரியாஸ் டு தி அர்பன் ஏரியாஸ் மஸ்ட் பி கன்டெய்ன்ட் '. இதற்கெல்லாம் என்ன திட்டங்களைத் திட்டியிருக்கிறோம் என்று நாவலர் அவர்கள் சிந்தித்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

மத்திய அரசு இப்போது உருவாக்கியிருக்கிற திட்டத்திலே, தன்னிறைவுத் திட்டம் போல, வறட்சி நிவாரணத்திற்கு ரூ. 40 கோடி ஒதுக்கியிருக்கிறோம். இது போதுமா ?

தன்னிறைவுத் திட்டம் என்ற போட்டு இருக்கிற கிணற்றை வேண்டுமானால் மறுபடியும் தோண்டலாம். இருக்கிற ரோட்டை மறுபடியும் போடலாம். சில பேருக்கு சில வசதி களைச் செய்து கொடுக்கலாம். அது நிரந்தரமான நிவாரணம் ஆகாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில நிரந் தரமான திட்டங்களைத் தீட்ட வேண்டும். உதாரணத்திற்குச் சிலவற்றைச் சொல்கிறேன்.

கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை ரோட் டிராக் இருக்கிறது. இது டபுள் டிராக், இந்த டபுள் டிராக்கை நான்கு டிராக்காக மாற்றினால் எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கும் ?

பக்கிங்ஹாம் கால்வாயைச் சீரமைப்பது போன்ற பெரிய திட்டங் களை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, கிராமப்புறத்திலே இருக்கிற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுங் கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.





திருநெல்வேலியில் ஒரு ஏர்போர்ட் போடலாம். தூத்துக்குடி யில் ஒரு ஏர்போர்ட் அமைக்கலாம். இப்படிப்பட்ட கேபிடல் எக்ஸ்பெண்டிசர் அடங்கிய சிவில் ஒர்க்ஸை அன்ஸ்கில்ட் லேபரர் கள் செய்யக்கூடிய வேலைகளை அதற்கான திட்டங்களை மத்திய அரசிடமிருந்து பெறுவோமானால், சில கோடி ரூபாய் களை நாம் பிச்சையாக அவர்களிடமிருந்து வாங்குவதை விட, இத்தகைய திட்டங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்போமோனால் அது நமக்கு மிகவும் பயன் தரும். இத்த கைய திட்டங்களை இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகப் பெற்று கிராமப்புறங்களிலே இருக்கிற மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து அதன் மூலமாக அவர்கள் சென்னைக்கு வருவதை தடுத்து நிறுத்தவேண்டுமென்று, அத்தகைய ஒரு நல்ல காரியத்தை, அடுத்த பருவ மழை வருவதற்குள் செயல் படுத்த வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 6.10)

அடுத்தபடியாக சென்னை நகரைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இருந்து கொண் டிருக்கிறார்கள், ஆகவே சென்னை நகரத்தில் தற்போதுள்ள நிலையை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டி ருக்கிறேன். சென்னை நகரிலே, இரண்டு நாட்களுக்கு ஒரு முறைதான், அதாவது ஒரு நாள் விட்டு ஒருநாள் தான் குடி தண்ணீர் விடவேண்டும் என்று யாரோ ஒரு பிரகஸ்பதி அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனையாக அறிவித்திருக்கிறார். அதன் விளைவு. இன்று தண்ணீர் வரும், நாளை வராது, நாளைக்கு மறு நாள், நாளன்றைக்கு தண்ணீர் வரும், என்று சொன்னால், என்ன நிலைமை ஆகியிருக்கிறது என்றால், சென்னை நகரத்தில் உள்ள அத்தனை எவர்சில்வர் பாத்திரக் கடைகளிலும், எவர் சில்வர் டிரம்கள், அலுமினிய டிரம்கள், தார் நிரப்பி வைப்பார் களே இரும்பு டிரம்கள் போன்றவைகள் அதிக அளவில் வாங்கப் பட்டு, எல்லாவற்றிலும் நிரப்பி வைத்திருக்கிறார்கள். தண்ணீர் வந்தால் அதிலே சேமித்து வைத்துவிடுகிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன? கீழ்பாக்கத்திலிருந்து ஹைபிரஷர் பம்ப் வைத்து பம்ப் பண்ணி மாம்பலத்திலிருந்து நார்த் மெட்ராஸ் முழுவதற்கும் தண்ணீர் வருகிறது. யார் யார் பம்பிங் ஸ்டேஷன் அருகிலே இருக் கிறார்களோ அவர்களுக்கு வசதியாக இருக்கிறது. அவர்கள் 4 நாட் களுக்கு பிடித்து சேகரித்து வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அசோக் நகர், மாம்பலம் பக்கம் வரும்போது, பிரஷ்ஷர் குறைந்து அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூட கிடைப் பதில்லை. இது நிதர்சனமான உண்மை. ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுப்பதால் எல்லோரும் போட்டி போட்டு பிடித்து வைத்துக் கொண்டு பாதுகாக்கிறார்கள். ஆனால் துங்கை

பாக்கம், மாம்பலம், அசோக் நகர், சைதாப்பேட்டை ஆகிய பகுதிகளிலே உள்ள ஜனங்களுக்கு ஒரு டிராப் தண்ணீர் கூட கிடைக்காத நிலை உருவாகியிருக்கிறது. ஒரு சில பகுதிகளில் அதற்கு என்ன செய்வது என்று யோசித்து சிலர் தங்களுடைய வீட்டிலே சம்ப் போட்டு வைத்துக் கொண்டு, அதிலேயிருந்து தண்ணீரை எடுத்து, ஓவர் ஹெட் டேங்குகளில் கொண்டு போய் கொட்டிவைத்துக் கொண்டு லெட்ரின் போவதற்குக் கூடப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் மாம்பலம், சைதாப்பேட்டை பகுதிகளில் இருப்பவர்கள் குடத்தைத் தூக்கிக்கொண்டு தெருத் தெருவாக அலைகிறார்கள்.

All the sump connections in Madras City must be cut off. அதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதற்கு ஒரு விளம்பரம் செய்யக் கூடாதா? எது எதற்கோ விளம்பரங்கள் பேப்பர்களில் வருகிறது. வாட்டர் என்பது இப்போது மிகவும் அரிதான பொருள் அதைச்சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும் என்று, குடிப்பதற்கு சமைப்பதற்கு தவிர வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது என்று "water is precious. Don't waste water. It must be used only for drinking and cooking purpose. It is a rare commodity. It must be saved at all costs" என்று விளம்பரம் செய்யக் கூடாதா? சினிமாக்களிலே, டி. வி. களிலே ரேடியோக்களிலே எல்லாம் அதற்கு விளம்பரம் கொடுக்கக் கூடாதா? அது அவசியம் தேவையான ஒன்று. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே தண்ணீரை குறைவாக உபயோகியுங்கள் என்று சொல்லி அங்கே போட்டிருக்கிறார்கள் விளம்பரம்—ஏதோ அவர்கள் தான் வருடத்தில் 365 நாட்களும் வந்து அங்கே உட்கார்ந்துக் கொண்டு தண்ணீரை கொட்டிக்கொண்டிருப்பது போல.

அடுத்து, போரிங் பம்புகள், அவைகளை எங்கே போட்டிருக்கிறார்கள் என்றால், டீக் கடை வாசல்களிலே போட்டிருக்கிறார்கள். 20 அடி ஆழம் வைத்து இந்த பம்புகளை போட வேண்டும் என்று இருக்கிறது. 60 அடி ஆழம் பண்ணினால் கூட தண்ணீர் வராத இடங்கள் மாம்பலம் போன்ற பகுதிகளில் இருக்கின்றன. ஆனால் இந்த போர் பம்புகளை ஆயிரக் கணக்கில் போடுகிறார்களே தவிர அப்படி போட்டதாக கணக்கு எழுதி வைத்துக் கொண்டு பில் போட்டு விடுகிறார்களே தவிர, அவைகளில் தண்ணீரே வருவதில்லை. முதல் 2, 3 நாட்களுக்கு தண்ணீர் வரும். பிறகு வராது. ஏன் தெரியுமா தோண்ட வேண்டிய 20 அடி ஆழத்தைத் தோண்டி அந்த பைப்புகளை போடுவது இல்லை. 10, 15 அடி ஆழம் தான் தோண்டுகிறார்கள். அதனால் தான் ஒரு 10, 15 நாட்களுக்கு மட்டும் தண்ணீர் வரும் 11ஆம் நாளிலிருந்து நின்றுவிடும். காரணம் அது டிரையாகப் போய் விடும், That water dries up.





நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவர் கட்டாயம் மாம்பலம் அசோக் நகர் போன்ற பகுதிகளுக்கு வந்து, உண்மையிலேயே அந்த போரிங் குழாய்கள் 20 அடி தோண்டப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். நிச்சயமாகத் தோண்டப்படவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள். சமீபத்திலே மகாராஷ்டிரத்திலே ஒரு ஆக்ட் கொண்டு வந்திருக்கிறார்கள். என்னவென்றால், All the wells which contain drinking water have been taken over by the State. எதெதெற்கோ ஆர்டினன்ஸ் போடுகிறோமே, இதற்கு அப்படி ஒன்று போட்டு, எந்தெந்த கிணறுகளில் எல்லாம் குடி தண்ணீர் இருக்கிறதோ அவைகள் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்று நீங்களும் போடக்கூடாதா? சென்னையிலே, ராஜகுளம் தோட்டம் என்ற இடத்திலே ஒரு கிணறு இருக்கிறது. அந்தக் கிணற்று நீர் நல்ல நீர் என்றும் அதை சுத்தம் செய்து கொடுங்கள் என்றும் கேட்டால், அது பிரைவேட் லேண்டிலே இருக்கிறது ஓனரிடம் பெர்மிஷன் வாங்கி வாருங்கள், என்று சொல்கிறார்கள்.

(மணியடிக்கப் பெற்றது.)

Sorry Sir. It is a very important situation. How people are suffering in Madras City I want to enlighten the Hon'ble Minister because he is here fortunately for me இப்படிப்பட்ட ஒரு துர்பாக்கியமான நிலைமை குடி தண்ணீர் பிரச்னையிலே இருந்துக் கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

சில இடங்களில் என்ன செய்கிறார்கள்? மீட்டர் போட்டிருக்கிறார்கள். குழாயில் தண்ணீர் வரவில்லை. ஆனால் மீட்டர் மட்டும் போட்டிருக்கிறார்கள். குழாய்ப் பம்ப்பை அடித்தால் மீட்டர் மட்டும் ஓடும், தண்ணீர் வந்தாலும் வராவிட்டாலும் இரண்டு அடி அடித்தால் போதும்,சர் என்று மீட்டர் ஏறிவிடுகிறது. தண்ணீரே கொடுக்காமல், மீட்டருக்கு சார்ஜ் மட்டும் கட்ட வேண்டும். இது என்ன நியாயம். இப்படி இருந்தால், வெளி மனிதர்கள் யாருக்காவது அவன் தண்ணீர் விடுவானா? எப்படி விடுவான்?

உதாரணமாக, மாம்பலத்தில் 3, 4 வீடுகளில் தான் தண்ணீர் வருகிறது. அதுவும் இரவு நேரங்களில். வீட்டுச் சொந்தக்காரனுக்குத் தான் மீட்டர் போட்டு பணம் கட்டிக் கொண்டிருக்கின்றான் எல்லோருக்கும் விட முடியாது என்கிறான். தண்ணீர் கிடைக்காத பொது மக்கள் விட்டுத்தான் ஆக வேண்டும் என்று சண்டை போடுகிறார்கள். ஆக தினமும் ஒரு போராட்டம்தான். நேரிடையாக அடித்துக்கொள்ளும் நிலைகூட ஏற்பட்டுவிடும். இன்னும்கொஞ்ச நாள் போனால், லா—அண்டு ஆர்டர் பிராப்ளமே இதனால் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே இந்த நிலமைகளை மாற்றி மக்கள் அனைவருக்கும்

குடி தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும், ஒரு நாள் விட்டு ஒருநாள் தண்ணீர்விடப்படும் என்கிற நிலையையும் மாற்றி யாக வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால் அவர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, உணவுப் பொருள்களை விநியோகம் செய்யும் முறை. நம்முடைய மாண்புமிகு பாபு கோவிந்தராஜன் அவர்கள் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மைதா மூட்டையை வாங்கி இங்கேயே நல்ல விலைக்கு மூட்டையோடு விற்றுவிட்டு போய்விடுகிறார்கள். அங்கே அரசு நியாயவிலைக் கடைகளில் சென்று பின்னால் பில் எழுதிக்கொள்கிறார்கள் என்று குறிப் பிட்டுச் சொன்னார்கள். அது மிக நிதர்சனமான உண்மை. சமீபத்திலே மத்திய அரசிலே கூடச் சொன்னார்கள். Public Distrib tion system has become miserable a failure என்று. அதுவும் உண்மைதான். ஓப்பன் மார்க்கெட்டிலேயே அரிசி கிடைக்கிறது. சிவில் சப்ளைசிலும் கிடைக்கிறது. ஆனால் உங்களுடைய கொள்கை சரியல்ல, ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக இருந்தால் அரிசி உண்டு சர்க்கரை கிடையாது. ஆகவே எங்களிடமே வந்து நிறைய சர்டிபிகேட் வாங்கிக் கொள்கிறார்கள் அரிசி வேண்டும் என்றால் 300 ரூபாய் சர்க்கரை வேண்டும் என்றால் 900 ரூபாய். அவர்கள் எழுதும்போது தவறாக எழுதிக் கொண்டு விட்டார்கள், ஆகவே வேறு சர்டிபிகேட் தாருங்கள் என்று கேட்கிறார்கள்.

இப்போது எல்லோருக்கும் சரியான வருமானம் எழுதப்பட வில்லை. கூலி வேலை செய்பவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வருமானத்தைப் பொருத்தவரையில் தப்பாக எழுதிவிட்டார்கள். இப்போது 300 ரூபாய் என்று சொல்லிக்கொண்டு ஆயிரம் ரூபாய் என்று தப்பாக முன்பு எழுதிவிட்டதாக வந்து கேட்கிறார்கள். இதுவே நாளைக்கு மீண்டும் 300 ரூபாய் என்று மாறிவிடும். அப்புறம் ஆயிரம் ரூபாய்க்கு மேலே உள்ளவர்களுக்குத்தான் கிடைக்கும் என்றால் ஆயிரம் ரூபாயாக மாறிவிடும். எனவே சர்க்கார் வாங்கிக்கொடுக்கின்ற சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய வற்றைச் சரியான முறையில் விநியோகிக்க வேண்டும். சர்க்கரைக் கும் க்யூவிலே நிற்கவேண்டும், மண்ணெண்ணெய்க்கும் க்யூவிலே நிற்கவேண்டும். பாமாயிலுக்கும் க்யூவிலே நிற்கவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. வாங்குகின்ற பொருளை கன்ஸ்யூமர் பயன்படுத்துகிறார்களா என்றால் இல்லை. The c ns me is not tak ng it சிவில் சப்ளை ஸ்டோருக்குப் பக்கத்திலே ஒரு டிரம் வைத்திருக்கிறார்கள். வாங்கிக்கொண்டு வந்தவுடன் அந்த டிரம்மிலே அதை ஊற்றிவிட்டு காசு வாங்கிக் கொண்டு சப்பி அடித்துக் கொண்டு போகிறார்கள். Pu lic Distrib tion System has totally failed. Yo must re rganise it immedia ely and rec nsider the wh le situation.



ஆகவே அரசாங்கம் எதற்காக ரீடெயில் சேல்ஸுக்குப் போக வேண்டும்? முன்பிருந்த ரேஷன் கார்டு மாதிரி பண்ணினால் கூட பரவாயில்லை. I th nk it is fo bette th n what we are doing now எங்கே பார்த்தாலும் இப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கின்றது. எனவே பப்ளிக் டிஸ்ட்ரிப்யூஷன் சிஸ்டத்தை ஸ்ட்ரீம்லைன் பண்ண வேண்டும். For the Water S pply problem yo must give a very constr tive approach இங்கே மாண்புமிகு நாவலர் அவர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். நான் சொன்னவற்றை எல்லாம் நன்கு கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

*திரு. பொ. உத்திராபதி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை யின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். 1982–83 ஆம் ஆண்டு 1,681 கோடியே 98 இலட்சம் ரூபாய் வரவு. 1983–84 இல் 1,774 கோடியே 88 இலட்சம் ரூபாய் வரவு என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பற்றாக்குறை 185 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. புதிய வரி 26 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டிருக்கின்றது. ஆனால் சலுகை மட்டும் ஒரு கோடி ரூபாய்க்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இது மாநில அரசினுடைய நிலைமை.

மத்திய அரசினைப் பொறுத்தவரையிலே பாராளுமன்றத் திலே என்ன நடந்துக் கொண்டிருக்கிறது? அங்கே 2,167 கோடி ரூபாய்க்குப் புதிய வரியினைப் போட்டிருக்கிறார்கள். பற்றாக் குறை 1,555 கோடி ரூபாய் என்று அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். ஆனால் பொதுவாக பற்றாக்குறை என்று சொன் னாலே அடுத்து இன்னொரு வரி வருகின்றது என்றுதான் அர்த்தம். மத்திய அரசினைப் பொறுத்த வரையிலே இன்றைக்கு இரயிலிலே சரக்கு ஏற்றி வந்தாலும் அதிகக் கட்டணம் தர வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். தபால் தந்திக்கும் வரி, டீசலுக்கும் வரி, மண்ணெண்ணெய்க்கும்வரி, இப்படி மனிதர் கள் வாங்கக் கூடிய அனைத்துப் பொருட்களுக்கும் வரியினை அவர்கள் ஏற்றி இருக்கிறார்கள். அதனால் அனைத்துப் பொருட் களின் விலையும் ஏறிவிட்டது. இன்றைக்கு மத்திய சர்க்கார் அந்த அளவுக்கு இந்திய நாட்டு மக்களின் தலையிலே வரி மேல் வரியாக சுமத்தி விட்டிருக்கிறார்கள். அது போகட்டும். தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு சுண்டு விரலைக் காட்டி பெரு விரலை எடுத்துக் கொண்டது போன்று ஒரு கோடி

கோதுமையும், பிச்சையாக போடுகிறார்கள். நாம் என்ன பிச்
சையா கேட்கிறோம். 5 ஆயிரம் டன் அரிசி ஒரு மூலைக்கு
காணுமா ? இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது 17
ஆயிரம் டன் அரிசி சத்துணவுக்குத் தேவைப்படுகிறது என்று.
இன்னும் 5 கோடி மக்களுக்கு அரிசி வழங்கப்பட வேண்டும்.
ஏன் தமிழ் நாட்டுக்கு தாராளமாக அரிசி கொடுக்கக் கூடாது.
தஞ்சை மாவட்டம் இந்த ஆண்டு இந்த அளவுக்கு பாதித்தற்கு
மத்திய-மாநில அரசு தான் பொறுப்பு என்று இந்திய கம்யூனிஸ்டு
கட்சியின் சார்பாக, குற்றம் சாட்டுகிறேன். தமிழ்நாடு பாழாய்
போனதற்கு டெல்லியில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சிதான்
காரணம் என்று குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஐ ஆம் ஆன் எ பாயிண்ட் ஆப்
ஆர்டர் சார். அவர்கள் அடங்காப் பிடாரி என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் குற்றச்
சாட்டைச் சொன்னால் அதை மறுத்து நீங்கள் சொல்லுங்கள்.
அன்று கூட ஒரு உறுப்பினர் கையாலாகாததனம் என்று சொன்
னார்கள். இவைகள் எல்லாம் நாமே உண்டாக்கும் பழக்கங்கள்
தான், வேகமாகப் பேசும்போது இப்படிப்பட்ட வார்த்தைகளைச்
சொல்லி விடுகிறார்கள்.

திரு. பொ. உத்திராபதி : 1974 ஆம் ஆண்டு காவேரி ஒப்பந்
தம் ரத்து ஆனதும், அப்போது கர்நாடகத்தில் ஆட்சி செய்தவர்
கள் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். அப்போது
டெல்லியில் ஆட்சிச் செய்தவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்தவர்கள். அப்போது தமிழகத்தை ஆண்டவர்கள் இந்திரா
காங்கிரஸ் கட்சி அல்லாதவர்கள். இன்றைக்கும் தமிழகத்தை
இந்திரா காங்கிரஸ் அல்லாத கட்சி தான் ஆண்டுக் கொண்டிருக்
கிறது. 1974-லிருந்து இந்த 9 ஆண்டு காலமாக ஒரு மாநிலத்தி
னுடைய பிரச்சினையை தீர்க்க மத்திய அரசால் முடியாதா ?
முடியாது என்று மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சியின்
துணை தலைவர் திரு. சித்தன் அவர்கள் சொல்லட்டும்
நான் அமர்ந்துவிடுகிறேன். சொல்ல முடியுமா ? அதற்கு
யார் பொறுப்பு ? நான் நீதி கேட்கிறேன். தமிழகத்
திற்குப் பொன் விளைவிக்கின்ற தஞ்சைமாவட்டம் வறட்சியால்
பாதிக்கப்படுகிறபோது தமிழகத்திலே உள்ள 5 கோடி மக்களுக்
கும் உணவுப் பஞ்சம் வளர்ந்து வருகிறது. இந்தக் கணக்கைப்
பார்த்து இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற
உறுப்பினர்களும் இந்த மாநில மக்களின் நன்மையை கருதி
மத்திய சர்க்காரை வற்புறுத்த தமிழக அரசும் முன்வரவேண்டும்.
விரைவில் காவேரிப் பிரச்சினையை முடிப்பதற்கு முனைப்பாக
கேட்டோம், பார்த்தோம், விவாதித்தோம் என்று சொல்லாமல்
வரக்கூடிய ஜூலை மாதத்திற்குள்ளாக காவேரி நீர்ப் பிரச்
சினையைத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.





கடைசியாக என்னுடைய தொகுதிப்பிரச்சினை. என்
னுடைய தொகுதியிலே முத்துப்பேட்டைக்கு ஒரு பேருந்து
நிலையம் கட்ட வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதனைச்
செயல்படுத்தவேண்டும். கிளைதாங்கி என்ற ஆறு புதிதாக
வெட்டப்பட்டுள்ளது. இடையில் 30 வீடுகள் இருக்கின்றன,
இந்தப்பக்கம் காட்டு இலாகா என்கிறார்கள் வேறு
இடம் இல்லை. அந்த வீடுகளுக்கு மாற்று இடம்
கொடுத்துவிட்டு வெட்டினால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்
உற்பத்தி செய்யமுடியும். அதையும் செய்து கொடுக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். திருத்துறைப்பூண்டி நகரத்
திற்கு நல்ல குடிநீர் கிடையாது. குடிநீர் வாரியத்திடம் இதைப்
பற்றி போன ஆண்டு கேள்வி கேட்டேன். இந்தப் பிரச்சினை
தீரவில்லை. லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்ததற்குப்
பின்னாலே அந்த இடத்தில் தண்ணீர் இல்லை என்று சொல்லி
விட்டார்கள். இப்போது பட்டுக்கோட்டை ராஜமாடத்திற்கு
போய் இருக்கிறார்கள். என்னுடைய சொந்த ஊரிலே தன்
னிறைவுத் திட்டத்திலே மேல்நிலை நீர்த் தொட்டி கட்டப்பட்டு
பைப் போட்டு எல்லா வேலையும் முடிந்தும்கூட கடிதங்களை
நான் எழுதியும்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே அங்கே
குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருத்துறைப்பூண்டி
யிலே ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்படவேண்டும். இ
அணைப்பு நிலையம் அங்கே ஏற்படுத்தப்படுமென்று போன
பட்ஜெட்டிலே நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஒரு
ஆண்டு ஆகியும் இன்னும் நடக்கவில்லை. உடனடியாக செய்து
கொடுக்க வேண்டும். திருத்துறைப்பூண்டியிலே ஆண்களுக்கு
ஒரு மருத்துவமனையும் பெண்களுக்கு ஒரு மருத்துவ மனையும்
என்று தனித்தனியாக இருக்கிறது. அதனால் டாக்டர்கள் போவ
தற்கும் நோயாளிகளுக்கும் மிகச் சிரமமாக இருக்கிறது. ஆகவே
இரண்டையும் ஒன்றாக ஒரே மருத்துவ மனையாக செயல்
படுத்துவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். திருத்துறைப்பூண்டியிலே பெண்களுக்கு தனியாக
ஒரு உயர்நிலைப் பள்ளி தருவதாகச் சொல்லி அதற்காக 10
ஆயிரம் கட்டிவிட்டார்கள். ஆனால் இரண்டாண்டு ஆகியும்கூட
செய்யப்படவில்லை. அதையும் உடனடியாகச் செய்து கொடுக்க
வேண்டும். பாலர்பள்ளி ஆசிரியர்களுக்கு 175 ரூபாய் சம்பளம்
தான் தரப்படுகிறது. அதனால் தவறுகள் நடக்கின்றன. எனவே
அவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு குழந்தைகளுக்கு கட்ட
டங்கள் இல்லாது எல்லாப் பஞ்சாயத்து அலுவலகத்திலும் மரத்
தடியிலேயும் உட்கார வைத்திருக்கிறார்கள். சாமான்கள்
அவர்கள் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது, இரண்டு மாதம்
கழித்து பாதிப் பணம் கிடைக்கவில்லை. மிகவும் கஷ்டப்படு
கிறார்கள், அவைகளையெல்லாம் போக்கவேண்டும். வறட்சி
காரணமாக இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலே 10 லட்சம்
விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலையில்லை, தமிழ்நாட்டிலே

ரூபாய்க்கு வரிச் சலுகை கொடுத்து 25 கோடி ரூபாய்க்கு வரி
போட்டிருக்கிறார்கள். 6, 7 பொருட்களுக்கு வரி குறைப்பு
என்று சொல்லிக் கொண்டு வந்தபோது கை தட்டினார்கள்,
ஆனால் 26 கோடி வரி என்று வந்தவுடனேயே பேச்சு மூச்சு
காட்டவில்லை.

இந்த நாட்டில் வசதி படைத்தவர்கள் 40 ஆயிரம் கோடி
ரூபாய்க்கு மேல் கள்ளப் பணமும், கருப்புப் பணமும் வைத்திருக்
கிறார்கள். அவர்கள் மீது இந்த வரிகள் போய் விழுகின்றதா
என்றால் இல்லை. அவர்களிடமிருக்கின்ற பணத்தை வெளியே
கொண்டு வருவதற்கு அவசரமாகச் சட்டம் கொண்டுவருகிறார்
களா என்றால் இல்லை. ஆனால் சாதாரண உழைக்கின்ற மக்
களின் மீதுதான் மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் வரி
விதிக்கிறார்கள். இந்த நாட்டிலே 62 சதவீதத்திற்கு மேல்
வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள் இருக்கிறார்கள் என்று
சொல்கிறார்கள். ஆனால் இந்த வரி பூராவும் யார் தலையில்
விழுகின்றது என்றால், யார் வரி கொடுக்கிறார்கள் என்றால்
அந்த உழைக்கின்ற மக்கள்தான். அவர்கள் மீதுதான் மேலும்
மேலும் வரி சுமத்தப்படுகின்றது. ஆனால் அந்த வறுமைக்
கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களை மேம்படுத்துவதற்குரிய
எந்தவிதமான திட்டமும் பட்ஜெட்டிலே இல்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று ஒரு கோடியே 17 இலட்சம் குடும்ப அட்டை
கள் இருக்கின்றன. ஒரு திங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 20
கிலோ அரிசி கொடுக்கப்படுகின்றது. இந்த நிதிநிலை அறிக்கை
யில் நிதியமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது ரொம்பக்
கவலையோடு தெரிவித்திருக்கிறார்கள். இந்த சட்டமன்றத்தின்
விடுதி காம்பவுண்டிற்குள்ளே இருக்கின்ற சிவில் சப்ளை கடையில்
பெண்கள் பொருட்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

(இரவு 6-20).

அந்தக் கூட்டத்தைக் கேட்கிறபோது அரிசி வந்திருக்கிறதா
என்று பார்த்து அதை வாங்க விடிய விடிய காத்திருக்கக் கூடிய
ஒரு அபாயகரமான காட்சியை நாம் பார்த்துக் கொண்டிருக்
கிறோம். நான் அரிசிக்காக ஒன்றை சொல்ல விரும்புகிறேன்.
காங்கிரஸ் காலத்தில் பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் முதல்
அமைச்சராக இருந்த காலத்தில் அவர்களுக்கு வந்த அபாயம்
அரிசி தான். பிறகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்
தார்கள். அவர்களுக்கு வந்த அபாயம் அரிசிதான் காரணம்.
அப்போது கையும் பையுமாக தமிழகம் பூராவும் மக்கள் அலைந்
தார்கள். இதே நிலைக்கு இன்றைக்கு தமிழகம் தள்ளப்பட்டிருக்
கிறது. மக்கள் அபாய நிலையில் இருக்கிறார்கள். இதற்குக்
காரணம் என்ன? வறட்சி என்று சொல்கிறபோது திடீர் என்று
இன்றைக்கு வந்தது அல்ல இது. சுமார் 5, 6 ஆண்டு காலமாக





முதலிலே இராமநாதபுரத்தில் ஆரம்பித்து அடுத்து மதுரை, திரு
நெல்வேலிக்கு வந்தது. பிறகு வட ஆற்காடு, தென் ஆற்காடு
ஆகிய மாவட்டங்களுக்கு வந்து இந்த ஆண்டு தஞ்சை மாவட்டம்
முழுமையாக பாதிக்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கு தமிழகம்
முழுவதும் வறட்சியால் மக்கள் பாதிக்கக்கூடிய அளவுக்கு வந்த
தற்கு யார் காரணம் ஆண்டவனா காரணம் இல்லை. தமிழகத்
தில் ஆட்சி நடத்தக்கூடியவர்கள் தான் படிப்படியாக அபாயத்தை
கணக்கில் எடுத்துக் கொண்டு தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய
இந்த மக்களுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய அபாயங்களை கணக்கில்
எடுத்து இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு ஒருங்கிணைந்த
நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். அவர்கள் எடுக்கவில்லை.

அதற்குக் காரணம் விவசாயக் கொள்கையில் இந்த அரசுக்கு
ஒரு சீரான கவனம் இல்லை. தஞ்சைக்கு ஒரு கொள்கை,
திருச்சிக்கு ஒரு கொள்கை, வடாற்காடு மாவட்டத்திற்கு ஒரு
கொள்கை என்று இருக்கிறீர்கள். இன்றைக்கு தமிழகத்தில்
குறைந்த அளவுக்கு உற்பத்தியாகும் எல்லா பொருள்களையும்
அரசாங்கமே கொள்முதல் செய்து இருந்தால் இந்தப் பிரச்சினை
இன்றைக்கு ஓரளவுக்கு தீர்க்க முடியும். அதில் இந்த அரசு தவறி
யிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் தெரிவித்துக்கொள்ள,
விரும்புகிறேன்.

அதேபோல் இன்றைக்கு மத்திய அரசிடம் நமது மாநில அரசு
கேட்டுக் கொண்டது அரிசி 80 ஆயிரம் டன், கோதுமை 40
ஆயிரம் டன். நாம் பிச்சை கேட்கவில்லை. இந்த நாட்டில்
வாழக்கூடிய 70 கோடி மக்களுக்கும் டெல்லியில் பாராளுமன்றத்
தில் இருக்கக் கூடிய பாரத பிரதமர் அவர்கள் நீதி வழங்க
வேண்டும். தங்களுடைய கட்சி ஆளுகின்ற மாநிலத்திற்கு ஒரு
நீதியும், தங்கள் கட்சி ஆளாத மாநிலத்திற்கு ஒரு நீதியும் என்று
வேறுபாடு காட்டி வருகிறார்கள். அது தான் இன்றைக்கு அவர்
கள் சொல்வது மத்திய தொகுப்பிற்கு மாநில அரசு கொடுக்க
வில்லை என்ற காரணத்தைக் காட்டி ஒவ்வொரு ஆண்டும் தமி
ழகத்தை முழுமையாக புறக்கணித்து இருக்கிறார்கள். இன்றைக்கு
முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இதை
காலத்தோடு சர்வ கட்சியையும் கலந்து பேசி எப்படி இலங்கை
தமிழர்கள் பாதிக்கப்பட்டதற்கு ஒரு நாள் பொது வேலை நிறுத்
தம் செய்து தங்கள் எதிர்ப்பை, கண்டனத்தை தெரிவித்தார்
களோ அதேபோல் மத்திய அரசின் இந்த அடங்காப் பிடாரித்
தனத்தை தமிழகத்தைப் புறக்கணிக்கக்கூடிய மத்திய அரசைக்
கண்டிக்கக்கூடிய அளவுக்கு தமிழகத்திற்கு நிதி பெறக்கூடிய
அளவுக்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறி
விட்டார்கள். உண்ணாவிரதம் இருந்ததற்கு பின்னால் அங்கிருந்து
அழைப்புக் கிடைத்ததற்குப் பின்னால் அங்கு போய் பேசியதற்குப்
பின்னால் தமிழகத்தினுடைய அரசை, தமிழக மக்களை கேவலப்
படுத்தக் கூடிய அளவுக்கு இன்றைக்கு மத்திய அரசு இந்திரா
காங்கிரஸ் கட்சி 5 ஆயிரம் டன் அரிசியையும், 5 ஆயிரம் டன்

1 கோடிப் பேர்களுக்கு இன்றைக்கு வேலையில்லை, வறட்சி
வேலைகளைப் பயன்படுத்தி அவைகளுக்கு காண்ட்ராக்ட் விடா
மல் பாசன வேலைகளாக இருந்தாலும், ஏரிவெட்டும் வேலை
களாக இருந்தாலும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை
கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். தஞ்சை
மாவட்டம் தமிழகத்திலே தொழில் வளம் இல்லாத மாவட்டம்.

(இரவு 6—30)

தொழில் துறையிலே பின்தங்கிய தஞ்சை மாவட்டத்திலே
விவசாயத்தை மட்டுமே நம்பி நம்பி மிகமோசமான நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. வடபாதி மங்கலத்திலே ஒரு சர்க்கரை ஆலை
இருக்கிறது. ஆகவே தஞ்சை மாவட்டத்திலே கரும்புச் சக்கை
யையும், வைக்கோலையும் பயன்படுத்தி காகிதத் தொழிற்சாலை
ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும். வேதாரண்யத்திலே
கிடைக்கிற உப்பை பயன்படுத்தி இரசாயன தொழிற்சாலை
ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இந்த பட்ஜெட் பொதுவாக
ஏழை, எளிய மக்களை, விவசாயப் பெருங்குடி மக்களை வாழ
வைக்கக்கூடிய அளவிற்கு அடிப்படையான கொள்கையைக்
கொண்டு அமையாமல், மேலும், மேலும் வரியைச் சுமத்தி,
வசதி பெற்றவர்கள் வாய்ப்பு பெறுகிற அளவிற்கு அமைந்திருக்
கிறது என்று கூறி வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்
களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* திரு. இ. கணேசன் ; மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர்
அவர்கள் 1983—84 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை
இந்த மாமன்றத்திலே வைத்து அதன்மீது பேச என்னை
அழைத்த தங்களை உளமாற பாராட்டக் கடமைப்பட்டவனாக
இருக்கிறேன். இன்று இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த
மன்றத்தில் பேசுகிற நேரத்தில் நாட்டின் நிலையை ஒரு கணம்
எண்ணிப் பார்க்க வேண்டியவனாக இருக்கிறேன். நாடெங்கும்
வறட்சி நிலை, மின்சாரப் பற்றாக்குறை, குடிதண்ணீர் தட்டுப்
பாடு, பாசனத்திற்கு தண்ணீர் இன்றி பயிர்கள் காயும் நிலை
இருக்கிறது. இவ்வளவு மோசமான நிலையில் நம்முடைய
டாக்டர் நாவலர் அவர்கள் ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை
இந்த மன்றத்திலே வைத்ததற்கு அவர்களை எவ்வளவு பாராட்
டினாலும் தகும். நாட்டிலே இருக்கக்கூடிய ஏழை, எளிய
மக்கள் நம்முடைய நாவலரை உளமார பாராட்டுகிறார்கள்.
ஆனால், எதிர்க்கட்சி நண்பர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்
திலே ஒன்றுமில்லை என்று கூறுகிறார்கள். தங்களுக்கு குறை
கூறுவதற்கு ஒன்றுமில்லை என்று தான் கூறுகிறார்களே தவிர
வேறு ஒன்றுமில்லை. இயற்கையின் சீற்றத்தால் கடுமையான
வறட்சி சூழ்நிலை ஏற்பட்டால் பற்றாக்குறை ஏற்படுவது





இயல்பு என்பது நாடு அறிந்த உண்மை. ஆனால் எதிர்க்கட்சி
நண்பர்கள் மட்டும் தெரிந்தும் தெரியாத அளவிற்கு நடிக்கி
றார்களே என்பது எனக்கு புரியாத விந்தையாக இருக்கிறது.
இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர், என்னுடைய
அருமை அண்ணன் துரைமுருகன் அவர்கள் மிக அழகாகச்
சொன்னார்கள். இந்த அறிக்கையிலே எந்தவிதமான கொள்கை
விளக்கமும் இல்லை என்று சொன்னார்கள். குடும்பத்திற்கு
ஒருவருக்கு வேலை என்று அறிவித்திருக்கிறோமே இது கொள்கை
விளக்கம் இல்லையா என்பதை அவரைப் பார்த்து கேட்டுக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வேலையில்லாத் திண்டாட்
டம் இன்றைக்கு பெருமளவில் இருக்கின்றபோது என்னுடைய
இதய தெய்வம், புரட்சித் தலைவருடைய இதயத்திலே பூத்த
புதிய திட்டம் அல்லவா இது? மாண்புமிகு உறுப்பினர்
துரைமுருகன் அவர்கள் உள்ளூரிலே ஓணான் பிடிக்க முடியா
தவர்கள் அயலூரிலே போய் யானை பிடிக்க முடியுமா? என்று
கேட்டார்கள். சிறிய வயதில் தான் செய்தவற்றை எல்லாம்
மறக்காமல் வைத்திருக்கும் உறுப்பினர் அவர்கள் புரட்சித்
தலைவருடைய திட்டத்திலே ஏற்பட்ட பலன்களை மட்டும்
எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் மறந்தார்கள் என்பதை நாம்
எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய முன்னாள் முத
லமைச்சரும், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு
டாக்டர் கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை
யிலே பேசுகிறபோது சொன்னார்கள் இந்த நிதிநிலை அறிக்கை
யிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொன்னார்கள்.
அப்படிச் சொல்லிய அந்த நிதிநிலை அறிக்கையில் தான் தமிழ
கத்தின் 4½ கோடி தமிழ் மக்கள், ஏழை, எளியவர்கள் பாராட்டு
கிற அளவிற்கு சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது.
பிற மாநில முதல்வர்களும் பாராட்டுகிற அறிக்கை அந்த நிதி
நிலை அறிக்கை தான். பாரத பிரதமர் இந்திரா காந்தி அவர்
களே போற்றிப் புகழ்ந்த திட்டம் சத்துணவுத் திட்டம் தான்.
அப்பேற்பட்ட சத்துணவுத் திட்டத்தை கொண்ட அறிக்கையை
உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொன்னவர்கள் எப்படி
இந்த நிதிநிலை அறிக்கையை ஒத்துக் கொள்வார்கள் என்று
நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லக்கூடிய இந்த
நிலையில் தமிழகத்தில் எத்தனை கிராமங்களில்,
எத்தனை ஆயிரம் லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன?
அத்தனை லட்சம் குடும்பங்களுக்கும் வீட்டிற்கு ஒருவருக்கு வேலை
என்று சொன்னால், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள்
ஆட்சியிலே இந்தத் திட்டம் செயல்வடிவம் பெற்று நடை
பெற்றால் எதிர்க்கட்சிக் கூடாரங்கள் ஒவ்வொன்றாக கலைந்து
பிய்ந்து ஓடாதா என்பதை மட்டும் நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.

அதற்கு முன்பாக, தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி மிக
அழகாக எடுத்துக் சொன்னார்கள். தன்னிறைத் திட்டம்
பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல்

[திரு. இ. கணேசன்] [1983 மார்ச் 11

அறிஞர் அண்ணாவின் இதயத்தில் இருந்த எங்களுடைய இதய
தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் கண்டு
பிடித்த அற்புதமான திட்டம். உலக உத்தமர் மகாத்மா
காந்தி அவர்கள், ஏழை, எளிய மக்கள் வாழ வேண்டும், வசதி
யோடு இருக்கவேண்டும், அவர்கள் வாழ்ந்தால் இந்த நாடும்,
வாழும், கிராமம் வாழ்ந்தால்தான் இந்த நாடும் நகரமும்
வாழும் என்ற தத்துவத்தை சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட
தத்துவத்தின் அடிப்படையில், எங்களுடைய இதய தெய்வம்
அண்ணாவின் இதயத்திலிருந்த எம். ஜி. ஆர். அவர்கள்,
இந்தத் தன்னிறைவுத் திட்டத்தைக் கண்டு பிடித்தார்கள்.
இந்தத் தன்னிறைவுத் திட்டத்ினாலே எத்தனை பகுதிகளிலே,
எத்தனை கிராமங்களிலே, பலனை அனுபவித்தார்கள் ? பாதை
வசதிகள், பஸ் வசதிகள், பள்ளிக்கூடங்கள், குடிநீர் வசதிகள்,
மருத்துவ வசதிகள் மகப்பேறு இல்லங்கள், இவை போல எத்தனை
திட்டங்களை உள்ளடக்கியது இது என்பதை மட்டும் கனம் எதிர்
கட்சி உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான்
மிகவும் பாசத்தோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல், இன்று வறட்சி, வறட்சி என்று சொல்
கிறார்கள். நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்
கிறேன். நம்முடைய தமிழகத்தில் 3 பருவ மழை தவறி
யிருக்கிறது. ஒன்றல்ல, இரண்டல்ல, தென் மேற்குப் பருவ
மழை, வடகிழக்குப் பருவ மழை, மீண்டும் தென்மேற்குப் பருவ
மழை ஆக மூன்று பருவ மழைகள் தவறி, நாடு பூராவிலும்
வறட்சியிலே இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, 30, 35 ஆண்டு காலமாக காணாத
வறட்சியை தமிழகத்திலே இன்று கண்டோம் என்று வானிலை
ஆராய்ச்சி நிலையத்தினரே சொல்கிறார்கள். அப்படி, 35
ஆண்டு காலமாக காணாத வறட்சியை இன்று காணும்போது
உணவு நெருக்கடி இருக்கத்தான் செய்யும், இல்லை யென்று
சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்த
அருமை இந்திரா காங்கிரஸ் நண்பர்களைப் பணிவன்
போடு கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் ஆண்ட காலத்திலே
வறட்சி இல்லையா ? உங்களால் உறுதியோடு சொல்ல முடி
யுமா ? இருந்திருக்கிறது என்று இந்திரா காங்கிரஸ் நண்பர்
களே ஒத்துக் கொள்கிறார்கள். அப்படி, இந்திரா காங்கிரஸ்
ஆளக்கூடிய காலத்திலே வறட்சி இருந்திருக்கிறது. அந்த
வறட்சியைப் போக்க அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை
அண்ணன் சித்தன் அவர்கள் ஒரு நிமிடம் தன்னுடைய இதயத்
தைத் தொட்டு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். 'எலிக் கறியைச் சாப்பிடுங்கள், பன்றிக்
கறியைச் சாப்பிடுங்கள், வாரத்திற்கு ஒரு நாள் பட்டினி
கிடங்கள், திருமணத்தில் 200 இலைகளுக்கு மேல் போட்டால்,
உங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என்றெல்லாம்



1983 மார்ச் 11] [திரு. இ. கணேசன்]

சொன்னவர்கள் இன்று தமிழகத்தைப் பார்த்து, வறட்சி
எங்கு பார்த்தாலும் கொள்ளை போகிறது என்று சொல்
கிறீர்களே. இது நியாயமானதா ? அதேபோல, திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்
திரு. துரைமுருகன் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்
கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்
வறட்சி இல்லையா ? ரேஷன் கடையிலே காலை முதல் மாலை
வரை இருந்த நிறைமாத கர்ப்பிணி நடு ரோட்டிலே பிள்ளை
பெற்ற வரலாறு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்
திலே இருந்தது என்பதை எப்படி மறந்தீர்கள் ? அது மட்டுமா ?
திராவிட முன்னேற்றக் கழக காலத்திலே நாம் சாப்பிடுகின்ற
மரவள்ளிக் கிழங்கு கிடைக்கவில்லை. இந்தத் தமிழகத்தில்.
மரவள்ளிக் கிழங்கு கிடைக்காத நிலை திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சிக் காலத்தில் இல்லையா ? அவ்வளவு பெரிய
கொடுமையான நிலையா இப்பொழுது இருக்கிறது ? கனம்
துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக கேட்டுக்கொள்
கிறேன், புரட்சித் தலைவருடைய ஆட்சி, அந்தப் பொன்மனச்
செம்மலுடைய ஆட்சி, தூங்கிவிட்டது. அவர் தூங்கியதால்
தான் இந்த நாட்டிலே இப்பொழுது வறட்சி ஏற்பட்டிருக்
கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அதுவும் எதை வைத்து ?
என்னுடைய இதய தெய்வம் எம்.ஜி.ஆர். நடித்த நாடோடி
மன்னன் படத்தை வைத்துப் பாட்டுப் பாடினார். பாட்டுப்
பாடிய அண்ணன் துரைமுருகனுக்கு நான் பணிவன்போடு
சொல்லிக் கொள்கிறேன். அதே சத்தியா மூவீஸ் படத்திலே,
என்னுடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சொன்
னார்கள், 'அங்கே சிரிப்பவர்கள் எல்லாம் சிரிக்கட்டும் ; அது
ஆணவச் சிரிப்பு. இங்கே நீ சிரிக்கும் புன்சிரிப்பே, ஆனந்தச்
சிரிப்பு' என்று. 76 இலட்சம் மக்களுக்கு — குழந்தைகளுக்கு
ஏழைக் குழந்தைகளுக்கு உணவளித்த அந்த உத்தமன், அந்த
ஏழைக் குழந்தைகளைப் பார்த்து, சொல்கிறார், 'அங்கே சிரிப்
பவர்கள் சிரிக்கட்டும். அது ஆணவச் சிரிப்பு. இங்கே நீ சிரிக்
கின்றாயே, இந்த உணவை உண்டு, அதுதான் புன் சிரிப்பு'
என்று அழுத்தந்திருத்தமாக என்னுடைய புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் சொல்கிறார்கள். என்பதை நான் இந்த
நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் ஒரு கண்ணிலே வெண்ணெயும் ஒரு கண்
ணிலே சுண்ணாம்பும் வைப்பது நியாயம்தானா ? நீங்கள்
எண்ணிப் பாருங்கள். ஆந்திராவிலே இன்று அமைந்த என்.டி.ஆர்.
அவர்களுடைய அரசு, திட்டக் குழுவிலே, கோடி கோடியாக
ரூபாயை மதிய உணவிற்காக வாங்கினார்கள்.

அதைப் தப்பு என்று நாங்கள் கூறவில்லை. ஆனால் ஆந்திராவிலே இருக்கின்ற என். டி. ராமாராவ் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். இந்தத் திட்டத்தை எனக்கு முன்னாலேயே புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழகத்திலே நிறைவேற்றினார்கள் என்று சொன்னார்கள். அப்படி நிறைவேற்றப்பட்ட திட்டம்தான் இந்தச் சத்துணவுத் திட்டம். தமிழக மக்கள் இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறார்கள் ; பிற மாநிலங்களிலே உள்ளவர்கள் இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறார்கள். ; ஏன், பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களே இந்தத் திட்டத்தைப் பாராட்டினார்கள். அப்படிப்பட்ட இந்தத் திட்டத்தை நான் ஆந்திராவிலேயும் கொண்டு வருகிறேன் என்று என். டி. ராமாராவ் அவர்கள் சொன்னார்கள். கோடி கோடியாக ரூபாய்களை ஒதுக்கினார்களே, ஆனால் ஓராண்டுக் காலத்திற்கு முன்னால் துவக்கப்பட்டு தமிழகத்திலே சிறப்பான முறையிலே செய்து வருகின்ற இத்திட்டத்திற்காகத் தமிழகத்திற்கு அந்தத் திட்டக் குழு ஒரு பைசாவைக்கூட ஒதுக்கவில்லையே, இது ஏன் ? இதை நீதி தேவனிடத்திலே கேட்டால்தான் நியாயம் கிடைக்கும். உங்களிடத்திலே கேட்டு என்ன பயன் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கோடி கோடியாக ஆந்திராவிற்குச் செலவிடுகிறீர்களே, தமிழ் நாட்டிற்கு ஒரு பைசாகூட இல்லை என்று சொன்னால், அது நியாயம் இல்லை என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 6-40).

அடுத்தபடியாக, நூற்றுக் கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களைத் தமிழகத்திற்குக் கொடுக்க மறந்த அன்னை இந்திராகாந்தி அவர்களை எதிர்த்துப் போராடத் தயாரா என்று எதிர்க்கட்சியிலே உள்ள தலைவர்களைப் பார்த்து நான் கேட்க ஆசைப்படுகிறேன். அண்ணன் இளையபெருமாள் முதற்கொண்டு நம்முடைய காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் குமரி அனந்தன் முதற்கொண்டு, நெடுமாறன் வரையில், ஏன், நாங்கள் ஒன்றாக இருந்தபொழுது எங்கள் இயக்கத்தில் இருந்தார்களே பேராசிரியர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் ஜஸ்டிஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த திட்டம் இந்த உணவுத் திட்டம் என்று சொன்னார்கள், இப்படி அத்தனை பேர்களும் பாராட்டிய இந்தத் திட்டத்திற்கு, நாங்கள்தான் முதன் முதலில் கொண்டு வந்தோம் என்று சொன்னீர்களே, அப்படி முதன்முதலாக நீங்கள் கொண்டு வந்த இந்தத் திட்டத்திற்கு, காமராஜ் அவர்கள்தான் கொண்டு வந்தார்கள் என்று சொல்கின்றீர்களே, அந்தத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கவில்லையே, இது நியாயம்தானா ? இது நீதி தானா?



இது தர்மம்தானா என்று கேட்டுக்கொண்டு இந்த அளவிற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெருகிறேன், நன்றி வணக்கம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலையை ஆரம்பிக்கும்பொழுதே, வறட்சிக் கொடுமையால், இயற்கையின் சீற்றத்தால் தமிழகம் பாதித்திருக்கிறது என்றுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவின் பல்வேறு பகுதிகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அதே நேரத்தில் தமிழகத்திலே வறட்சி நிலைமை சென்ற மாதத்திலே தான் வந்தது என்பது இல்லை. சென்ற ஆண்டே வறட்சிப் பிடியில் சிக்கித் தமிழகம் தவித்தது. பருவ மழை பொய்த்து விட்டது., ஆகவே அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று முயற்சி செய்கின்றபொழுது, தமிழகத்திற்கு விளைச்சல் கொடுக்கின்ற ஒரே மாவட்டம் தஞ்சை மாவட்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தத் தஞ்சை மாவட்டத்திலே காவிரியிலே தண்ணீர் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. தமிழக அரசும் சர்வ கட்சிகளையும் கூட்டிக்கூட, மூன்று மாநில முதலமைச்சர்களோடும் பேசுகின்றபொழுது அதிலே மத்திய அரசு முனைப்பு காட்டாததால் தமிழகத்தினுடைய நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகின்ற தஞ்சை மாவட்டத்திலே கஷ்டமான நிலைமை ஏற்பட்டது.

நிலக்கரி இருக்குமேயானால் ; மின்சாரம் விவசாயிகளுக்கு முறையாகக் கொடுக்கப்பட்டிருக்குமேயானால், அவர்கள் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி, தமிழகத்திலே அதிகமான மின்சார இணைப்புகளைப் பெற்றிருக்கின்ற விவசாயப் பெருமக்கள் உற்பத்தியைப் பெருக்கியிருக்க முடியும்.

ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் மட்டுமல்ல ஆளுநர் உரையில்கூட மத்திய அரசு தமிழகத்திற்கு மின்சாரத்திற்குரிய பழுப்பு நிலக்கரியைக் கொடுக்கவில்லை என்ற நிலையைத்தான் பார்க்கிறோம். அதுமட்டுமல்லாமல், இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட நாம் பார்க்கிறோம், மின்சாரத்திற்காக அதிகமாக நிதியை ஒதுக்கி, தூத்துக்குடியிலேயும், சென்னையிலேயும் இருக்கின்ற அனைத்து மின் நிலையங்களையும் விரிவுபடுத்த வேண்டுமென்றால் மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை என்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.

இந்த நிலையில் மத்திய அரசில் இருக்கின்ற இந்தத் தன்மைகளைக் கண்டித்து மதிப்பிற்குரிய நண்பர், மன்ற உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் எதிர் வரிசையிலே இருப்பவர்கள் வரத் தயாரா என்று கேட்டார்கள்.

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1983 மார்ச் 11

சென்ற மன்றக் கூட்டத் தொடரிலேயே நான் பேசும்
போது சொன்னேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனியாக
உண்ணாவிரதம் இருப்பதைவிட அனைத்து கட்சிகளையும்
அழைத்து போராட வருவார்களா என்று சொன்னால், நாங்கள்
தலைமை தாங்கி நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று
சொல்லி இருக்கிறோம். யாராவது தமிழகத்திற்கு அரிசி வேண்
டாம் என்று சொல்வார்களானால் அந்த இயக்கம் தமிழக மக்க
ளுக்கு நன்மை செய்யக்கூடிய இயக்கமாக இருக்காது. மக்கள்
அத்தகைய இயக்கத்தை அடையாளம் கண்டு கொள்வார்கள்.
தமிழகத்திலே உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறபோது மத்திய
அரசு சர்வாதிகார போக்கிலே இருக்குமானால் தமிழகத்தைப்
பொறுத்த வரை எங்கள் இயக்கம் தலைமை தாங்கி நடத்தி
போராட தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்
கிறேன். தமிழக அரசு சார்பில் ஒரு தீர்மானத்தை கொண்டு
வாருங்கள். அதற்கு அனைத்து கட்சியும் ஒத்துழைப்பு தந்து
தமிழகத்திற்கு அரிசி வேண்டும் என்ற பிரச்சனை, வறட்சி
நிவாரண வேலைகளுக்கு நிதி வேண்டுமென்று கூறுகின்ற நிலை
யில் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று நண்பர் கணேசன் அவர்
களுக்கும், தமிழக அரசுக்கும் சொல்லிக் கொள்கிறேன். காரணம்
இன்றும் காலம் கடந்துவிட்டவில்லை. தமிழக முதல்வர் அவர்
கள் அரிசி கேட்பதற்கு டெல்லிக்கு சென்றார்கள்.
கேட்டார்கள். கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். என்ன
கொடுத்திருக்கிறார்கள்? 5,000 டன்கள் அரிசியையும், 4,000
டன்கள் கோதுமையையும் கொடுத்திருக்கிறார்கள். தமிழகம்
கேட்டிருப்பது 80,000 டன்கள் அரிசியும், 40, டன்கள்
கோதுமையும் ஆகும். 10ல் ஒரு மடங்கு கூட மத்திய அரசு
கொடுக்கவில்லை. மத்திய அரசின் இத்தகைய மெத்தனமான,
சர்வாதிகாரமான, மாநிலங்களுடைய உரிமையை பறிக்கின்ற
அணுக்கு, போக்கு நீடிக்குமானால், அந்த மத்திய அரசை
எதிர்த்து, சர்வாதிகாரத்தை எதிர்த்து, மாநில அரசுக்கு அதிக
அதிகாரம் வேண்டுமென்ற பிரச்சனையில் அகில இந்திய பார்வேர்ட்
பிளாக் கட்சி திட்டவட்டமாக இருக்கிறது. மத்திய அரசிடம்
ரூ. 190 கோடி கேட்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு ரூபாய் கூட
கொடுக்கவில்லை. பின்னர் மத்திய அரசிடம் போய் கேட்டதற்கு
என்ன கொடுத்திருக்கிறார்கள்? மேற்கு வங்க மாநிலம் கேட்ட
திற்கு அவர்களுக்கு ரூ. 50 கோடி கொடுத்திருக்கிறார்கள். இந்த
மாநில அரசு ரூ. 45 கோடி ஒதுக்கி இருக்கிறோம் வறட்சி
பணிக்கு என்று சொல்கிறது. ஆனால் மைய அரசு இன்னும்
ஒரு பைசா கூட கொடுத்ததாக அரசு தரப்பிலிருந்து எந்த
தகவலும் இல்லை. அப்படி சர்வாதிகாரமாக மைய அரசு
நடந்து கொண்டிருக்கக் கூடிய நிலையினை நாம் இன்று பார்த்துக்
கொண்டு இருப்பதினால், அந்த உதவியை மைய அரசிடமிருந்து
பெறமுடியாது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.
"கண்டிக்கிறோம்" என்று சொல்வதற்கு கூட அரசு தயாராக
இல்லை. மக்கள் பிரச்சனையிலே மத்திய அரசு தயக்கம்
காட்டுகிறது என்பதை சொல்வதற்கு உங்களால் முடியவில்லை.



1983 மார்ச் 11] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

மின்சாரத்தை பொறுத்தவரைக்கும், மைய அரசு திட்டங்
களுக்கு அனுமதி இல்லை என்று சொல்கிறார்கள். தமிழகத்
திலே இன்றைக்கு இருக்கின்ற வேளாண்மைத் துறை எப்படி
இருக்கிறது என்று சொன்னால் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்
பட்டிருக்கிறது. நிலத்தடி நீரை பயன்படுத்துவதற்கு விவசாயி
கள் ஒரு மணி நேரமாவது மின்சாரம் வருமா என்று பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள். எப்போது வரும், எந்த ஒரு மணி
நேரம் வரும் என்று சொல்வதற்கு கூட இந்த அரசால் முடிய
வில்லை. காரணம் மின் உற்பத்தி குறைவாக இருந்தாலும்,
தமிழகத்திலே இருக்கக்கூடிய நிலையைக் கருத்தில் கொண்டு
இந்த அரசு விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு 6 மணி நேரமாவது
மின்சாரம் கொடுத்திருந்தால் உற்பத்தி பெருகி இருக்கும்.
கொடுக்கின்ற மின்சாரத்தை காலையிலோ அல்லது மாலை
யிலோ ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்கவேண்டும்.

[இரவு 6-50]

வறட்சி பணி துவங்கிவிட்டதா என்று பார்த்தால், பணம்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. வறட்சிப் பணி துவங்கவில்லை. உற்
பத்தியை பெருக்குவதற்கும், விவசாயிகளுடைய கிணறுகளை
ஆழப்படுத்துவதற்கும் இந்த அரசு வழிவகை செய்யவேண்டும்.
அப்படி செய்யவில்லை என்றால் இந்த உற்பத்தி பாதிப்பிலே
நாம் பாதிக்க வேண்டியிருக்கும். அதற்கு ஒரு சட்ட பிரச்சினை
இருப்பதாகச் சொல்கிறார்கள். கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது
என்று சொன்னால், விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு
நிலத்தடி நீர்—அந்த கிரவுண்டு வாட்டர் செல்லிலிருந்து
கிளியரன்ஸ் பெறவேண்டும் என்ற உத்தரவை இந்த அரசு பிறப்
பித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டு
றவுத் துறை மூலமாக தான் இந்தப் பிரச்சனையை தீர்க்க
இருக்கிறீர்கள். மைய அரசு, கொடுத்தாலும், கொடுக்கா
விட்டாலும், அதிக விலையை கொடுத்து வெளியிலே வாங்காம
லிருக்க, கூட்டுறவு ஸ்தாபனங்களை விவசாயிகள் நம்பியிருக்
கிறார்கள். 11,159 கடைகள் இருக்கின்றன என்று சொல்லப்
படுகிறது. நான் கிராமப்புறத்தில் இருக்கிறவன். எனது
தொகுதியிலே இருக்கின்ற கிராமப்புறங்களை எடுத்துக்கொண்
டால் அங்கே ஏ. சி. எஸ். மூலமாக 30 கிராமங்களுக்கு ஒரு
கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக உணவுப் பொருள்கள் விநி
யோகம் செய்கிறார்கள். பாபு ஜனார்த்தனன் அவர்கள்
சொன்னது பொய்யல்ல. 30 கிராமத்திற்கு உரிய
அரிசியை உசிலம்பட்டியிலே விற்றுவிட்டு ஏதோ ஒரு நாளைக்கு
கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. மண்ணெண்ணெயை
விற்றுவிடுகிறார்கள். அரிசி முறையாகப் போய்ச் சேருவதில்லை.
கிராமங்களிலே இருக்கக்கூடிய கார்டுகளை மொத்தமாக வைத்
துக்கொண்டு அவர்கள் ஏதோ பில்லைப்போட்டு கிழித்து எறிகின்
றார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. எனவே அரசு இந்தப்
பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டும் அல்லது அதை கண்
காணிக்கின்ற அதிகாரிகள் இருக்க வேண்டும்.

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1983 மார்ச் 11

அதுமட்டுமல்லாமல், எந்தக் கடையில் வாங்கினாலும், 100
கிராம் அரிசி வாங்குகிறோம் என்று சொன்னால், 80 கிராம்தான்
இருக்கும். அதற்கும் வரிசையிலே நின்று தாய்மார்கள், மற்ற
வர்கள் எல்லாம் எந்த அளவுக்குச் சிரமப்படுகிறார்கள் என்பதை
அரசு உன்னிப்பாக பார்த்து இந்த விநியோக முறையை சீராக்க
வேண்டும். இல்லை என்று சொன்னால் நிலைமை மிகவும்
மோசமாக இருக்கும். அங்கே இருக்கின்றவர்களுக்கு 175
ரூபாய்ச் சம்பளம் என்று சொல்லுகிறார்கள். எங்களுக்குக்
குறைந்த சம்பளம் இங்கே இருக்கின்ற காரணத்தால், எனவே,
நாங்கள் சில தவறுகளைச் செய்யவேண்டிய ஒரு நிலை இருக்கிறது
என்று சொல்கிறார்கள். மாலையிலே பார்த்தால் அவர்கள்
ரூபாயை பங்குபோட்டு பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த
நிலையை நாம் கட்டுப்படுத்தாவிட்டால் நிலைமை மோசமாகி
விடும், வறட்சி ஒரு பக்கம் இருந்தாலும், மத்திய அரசு உணவுப்
பொருள் கொடுக்க மறுக்கிறது. வெளி மாநிலத்திலேயிருந்து
வாங்கிக் கொடுக்கலாம் என்று பார்த்தால் அதுவும் தற்போது
உள்ள விநியோக முறையில் ஏழை மக்களுக்கு. அடித்தள மக்க
ளுக்குப் போய்ச்சேராத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக கொடுத்த
கடன்களை விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதற்கு முயற்சிக்கி
றார்கள். அந்த மாதிரி அரசுக் கொடுத்த கடன்களை இந்த
ஆண்டு வசூலிக்கமாட்டோம் என்று தெளிவாக அறிவிக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்த ஆண்டு நிலைமை
சீரானால்தான் அதை வசூலிப்போம் என்று தெளிவான நிலை
மையை மக்களுக்குச் சொல்லவேண்டும்.

அதுமட்டுமல்லாமல், காடு வளர்ப்பு. இப்போது ஸ்விடன்
நாட்டு முறைப்படி அவர்கள் உதவியுடன் சமூகக் காடு வளர்ப்புத்
திட்டத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர்
அவர்கள்கூட, இங்கேயிருக்கிறார்கள். இப்போது அதற்காக
அதிகப் பணம் செலவு செய்யப்படுகிறது. மரங்களினுடைய
நாற்றை அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். நாமோ
வறட்சியிலே இருக்கிறோம். ரோடு பக்கங்களில் ஆயிரக்கணக்
கான ரூபாய்ச் செலவு செய்து அவைகளை நடுகிறார்கள். ஆனால்
அவைகள் தண்ணீர் இல்லாமல் பின்னாலேயே செத்துக் கொண்
டிருக்கின்றன. இந்த திட்டத்தை அடுத்த ஆண்டாவது ஆரம்பித்
திருக்கலாம். அல்லது இப்போது ஆரம்பித்தால் அதற்கு
தொடர்ந்து தண்ணீர் கிடைக்கவாவது நாம் ஏற்பாட்டைச்
செய்ய வேண்டும். அதை எப்படிக் காப்பாற்றப் போகிறார்கள்
என்பதைப் பற்றி இங்கே தெளிவாகச் சொல்லவில்லை. அவர்
களும் நாற்றுக்களை 1 ரூபாய், 2 ரூபாய் என்று கொடுத்து
வாங்குகிறார்கள். தென்னை நாற்று 5 ரூபாய் விலை
யாகிறது. அதையெல்லாம் ரோட்டுப்புறங்களிலே நட்டுக்



1983 மார்ச் 11] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

கொண்டு போகிறார்கள். பின்னாலே அவைகள் செத்துக்
கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு இவ்வளவு மரம் வளர்க்க
வேண்டும் என்று சொல்லி, போகின்ற பஸ்களில் எல்லாம்
வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்று எழுதிவிடுகிறார்கள்
அப்படி எழுதிவிட்டால் போதாது. ஆகவே தண்ணீர் நிலைமை
களை கருத்தில் கொண்டு இந்தக் கன்றுகளை வாங்கி நடுவதைச்
செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழகம் தொழில் துறையில்,
தொழில் வளத்தில் முந்திவிட்டது என்று சொல்கிறார்கள்.
தமிழகம் தொழில் வளத்திலே ஓரளவு முந்தியிருந்தாலும் நாம்
ஒரு குறிப்பைப் பார்க்கும்போது எந்த அளவுக்கு தமிழ்நாடு
அரசு மத்திய அரசால் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது என்பதை
நாம் பார்க்கலாம். 1981-ம் ஆண்டு இந்த அரசு தொழிற்
சாலைகளுக்கு அனுமதி கேட்டு 92 விண்ணப்பங்களை அனுப்பி
யிருக்கிறது. ஆனால் அவர்கள் அனுமதித்தது 39. 1982-ஆம்
ஆண்டுக்கு 188 தொழிற்சாலைகளுக்கு விண்ணப்பம் கொடுத்து
இருக்கிறார்கள். இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டது 37. இதைப்
பார்க்கும்போது எந்த அளவுக்கு மத்திய அரசாங்கம் மாற்றாந்
தாய் மனப்பான்மையோடு நடக்கிறது என்பது தெரியும். தமிழகம்
தொழில் வளத்திலே பின்தங்குகின்ற நிலை ஏற்படுகின்ற அள
வுக்கு மத்திய அரசு தடங்கலாக இருக்குமானால் மாநில அரசு
அந்த அதிகாரத்தைப் பெறுவதற்கு, முடிந்தால் அரசியல்
சட்டத்தைத் திருத்துவதற்கு, அத்தனை கட்சிகளையும் சேர்த்து
மாநில மத்திய அரசுகளின், அதிகாரங்கள் வரையறுக்கப்பட
வேண்டும். அப்படி செய்ய முன்வரவில்லை என்றால், இந்த
நிலைமை நீடித்துக்கொண்டுதான் இருக்கும் என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

அடுத்து கைத்தறியைப் பற்றி சில வார்த்தைகள். இந்த
நாட்டிலே 5 இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கி
றார்கள். இன்றைக்கு 54 ஆயிரம் தொழிலாளர்களை மாஸ்டர்
வீவர்கள் என்று சொல்பவர்களிடமிருந்து தப்பிப்பதற்கு 2
ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்து அவர்கள் தனியாக தொழில்
துவக்குவதற்கு இந்த அரசு வழிவகை செய்திருப்பதைக் கண்டு
நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் கைத்தறி உற்பத்தி
யாளர்கள் நூல் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி
அவர்கள் நெய்து கொடுத்த அந்த உற்பத்திப் பொருள்களை
கூட்டுறவு ஸ்தாபனங்கள் வாங்கிக் கொண்டு பணம் பட்டுவாடா
செய்யவில்லை என்று சொல்கிறார்கள். குறிப்பாக ராஜபாளை
யத்தில் கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கின்ற நெசவாளர்கள்,
அவர்கள் நெய்து கூட்டுறவுத் துறைக்கு கொடுத்த 3 கோடி
ரூபாய் பணத்தை இன்னும் அந்த ஸ்தாபனம் கொடுக்கவில்லை
என்று போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட
நிலை இருக்குமானால் அந்த கூட்டுறவுத் துறையில் இருக்கும்

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1983 மார்ச் 11

இருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய நிலைமைகளைத் தவிர்க்க தகுந்த நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கும் திட்டத்திற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கும் திட்டத்தின் மூலம் யார் யாருக்கு வேலை கொடுக்கப் போகிறீர்கள்? எந்த அடிப்படையில் கொடுக்கப் போகிறீர்கள்? வீட்டுக் கு ஒருவர் என்று எடுத்துக் கொண்டால் அதிலே படிக்காதவர்கள் இருப்பார்களே அவர்களுக்கு எப்படி வேலை கொடுக்கப்போகிறீர்கள்? அவர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படும்? இதுபோன்ற நிலைமைகளை இதிலே தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இந்தத் திட்டம் கிராமப்புறத்திற்குப் போய் சேருமா, அப்படிச் சேருவதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டுள்ளது? வீட்டுக்கு ஒருவர் பி. ஏ. படித்து இருந்தால் மட்டும் வேலை கொடுப்போம் என்று சொன்னால் 100-க்கு 90 கிராமப்புறக் குடும்பங்களில் யாருமே அந்த அளவிற்குப் படித்து இருக்கமாட்டார்களே, அவர்களுக்கு எந்த வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போகிறீர்கள்? அப்படி இருந்தாலும் இந்த ஆண்டு இந்த 15 கோடி ரூபாய் போதாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

[இரவு 7-00]

நுழைவு வரி என்று போட்டிருக்கிறார்கள். அதோடு சேர்த்து 26 கோடி ரூபாய்க்கு புதிய வரிகள் போட்டிருக்கி றார்கள். நகரங்களில் கொண்டு வரும் பொருட்களுக்கு வரி என்றால் நகரப்புற மக்களுக்கு ஏன் இந்த அநீதி? அதன் மூலம் விலைவாசி ஏறும். அது நடுத்தர, சாதாரண மக்களைத்தான் பாதிக்கும். ஆகவே இந்த நுழைவு வரி நீக்கப்பட வேண்டும்.

ஒரு கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை என்று அறிவித்திருக் கிறார்கள். அது எந்த பொருள்களுக்கு? மண்ணெண்ணெய் விளக்குத் திரியும் அதில் ஒன்று. கிராமங்களில் அநேகமாக நீங்கள் பார்த்திருக்கமாட்டீர்கள் என்று கருதுகிறேன். பழைய துணியைத்தான் திரியாகப் பயன்படுத்துவார்கள். அப்படிப்பட்ட திரிக்கு, சிம்னிக்கு, அரைஞாணுக்கு வரி விலக்கு என்று சொல்லி மக்களுக்கு ஒரு கண்துடைப்பு அறிவிப்பு செய்திருப்பதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இது சாதாரண ஏழை எளிய மக்களை பாதிக்காது. ஆகவே நுழைவு வரியை நீக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன், வணக்கம்.

*திரு. த. இராமசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



1983 மார்ச் 11] [திரு. த. இராமசாமி]

நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறபோது தமிழ்நாடு கடுமையான வறட்சியை சந்தித்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த பேரவை உறுப்பினர்கள் மட்டுமல்ல; தமிழகத்திலே வாழ்கின்ற மக்களும் அறிந்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தபோது கூட நாம் கடுமையான வறட்சியை சந்தித்தோம், இருந்தாலும் கூட கடந்த ஆண்டு அந்த வறட்சியை நம்முடைய அரசு போர்க் கால நடவடிக்கை எடுப்பதுபோல் நடவடிக்கைகளை மேற் கொண்டு தமிழக மக்களை எந்தவிதமான கஷ்டத்தையும் அனு பவிக்காமல் வறட்சியிலிருந்து மக்களை பாதுகாத்தது நம்முடைய புரட்சித்தலைவர் அரசு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு படுத்த விரும்புகிறேன்.

அதைப் போன்று இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததன் காரணமாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த வறட்சி ஏதோ அண்ணா தி.மு.க. அரசு ஏற்பட்ட பிறகுதான், தமிழ்நாட்டில் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்தபிறகுதான் வறட்சி ஏற் பட்டது என்பதைப்போல திராவிட முன்னேற்றக் கழக உறுப் பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை அவர்களுடைய கோணத் திலிருந்து கடுமையான தாக்குதலுக்கு மத்தியிலே எடுத்து வைத்தார்கள்.

காங்கிரஸ் கட்சி, நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 20 ஆண்டு காலம் இங்கே ஆட்சி செய்தது. அவர்களுடைய ஆட்சியிலே கடுமையான பஞ்சம் ஏற்பட்ட பிறகுதான் அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து மக்களால் துரத்தப்பட்டார்கள். அதன் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப் பேற்றார்கள். நம்முடைய துரதிரிஷ்டவசமாகவோ அல்லது நாம் கொடுத்துவைக்காத காரணத்தாலோ என்னவோ பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மைவிட்டு பிரிந்துவிட்டார்கள். அதற்கு பின்னாலே 7 ஆண்டு காலம் நம்முடைய மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அவர் களுடைய ஆட்சிக் காலத்திலும் வறட்சி ஏற்பட்டது. அப்போ தெல்லாம் வறட்சி எப்படி ஏற்பட்டது, மக்கள் எவ்வாறெல்லாம் அவதிப்பட்டார்கள் என்பது நாடறிந்த கதை. அதைப்பற்றி நான் விளக்க வேண்டிய அவசியம் இல்லை.

பருவமழை பொய்த்ததன் காரணமாக இன்றையதினம் நாம் வறட்சி நிலையை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்த வறட்சி நிலையை சமாளிக்க, மக்களை வறட்சியிலிருந்து காப்பாற்ற நம் முடைய அரசு மிகுந்த கவனத்தோடு இருந்து செயலாற்றி வரு கிறது. மக்கள் கஷ்டத்தைப் போக்குவதில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மிகத் தீவிரமாக, கவனமாக செயலாற்றி, பாடுபட்டு வருகிறார்கள் என்பதை இந்த நாடு நன்றாக அறியும்.

அமைச்சர் அவர்கள் அதை அந்தத் தொழிலுக்குக் கொடுத்து
அவர்களுடைய அவல நிலையைப் போக்க வேண்டுமென்றும்
கேட்டுக் கொள்கிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பற்றி ஒரு தலைப்பிட்டு, அத்
தனைச் சாலைகளையும் போட்டு விட்டோம் என்று சொல்கி
றீர்கள். தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. தன்
னிறைவுத் திட்டத்திலே நல்ல வகையில் அந்தத் திட்டம் நிறை
வேற்றப்பட்டுள்ளது என்று சொல்கிறீர்கள். நீங்கள் அதற்காகச்
செலவிட்ட பணத்தில் 80 சதவீதம் கூட கிராமப்புறங்களில்
செலவிடப்படவில்லை. 20 சதவீதம் பணம் அதிகாரிகள் பகிர்ந்து
கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை எங்கும் இருக்கிறது. ஒரு
பாலம் கட்டவேண்டும் என்று சொன்னால் அதற்காக இத்தனை
சதவிகிதம் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இப்
படிச் செய்த பிறகும், 80 சதவிதம் வேலையாவது
நடந்து இருந்தால், அதைப் பாராட்டுவேன். ஆனால் 60 சத
விகிதம் தான் அந்த வேலைக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் சாலைகள் போடவேண்டும் என்று சொன்
னால் அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. நிலம் தர மறுக்கி
றார்கள். இன்னொரு முறை காந்தி பிறந்து வந்தால் தான் நிலம்
தருவார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் ஹைவேஸ்
சாலைகள் போடுவதற்கு நிலம் வேண்டும் என்று சொன்னால்,
அதைக் கட்டாயமாக எடுத்துக் கொள்வதற்கு கலெக்டருக்கு
அதிகாரம் இருக்கிறது. ஆனால், கிராமச் சாலைகளுக்கு
நிலம் எடுக்கவேண்டும் என்று சொன்னால், அதற்கு அந்தச்
சட்டம் பொருந்தாது. இதனால் நூற்றுக்கணக்கான கிராமங்
களுக்கு இணைப்புச் சாலைகள் போடமுடியவில்லை. இதிலே
சட்டச் சிக்கல் இருக்கிறது. ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத்
தொடரிலும் எத்தனையோ சட்டங்கள் கொண்டு வந்து நிறை
வேற்றப்படுகின்றன. ஆனால் கிராமப்புறங்களில் சாலைகள்
போடுவதற்கு நில ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று சொன்
னால் அதற்கும் கலெக்டருக்கு கட்டாயமாக நிலத்தை எடுத்துக்
கொள்கின்ற அதிகாரத்தை அளிக்கும் வகையில் ஒரு சட்டத்
திருத்தம் வரவில்லை. அத்தகைய ஒரு சட்டத் திருத்தத்தைக்
கொண்டு வந்தால்தான் கிராமங்களுக்கு ரோடு போட முடியும்
என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இதுபோன்ற நிலைமைகள் இருக்
கின்றன. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் இதைப்
பற்றிச் சொல்லியிருக்கிறேன். இங்கேயும் சொல்கிறேன். கடந்த
12 ஆண்டுக் காலமாக தொடர்ந்து வேலை செய்ய முடியாமல்
இருக்கிறது. ஆகவே, உடனடியாக, அத்தகைய ஒரு சட்டத்தைக்
கொண்டு வர அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.



மருத்துவ மனைகளில் மருந்துகள் திருடுபோகின்றன. நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதற்காக தண்டிக்கப்பட்டவர்
யார் என்று பார்த்தால் கேட்டுக்கு வெளியே இருக்கும் வாட்ச்
மேன். வாட்ச்மேனுக்கும் மருந்துக்கும் என்ன சம்பந்தம் இருக்
கிறது. ஆகவே, இது எப்படி நடைபெறுகிறது என்பதை தகுந்த
முறையில் ஆய்வு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கி
றேன். கிராமப்புறங்களில் உள்ள மருத்துவ மனைகளில்
மருந்துகள் இல்லை என்று சொல்கிறார்கள். ஒரு மாதத்திற்கு
1,000 ரூபாய்க்குத்தான் மருந்து கொடுப்பதாகச் சொல்கிறார்
கள். ஆனால் வெளியே தனியாக டிஸ்பென்சரி வைத்திருக்கும்
டாக்டர் ஆஸ்பிடல் மருந்துகளை வைத்து அதை நடத்திக்
கொண்டு வருகிறார்கள். இத்தகைய நடவடிக்கைகளை
உடனடியாகக் கண்காணித்து மருந்துகள் திருடு போவதைத்
தடுத்து, கிராமப்புறங்களில் உள்ள மக்கள் உண்மையிலேயே
அங்குள்ள மருத்துவ மனை மூலமாகப் பயன்பெறவேண்டும்
என்ற முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்
என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நீதிமன்றங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு, அதற்கு ஒன்றும்
செய்து இருப்பதாகச் சொல்லவில்லை. எங்கோ ஒரு
இடத்தில் டீ கடை கட்டுவதற்கும், கழிப்பறை
கட்டுவதற்கும் அடுத்த நிதியாண்டில் கவனிக்கப்படும் என்று
சொல்லியிருக்கிறீர்கள். நீதிபதிகள் வீடுகள் இல்லாமல் இருக்கி
றார்கள். அவர்களுக்குப் பல வசதிகள் இல்லாத காரணத்தால்
நீதிமன்றங்களில் பல தவறுகள் செய்யும் நிலைமை இருக்கிறது.
அவர்களுடைய ஊதியத்தை அதிகரிப்பதற்கும், நீதிபதிகளுக்கு
மேலும் வசதிகளைச் செய்துக் கொடுப்பதற்கும் அரசு முன்
வராவிட்டால், நீதித் துறையில் வேறு மாற்றங்கள் ஏற்பட்டு,
தவறு ஏற்படுகின்ற நிலைமைக்குப் போய்விடும். பின்னர் நாம்
நீதியை நிலைநாட்ட முடியாத ஒரு சிக்கலான நிலைமை
ஏற்படும். ஆகவே, அந்த நீதித்துறைக்கு வசதிகளைச் செய்து
தருவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப் பற்றி இந்த மன்றத்திலே நாம்
வரவேற்றுப் பேசியிருக்கிறோம். அதில் நடைமுறையில் பல
சிக்கல்கள் இருக்கின்றன. அதைச் சொல்லாமல் இருக்க முடியாது.
சத்துணவு மையங்கள் 100 சிறிய கிராமங்களுக்கு ஒரு மையம்
என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு ஹேம்லெட்டும் ஒவ்வொரு
மைல் தூரத்தில் சில இடங்களில் இருக்கின்றன. அந்தக்
கிராமத்தில் உள்ள இரண்டு வயது குழந்தைகள் இப்படி ஒரு
மைல் அல்லது கிலோமீட்டர் வரமுடிவதில்லை. அந்தக் குழந்தை
களுக்கு இந்த உணவு போய்ச் சேருகிறதா என்பது தெரியவில்லை
இதற்காகத் தரப்படும் எண்ணெய் அரிசி திருடப்படுவதாகச்
சொல்கிறார்கள். இப்படிப்பட்ட முறையில் நடந்த தவறுகள்
குறித்து போலீசார் கூட சில இடங்களில் வழக்குப் போட்டு

[திரு. த. இராமசாமி] [1983 மார்ச் 11

அதனால்தான் தமிழக மக்களுக்கு அரிசிப்பஞ்சம் வந்துவிடக்
கூடாது என்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய
அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக, நம்முடைய நிலையைத்
தெரிவிப்பதற்காக உண்ணா விரதம் மேற்கொண்டார்கள்.
அதற்குப் பிறகு மத்திய அரசு அழைப்பு தந்தது. வருக என்று
சொன்னார்கள். இருவரும் கூடி தமிழக அரசு சார்பில் உட்கார்ந்து
பேசினார்கள். இருந்தும்கூட தமிழகத்திற்கு 80,000 டன்
அரிசி வேண்டுமென்று கேட்டதற்கு யாசகம் தருவதுபோல் 5,000
டன் அரிசி தந்து உள்ளார்கள். இதை எண்ணிப் பார்க்கும்போது
உள்ளூர எங்களுக்கு சந்தேகம் எழுகிறது.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான், எந்த மாநிலத்திலும்
இல்லாத அளவுக்கு புரட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்கள்
சத்துணவு திட்டத்தைக் கடந்த ஆண்டு கொண்டு வந்தார்கள்.
இதைக்கூட சட்டப் பேரவையில் உள்ள திராவிட முன்னேற்றக்
கழக உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து இது கொள்ளையடிப்
பதற்காகப் போடப்பட்ட திட்டம் என்று குற்றச் சாட்டுகளைச்
சொன்னார்கள். இருந்தாலும் புரட்சித் தலைவர் அவர்கள் திட்ட
வட்டமாகச் சொன்னார்கள், இதை நான் கொள்ளை அடிக்க
விடமாட்டேன் என்றும் தாய்மார்களை கொண்டு இந்த திட்
டத்தை அமுல்படுத்துவேன் என்றும் சொன்னார்கள்.

அதைப்போல், 65 இலட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு
வழங்குவதுடன் ஒரு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் (1,25,000)
பேர்களுக்கு—பெண்களுக்கு, கணவனால் கை விடப்பட்ட பெண்
களுக்கு, விதவைப் பெண்கள் போன்றவர்களுக்கு, கிராமத்தில்
வேலை இல்லாது வீட்டிலே இருந்துகொண்டிருக்கும் பெண்
களுக்கு இந்த திட்டத்தின் மூலம் வேலை கிடைத்தது. இந்த
திட்டத்தை எப்படியும், வறட்சி ஏற்பட்டுள்ள இந்நேரத்தில்,
உடைத்து விடலாம் அல்லது ஊனப்படுத்திவிடலாமென்று மத்திய
அரசு கருதுகின்றதென்று நாங்கள் நினைக்கிறோம். இந்த சத்
துணவு திட்டத்திற்கு ஏறத்தாழ திங்கள் ஒன்றுக்கு 17,000 (பதி
னேழாயிரம்) டன் அரிசி தேவைப்படுகிறதென்று நிதிநிலை அறிக்
கையிலே குறிப்பு உள்ளது.

தமிழகத்தில் வாழ்கிற மக்களுக்கு ஒரு கோடியே பதினேழு
லட்சம் (1,17,00,000) குடும்ப அட்டைகளுக்கு உணவு வழங்க
வேண்டிய நிலை இருக்கிறது. மத்திய அரசு கொடுத்தால்தானே
இதை எல்லாம் செய்வார்கள்—எனவே, கொடுக்காமல் இருந்
தால் இவ்வாட்சியின் பேரில் வெறுப்பு ஏற்பட்டு தூக்கி எறிகிற
ஒரு சூழ்நிலையை உருவாக்கலாம் என்று நினைத்து மத்திய
அரசு இத்தகைய ஒருசதி திட்டத்தை நடத்துகிறதோ என்ற
அச்சம் ஏற்படுகிறது. இங்கே, சட்டப் பேரவையில் இருக்
கக்கூடிய காங்கிரஸ் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர்களை
நான் தலை வணங்கி கேட்டுக்கொள்வது எல்லாம்—



1983 மார்ச் 11] [திரு. த. இராமசாமி]

தமிழகத்திற்கு சேவை செய்வதற்கு நம்மை தேர்வு
செய்து அனுப்பி அமர வைத்திருக்கிறார்கள். எனவே மத்திய
அரசைத் தட்டிக் கேட்க மாநில அரசுக்கு உரிமை உண்டு. அதே
போல் மாநில அரசுக்கு பதில் சொல்லுவதற்கு மத்திய அரசுக்கு
கடமை உண்டு.

எந்தக் கட்சி சட்டமன்ற பேரவை உறுப்பினராக இருந்
தாலும் தமிழக மக்களுக்கு, தமிழகத்திற்கு நன்றி உள்ளவர்
களாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு டெல்லிக்கு
ஏஜெண்டுகளாக இருக்கக்கூடாது. இங்கே இருப்பதுபோல்
இருந்து கொண்டு நாங்கள் சொல்லுகின்ற பதிலுக்கு எல்லாம்
மறுப்பு சொல்லிக் கொண்டிருப்பது எந்த அளவிற்கு நியாயம்
என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தமிழகத்து
புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஆறுதலாக, எண்பது ஆயிரம்
டன் அரிசி தந்தே ஆக வேண்டும் என்று சொல்லும் போதே
உங்களுடைய குரலும், புரட்சித் தலைவர் அவர்களின் குரலோடு
இணைய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்
கொள்ள கடமைப்பட்டுள்ளேன். ஆக என்னைப் பொறுத்த
மட்டில் புரட்சித் தலைவர் அவர்களின் அரசாங்கம் எந்த அள
வுக்கும் தமிழக மக்களை வறட்சியில் இருந்து காப்பாற்றியே
தீரும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. வறட்சிப்
பணிக்காக இந்த திட்டத்திலே தமிழக அரசின் சார்பில் (45
கோடி) நாற்பத்தி ஐந்து கோடி ருபாய் அனுமதித்து வேலையும்
முடுக்கி விடப்பட்டுள்ளது. கிராமப்புறங்களிலே வேலை நடந்து
கொண்டு இருக்கிறது.

நான் எங்கள் தொகுதியைப் பற்றி சிலவற்றை கூறிக்கொள்ள
விரும்புகிறேன். கடந்த ஆண்டு இராமேஸ்வரத்திற்கு இருபத்தி
ஐந்து லட்சம் ரூபாய் குடிதண்ணீருக்காக வறட்சி நிதியிலிருந்து
ஒதுக்கப்பட்டது. இங்கு, மரியாதைக்குரிய, சம்பந்தப்பட்ட
அமைச்சர் அவர்கள் இருக்கிற காரணத்தால் சொல்லுகிறேன்,
அந்த இருபத்தி ஐந்து லட்சம் ரூபாய் செலவில் இன்றைய
தினம் கிணறுகள் தோண்டப்பட்டு அந்த வேலை நடந்தது.
ஆனால், அங்கு இருபத்தி ஐந்து லட்சம் ரூபாய் செலவழிக்கப்
பட்டு உருவாக்கப்பட்ட அந்த திட்டத்தில் குடிநீர் கிணறுகள்
உப்பு நீராக மாறிவிட்டது. இந்த காரணத்தால் இருபத்தி ஐந்து
லட்சம் ரூபாய் பாழாகிவிட்ட அளவுக்கு நிலை இருக்கிறது.
ஆகையால், துரித நடவடிக்கை மேற்கொண்டு, அந்த தண்ணீரை
எப்படி மாற்றலாம் அல்லது புதிய கிணறுகள் எப்படி அந்த
மக்களுக்கு அமைத்துத் தரலாம், எப்படி குடி தண்ணீர் வழங்
கலாம் என்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்
கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்
கொள்கிறேன்.

[திரு. த. இராமசாமி] [1983 மார்ச் 11

இராமேஸ்வரத்திற்கு இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலிருந்து அமைச்சர்கள் வருகிறார்கள். அது சுற்றுலா சென்டராக இருக்கிறது. டூரிஸம் சென்டராக இருக்கிறது. ஆகவே அங்கு இருக்கிற ரெவின்யூ இலக்காவைச் சேர்ந்த தாசில்தாரர்களும், சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர்களும் மற்றவர்களும் அங்கே வருபவர்களை வரவேற்பதிலே தங்கள் முழு நேரத்தை செலவழிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அவர்களுக்கு இருக்கக்கூடிய அன்றாட வேலைகளை கவனிப்பது இதனால் தடைப்பட்டு வருகிறது. ஆகையினால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்தில் நான் சொல்லிக் கொள்வதெல்லாம் அங்கே ஒரு ரிசப்ஷன் டீம் என்று வரவேற்புக் குழு ஒன்றை, தாசில்தாரர் பட்டத்திலே உள்ள அதிகாரியின் தலைமையின் கீழ் அமைத்துத் தந்தால், அங்கே இருக்கும் ரெவின்யூ இலாகா தாசில்தாரர்கள் தங்களுடைய வேலையைப் பார்க்க ஏதுவாக இருக்கும். ஆகவே வரவேற்புக் குழு ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 7-10)

அதேபோல மண்டபத்தில் ஒரு மருத்துவ மனையை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அங்கேயிருக்கிற மக்கள் 5 ஆண்டுகளுக்கு முன்னால், 30 ஆயிரம் ரூபாயை முன் பணமாகக் கட்டி, 3 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் அந்த எஸ்டிமேட்டை தயார் செய்து, அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை அவசியம் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல தங்கச்சி மடம் என்ற இடத்திலே ஒரு மருத்துவ மனையைக் கட்டவேண்டும் என்று, அதே 3 லட்சத்து 83 ஆயிரத்து எஸ்டிமேட் தயார் செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலேயே வறியவர்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் நிலம் வழங்கப்படுவது குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இராமேஸ்வரத்திலே இருக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் மற்றவர்களுக்கும், நிலம் வழங்குவதில் தடை உத்தரவு இருக்கிறது. சேது சமுத்திரத் திட்டம் வருகிற காரணத்தால், எங்கே அதை அமைப்பது என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்பெறமால் இருப்பதால், அங்கே நிலம் வழங்க தடை இருக்கிறது. அந்த இடத்தினை நிபுணர்கள் குழு வந்து தேர்வுசெய்து விட்டதால், இன்ன இடத்தில் தோண்டப்படும் என்பது குறித்து ஒரு திட்டவட்டமான முடிவு செய்து விட்டதால், அங்கேயுள்ள நிலங்களை ஏழை எளியவர்களுக்கு வழங்க வேண்டுகிறேன். தமிழகத்தின் சூயஸ்கால்வாய் எனப்படும் இந்த சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற மத்திய அரசை வற்புறுத்துவதோடு, அந்தத் தடையையும் நீக்கி அந்த மக்களுக்கு உதவ வேண்டுகிறேன்.



1983 மார்ச் 11] [திரு. த. இராமசாமி]

அடுத்ததாக, இராமநாதபுரத்தில் ஆதித்திராவிடர் மாணவர்களின் தங்கும் விடுதி (Host l) இல்லாத குறை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அந்தக் குறையை நீக்கி உடனடியாக அந்த இடத்திலே (Ho tl.) கட்ட வேண்டுகிறேன். இராமநாதபுரத்திலே நீதிமன்றங்கள் பழுதடைந்த கட்டிடங்களில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அரசு நீதிமன்றங்களுக்கென புதிய கட்டிடங்களைக் கட்டிக்கொடுத்து, அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேதுகால்வாய் திட்டத்தைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் சூயஸ்கால்வாயாக விளங்கப்போகும், இந்த சேது சமுத்திரத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாம்பன் ரோடு பாலம் போடும் பணி இன்னும் முடிந்தபாடாக இல்லை. இந்த நிலையில், அதற்காகப் போடப்பட்ட காலம் முடிந்துவிட்ட காரணத்தால் பணிகள் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதன் காலத்தை இப்படி நீடித்துக் கொண்டே போனால், பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்த பாம்பன் பால ரோடுகளை உடனடியாக காண்டிராக்ட் மூலமாக எடுத்து, போர்க்கால நடவடிக்கைகளைப் போல காரியம் ஆற்றி முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மத்திய அரசாங்கத்திலே ஏதாவது தடை இருந்தால் அந்தத் தடையைப் போக்க நமது அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் நகராட்சி பற்றாக்குறை நகராட்சி. நகராட்சிகளையும் தன்னிறைவுத் திட்டத்தில சேர்த்து அவைகளை உயர்த்தவேண்டும் என்கிற ஒரு புதுத்திட்டம் இருக்கிற காரணத்தாலே, இராமநாதபுரம் நகராட்சியையும் தன்னிறைவுத் திட்டத்திலே சேர்த்து அந்தப்பகுதி மக்களுக்கு தேவையான பணிகளை செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேஒரு பாயிண்ட்டை சொல்லி முடித்துக் கொள்கிறேன். கட்டிடக் கட்டுமான தொழிலாளர்களுக்கு தக்க பணிபாதுகாப்பு இல்லாமல் இருந்து வருகிறார்கள். அந்த தொழிலாளர்களுக்கு பணி பாதுகாப்புச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவை பரிசீலனையில் இருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. பரிசீலனையை சீக்கிரமாக முடித்துக் கொண்டோ, அல்லது பரிசீலனை செய்வதையே நிறுத்திக் கொண்டோ இந்தக் கூட்டத் தொடரிலேயே அதனைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது சில கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் சொல்லி முடிக்கக் கருதுகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் பேசுகிறபோது 3 பருவ மழை தவறிவிட்டது என்று பேச்சின் தொடக்கத்தி லிருந்து, தொடர்ந்து பேசிக் கொண்டேயிருந்தார்கள். உண்மை. பருவமழை பொய்த்து விட்டது என்பது உண்மைதான். அது 3 முறையும் பொய்த்து விட்டது என்பதை நாம் அனைவரும் உணர்வோம். ஆனால் மழை பெய்து தண்ணீர் வந்து, தூறல் வந்தால் மாத்திரம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் சிறப்பிலேதான் மழை பெய்கிறது என்று சொல்வது சரியாகிவிடுமா என்பதை கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். மழை வருவதும், வறட்சி வருவதும் இயற்கை. அந்த இயற்கை யின் இயற்கையான அங்கமாக இருக்கும் நாம் படிப்படியாக காரியங்களை மக்களுக்கு அவர்களுடைய முன்னேற்றத்திற்காக தந்திட வேண்டும் என்றுதான் இந்த மன்றத்திலே நாம் அனை வரும் வந்திருக்கிறோம்.

ஆகவே மழை பொய்த்து விட்டது, மழை பொய்த்துவிட்டது என்று சொல்வதைவிட மழை பொய்த்து விட்டதற்குப் பிறகு நாம் என்ன திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம் என்பதை ஒரு கணம் ஆளும் கட்சித் தரப்பிலே இருப்பவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவற்றின் உள்ளே நான் நுழையவில்லை. இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சியின் உறுப்பினர்களும் பேசுகின்றபோது ஒட்டுமொத்த மாக ஒரு உண்மையை அவர்கள் கூறியதை நான் உணர்கிறேன். அது மாநில கட்சியாக இருந்தாலும் அல்லது தேசிய கட்சியாக இருந்தாலும் பேரறிஞர் அண்ணாவினுடைய உணர்வுகளை அண்ணாவினுடைய கொள்கையினை இன்றைக்கு அனைவரும் உணர்ந்து பேசுகிறார்கள். பேசிக்கொண்டிருக்கிறார்கள் என் பதைப் பார்க்கும்போது நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகி றேன். மாநில சுயாட்சியினை ஒரு காலத்தில் எதிர்த்தவர்கள் ஏளனம் பேசியவர்கள் எள்ளி நகையாடியவர்கள், மாநில உணர்வு படைத்தவர்கள் என்று திராவிட முன்னேற்ற கழகத்தை பார்த்துப் பேசியவர்கள் அனைவரும் இன்றைக்கு மாநில சுயாட்சி என்ற உணர்வுக்கு வந்திருக்கிறார்கள். அதுதான் அண்ணா விற்கு உரிய சிறப்பு. அண்ணா எப்போதும் இருக்கிறார்கள். அவர் மறைந்து விட்டாலும் இருக்கிறார் என்ற உணர்வினை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களாகிய நாம் உணருகிறோம். வடக்கு வாழ்கின்றது, தெற்கு தேய்கின்றது என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதனை தேசிய கட்சிகள் கூட இன்றைக்கு ஏற்றுக்கொள்கின்றன. வடக்கு வாழ்கின்றது, தெற்கு தேய்கின்றது என்பது இன்றைக்கு நமக்கு 5,000 டன் அரிசியும் கோதுமையும் இருப்பதைப் பார்த்தாலே தெரிகின்றது. இப் படிப்பட்ட பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் [illegible]





திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆளுகின்ற கட்சியினை ஆதரித்துத்தான் பேசும். மற்ற பிரச்சினைகளில் எதிர்த்துப் பேசி னாலும் மாநில சுயாட்சி என்ற கொள்கையினைப் பொறுத்த வரையில் யார் இங்கே ஆண்டாலும் அவர்கள் கேட்கின்ற நேர் மையான கோரிக்கைகளுக்கும் உரிமைகளுக்கும் குரல் கொடுக் கின்ற ஒரு இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். வடக்கு இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர்வு பூர்வ மாக நாம் பார்க்கிறோம்.

வறட்சி வறட்சி என்று நாம் பேசுகிறோம். எத்தனையோ காரியங்களுக்கு சர்வ கட்சி கூடுகின்றது. அப்படிப்பட்ட நிலை மையில் ஆண்டு பழக்கப்பட்ட நிர்வாகத்தில் சிறப்பு பெற்ற, நம் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களை அழைத்து ஆளும் கட்சியினைச் சேர்ந்த எந்த அமைச்சராவது ஆலோசனை கேட்டிருக்கிறீர்களா ? எப்போதுமே அவருடைய ஆலோசனை உங்களைக் கவிழ்ப்பதற்காகத்தான் இருக்குமா ? எனவே அப் படிக் கருதாமல் வறட்சிக் காலத்திலே மக்களுக்கு நன்மை அளிக் கின்ற வகையிலே எதிர்க்கட்சியிலே இருக்கின்ற தலைவர்களை அழைத்து சர்வ கட்சியினரையும் கூப்பிட்டுச் பேசி அவர்களின் ஆலோசனைகளைப் பெறவேண்டும் என்று இந்த நேரத்திலே என்னுடைய பணிவான கருத்தினை வைக்க விரும்புகிறேன்.

அடுத்து நிதிநிலை அறிக்கையில் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். 15 கோடி ரூபாயில் வீட்டுக்கு ஒரு வருக்கு வேலை என்று சொல்லி இருக்கிறார்கள். அது முடியுமா? முடியாது என்று இருந்தாலும் முடியும் என்று நீங்கள் கருதினால் சத்துணவுத் திட்டத்திற்காக 134 கோடி ரூபாயினை ஒதுக்கி இருக்கிறீர்களே அந்த 134 கோடி ரூபாயினையும் மற்றும் பல துறைகளிலே ஒதுக்கி இருக்கின்ற பணத்தையும் எடுத்து அந்தத் துறைகளிலே செலவினைக் குறைத்துவிட்டு இந்த வீட்டுக்கு ஒரு வருக்கு வேலை என்ற திட்டத்திற்கு ஒதுக்குங்கள். சத்துணவுத் திட்டத்தினை தற்காலிகமாகவாவது நிறுத்திவிட்டு இந்த வறட்சி காலத்திலே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை திட்டம் என்ற முறை யில் 134 கோடியினையும் 15 கோடியோடு சேர்த்தால் வீட்டுக்கு ஒருவருக்கு என்ன நான்கைந்து பேர்களுக்குக் கூட வேலை தர முடியும். அப்படி வேலைவாய்ப்பை அவர்கள் பெற்றால் அந்த குடும்பமே மொத்தமாகச் சத்துணவினைச் சாப்பிடுகின்ற நிலை மையைத் தமிழகம் பூராவும் ஏற்படுத்த முடியும். அப்படிப் பட்ட நம்பிக்கை இருப்பதன் காரணத்தால் இந்த ஆலோசனையை இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டம் பற்றி நண்பர்கள் மார் தட்டிப் பேசி னார்கள். வீரமாகப் பேசினார்கள். அதனை வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அங்கே அடிக்கப்படுகின்ற ஊழல்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டாமா ? இன்னாள் முதல்வராக இருக்கின்ற புரட்சித் தலைவரின் முன்னாள் தொகுதியான பரங்கி

[திரு. பம்மல் நல்லதம்பி] [1983 மார்ச் 11

மலைத் தொகுதியில் அடிக்கப்படுகின்ற கொள்ளையும், ஊழல்
களும் பயங்கரமாக இருக்கின்றன. ஒரு ட்ராக்டரிலே 50 லிட்டர்
டீசல் போடப்படுகின்றது என்றால் 200 லிட்டர் என்று எழுது
கிறார்கள். இவற்றை எல்லாம் உடனடியாக ஒரு குழுவினை
அமைத்து பரிசீலித்தால் பெரிய அளவிலே அதாவது கிட்டத்தட்ட
20 இலட்சம் ரூபாயிலிருந்து 40 இலட்சம் ரூபாய் வரையிலே
ஊழல் நடைபெற்று இருக்கின்றது என்பதை நீங்கள் தெரிந்து
கொள்ள முடியும். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற
முறையில் என்னைக் கூட அந்தக் குழுவிலே போட வேண்டாம்.
சர்வ கட்சியையும் உள்ளடக்கிய ஒரு குழுவைப்போட்டு உடனடி
யாக பரிசீலனைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன். பின்தங்கிய மக்களின் நலத்தை கருத்தில்
கொண்டு மத்திய அரசு மண்டல குழுவை ஏற்படுத்தி அதனுடைய
பரிந்துரைகளை பற்றி இன்றையதினம் பல கட்சியைச் சார்ந்த
வர்கள் பலவிதமாக பேசுகிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த
வாரப்பத்திரிக்கையான தாய் என்ற பத்திரிக்கை அதை எதிர்த்து
கட்டுரை எழுதிக்கொண்டிருக்கிறது. நான் மாண்புமிகு நாவலர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் இன்னும் பெரியார் இடத்
திலும் அண்ணா இடத்திலும் அவருக்கு அன்பு இருக்கிற கார
ணத்தால் நீங்கள் என்ன பதில் சொல்லப்போகிறீர்கள். இந்த
அரசை ஆதரிக்கும் உங்கள் ஆளும் கட்சி பத்திரிக்கையான தாய்
அதை இன்றையதினம் விளக்கமாக எதிர்த்து எழுதி வருகிறது.
நீங்கள் அதற்கு பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

(இரவு 7—20)

விலைவாசியைப்பற்றி நான் அதிகமாகச் சொல்ல விரும்ப
வில்லை. எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்
எல்லாம் அதைப்பற்றி பேசிவிட்டார்கள். ஓட்டல்களில் விலை
கள் கடுமையாக ஏறிக்கொண்டு போகிறது. அதை ஆளும் கட்சி
தடுக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்
கள். அதை நான் கண்டிப்பாக தடுத்து விடுகிறேன் என்று.
ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றி ஒரு வரி
கூட இல்லை. அது என்ன காரணம் என்று எனக்கும் தெரிய
வில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எனக்கும் அதில்
ஒரு சந்தேகம் இருக்கிறது. அவர்களிடமிருந்து நிதி பெறுகிற
காரணத்தினால் தான் அவர்கள் ஏற்றுவதை நம்மால் தடுக்க
முடியவில்லை என்று நான் உணருகிறேன். இவ்வளவு வறட்சி
யான காலத்தில் தடுத்து நிறுத்த ஒரு தைரியம் நமக்கு இருக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தைரியம் இல்லாத
காரணத்தினால் தான் இப்படி நடக்கிறது. அதிக நேரம் இல்லாத
காரணத்தினால் என்னுடைய தொகுதிக்கு வந்து விடுகிறேன்.
என்னுடைய தொகுதி தாம்பரம் தொகுதி. அந்தத் தொகுதி
மக்கள் குடிநீர் பிரச்சினையால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு



இருக்கிறார்கள். 1962-ல் போடப்பட்ட அந்த திட்டம் இன்
றைக்கு 2 லட்சம் மக்களைக்கொண்ட அந்த தாம்பரம் நகரத்
தில் 80 ஆயிரம் மக்கள் அப்போது இருந்தார்கள் அவர்களுக்காக
போடப்பட்ட அந்த திட்டம் 1992 வரையில் அவர்களுக்கு
தண்ணீர் வரும் என்று உத்தேசித்து திட்டமிடப்பட்டது. ஆனால்
இப்போது 2 லட்சம் மக்களை தாண்டிவிட்டது. இதன் கார
ணத்தால் தண்ணீர் பஞ்சம் தாம்பரத்தில் ஏற்பட்டிருக்கிறது.
இங்கே குடிநீர் வடிகால்வாரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
ஒரு சில குழாய்களைப் போட்டார்கள் அந்த குழாய்களில் என்ன
வேலை நடக்கிறது என்றால் அந்த தெருவில் பல குடும்பங்கள்
இருக்கின்றன. ஒரு வீட்டில் 6 குடும்பங்கள் இருக்கின்றன.
அந்த 6 குடும்பங்களில் உள்ளவர்கள் அந்த குழாயில் தான்
தண்ணீர் எடுக்கவேண்டும். ஒரு குடும்பத்திற்கு 2 பக்கெட்
தண்ணீர் தான் கிடைக்கிறது. அந்த 2 பக்கெட் தண்ணீரில்
சமையல் செய்ய வேண்டும். குளிக்கவேண்டும், துணி துவைக்க
வேண்டும். அங்கு ஏரி கிடையாது. இவ்வளவு கடுமையான
நிலைமை தாம்பரத்தில் இருக்கிறது என்பதை பார்த்து கொண்
டிருக்கிற காரணத்தினால் தான் இதை நான் சொல்கிறேன்.
நிறைய ஆழ் குழாய்களை அங்கே போட வேண்டும் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.
என்னுடைய தொகுதிக்காக நான் அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்
கிறது அடையாறு பாலம், அந்த பாலத்தை நீங்கள் மேம்பால
மாக கட்டாவிட்டாலும் பரவாயில்லை. நான் அதிகாரிகளைப்
பார்த்து கேட்டேன். அவர்களும் ஹைவேஸ் சிப் இன்ஜினியரும்
நெடுஞ்சாலை சிப் இன்ஜினியரும் அவர்கள் 2 பேரையும் அழைத்
துக்கொண்டு போய் காண்பித்தேன். அவர்களிடம் சொன்னேன்
மேம்பாலம் கட்டவேண்டிய அவசியம் இல்லை. தரைப் பால
மாவது 5 அடி உயரத்தில் கட்டித்தர வேண்டும் என்று நான்
கேட்டுக்கொண்டேன். அதற்கு 6 லட்சம் ரூபாய்தான் செல
வாகும் என்று சொன்னார்கள். அதை எப்படியாவது இந்த
நிதியாண்டில் செய்து முடித்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு
அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன், இன்னும் குப்பங்
கள் இருக்கின்றன. இதுவரை 10 ஆண்டு காலமாக மின் விளக்கை
பார்க்காத இருட்டு குகைகளாக கடற்கரை ஓரங்களில் அதாவது
கொட்டிவாக்கம் குப்பம், நீலங்கரை குப்பம், மேடவாக்கம்
குப்பம், பெரிய நீலங்கரை, உத்தண்டி, நீலங்குப்பம். பனையூர்
குப்பம் என்று பல குப்பங்களுக்கு மின் விளக்கு கிடையாது.
அங்கே உப்பு அரித்துவிடுகிற காரணத்தினால் அங்கே மின்
விளக்கை போடுவதற்குத் தயங்குகிறார்கள் தரையிலே மின்
கம்பிகளை பொருத்தி அங்கே மின் விளக்கை போட்டுத்தர
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் 3 உயர்நிலைப்பள்ளிகள் இருக்
கின்றன. 2 கட்டிடங்கள் இருக்கின்றன. அதில் ஒரு கட்டிடத்தில்
கூரை இல்லை. அனகாபுத்தூரிலே 26 ஆயிரம் ரூபாய் செலவிலே

[திரு. பம்மல் நல்லதம்பி] [1983 மார்ச் 11

ரு கட்டிடத்தை பழுதுபார்க்க வேண்டும் என்ற நிதி ஒதுக்கியிருந்தும் பி. டபுள்யு. டீ. இன்ஜினியர்கள் அதை செய்யாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது மட்டும் அல்லாமல் குடிநீர்ப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சனை. ஆலந்தூர், பல்லாவரம், குரோம்பேட்டை, செனடோரியம், சிட்டலப்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் இந்த பகுதிகளுக்கு போன ஆண்டே அக்டோபர் 31க்குள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தண்ணீர் தந்து விடுகிறேன் என்று சொன்னார்கள் இப்போது 1983-ம் வருடம் மார்ச் மாதம் வந்து விட்டது. அவை எந்த நிலையில் இருக் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதிகாரிகள் சொல்லுகிறார்களா என்று எனக்கு சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே பாலத்திலே எட் ஒர்க் என்று சொல்கிறார்களே அந்த வேலை இன்னும் துவங்கப்படவில்லை. இடையில் இருக்கின்ற குழாய்களை வலதுபுறத்திலிருந்து இடதுபுறத்திற்கு தோண்டிப் போட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர எந்த வேலையும் அங்கே நடைபெறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத்தலைவர் அவர்களே, நானே போய் அந்த இடத்தையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். கல்கத்தாவிலிருந்து வரவேண்டிய குழாய்கள் வருவதற்குத் காலதாமதமாவதால்தான் தாமதமாகி விட்டது. விரைவிலே அந்த வேலைகள் முடிந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பம்மல் நல்லதம்பி : அமைச்சர் அளித்த வாக்குறுதிக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 12-3-1983 அன்று காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

178. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவைப் பொறுத்தவரையில் அதன் விற்பனை வரியை 50 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாகக் குறைப்பது சம்பந்தமான



1983 மார்ச் 11]

வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 13—10—82 ஆம் தேதியிடப்பெற்ற 1149—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.].

179. சென்னை கிண்டி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள 'சென்னை குதிரைப் பந்தய சங்கம்' ஏனைய இடங்களில் நடைபெறுகிற குதிரைப் பந்தயங்களுக்காகப் பந்தயம் கட்டுவது குறித்து சில வரிகளை நிர்ணயம் செய்வது சம்பந்தமாக, வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 30—9—1982-ஆம் தேதியிடப்பெற்ற 1213-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1935—ஆம் ஆண்டு பந்தயவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.].

180. கிண்டி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள சென்னை குதிரைப் பந்தய சங்கம், ஏனைய இடங்களில் நடைபெறுகிற குதிரைப் பந்தயங்களுக்காகப் பந்தயம் கட்டுவது குறித்து சில வரிகளை நிர்ணயம் செய்வது சம்பந்தமாக வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 3—6—1982 ஆம்தேதியிடப்பெற்ற 759-ஆம் எண் அரசாணையால் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின்படி கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

181. 1956 ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு சட்டத்தின் ஆட்சி வரம்பிற்குள் வரும் உற்பத்திப் பொருட்களின் விற்பனையின் மீது விதிக்கத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது சம்பந்தமாக, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 25—8—1982 ஆம் தேதியிடப்பெற்ற 996 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.[

182. கோயம்புத்தூரில் உள்ள உடல் ஊனமுற்றக் குழந்தைகளின் உதவிச் சங்கத்திற்கு இயந்திரங்கள், மருத்துவமனை சாதனங்கள், கருவிகள், ஆகியவற்றை விற்பனை செய்வதன் மீது விதிக்கத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது சம்பந்தமாக, வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29—9—1982 ஆம் தேதியிடப்பெற்ற 1095 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

183 வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 13–3–1982 ஆம் தேதியிடப் பெற்ற II (1)/50/82 ஆம் எண் அறிவிப்பை திருத்துவது சம்பந்தமாக வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 16–7–1982 ஆம் தேதியிடப் பெற்ற 809 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

184. வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 24–12–1981 ஆம் தேதியிடப்பெற்ற II (1)/580 (ஏ)/81 ஆம் எண் அறிவிப்பில் திருத்தம் ஒன்று செய்வது சம்பந்தமாக, வணிகவரிகள் -சமய அறக்கட்டளைகள் துறையின் 8–10–1982 ஆம் தேதியிடப் பெற்ற 1135 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்,

70. 1983–84 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி கோரிக்கைகள்.

71. 1983–84 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் அறிவிப்பு.

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
135772
D
V211,31 N83
N83-44-3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS, IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3
7 C. Sitharaman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Penniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-12.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Coimbatore-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi. Tiruchi-1.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 50, Amman Sannathi, Madurai 1.

## IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta.

© TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT
PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.